நெடுநல்வாடை

பாநலன்

இராவ்சாகேப்
கு கோதண்டபாணி பிள்ளை

கழக வெளியீடு: கஉசஅ

நெடுநல்வாடை

(திறன் ஆய்ந்து தெளிதல்)

பாநலன்

★

ஆசிரியர்:

இராவ்சாகேப் கு கோதண்டபாணி பிள்ளை

★

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி-6. சென்னை-1.

1965

© குப்புசாமி கோதண்டபாணி பிள்ளை (1896)

1965 THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LIMITED.

Ed 1 1947
(Kazhakam) Ed 2 Dec 1965

O31,1B941:g
K5

NEDUNAL VADAI
(PAA NALAN)

Appar Achakam, Madras-1.

5

உள்ளுறை

பொருள்	பக்கம்
ஔவையார் பாட்டு	எ
பதிப்புரை	கூ
முதற்பதிப்பின் பதிப்புரை (தெ. பொ. மீ.)	கக
அணிந்துரை (திரு. வி. க.)	கரு
கருத்துரை (எஸ். எஸ். பாரதியார்)	சரு
,, (எ. சி. பால் நாடார்)	சஅ
க. பொருளும் பாட்டும்	**1**
1. பொருள்நலன் ஒன்றே புகழ்க்கிடம் அன்று	1
2. நீதி கூறாத பாட்டு - நெறி உணர்த்தாத பாட்டு	6
3. வாடைப் பாட்டின் இயற்கை எழில் நலம்	9
4. பாக்களைப்பற்றிய பல்வகைக் கருத்து	13
உ. பாட்டிற்காணும் பற்பல பாநலன்	**19**
1. பாட்டின் தோற்றுவாய்	20
2. ஒப்பிட்டுணர்தல்	38
3. சொல்லின் திறன்	48
4. பாட்டின் போக்கு	57
5. செட்டு, விரைவு, செய்யுள் எச்சம்	79
6. சிலேடைச் சிறுநலன் குறிப்புப் பொருள் நலன்	85
7. நகைப்பு அங்கதம் நலம் பெறும் உள்ளுறை	90
8. யாப்பும் நோக்கும்	100
9. பாட்டின் அமைப்பில் பாநலன்	122
10. பாட்டின் முடிவிலும் பாநலன்	130
௩. முடிவுரை	**144**
தெளிபொருள்	159

[1]"முட்டு வேன்கொல் தாக்கு வேன்கொல்
ஓரேன் யானுமோர் பெற்றி மேலிட்டு
ஆஅ வொல்லெனக் கூவு வேன்கொல்
அலமரல் அசைவளி அசைப்பவென்
உயவுநோய்[2] அறியாது துஞ்சும் ஊர்க்கே."

—ஔவையார்

---

1. குறுந்தொகை, 28.
2. உயவு நோய் என்பது ஈண்டுத் தமிழ்க்காதலை.

பதிப்புரை

பத்துப்பாட்டுள் ஒன்ருகிய நெடுநல்வாடை நக்கீரரின் சிறந்த பாட்டாகும். இதன் பொருள் நலனை ஆராய்ந்து இந்நூலாசிரியர் வெளியிட்ட சிறந்த திறன் ஆய்வு நூல் நெடுநல்வாடைப் பொருள் நலன் என்பது இக் கழக வெளியீடாக வெளி வந்தது. இந்நூலாசிரியர் அதன் பாநலனையும் ஆராய்ந்து நெடுநல்வாடைப் பாநலன் என்ற இத்திறன் ஆய்வு நூலையும் எழுதியுள்ளார். இந்நூலின் சிறப்பை அறிந்து சென்னைத் தமிழ்ச் சங்கம் இதனை முதல் முதல் வெளியிட்டது. நெடுநல்வாடைப் பொருள் நலனின் தொடர்பாக, அதன் பாநலனைப் பற்றிய இந்நூலையும் இரண்டாம் பதிப்பாக வெளியிட இக்கழகம் முன்வந்தது.

நெடுநல்வாடையின் பாநலனை விளக்கும் மூலமாக, இந் நூலாசிரியர் தொல்காப்பியம் கூறும் செய்யுள் உறுப்புக் களைக் குறித்த சூத்திரங்களுக்குப் புத்துரை காண்கின்ருர். இவர் காணும் இவ்வுரை, திறமிகு புலவர்களின் பாராட்டைப் பெற்றிருப்பதை அணிந்துரையிலும் அதனுடன் இணைக்கப் பெற்ற கருத்துரைகளிலும் காணலாம். விளக்கம் பெருதிருந்த தொல்காப்பியச் செய்யுளியல் சூத்திரங்கள் இப்போது சிறந்த விளக்கம் பெறுகின்றன. நெடுநல்வாடை உலகப் பெரும் பாக்களில் ஒன்ருக இடம் பெறத் தக்கது என்பதனையும், அதன் ஆசிரியர் உலகப் பெரும் புலவர் களில் ஒருவராக இடம் பெறத்தக்கவர் என்பதனையும் இந்நூல் தெள்ளத் தெளிய விளக்குகின்றது. எல்லா வகையாலும் தமிழுக்கும் தமிழ் நாட்டிற்கும் உயர்வு தரும் இந் நூலைத் தமிழ் நாடு வரவேற்று மகிழுமாக.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

முதற்பதிப்பின்

பதிப்புரை

இந்நூலாசிரியரைத் தமிழுலகம் நன்கு அறிந்து கொண்டது; இவர்தம் நூலை அன்புடன் வரவேற்றது. அண்ணாமலைப் பல்கலைக் கழகம் - சென்னைப் பல்கலைக் கழகம் - இந்த இரு கல்விக் கோயில்களிலும் மாணவர் அதனைக் கற்கின்ற காட்சி கண்டு களிக்கலாம். அந்த நூலின் பொருள் நலனைப் புகழ்ந்தோர் பலர். அவர்களுள் மூவர்தம் கருத்துக்களை இந்நூலின் பின் சேர்க்கையில் காண்க. இம் மூவரில் ஒருவர் தனித்தமிழ்ப் புலமையில் தலைசிறந்த முதுபெரும்புலவர்; புலவர் ஏறு. ஒருவர் ஆங்கிலம் தமிழ் ஆகிய இருமொழிப் புலமையும் மிக்கவர். மற்றொருவர் தமிழ்ச் செய்தித்தாள் உலகில் சிறந்த எழுத்தாளர்.

அந்த நூலை உலாப் புறம் போகக் கண்ட சென்னைத் தமிழ்ச் சங்கம் சிறந்த தமிழ்ப்பணியே செய்தது என்ற உண்மை உறுதியாயிற்று. இத்தகைய நூல்களை இந்நாளைய தமிழுலகம் விரும்புகிறது என்பதும் தெளிவாகியது. பொருள் நலனை ஆராய்ந்த நூலாசிரியர் பா நலனையும் திறனாய்ந்து தெளிந்தார். இன்று இதன் செவிலித்தாயாக நின்று திரு. வி. க. இதனை நடையாட விடுகின்றார். தொல்காப்பியம் எனும் தமிழ்ப் பழம்புதையல் மேனாட்டுப் புதிய கருத்துக்களின் கருவூலமாய்க் காட்சியளிப்பதனை இந்த நூலில் காணலாம். தொல்காப்பிய மரபு உரையாசிரியர்கள் காலத்திற்கு முன்பே பெரிதும் மறைந்தது. உரைகளிடையே எழுகின்ற கோளாறுகள் இதனால் எழுந்தவையே. உரையாசிரியர்கள் கூறியதே முடிந்த பொருள் என அவர்களைக் கொடுங்கோன் மன்னராக்க முயன்ற காலமும் உண்டு. அந்த இரவு போய்ப் பொழுது விடிகின்றது.

தொல்காப்பியத்திற்கும் சங்க நூல்களுக்கும் பலபல உரைகள் வேண்டும்; பலதிறத்த கருத்துக்களிடையே உண்மை உருப்பெற்று வரக் காண்போம். செய்யுளின் உண்மை இயல்பினை நம் நூலாசிரியர் விளக்கும் முறையாகத் தொல்காப்பியத்திற்கும் நெடுநல்வாடைக்கும் புத்துரை கண்டுள்ளார்; உயிர் நிலையை உணர்ந்தே உள்ளார். வெற்றறிவன்று இங்குக் கலகலப்பது. உணர்வின் சுவை பழுத்த தெளிவே இங்குத் தெவிட்டாது இனிப்பது. ஷேக்ஸ்பியரைப்பற்றி 'விக்டர் ஹ்யூகோ' என்ற பிரான்ஸ் நாட்டறிஞர் எழுதிய நூல் நினைவிற்கு வருகிறது. சுருங்கச் சொல்லின் இந்நூலே ஒரு செய்யுளாம். வாழ்க தமிழ்! வாழ்க தமிழ்மரபு! வாழ்க கீரர்! வாழ்க தொல்காப்பியர்! வாழ்க கோதண்டபாணியார்! வாழ்க தமிழன்!

திரு. கோதண்டபாணியார் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர்; அரசியற்றுறையிலும் அதற்கேற்ற பொறுப்பே பெற்றுள்ளார்; இயற்கையின் பொருத்தத்தை என் என்பது! இந்த நூலின் வருவாய் முழுதும் தலைசிறந்த தமிழ்நூல்களை வளர்க்கும் தொண்டிற்கே உதவ வேண்டும் என்பது ஆசிரியர் வேணவா; சென்னைத் தமிழ்ச் சங்கத்தின் கடப்பாடு.

கைம்மாறு கருதாது இந்நூலின் அச்சுத்தாள்களைப் பார்வையிட்டு உதவிய வித்துவான் திரு. M. V. வேணு கோபாலப் பிள்ளை அவர்களுக்கும், வித்துவான் திரு. M. வரதராசனுர் B.O.L., M.O.L., அவர்களுக்கும் சென்னைத் தமிழ்ச் சங்கம் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றது.

சென்னைத் தமிழ்ச்சங்கம்,
சென்னை,
25—5—47

தெ. பொ. மீனுக்ஷிசுந்தரன்
செயலாளன்.

அணிந்துரை

உலகம் - பரந்த உலகம் - காட்சியளிக்கிறது. அதன் கண் உயிர்கள் வாழ்க்கை நடாத்துகின்றன. வாழ்க்கைக்கு ஏதேனும் குறிக்கோள் உண்டோ? இல்லையோ? ஏதேனும் ஒன்று இருந்தே தீரல்வேண்டும். அஃது எதுவா யிருக்கும்? இதற்கு எதைக் கொள்வது தகுதி? கூர்ந்து கூர்ந்து உன்ன உன்னச் சான்ரேர் வாழ்க்கை அடைவைக் கொள்வது தகுதி என்பது தோன்றும். சான்ரேர் வாழ்க்கை அடைவை ஆராய்ந்தால், அஃது 'அன்புப் பேறு - அன்புப் பேறு' என்று முழங்கும். ஆகவே, வாழ்க்கையின் குறிக்கோள் அன்புப் பேறென்னலாம்.

அன்புப் பேற்றின் தோற்றம்?

அன்புப் பேற்றை முதல் முதல் உலகுக்கு அறி வுறுத்திய நாடு எது? நமது அருமைத் தமிழ்நாடு என்று கூறலாம்; இறுமாந்து கூறலாம். அன்பு வளர்ச்சிக்கு உரிய நூல்கள் - அகநூல்கள் - புறநூல்கள் - முதல் முதல் யாண்டுத் தோன்றின? இற்றை ஞான்றும் அவை யாண்டு மலிந்து கிடக்கின்றன? சரித்திர உலகமே! சான்று பகர்க.

தொன்மை

அன்புப் பேற்றை உலகுக்கு அறிவுறுத்திய வாய்ப் பைத் தமிழ்நாடு பெற்றமைக்கு என்ன காரணங் கழறலாம்? காரணம் பல கழறலாம். ஈண்டுச் சிறந்த ஒன்று தேவை. சிறந்த ஒன்ருகத் தொன்மையைக் கோடல் ஈண்டைக்குப் பொருத்தமாகும்.

சான்றுகள்

தமிழ்நாடு தொன்மை வாய்ந்தது; மிக்க தொன்மை வாய்ந்தது. அதன் தொன்மையைக் காலத்தால் அறுதியிட்டுக் காட்டல் இயலாது. அது, நாவலந் தீவு தமிழ் நிலமாய்த் திகழ்ந்ததைக் கண்டது; இந்துமாக்கடல் நிலப் பரப்பாய் நின்றதைக் கண்டது; இமயம் நீரிடை மூழ்கிக் கிடந்ததைக் கண்டது. தமிழ்நாட்டின் தொன்மை என்னே! என்னே! இன்னுந் தொன்மையை வலியுறுத்துஞ் சான்றுகள் பல உள்ளன. அவற்றுள் இரண்டொன்றை ஈண்டுப் பொறித்தல் சாலும்.

தமிழ்நாட்டின் வட எல்லையில் உற்ற மாறுதல்களை எண்ண எண்ண, அதன் தொன்மை புலனாகும். தமிழ் நிலத்தின் வட எல்லை இமயமாயிருந்த காலமுண்டு. அவ் வெல்லை நாளுக்குநாள் நகர்ந்து நகர்ந்து விந்தியத்தில் குடியேறியது. அக்குடியேற்றம் ஆண்டு நிலைத்து நின்றதா? இல்லை. தமிழ் எல்லை பையப் பைய ஊர்ந்து ஊர்ந்து வேங்கடத்தில் அமர்ந்தது. எல்லைக் கல் இமயத்தினின்றும் விந்தியத்தை நண்ணவும், ஆங்கிருந்து வேங்கடத்தைச் சேரவும் எத்துணை எத்துணை ஆண்டுகளாகி யிருக்கும்?

தமிழின் தொன்மைக்கு, ஹெக்கல், கீத் உள்ளிட்ட பேரறிஞர் நிகழ்த்திய ஆராய்ச்சிகள் துணை போகின்றன; மகோஞ்சதாரோ கலங்கரை விளக்காக ஒளிர்கிறது; பழந் தமிழ்க் கலைகள் எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றன; மொழியின் மென்மையும் பொருந்திய சான்றாக நிற்கிறது.

தொன்மையின் விளைவு

தொன்மையின் விளைவு என்னை? அன்பு. தொன்மைக்கும் அன்புக்குந் தொடர்பு உண்டு. தொன்மையினின்றும் அன்பு கனிவது இயற்கை.

பல்கலைக் கழகப் பட்டம் பெற்ற ஓர் இளைஞன் ஒரு தெரு வழியே செல்கிறான். பட்டம் பெறாத முதியன் ஒருவனும் அவ்வழியே போகிறான். தெருவிடை ஒரு துன்பக் காட்சி தோன்றுகிறது. அக் காட்சி இளைஞனைக் கவரவில்லை; அது முதியனைக் கவர்ந்தது. காரணம் என்னை? முதுமையின் கனிவேயாகும். முதுமை ஓர் அன்பு நிலையம். காயினும் பழஞ் சுவைத்தல் இயல்பன்றோ ?

தமிழ்நாட்டுத் தொன்மை அதனை ஓர் அன்புக் கழக மாக்கியது. அக்கழகம் உலகுக்கு அன்புக் கலையை அறி வுறுத்தியது.

தொல்காப்பியம்

தமிழ் நாட்டுத் தொன்மையைக் காப்பதற்கென்று, பண்டை நாளில் - ஏறக்குறைய மூவாயிரம் ஆண்டுகட்கு முன்னர் - ஒரு தமிழ் ஞாயிறு உதித்தது. அஞ்ஞாயிறு கான்ற ஒளியே 'தொல்காப்பியம்' என்ற தமிழ்க் கலை.

இக்காப்பியத்தின் உள்ளுறை, மொழிவளம், நடைப் போக்கு முதலியன திடீரென முகிழ்த்திருக்குமோ? எத் துணையோ நூறு நூறு ஆண்டுகட்கு முன்னர் முகிழ்த் திருத்தல் வேண்டும். ஆகவே, தொல்காப்பியத்தைப் பழம் பெருந் தமிழ்நாட்டின் வாழ்க்கை ஓவியம் என்று கொள் ளலாம்.

தொல்காப்பியத்தின் உள்ளம்

தொல்காப்பியத்தின் உள்ளம் என்னை? அன்பு என்று சுருங்கச் சொல்லலாம். அன்பு எழுத்தாய், சொல்லாய், பொருளாய் அக்காவியத்தில் பரிணமித்தது.

அன்பு, சேர்க்கையால் நிகழ்வது. அது தனிமையில் நிகழ்வது அரிது. எழுத்து ஒலியின் சேர்க்கை. சொல்

எழுத்தின் சேர்க்கை. இரண்டின் சேர்க்கை, பொருள். பொருள் அன்பின் திரட்சி.

பொருள் இரு கூறுடையது. ஒன்று அகம்; மற்றொன்று புறம். இவ்விரண்டும் பொருளின் நுரை ஈரல்கள். இவற்றின் காப்புக்கெனக் கருவி கரணங்களும் அமைந்துள்ளன.

அன்பு வளர்ச்சி

அகத்தில் நால்வகை நிலம், அதததற்குரிய மரம், பறவை, விலங்கு, மக்கள்கூட்டம், வழக்கவொழுக்கம் முதலியன பொலிகின்றன. இவற்றில் ஒருவித வளர்ச்சி இருத்தல் கருதற்பாலது. அவ்வளர்ச்சி அன்பை அடிப்படையாக் கொண்டதென்பதும் உணரற்பாற்று.

அன்பு, மரம் முதலிய அஃறிணை உயிர்களிடத்துக் காமமா யெழும்; மக்கள் கூட்டம் என்னும் உயர்திணை உயிர்களிடத்துக் காதலாய் முதிரும். காதல் முதிர்ச்சி அன்பின் முழு நிலையைக் கூட்டும்.

மாக்கள் கூட்டம் என்று ஒன்று உண்டு. அஃது அஃறிணைக்கும் உயர்திணைக்கும் இடையில் இருப்பது. (அதை அஃறிணையாகக் கொள்வோருமுளர்.) அக் கூட்டத்திடை அன்பு காதலாய் ஓங்குவதில்லை. அது கைக்கிளையாய்ப் பெருந்திணையாய்க் காமத்தளவில் நின்று விடுவது.

அகப்பொருள்

அன்பு, காமநிலையைக் கடந்து, காதல்நிலை எய்துவதை அறிவுறுத்துவது அகம். அகமாவது ஒருவனும் ஒருத்தியும் சேர்ந்து நடாத்தும் இல்வாழ்க்கை. சேர்க்கை இயற்கையின் பாற்பட்டது. சேர்க்கை அற்ற ஒருவனோ ஒருத்தியோ அன்புநிலை எய்தல் அரிது.

ஆனந்தவெள்ளத் தழுந்துமோர் ஆருயிர் ஈருருக்கொண்
டானந்த வெள்ளத் திடைத்திளைத் தாலொக்கும்........

இது மாணிக்கவாசகர் அருளிய திருக்கோவையாரி லுள்ள ஒரு பாட்டு. இதன்கண் போந்துள்ள 'ஒருயிர் ஈருரு' என்பது கூர்ந்து முன்னத்தக்கது.

காதல், ஒருவன் ஒருத்தி வாயிலாக ஈருயிர்த் தோற்றத்தை ஒருமைப்படுத்துவது. இதுவே இரண்டற்ற தன்மை. இஃது அகத்தின் இயல்.

புறப்பொருள்

அகம், புறமாக விரியும் பண்புடையது; அஃதாவது காதல், அன்பாய் முதிர்வது. 'அந்தோ! போர்முறை மிடையும் புறத்திலா அன்பு முதிரும்? நன்று! நன்று!' என்று எள்ளுவோரும் இருப்பர். இதுபற்றிய ஐயப்பாடு எழுந்து வாதமேடை ஏறிய காலமுமுண்டு.

துன்பத்தில் அன்பு

போர் முறைகள் வாழ்க்கைச் சிக்கல்களை-தொல்லை களை - துன்பங்களை - உணர்த்துவன. இவை மனமாசு களைக் களையுங் கருவிகள். மாசற்ற மனனே அன்பு ஊற் றுறும். போராட்டம் இயற்கையின் ஒரு பெருங் கூறு. அதை ஆண்டவன் மறக்கருணை என்னலாம். அஃ தில்லையேல் அறிவோ அன்போ அறமோ வளராது. போர் முறை கூறும் புறத்தில் இன்ப அன்புச் செய்யுளியல் பொலிதல் சிந்திக்கற் பாலது. போராட்ட வாழ்க்கைச் சிக்கல் - தொல்லை - துன்பங்களினின்றும் அன்பு பிறத்தல் இயல்பு.

கோமன் என்பவன் ஓர் ஊருக்குப் புறப்பட்டான். வழியில் செழிய பயிர்களும், நெடிய பொழில்களும் அவனை

வரவேற்றன. கொழுத்த பறவைகளும் விலங்குகளும் அவனை நோக்கின. மாட மாளிகைகள் வானளாவி நிற்கின்றன. மதர்த்த ஆடவரும் மகளிரும் உலவினர். கோமன் கண்ணுக்கு அவையெலாம் களிப்பூட்டின. ஒன்றேனும் அவன் உள்ளத்தே உறங்கும் அன்பை விழிக்கச் செய்யவில்லை. கோமன் தொடர்ந்து நடந்து மற்றுமோர் ஊரை அடைந்தான். அங்கே பயிர்களும் பொழில்களும் வாடி வதங்கி உலர்ந்து கருகுகின்றன. பறவைகளும் விலங்குகளும் எலும்புந் தோலுமாய் நகரவும் ஆற்றலின்றிக் கிடக்கின்றன. சரிந்த குடிசைகளும், இடிந்த வீடுகளும் நிற்கின்றன. ஆடவரும் மகளிரும் பசியால் - பட்டினியால் - மெலிந்து தசை வற்றி நடக்கவும் இயலாதவராய்க் கிடக்கின்றனர். சிற்சில இடங்களில் போரும் நிகழ்கிறது. ஒவ்வொரு காட்சியும் கோமன் கண்ணில் நுழைகிறது; நுழைந்து அவனது நடையைத் தகைகிறது; நெஞ்சை உருக்குகிறது; அன்பை எழுப்புகிறது. அவனது அன்பு, ஊரவர் அன்பு ஊற்றைத் திறக்கிறது. பறவை, விலங்கு, மக்கள் கூட்டமெல்லாம் அவனைச் சூழ்கின்றன. துன்பத்திடை அன்பு பொங்குகிறது. இவ்வன்பு முன்னைய ஊரில் நெகிழவே இல்லை. துன்பங்களிடை அன்பு நிகழ்வது இயற்கை. ஈண்டைக்கு விரிவுரை வேண்டுவதில்லை.

தமிழ் மரபு

அகத்தில் எழுங் காதல், புறத்தில் புகுந்து, பலதிறப் போராட்டங்களிடை ஊடுருவி, மாசுகளைக் கழித்து, அன்பாகி, எல்லா உயிரையும் ஒருமைப்படுத்துகிறது. இங்கே வாழ்க்கையின் குறிக்கோள் நிறைவேறுதல் காண்க. இந் நுட்பத்தை அறிவுறுத்துவது தொல்காப்பியம். இது தமிழர் மரபு. (இஃது உலக மரபாகியது.) இம்மரபு வாழையடி வாழையென வளர்ந்து வருகிறது.

காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனுங் கிழத்தியுஞ்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே —தொல்காப்பியம்

யாதும் ஊரே யாவருங் கேளிர் —புறநானூறு

அந்தண ரென்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான் —திருக்குறள்

ஊனூண் துறமின் உயிர்க்கொலை நீங்குமின்—சிலப்பதிகாரம்

தன்னுயிர் தான்பரிந் தோம்பு மாறுபோல்
மன்னுயிர் வைகலும் ஓம்பி வாழுமே —சிந்தாமணி

உரைசேரும் எண்பத்து நான்குநூ
றாயிரமாம் யோனி பேதம்
நிரைசேரப் படைத்தவற்றின் உயிர்க்குயிராய்
அங்கங்கே நின்றான் கோயில் —தேவாரம்

எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவும்நின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே —தாயுமானவர்

நிலைபெறும் இரக்கம் நீங்கில் என்உயிரும் நீங்கும்
நின் திருவுளம் அறியும் —அருட்பா

துறவு

ஆண் பெண்ணை வெறுத்தும், பெண் ஆணை வெறுத்தும், தனித்து வாழ்தல் தமிழ் மரபாகாது. இது தமிழர் கண்ட துறவுமன்று. சேர்க்கையற்ற தனித்த வாழ்க்கையில் அன்பு சுரத்தல் அருமை. மனமாசற்ற ஒன்றே தமிழர் கண்ட துறவு. இஃது ஆண் பெண் சேர்க்கை என்னும் இல்வாழ்க்கையில் எழும் அன்பால் விளைவது. இதுபற்றிப் பொதுவாக என் நூல்களெல்லா வற்றிலும், சிறப்பாகப் 'பெண்ணின் பெருமை,' 'திருக்குறள் விரிவுரை' என்னும் நூல்களிலும் விரித்துக் கூறியுள்ளேன்

பொதுமை அறம்

தொல்காப்பியம் எத்தகைய நூல்? அஃது உலகை ஒருமைப்படுத்தும் அன்பு நூல். ஒருமை அன்பு, உயர்வு தாழ்வை அகற்றிப் பொதுமை அறத்தை நிலைபெறுத்தும். பொதுமை அறம் அமைதி வாழ்க்கையை நிலவச் செய்யும். ஆகவே, தொல்காப்பியத்தை அன்புநூல் என்று கொள்வதோடு, பொதுமை அறநூல் என்றும், வாழ்க்கை நூல் என்றுங் கொள்ளலாம். இத்தொல்காப்பியத்தை முதலாக் கொண்டு பிறந்த நூல்கள் சில. அவை சங்க நூல்கள் என்று வழங்கப்படுகின்றன. அவற்றுள் ஒன்று நெடுநல்வாடை.

நெடுநல்வாடை

நெடுநல்வாடையை அருளிச் செய்தவர் நக்கீரர். நக்கீரர் சங்கப் புலவருள் தலையாயவர். அவர் நாயகன் கவிக்குங் குற்றம் நவின்றவர் என்று போற்றப்படுகிறார். இஃது அவரது புலமைத் திறத்தைப் புலப்படுத்துதற்கென்று எழுந்த கதை.

நக்கீரர் தொல்காப்பிய உள்ளத்தைக் கண்டவர் என்று சொல்லலாம். இஃது அவர்தம் 'நெடுநல்வாடை'யால் விளங்குகிறது. 'நெடுநல்வாடை'யைத் தொல்காப்பியத் திறவு என்று செப்புதல் தவறாகாது.

அறிஞர் எண்ணங்கள்

தொல்காப்பியர் தொல்காப்பியத்தை அருளிச் செய்த பின்னருஞ் சிலவற்றை எண்ணியிருப்பர். அவையும் நக்கீரர்பால் ஒன்றி 'நெடுநல்வாடை'யில் புகுந்திருக்குமென்று ஊகஞ் செய்ய 'நெடுநல்வாடை' இடந் தருகிறது. அறிஞர் எண்ணங்கள் அவருடன் இறந்து படுவதில்லை.

அவை வானிற் படிந்து, அவ்வறிஞர் அனையவர் வழியே வெளிவரும்.

தலைப்பும் பொருளும்

'நெடுநல்வாடை' நல்ல தலைப்பு; பொருந்திய தலைப்பு. தலைப்பிலேயே நூலின் பொருள் உறைகிறது. நூலின் பொருள் அவ்வளவும் பொருந்தி நிற்கும் முறையில் தலைப் பளித்த பெருமை ஆக்கியோருடையது.

வாடை பொதுவாக மக்களால் விரும்பப்படுவதில்லை. ஆனால் இங்கே அது விரும்பப்படுவதாகிறது. ஏன்? அஃது இங்கே நல்வாடையாகிறது. நல்வாடை போற்றற்குரியதே. அத்தகைய ஒன்று இடையில் வீழ்ந்துபட்டால் என் செய்வது? அதனால் அது நெடுநல்வாடையாகிறது; அஃதாவது அழியாது நீளும் நல்வாடையாயிற் றென்க.

'வாடை' துன்பத்தைக் குறிப்பது; 'நல்' அன்பை உணர்த்துவது; 'நெடு' அழியாமையைத் தெரிவிப்பது. தொடரிலுள்ள பொருண்மையின் விழுப்பத்தை ஓர்க.

இயற்கையில் துன்பம்

உலகம் துன்ப மயம். ஆனால் அதனூடே அன்பும் விரவி நிற்கிறது. இல்லையேல் உலகம் பாழாகும். இயற்கை உலகில் துன்பம் ஏன் அமைந்துள்ளது? அன்பு வேட் கையை உயிர்களிடை எழுப்புதற்கென்று துன்பம் இயற்கை யுலகில் அமைந்துள்ளதென்க. துன்பம் வீறி எழுந்து உயிரை அடர்ந்து நெருக்க நெருக்க (அதன் எல்லையில்) மனம் அன்பில் தோய்ந்தே தீரும். மனம் அன்பில் ஈடுபடப் படத் துன்பம் படிப்படியே மறையும்; அப் படிப்படியே அன்பு பொங்கிப் பொங்கிப் பெருகித் தன் முழுநிலை எய்தும். அந்நிலையில் உயிர்களில் வேற்றுமை

தோன்றுது. எல்லாம் ஒருமைப்படும். இன்னோரன்ன செம்பொருள்கள் 'நெடுநல்வாடை'யில் செறிந்துள்ளன.

சுரங்கம்

'நெடுநல்வாடை' ஒரு பெருஞ் சுரங்கம்; நக்கீரர் கண்ட சுரங்கம்; தமிழ்ச் சுரங்கம். பண்டை நாளில் அச்சுரங் கத்தில் இறங்கி ஏறுவோர் தொகை பெருகியிருந்தது. பிற்றை ஞான்று அத்தொகை சுருங்கியது. வாடைச் சுரங்க ஆழம் பிற்கால மக்களை மருட்டியது போலும்! இந் நாளில் ஒருவர் அஞ்சா நெஞ்சங்கொண்டு வாடைச் சுரங் கத்தின் ஆழங் காண முயன்றனர். அவர்க்கு வாடை - நல் வாடையாய் - நெடுநல்வாடையாய்ப் புலப்பட்டது. அதனல் அவர்பால் அஞ்சாமை பிறந்தது; அதைத் தொடர்ந்து முயற்சியும் எழுந்தது. அவ்வொருவர் எவர்? அவர் இராவ் சாகேப் - கு. கோதண்டபாணி பிள்ளை, பி.ஏ.

கோதண்டபாணி பிள்ளை

தோழர் கோதண்டபாணி பிள்ளை நல்ல கலைஞர்; மேல் நாட்டுக் கீழ்நாட்டுக் கலைகளை ஆய்ந்தவர்; தமிழ்நாட்டுப் பழங்கலைகளில் கைபோயவர். இத்தகைய ஒருவரே நக்கீரர் உள்ளங் காண வல்லவர். நக்கீரர் உள்ளங் காணத் தோழர் உழைத்த உழைப்பு அதிகம். உழப்பின் வாரா உறுதிகள் உளவோ?

நக்கீரர் ஓவியம்

தோழர் கோதண்டபாணி பிள்ளை கலை உளங்கொண்டு நக்கீரரை எண்ணினர்; நினைந்தார்; உன்னினர்; முன்னினர். முன்னலிலே - ஆழ்ந்த முன்னலிலே - கருவி கரணங்கள் ஒய்ந்தன: புலன்கள் ஒன்றின. பிள்ளை ஓவியமானர். அவர்க்கு நக்கீரர் ஓவியம் புலனுயிற்று. கீரர் ஓவியம் பேசு

கிறது. ஆதலால் தோழர் ஒளிபெற்றார்; உள்ளொளி பெற்றார். ஒளி அவரை இக்கால நக்கீரராக்கிற்று. அக்கால நக்கீரரை படைத்த வாடை இக்கால நக்கீரரை என் செய்தது? இவர்க்கு வாடை - நல்வாடையாய் - நெடுநல் வாடையாய்த் துணை செய்து இன்பூட்டியது. இவர், தாம் பெற்ற இன்பத்தை வையமும் பெறச் செய்தார்.

'திறனாய்ந்து தெளிதல்'

கோதண்ட நக்கீரர், நெடுநல்வாடைச் சுரங்கத்துக்கு மின் விளக்குகளிட்டார்; விளக்கு மாலைகள் நிரைத்தார்; நெடிய தூக்குக ளெடுத்தார்; வான்படிக ளமைத்தார். இவ்வாறு சுரங்கத்துக்கு ஒளியால் வழிகோலி, இக்கால நக்கீரர் அதில் இறங்குகிறார்; ஆழ ஆழ இறங்குகிறார். மணிகள் - தமிழ்மணிகள் - அகமணிகள் - புறமணிகள் - பாமணிகள் - ஒளி கால்கின்றன. ஒரே ஒளிக் கான்றல்! கோதண்டபாணி, மணிகளை அகழ்ந்து அகழ்ந்து எடுக்கிறார்; எடுக்க எடுக்க அவர் பித்தரானார்; அன்புப் பித்தரானார். பித்து அவரை உள்ளே இறக்குகிறது; வெளியே ஏற்றுகிறது. மணிகள் குவிந்தன. தோழர் அவற்றைக் கோவைப்படுத்தித் தமிழ்த் தாய்க்கு அணிந்தார். அம்மணிக்கோவையே 'திறனாய்ந்து தெளிதல்' என்னும் இந்நூல்.

இரு பகுதி

'திறனாய்ந்து தெளிதல்' என்பது இக்கால நக்கீரர் கோதண்டபாணி பிள்ளையால் 'நெடுநல்வாடை'க்குக் காணப் பெற்ற ஓர் ஆராய்ச்சி விளக்க விரிவுரை. இவ்வுரை இரு பகுதிகளாலாகியது. ஒன்று 'பொருள் நலன்'; மற்றொன்று 'பா நலன்'. முன்னையது நான்காண்டுகட்கு முன்னர் வெளி வந்தது; பின்னையது இப்பொழுது வெளியாயிற்று.

பொருள் நலன்

பொருள் எது? நலன் எது? பொருள், வாடை. நலன், வாடையின் பயனாகிய அன்பு. வாடையினின்றும் நலம் பிறப்பது வியப்பா? அற்புதமா? இரண்டுமல்ல. அஃது இயற்கை என்பது இந்நூலின் உள்ளக்கிடக்கை.

வாடை

தென்றல் இன்பூட்டுவது. வாடை துன்பூட்டுவது. நக்கீரர் அதை விடுத்து இதைக் கொண்டார். ஏன்? தென்றல் இன்பூட்டுவது என்று சொல்லப் புலவர் வேண்டுவதில்லை. அஃது எவர்க்குந் தெரியும். அவ்வாறே வாடை துன்பூட்டுவதென்பது எவர்க்குத் தெரியாது? இதை விளக்கப் புலவர் வேண்டுங்கொல்!

இயற்கைக் கூறுகளைப் புலவர் நோக்குவது ஒருவிதம்; மற்றவர் நோக்குவது வேறு விதம். மரம் தாவரனுக்கு வழங்கும் காட்சியை மற்றவர்க்கு வழங்குவதில்லை. இவ்வாறே பிறவும்.

வாடை என்றதும், 'வாடையா? நடுக்கம்' என்று கொண்டு அஞ்சுவது மக்கள் இயல்பு. ஆனால் புலவோர் அவ்வாறு கொள்வதுமில்லை; அஞ்சுவதுமில்லை. புலவோர் நுனிப்புல் மேய்பவரல்லர். அவரது நெஞ்சம் ஆழ்ந்து செல்லும் பண்பு வாய்ந்தது.

நக்கீரர் நெஞ்சம் வாடையில் படிகிறது; துன்பத்தில் மூழ்குகிறது. துன்பம் அன்பை விளைத்தலை அந்நெஞ்சம் உணர்கிறது; அதை உலகுக்கு அறிவிக்கிறது. நக்கீரர் தென்றலை விடுத்து, வாடையைக் கொண்டதன் காரணத்தை ஆய்க; இது குறித்து இந்நூலாசிரியர் வெளியிட்டுள்ள கருத்தில் தோய்க.

குறிக்கோள்

புலவர் கடமை என்ன? உலகுக்கு நலன் பயப்பது. நக்கீரர் 'நெடுநல்வாடை'யால் உலகுக்கு நலம் பயப்பதைக் காண்க. அவர், வாடையை முதலாக் கொண்டு, வாழ்க்கை ஓவியம் வரைந்துள்ளார். வாழ்க்கையின் குறிக்கோள் யாது? எவ்வுயிரையுந் தன்னைப்போல் கருதி வாழும் அன்புடையது.

தோழமை

அன்பு நிலைகள் பலதிறம். அவற்றுள் விழுமியது தோழமை. தோழமை உயர்வு தாழ்வு அற்ற அன்புநிலை. இத்தோழமை வளர்தற்கென்றே இறையும் உயிரும் உலகமும் நிலவுகின்றன; வாழ்கின்றன. இப்பெற்றிமை வாய்ந்த தோழமை 'நெடுநல்வாடை'யின் உயிர்ப்பு. இதை இந் நூல் தெள்ளிதின் விளக்குகிறது.

தோழமை, இன்பத்தில் கனிவதா? துன்பத்தில் கனிவதா? வெற்றியில் விளைவதா? தோல்வியில் விளைவதா? விடைக்கு 'நெடுநல்வாடை'யைப் பார்க்க. விளக்கத்துக்கு இந்நூலை நோக்க.

புது உலகம்

இந்நாளில் புது உலகம் பெரிதும் பேசப்படுகிறது; எழுதப்படுகிறது. புது உலகம் எது? உலகமுழுவதும் தோழமையாவது புது உலகம். இவ்வுலகம் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே நக்கீரர்பால் கருவுற்றது. அதை உருவுறச் செய்துள்ளார் இந் நூலாசிரியர். புது உலகம் 'பொருள் நல'னில் பொலிவது காண்க.

புலவர் படைப்பு

புது உலகம் அவ்வப்போது போலிகளாலும் படைக்கப் படுவதுண்டு. அவ்வுலகம் நீரிற் குமிழியெனத் தோன்றி

மறையும். புலவர் நா படைக்கும் உலகமோ மறையாது. அஃது எப்பொழுதும் நிலவிக் காலத்துக்கேற்ற புதுமையை வழங்கிக் கொண்டேபோகும். அது வற்றாத வண்மைப் பாத்திரம். 'நெடுநல்வாடை' என்றோ நக்கீரர் நாவில் பிறந்தது! இன்றும் அது காலத்துக்கேற்ற புதுஉலகைப் புலப்படுத்து கிறது. அப்புது உலகைக் காட்டும் பளிங்கு நிலையம் இப் 'பொருள் நலன்.'

கொடுமை!

புது உலக மலர்ச்சிக்குப் போர் தேவை; துன்பந் தேவை; அஃதாவது வாடை தேவை. வாடை வீசுகிறது; நக்கீரர் வாடை வீசுகிறது. எப்படி வீசுகிறது? குளிரால் நடுக்குறாத குன்றும் நடுக்குறுகிறது. கன்றைப் பிரியாத ஆன், தன் கன்று தன்னை அணுக ஒண்ணாதவாறு உதைக்கிறது. என்னே வாடையின் கொடுமை! வாடை மன்னனையும் தாக்குகிறது; மற்றவரையுந் தாக்குகிறது. வாடைக்கு மன்னனென்றாலென்ன? மற்றவரென்றால் என்ன? அது பொதுமையது. மன்னனையும் மற்றவரையும் ஒருமைப்படுத்த வேண்டுமென்று, நல்லுளங்கொண்டு, இடைத் தோன்றல்களாகிய வேற்றுமைகளைக் களைந்தெறிய, சீரர் வாடை சீறிச் சீறி வீசுகிறது போலும்!

மன்னன் துன்பம்

வாடை மன்னனைத் தாக்குகிறது; அவனது உடலையும் உயிரையும் மோதுகிறது. தோல்வி யென்னும் மற்றொரு வாடை அவனைத் துளைக்கிறது. இவ்வாறு துன்பத்தால் அலக்கணுறும் மன்னன் எத்தகையன்? அவன் மனைவி இன்பந் துய்த்தவன்; அரச இன்பந் துய்த்தவன்; மற்றும் பல துய்த்தவன். அத்தகைய மன்னன், காற்று வாடையாலும், தோல்வி வாடையாலும் துன்புறுகிறான்.

துன்பம் அன்பாதல்

துன்பம் மன்னனைக் கட்டிலிற் கிடத்தவில்லை; கவலையில் வீழ்த்தவில்லை; மாற்றாரை எப்படி வெல்வது என்னுஞ் சூழ்ச்சியில் இறக்கவில்லை. என்ன செய்தது? வேந்தன உள்ளத்தை மாற்றியது. வாடை நல்வாடையாயிற்று.

மன்னன் நெஞ்சம் போரில் தலைப்பட்டுத் துன்புற்ற படைகள்மீது சென்றது. அவன் பாசறை நோக்குகிறான்; படைகளில் ஒருவனாகிறான்; வேந்து நிலை மாறி அன்பனாகிறான்; அன்புத் தோழனாகிறான். படைகளும் பிறவும் அவ்வண்ணமாகின்றன. குளிரால் வாடும் படைமகனை அரசன் தழுவுகிறான்; புரவியும் யானையும் மகிழ்ச்சியால் சேறொழுகும் வாலை வீசி அரசனைச் சூழ்கின்றன. எல்லாம் அன்பு; எதுவும் அன்பு; எங்குந் தோழமை. அன்புத் தெய்வம் தாண்டவம் புரிகிறது. வாடைத் துன்பம் எங்கே? துன்பத்திடை அன்புத் தோழமை காட்டும் நக்கீரர் வாழ்க.

நக்கீரர் தோழமை துன்பத்திடைப் பிறந்து வளர்வது. வளர்ந்த முதிர்ச்சியில் தோழமை துன்பத்தை உணராததாகிறது. மன்னனை நோக்குங்கள். அவனைப் போரும் தோல்வியும் வாடையுஞ் சூழ்ந்தன; சூழ்ந்து அடர்ந்து தாக்கின. தாக்குதல் மன்னனை உறுத்தவில்லை. என்னே தோழமையின் மாண்பு!

அன்புப் பரவல்

மன்னன் தோழமை அவனளவில் கட்டுப்பட்டுக் கிடக்கவில்லை. அஃது அவனிலும், அவனைச் சூழ்ந்துள்ள படைகளிலும், விலங்கு பறவை மரம் முதலியவற்றிலும், பிறவற்றிலும் படர்ந்து நிற்கிறது. மன்னன் வேறாகவும்,

மற்றவரும் மற்றவையும் வேருகவும் காணப்படவில்லை. எல்லாந் தோழமை; எதுவுந் தோழமை.

இவ்வன்புத் தோழமையே வாழ்வில் அடையத்தக்கது. உலகம் தோழமை வண்ணமாதல் வேண்டுமென்பது நக்கீரர் வேட்கை. அவர் தம் வேட்கை நிறைவேறுங்காலம் சேய்மையிலில்லை. அஃது அணித்தே நிற்கிறது. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் அக்கால நக்கீரர் கண்ட கனவு, இக்கால நக்கீரர் நினைவிலுற்று, அது 'திறனுய்ந்து தெளித'லாய், அதிலே சிறந்த 'பொருள் நல'னைப் பொங்கியுள்ளது.

உலகைத் தோழமையாக்கப் புகுந்த நக்கீரர் முடி அரசனையும் அரசியையும் தோழராக்குதல் கருதத் தக்கது. உயர்வைச் சமஞ் செய்தால் தாழ்வு தானே சமமாகும். அரசனையும் அரசியையும் தோழராக்கிய நக்கீரர்க்கு மற்றவரைத் தோழராக்குதல் அருமையாகுமோ? அவர் எல்லாரையும் - எல்லாவற்றையுந் - தோழராக்கினர். இந் நுட்பம் இந்நூலாசிரியரால் திறம்பட விளக்கப்பட்டிருக்கிறது.

'பொருள் நல'னில் பலதிற மணிகள் ஒளிர்கின்றன. அவை அணிந்துரையில் அடங்கா. ஆதலின், சிறப்பாக மூன்று மணிகளை எடுத்துக் காட்டுகிறேன். ஒன்று வெள்ளம்; இன்னென்று வழிபாடு; மற்றொன்று ஓவியம்.

வெள்ளம்

நெடுநல்வாடையில் வெள்ளம் தலைகாட்டுகிறது கோவலர் அதைக் கண்டனரோ இல்லையோ, வேறிடஞ் சென்றனர். அச்செலவைப்பற்றிய கவலை அவர்க்குத் தோன்றவே இல்லை. அவர்க்குத் தம்மிடம் பிறரிடம்

என்னும் வேற்றுமை தோன்றுவதில்லை போலும்! எல்லாம் பொதுமை என்ற கொள்கையுடையார் கோவலர் என்று தெரிகிறது. இது 'பொருள் நல'னில் புதுப் போர்வை பெற்றுள்ளது.

வழிபாடு

மக்கள் தொகுதியில் வழிபாடியற்றும் மகளிர் பகுதி மிளிர்கிறது. வழிபாடு கொடிய குளிரை மறக்கச் செய்கிறது. இது குறித்து ஆசிரியர் உரைகளிற் சிலவற்றை ஈண்டுக் காட்ட என் மனம் விழைகிறது.

> 'வழிபாடியற்றும் இம்மகளிரோ, கதவடைத்துக்கொண்டு நெருப்பின் அருகே அமர்தல் இலர். வழிபாட்டினிடத்தில் இவர்களைக் காண்கின்றோம். வாடையின் குளிர், விளக்கின் திரியையும் ஈரமாக்குகின்றது; இவர்களை ஈரமாக்கவில்லை. வழிபாட்டில் ஈடுபட்டவர்களைக் குளிர் வருத்தாது போலும்; ......முழுவலிமாக்கள் உடலுட் கொண்ட தேறல் அவர்கள் குளிரைப் போக்கிற்று. இம் மகளிர் உள்ளத்துட்கொண்ட வழிபாடு இவர்தம் குளிரைப் போக்கிற்று. தேறலோ, உட் கொண்டாரின் மனத்தை மயக்கி, அறிவை மழுங்கச்செய்து, குளிரைப் போக்குவது. வழிபாடு மனத்தைப் பண்படுத்தி, அறிவைக் கொளுத்தி, குளிரைப் போக்குவது. தேறல் உடலுக்குத் தரும் வலிமையை வழிபாடு உள்ளத்திற்குத் தருகின்றது; உயிருக்குத் தருகின்றது............

ஓவியம்

அரசி, அரசன் பிரிவை நினைந்து வருந்துகிறாள்; புரள் கிறாள்; வதைகிறாள்; அலமருகிறாள். நக்கீரர்க்கு இரக்க முண்டாகிறது. அவர் அரசியின் மனத்தை ஒன்றச் செய்ய முயல்கிறார். என்ன செய்கிறார்? ஓர் ஓவியத்தை அரசியின் கண்ணிற்படச் செய்கிறார். அரசியின் மனம் ஓவியத்தில் ஒன்றியது. அவள் ஓவியமானாள். நக்கீரர்

எத்தனை முறை ஓவியத்தில் ஒன்றியிருப்பர் என்பது ஆராயப் பெறல் வேண்டும்! நக்கீரர் ஓவியத்துக் களித்த விழுப்பத்தை எம்மொழியால் பகர்வது நெடுநல்வாடையில் வேறு பல கலை நுட்பங்களும் திகழ்கின்றன. அவைகளின் திறங்களை இந்நூலாசிரியர் காட்டிச் செல்லும் முறை கலைஞர்க்கு மனத்தமுதமாகும்.

பா நலன்

பாட்டு

இத்துணைச் சிறப்பு வாய்ந்த 'பொருள் நல'னை நக்கீரர் எக்கருவியால் உலகுக்குப் புலப்படுத்தினர்? பாட்டு என்னுங் கருவியால் புலப்படுத்தினர். பாட்டு எது? பாட்டுப் பொங்கும் இடமே இதற்கு விடை இறுத்தல் வேண்டும். 'பாட்டு இது' என்று விளக்கப் புகுந்த அறிஞர் பலர். அவரிடத்திருந்து பிறந்த கருத்துக்கள் பலப்பல. ஒன்றேனும் பாட்டை அணுகவில்லை. ஒவ்வொன்றும் ஒவ் வோரிடத்தை அடைந்து அடைந்து ஆங்காங்கே நின்று நின்று அசை போடுகிறது. பாட்டோ மேலே மேலே இவர்ந்து செல்கிறது. அதன் முடி எங்கேயோ? அடி எங்கேயோ? பாட்டுக்கு ஒப்பு பாட்டே யாகும்.

பாட்டுந் தமிழும்

பாட்டு எத்தனையோ மொழிகளில் எழுகிறது. அப் பாட்டை யான் இகழ்கின்றேனில்லை. தமிழ் மொழிப் பாட்டே பாட்டு என்பதை மட்டும் ஈண்டுத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழுக்கும் பாட்டுக்கும் நெருங்கிய உறவு உண்டு. அவ்வுறவு பிரிவற்றது. 'தமிழே பாட்டு - பாட்டே தமிழ்' என்று மொழிவது உயர்வு நவிற்சியாகாது. 'பாட் டியல் தமிழுரை பயின்ற எல்லையுள்................' என்று சேக்கிழார் நாட்டுப்படலந் துவங்குதல் காண்க.

பத்துப்பாட்டு

'நெடுநல்வாடை' தமிழ்ப்பாடல் நிறைந்த ஒரு தனிச் சிறப்பு நூல். அது பத்துப்பாட்டுள் இடம் பெற்றுள்ளது. இஃது, அது திறமுடைய தென்பதை வலியுறுத்துவதாகும். 'நெடுநல்வாடை' யின் பாநலம் பகர வந்த இந்நூலாசிரியர், அது பத்துப் பாட்டில் இடம் பெற்றமைக்குப் பகர்ந்துள்ள காரணம் பொருத்தமுடையதே. 'பத்துப்பாட்டு' ஒரு பாட்டாழி.

சுரங்கம்

'நெடுநல்வாடை' 'கஅஅ' அடிகளைக் கொண்டது. அது வடிவில் சிறியது; பொருளிலோ சுரங்கம். ஒரு சிறு புல் நுனியில் மருவும் ஒரு பனித்துளியினிடை ஒரு பெரிய ஆலமரம் காட்சி தருகிறது. அதுபோலச் சிறிய 'நெடுநல்வாடை'யில் பெரிய உலகம், உயிர், அன்புத் தெய்வம், இவற்றின் திறங்கள் முதலியன காட்சி தருகின்றன. இப்பெருமை, விளக்க உரை ஆசிரியரால் பாராட்டப்படுகிறது. அப்பாராட்டலைக் காண்க.

பாட்டும் பண்பாடும்

'நெடுநல்வாடை' சங்க காலப் பாட்டாலாகிய ஒரு நூல். சங்க காலப் பாட்டில் இயற்கைப் படமிருத்தல் கண்கூடு. இயற்கைப் பாட்டுக்குரிய சொற்கள் அக்காலப் புலவோர் நாவில் ஊற்றெடுத்தோடின. அக்காலத் தமிழ் மக்கட்கு இயற்கைப் பாட்டுச் செவியும் உள்ளமும் அமைந்திருந்தன. அவர்கட்கு வாழ்க்கை பாட்டாகவே பொலிந்தது; நாடும் பாட்டாகவே தோன்றியது. அதனால் அக்காலத் தமிழ் மக்களிடைப் பண்பாடு ஓங்கி வளர்ந்தது. பின்னே தமிழ் நாட்டில் கரடுகளும், முரடுகளும், போலிகளும், புன்மைகளும் புகுந்தன. தமிழ்க் காதும் உள்ள

மும் பாட்டுப் பண்பை இழந்தன. 'தமிழர் செவிடராயினர்; ஊமையராயினர்' என்று கூறல் மிகையாகாது.

நக்கீரரும் வாடையும்

இந்நூலாசிரியர் பழங்காலத் தமிழ்ப் பாட்டு நலனைத் துய்க்கும் புலன்களையும் உள்ளத்தையும் பெற்றவர். இஃது அவர் நிகழ்த்தியுள்ள ஆராய்ச்சியால் நன்கு தெரிகிறது. அவர்க்குச் சங்க காலப் பாக்களின் பொங்கலும், பிற்காலப் பாக்களின் மங்கலும் புலனாகின்றன. அவர் தாங் கண்டதை ஆங்காங்கே பதித்தே செல்கிறார். அப் பதிவில் பிற் காலப் பாக்கள் பெரிதும் இயற்கை நெறியினின்றும் வழுக்கி வீழ்ந்து கிடத்தல் வெள்ளிடைமலையென விளங்குகிறது. ஈண்டைக்கு ஒரு குறிப்புச் சாலும். அது நக்கீரர் வாடையையும் கம்பர் வாடையையும் பற்றியது. வாடை கம்பர் காலையும் வாரியது ஆசிரியரால் குறிக்கப் பெற்றுள்ளது. மற்றவர் நிலையைக் குறித்தலும் வேண்டுமோ? ஆசிரியர் முற்கால பிற்காலப் பாக்களை ஒப்புநோக்கி உரைத்துள்ள கருத்துக்களை நேயர்கள் உற்று உற்று நோக்குவார்களாக.

சொற்களும் தோழமையும்

நெடுநல்வாடைச் சொற்களும் இக்கால நக்கீர நெஞ்சைக் கவர்ந்துள்ளன. அவர்தம் நெஞ்சம் சொற்களின் அடியில் ஆழ்கிறது; அவற்றின் தொடரில் படிகிறது. சொற்கள் ஒன்றுக்கொன்று தோழமைபூண்டு தொண்டு செய்வது ஆசிரியர்க்கு விளங்குகிறது. இஃது ஆசிரியரது ஆன்ற ஆராய்ச்சித் திறத்தை வெளிப்படுத்துகிறது. சொற்களின் தோழமையுந் தொண்டும் வாழ்க்கையின் தோழமைக்குந் தொண்டுக்குந் துணை செய்யும். இது 'நெடுநல் வாடை'க்கணுள்ள ஒருவித நுட்பம்.

வெள்ள உள்ளம்

காட்சிகள் பலதிறம். அவற்றுள் ஒன்று வெள்ளக் காட்சி. வெள்ளம் இன்ப அன்பை ஊட்டுந் தெய்வக்காட்சி. 'ஏரி நிறைந்தனைய செல்வன் கண்டாய்' என்பது ஆன்றோர் மொழி. வெள்ளம் புகாத புலவோர் நெஞ்சமுண்டோ? நாவுண்டோ? வெள்ளத்தைப் பா நூல்கள் பகர்வது ஒரு மரபாகியது.

இந்நூலாசிரியர் உள்ளம் பாவண்ணமாகப் பொலி தருவது, அவ்வுள்ளம் வெள்ளத்தை நண்ணுதிருக்குமோ? 'நெடுநல்வாடை'யில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடவில்லை. அஃது ஆர்கலி அளவில் நின்று மின்னெனத் தோன்றி விரைகிறது. சுருங்கிய முறையில் 'ஆர்கலி' என்று கீரர் அறைந்ததற்குக் காரணங் கற்பிக்கிறார் இக்காலக் கீரர். கற்பனை இக்கீரர் கூர்த்த மதியைக் கருதத் தூண்டுகிறது. காரணத்தைக் கண்ணால் கண்டு கருத்தால் நோக்குக.

ஆர்கலி, ஆசிரியர் உள்ளத்தை வெள்ளத்தில் தள்ளு கிறது. 'நெடுநல்வாடை'யில் பெருவெள்ளங் காணோம். ஆசிரியர் நெஞ்சம் அலைகிறது. நக்கீரர் தந் தோழர்க்குத் துணை புரிகிறார். நக்கீரர் வெள்ளம் திருமுருகாற்றுப் படையில் பெருக்கெடுத் தோடுகிறதன்றோ? ஆசிரியர் உள்ளம் அவ்வெள்ளத்தை நாடி ஓடி அதில் விழுந்தது. நீர் வெள்ளம் சொல் வெள்ளமாகப் பெருகுகிறது. அப் பெருக்கில் மூழ்க மூழ்கச் சொல் வெள்ளம் அன்பு வெள்ள மாகிறது. ஆசிரியர் பொழிந்துள்ளது சொல் வெள்ளமோ? தமிழ் வெள்ளமோ? அன்பு வெள்ளமோ? ஆழ்க; ஆழ்க; சிந்தனையில் ஆழ்க.

யாப்பு

இந்நூல் யாப்பைப்பற்றிய சில குறிப்புக்களையுந் தாங்கி நிற்கிறது. அக் குறிப்புக்களிடை ஓரிடத்தில்

'காப்பியமும்' 'இலக்கியமும்' காட்சி வழங்குகின்றன. இரண்டையும் ஆசிரியர் நெஞ்சம் உரிமையுடன் நினைக்கிறது. அந்நினைவு நூற்கண் எழுத்தாய் உருக்கொண்டுள்ளது. அவ்வெழுத்தில் ஒருவிதப் புதுமை பொதுளுகிறது.

உலகங்களெல்லாம் நாமரூபமுடையன. நாமரூபம் அழிதன்மாலையன. அவை அழிந்து அழிந்து அணுவாகும்; அணு பரமாணுவாகும்; பரமாணு ஒடுங்கி ஒடுங்கி ஓசையாகும்; ஓசை ஒலியாய் முழங்கும். ஒலி (நாதம் - பிரணவம்.) கடந்தது சிவம். 'ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே 'உலகுக்கு ஒருவனாய் நின்றாய் நீயே' என்பது அப்பர் திருவாக்கு.

தத்துவம் முப்பத்தாறு. அது மண் முதல் ஓசை ஒலி (நாதம்) ஈறாயிருப்பன. ஓசை - ஒலி தனித்தும் மற்றத் தத்துவங்களிற் கலந்தும் நிற்பது. தனித்த ஓசை ஒலியே இயற்கை மூலம். ஒவ்வொரு தத்துவத்தையுங் கடந்து கடந்து தனித்த ஓசையை அடையும் பயிற்சியுடையவனே இயற்கைப் பாவலனாவன். முதல் முதல் எவனோ ஒருவன் இயற்கை ஓசையின் நுட்பத்தைத் தேர்ந்து, இயற்கைப் பாட்டுக்குரிய யாப்பை வகுத்தான். அம் முதல்வன் எவனோ? அவனை உலகம் அறியாது.

யாப்புக்குப் பல இயல்களுண்டு. அவற்றுள் ஒன்று - சிறந்த ஒன்று - ஓசை ஒழுங்கு. அவ்வொழுங்கில் நின்று பாவலன் பாடுவன். அவன் பாட்டே பாட்டாகும். வெறும் யாப்பு வாய்பாட்டைக் கொண்டு சொற்களை அடுக்குவோன் பாவலனாகான்.

'அடியாற் கெளியன்சிற் றம்பலவன் கொற்றங்
குடியாற் கெழுதியகைச் சீட்டுப்—படியின்மிசைப்

பெற்றான் சாம்பனுக்குப் பேதமறத் தீக்கைசெய்து
முத்தி கொடுக்க முறை.'

இப்பாட்டை நோக்குக. 'படியின் மிசை' என்னுந் தனிச் சீரை உன்னுக. இயற்கை யாப்போசையை உணராத சிலர் அதைப் 'படிமிசை' என்று திருத்துகிறார். அவர் கூறுங் காரணம், 'புளிமாங்கனி' வெண்பாச் சீராக வாராதென்பது. 'படிமிசை' என்பது இலக்கண வரம் புடையது; ஆனால் ஓசை ஒழுங்குடையதாகாது. 'படி மிசை' என்னும் பாடங்கொண்டு, பாட்டைப் பாடிப் பார்த்தால், ஓசை தட்டுதலை உணர்தல் கூடும். இக்குறை, இயற்கை ஓசை ஒழுங்கில் ஈடுபட்டுப் பண்பட்டுத் தெளி வடைந்தவர்க்கே புலப்படும். 'படியின் மிசை' என்பதி லுள்ள 'னகர' ஒற்றின் மாத்திரை அஃகி நிற்கிறது. இஃது, இயற்கை ஓசை யாப்புக்கு அரண் செய்வதாகும். வெண்பாச் சீருக்கும் இழுக்கு நேராது, 'படியி(ன்) மிசை' என்பதில் 'னகர ஓசை' அஃகியிருத்தலால், அது கருவிளங் காயேயாகும். இஃது இயற்கை யாப்பு. இதுபற்றிய விரி வுரை இங்கே தேவையில்லை.

இயற்கை ஓசை யாப்புக்கு அடிப்படை இயற்கைப் புலவர் பாடல். அஃது இயற்கை ஒட்ட ஓசைக்கும் முரண் படுவதில்லை. பிற்காலத்தவர் இயற்கை யாப்போசையை மறந்து, வெறும் வாய்பாட்டு யாப்பைக் கொள்ளலாயினர். அதனால் யாப்புச் சில இடங்களில் தூற்றவும் படுகிறது. நக்கீரர் பாட்டு, இயற்கை யாப்போசை வழியே பிறந்தது. இஃது இக்கால நக்கீரரால் இனிது எடுத்துக் காட்டப் பட்டுள்ளது.

இயற்கைப் பாட்டுறுப்புக்களாகிய நோக்கு, முரண், காலம், மாட்டு முதலியவற்றை இந்நூலாசிரியர் மறந்தா ரில்லை. அவற்றின்மீதும் அவர் தஞ் சிந்தை படிகிறது.

நோக்கு

நோக்கை எடுத்து ஆசிரியர் அலசுகிறார். ஏன் அதை அலசுகிறார்? 'நோக்கு' என்ற மணிமீது மாசுகள் படர்ந்தன. அதனால் அதை அலச ஆசிரியர் முனைந்தனர்.

நோக்கு என்னுஞ் சொற்குப் பொருள், கண்ணுங் கருத்தும் ஒன்றி ஒன்றைப் பார்ப்பது. கண்ணுங் கருத்தும் ஒன்றி ஒன்றை நோக்குங்கால் வேறு ஏதேனும் ஆண்டுத் தோன்றுமோ? தோன்றாது. தோன்றுமேல் உற்றது நோக்காகாது. நோக்கு, பலதிறம். அவை தத்துவ நோக்கு, பொருள் நோக்கு, பாட்டு நோக்கு முதலியன. இவை யாவும் கருத்தில் ஒன்றுபட்டனவே. பாநல ஆராய்ச்சியில் கொள்ளற்பாலது பாட்டு நோக்கே. இந்நோக்கின் நுட்பம் இடைக்காலத்தில் திரிக்கப்பட்டது. திரிபால் நோக்குக்கு வீழ்ச்சியும் நேர்ந்தது. இந்நூலாசிரியர் நோக்கின் திரிபைப் போக்கப் பெருமுயற்சி செய்துள்ளார். அவர் தம் முயற்சியை நூலிலே காண்க.

நோக்கு வாழ்க்கைக்குத் தேவை. நோக்கற்ற வாழ்க்கை சிறைப்பட்டதாகும். நோக்குப் பயிற்சியால் வாழ்க்கை ஆக்கமுறும். எந்நோக்காயினுமாக. அதைப் பற்றிய கவலை வேண்டுவதில்லை. எந்நோக்கிலாதல் பயிற்சி பெறுதல் வாழ்க்கைக்கு அழகு.

ஆசிரியர் பாட்டுறுப்பு நோக்கை ஆய்ந்து ஆய்ந்து பெற்ற தெளிவு, பாவுலகைத் தெளிவிக்குமென்று கருதுகிறேன். அவர் நோக்கியலைப் பல வழியில் விளக்குகிறார்; ஓரிடத்தில் அரிச்சந்திரன் நாடகத்தைக் காட்டி நோக்கியலை எளிதில் - மிக எளிதில் - தெளிவு செய்கிறார். தெளிவு நெஞ்சை வயப்படுத்துகிறது; நோக்கில் நிறுத்துகிறது.

நோக்கைப்பற்றி ஆசிரியர் சொரிந்துள்ள மலர்களிற் சிற்சிலவற்றையாதல் ஈண்டுத் தூவ உள்ளங் கிளர்ந்தெழு கிறது. அணிந்துரை விரியுமே என்னும் அச்சமுந் தோன்று கிறது. அன்பர்கள் அம்மலர்களை அகத்தே அணிந்து மணம் பெறுவார்களாக.

இந்நாளில் பலதிறப் போராட்டங்கட்கு உலகம் இரை யாகிறது. அதனால் வாழ்க்கையில் அமைதி நிலவா தொழிகிறது. காரணம் உலகம் நோக்குப் பயிற்சியைப் பெரிதும் விடுத்தமையாகும். மீண்டும் நோக்குப் பயிற்சி உயிர்த்தெழின், போராட்டங்கள் எழா; வாழ்க்கை பண் படும்; அமைதி நிலவும். காலநிலை யுணர்ந்து நோக்கை வலியுறுத்தி விளக்கிய ஆசிரியர்க்கு என்ன கைம்மாறு செலுத்துவது?

முரண்

நோக்கு ஒருமை கூட்டுவது. ஒருமை விளக்கத்துக்கு இருமை தேவை. இருமை காட்டுஞ் செய்யுளுறுப்பு மிருக்கிறது. அது முரண் என்பது. முரண் இயற்கை. பிறப்பு - இறப்பு, நன்மை - தீமை முதலிய ஆட்சிகளை உன்னுக.

இந்நூலாசிரியர் முரணை விடுத்தாரில்லை. அவர் முரணை விடுத்திருந்தால் நூலின் கரணம் விளங்கிராது. முரண் ஆசிரியரை முட்டவில்லை. அவர் தங் கலை நோக்குக்கு, முரண் எளிமையாய்த் தனது பண்பைப் புலப்படுத்தியது. உவமைகள் அவர் முன்னே ஏவல் செய்கின்றன. ஒன்றை ஈண்டுக் குறிக்கிறேன். அஃது ஓவியப் புலவோர் வெண்மையில் கருமை தீட்டி நிற்பது. 'வெண்மையில் கருமை' முரணுக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு.

ஆசிரியர் எழுத்தோவியத்தில் அரசியின் கலுழலும், அரசனின் அமைதியும் தவழ்கின்றன. அவள் கட்டிலில் கிடக்கிருள்; இவன் சேற்றில் திரிகிருன். ஆனல் அங்கே கவலைத் துன்பம்! இங்கே அமைதி அன்பு. நல்லமுரண்! நக்கீரர் முரண்! நோக்குக்கு அரண்!

காலம் முதலியன

காலம், மாட்டு முதலிய உறுப்புக்களும் ஆசிரியர் உள்ளத்தில் ஊறி ஊறிப் புதுமை விளக்கம் பெற்றுள்ளன. அவ்விளக்கம் பலதிறக் களங்கங்களைப் போக்கும் ஆற்றல் வாய்ந்தது. அது புலவர்க்கு மருந்தும் விருந்தும் ஆகும் என்று எண்ணுகிறேன்.

பண்டை உரை ஆசிரியர்

நோக்கு முதலிய உறுப்புக்களின் உள்ளங்காணப் பண்டை உரையாசிரியர் முயன்றனர்; ஒல்லும்வகை முயன்றனர். அவர் தம் முயற்சி அக்காலத்துக்கேற்ற அளவில் சென்று நின்றது. அவ்வளவில் நிற்க இந்நூலாசிரியர் ஆராய்ச்சித் திறன் அவரை விடவில்லை. அஃது அவரை மேலும் மேலுங் கடவியது; முடுக்கியது; அவரை நெஞ்சை முதலாசிரியருடன் உறவு கொள்ளுமாறு உந்தியது. அவ் வுறவால் விளைந்த பயன் என்னை? விளக்கம்; விளக்கம்; புது விளக்கம்.

இந்நூலாசிரியர் விளக்கம் பண்டை உரை ஆசிரியர் கருத்துடன் முரண்படுகிறது என்று சிலர் கருதல்கூடும். அவ்விளக்கம் முதலாசிரியர் கொள்கைக்கு முரண்படுகிறதா என்பதே கருதற்பாலது.

கருத்து வேற்றுமை

முதன்மையின் உள்ளங் காண உலகம் அவாவுகிறது. அதற்குரிய முயற்சியும் எழுந்தவண்ணமிருக்கிறது. உண்

மைக் காட்சிக்குப் பல கூறுகள் தேவை. அவற்றுள் ஒன்று-சிறந்த ஒன்று - கருத்து வேற்றுமை. கருத்து வேற்றுமை வளர வளர முதன்மையின் உண்மை விளங்கிக்கொண்டே போகும். கருத்து வேற்றுமைக்கு இடந் தாராத சமூகம், நாடு முதலியன சிறைப்பட்டே கிடக்கும்; சில வேளைகளில் சாம்பியும் போகும்.

முன்னாளில் ஆராய்ச்சிக்கென வாய்த்த கருவிகள் சில; மிகச் சில. இந்நாளில் அவை பெருகியுள்ளன. தோழர் கோதண்டபாணி பிள்ளை இக்காலத்தவர்; உலகக் கலைகளுடன் உழலும் ஒருவர். அவர்தங் கூர்த்த மதியினின்றும் பிறந்த விளக்கத்தைக் காய்தல் உவத்தலகற்றி, நடுநின்று, புலவோர் ஆராய்வாராக. புதுமை கண்ட ஆசிரியரைத் தமிழ்நாடு போற்றுவதாக.

அங்கதம் முதலியன

நக்கீரர் தமிழ், தென்றலாய் முதிர்கிறது; முதிர்ந்து வாடையாய் வீசுகிறது. பாட்டுப் பொழிலின் தலைவிரிகிறது; அசைகிறது; ஆடுகிறது. அங்கத அரும்புகளும், நகை மலர்களும், சிலேடைக் காய்களும், மற்றக் கனிகளுங் காட்சி கொடுக்கின்றன. கண்ணுடைய கோதண்டபாணி அவற்றைக் காண்கிறார்; கண்டு வியக்கிறார். அவரது வியப்பு, சிலேடை முதலியவற்றிற்கும் நக்கீரர் கலை தாயகம் என்று உலகுக்கு உணர்த்தாநிற்கிறது.

நகைப்பு

வாடையில் நகைப்புக்கு இடமுண்டாகுமோ? இடமுண்டாதல் இந்நூலாசிரியர்க்கு விளங்குகிறது. வாடையால் விளையும் நடுக்கத்தை ஆசிரியர் உணர்கிறார். அவ்வுணர்வு மீதூர மீதூர நக்கீரர் நகை புலனாகிறது. 'வாடையிலா நகை' என்று எவர்க்கும் நகைப்பூட்டுவது நக்கீரர்

நகை! வாடையில் நகை! நகைச்சுவை! அச்சுவையை உலகம் நுகரத் துணைபுரிந்த ஆசிரியர் முயற்சியே முயற்சி.

முடிவு ?

நெடுநல்வாடையின் எழுவாயும் இறுவாயும் ஆராய்ச்சியாளர் கருத்தை ஈர்த்தன. அவர்தம் நுண்மதி அவற்றில் படர்கிறது; படர்ந்து படிகிறது; படிந்து கதிர்களை உமிழ்கிறது. அக்கதிரில் உலகமே - தமிழ் உலகமே - மூழ்க; மூழ்க; மூழ்கி மூழ்கி ஒளி பெறுக; புது ஒளி பெறுக.

நெடுநல்வாடை 'வையகம் பனிப்ப....' என்று துவங்குகிறது. இத்துவக்கம் ஆசிரியர் கருத்தை ஈர்த்தது. ஏன்? ஏதேனும் நுட்பம் உண்டா? நக்கீரர் மூச்சிலும் ஏதேனும் நுட்பமிருக்கும். துவக்கத்தில் என்ன நுட்பம்? ஆராய்ச்சி உரையை நோக்குக. நூலின் தொடக்கத்திலேயே நூலின் உள்ளுறை ஒளிரும் நுட்பம் ஆராய்ச்சியில் வீறுகிறது. நூலுக்கேற்ற துவக்கம்; துவத்துக்கேற்ற நூல்.

ஒன்றற்குத் துவக்கமிருந்தால் இறுதி இருந்தே தீரும். இது மரபு. மரபு மட்டுமா? நியதியுமாகும். இம்மரபும் நியதியும் நக்கீரர் முன்னே பறந்தோடின. இது குறித்து ஆசிரியர் பொழிந்துள்ள மொழிகள் நேயர்களை இன்பத்தில் திளைப்பித்தல் ஒருதலை.

ஆசிரியர் இறுதி எங்கே எங்கே என்று ஆராய்கிறார்: தடவுகிறார். இறுதி புலப்படவில்லை. ஆராய்சசி விரைகிறது; விரைந்தும், அது நக்கீரரை அணுக வில்லை. ஆராய்ச்சி தளர்கிறது; நிற்கிறது. அது தன்னை மறக்கிறது. கீரர் சொற்களைக் காணேம். ஒலியையும் காணேம்; ஒன்றையுங் காணேம். ஒரே வெளி; எல்லையற்ற பெரு வெளி. இவர்ந்து இவர்ந்து சென்ற ஆராய்ச்சி இழிந்து இழிந்து வருகிறது; வந்து என்ன அறிவிக்கிறது? 'முடிவிலாப் பாட்டு' என்று அறிவிக்கிறது.

நக்கீரர் நூல் எல்லாவற்றையுங் கடந்த வெளியையும் உணர்த்த வல்லதென்பது ஆசிரியர் உள்ளக்கிடக்கை.

'பா நல'னால் பலதிற நலன்கள் விளையுமென்பதில் ஐயமில்லை. 'பா நலன்' தமிழ் நாட்டை எழுப்புகிறது; தமிழ்ப் பா உலகுக்கு ஒருவிதப் புதுவழி கோலுகிறது; புதுமை என்றதும் நடு நடுங்கிய கோழை உலகுக்கு அஞ்சாமை வழங்குகிறது. 'பா நலன்' வாழ்க.

உரை

'திறனாய்ந்து தெளிதல்' என்னும் இந்நூல் ஒரு நிலையமெனப் பொலிகிறது. இந்நிலையம் தமிழுரையால் அமைக்கப்பெற்றது. அவ்வுரையை என்னென்று கூறுவது? உரை நடை என்று கூறுவதா? உரைச் செய்யுள் என்று கூறுவதா? உரைச் செய்யுள் என்று கூறவே என் மனம் எழுகிறது. அச்செய்யுள் வனத்தில் ஏறு பாய்கிறது; மான் துள்ளுகிறது; அருவி முழங்குகிறது; மயில் ஆடுகிறது; குயில் கூவுகிறது; வண்டு பாண் மிழற்றுகிறது; மலர் தேன் பிலிற்றுகிறது; யாண்டும் யாண்டும் இயற்கை ஓசை; இயற்கை ஓட்டம்; இயற்கை இனிமை.

செவ்விய உரைநடை - ஏற்ற நடை - ஆசிரியர்க்கெனறமைந்தது. அஃது இயற்கை வனப்புடையது; சிறுசிறு தொடர்களாலாகியது; நெஞ்சில் பசுமரத்தாணிபோல் படிந்து ஓவியமாவது; அறிவை விளக்கி, உணர்வை எழுப்பி, அன்பைப் பெருக்கி, அமைதியைக் கூட்டுவது. அந்நடை தமிழ் இலக்கிய உலகுக்கு ஒருவிதப் புத்துயிர் வழங்குமென்று நம்புகிறேன்.

தோழமை

'நக்கீரர் வாடையா' என்று மருண்டு கிடந்த மக்களுக்கு, அது நல்வாடை யென்றும், நெடுநல்வாடையென்

றும் 'திறனுய்ந்து தெளிதல்' என்னும் இந்நூல் அறிவு கொளுத்துகிறது. 'நெடுநல்வாடை'யில் பொதிந்து கிடக்கும் வாழ்க்கைக் குறிக்கோளாகிய அன்பை - அஃதாவது தோழமையைத் 'திறனுய்ந்து தெளிதல்' உள்ளங்கை நெல்லிக் கனிபோல் விளங்க வைக்கிறது. 'நெடுநல்வாடை' யின் அகத்தைத் திறந்து காட்டுந் திறவு 'திறனுய்ந்து தெளிதல்' என்று அறுதியிட்டுக் கூறலாம்.

அலங்கல்

'நெடுநல்வாடை' யைக் கொழுகொம்பாக்கொண்டு, தமிழ்த் தாய்க்கு நறுந் தொண்டாற்றிய பெருமை தோழர் கோதண்டபாணி பிள்ளைக்கு உண்டு. அவர் தொடுத்த 'திறனுய்ந்து தெளிதல்' என்னும் அலங்கல் தமிழ்த்தாய்க்கு இன்பூட்டுகிறது. நக்கீரர் மலர்கள் இன்னும் பல உள. அவைகளையும் பைந்தமிழ்த் தொடையலாக்கி அன்னைக்கு அணிய இந்நூலாசிரியர் முயல்வாராக.

நன்றியும் வாழ்த்தும்

தோழர் கோதண்டபாணி பிள்ளை தமிழுலகுக்குப் புதிய முறையில் புனிதத் தொண்டாற்றினர் என்று தமிழ் சொல்லும். அத்தொண்டு அவர்பால் மேலும் மேலும் பெருக, அவர்க்கு நீண்ட நாளையும், நல்ல யாக்கையையும், செல்வத் திறங்களையும், மற்றும் பல பேறுகளையும் தமிழ்த் தெய்வம் அருள்வதாக.

தோழருக்கு எனது நன்றியும் வாழ்த்து உரியனவாக. நக்கீரர் வாழ்க; தமிழ் வெல்க.

சென்னை
3—4—1947 } திரு. வி. கலியாணசுந்தரம்.

டாக்டர் திரு. சோமசுந்தர பாரதியார் அவர்கள், இந் நூல் ஆசிரியருக்கு எழுதிய கடிதங்கள் இந்நூலின் திறனை அலசி ஆராய்ந்து கூறுவதால் அவையும் அவைபோன்ற பிற கருத்துரையும் இங்குப் பதிப்பிக்கப் பெறுகின்றன.

Professor,
S. S. Bharati, M.B., B.L.,
Advocate.

"Malaiyaham",
Pasumalai,
(South India)
4-9-1947.

To
Rao Saheb Thiru K. Kothandapani Pillai, avl
Special Officer, Kilpauk-Madras.

Dear Sir,

I thank you for both your letter dated 27th August and your book, "Nedunalvadai—Part II-Pa-Nalam", sent per Meenakshi Sundaram Pillai, M.A. From my appreciative acquaintance with Part I "Porul-Nalam" of this poem, I knew what to expect from you as an appraiser of poems and poetic values. I, therefore, read your book with aividity and also with hungry anticipation of many a dainty dish in a sumptuous literary feast. But your banquet this time exceeded all my expectations. And what is more, it not only regaled me with a rare repast, but also whetted and appetized my gluttonous palate instead of palling it as rich refections generally do.

Section (i)—'Porul & Pattu' (Poem and content) serves as savoury soup, and prepares the reader for the delicious platters to follow in quick and varied succession each only to platter and not to glut the palate of even the most fastidious connoiseur of literary critiques. The contents of section II, purveys almost ambrosial caviares to the general philistines. I confess it shattered my self-complacency of being the most astute assessor of poetic beauties. Every

item in this section is a treat; and it will be invidiously vulgar to try to discriminate and prefer one to another in this assorted array of amazingly appetizing confectionaries. If it were pardonable to point out any items as of special sweetness and superbness I'll give the ribbon to sub-sections 1 & 3, (1) ("பாட்டின் தோற்றுவாய்") "The poem and its portents" and (2) ("சொல்லின் திறன்") "The power and wealth of chosen words."

This book reveals a rare luminous insight into the poets mind and aims, and an uncommon instinct of poetic fancies. It is a pabulam resulting from an unique combination of the superb symposiac synthetic genius of a Victor Hugo, and the elaborate analytic architectanic talent of a Hudson in the realm of poetic reviews. The only fault, if fault it were, is that the book faintly breathes a slight strain of 'Dickensing' or overcolouring some shades of the exquisite pen-pictures, particularly in subsections 6 & 7.

I only wish you devote more of your time and attention to explore with equal zest and survey the numerous rich mines of the shorter lyrics of the Sangam classics, which under the search light of your master-mind, would yield even a more abundant haul of poetic gems of rare brilliance and rarer hues. Wishing you many a long year of glorious and felicitous literary harvests, which would enrich Tamil-literature, and add to your fame as the pioneer par-excellence of poetic criticism in Tamil.

Pasumalai,
4-9-1947.

(Sd) S. S. Bharati.

இந் நூலாசிரியர் இப் பாராட்டிற்கு நன்றி தெரிவித்து இந் நூலுள் தரப்பெற்ற புதிய விளக்கங்களின் திறனை ஆய்ந்து கூறுமாறு வேண்டியதற்கு விடை.

Dear Sir,

Your letter dated 13-9-'47.

To respond to your kind behest, affords me only another opportunity to pay homage to your avid and uncommon love of Tamil classics and rare critical talent and I, therefore, avail myself of it with warm and willing cordiality.

Almost all your remarks and astute observations in your review of Nakirar's masterpiece—'Nedunalvadai'—reveal your unique critical outlook and genuine artistic appreciation of poetic beauties. Your marvellous grasp of the basic and fundamental factors and phases of high class poetry in general, and of Tamil poetics in particular, is a very refreshing revelation to me of a taste, talent and scholarship, I have not come across even in the circle of professional pandits of scholastic learning. Your critical review of "Nedunalvadai" is both astute and exquisite highly intellectual and sweetly imaginative. All the five points you specifically raise, (viz) நோக்கு-காலம்-மாட்டு-முடியா முடிவு - are among the fundamental factors and phenomena that characterise and mark off classic poetry from the milk and water mediocrity. Your treatment of each and everyone of these aspects of this poem of Nakirar, is as thorough as it is artistic, while your application of these poetic rubrics, is original and comprehensive. Others have dwelt upon apt time (காலம்), antithesis (முரண்), predication (மாட்டு) only in their ordinary literal meaning. But you do not take them in this narrow sense, but give them their more natural and inherent and co-relative significance. Time is not a disjointed concept having only constant

relation to events as past, present and future; but it covers and connects events continously, while it runs. Again you do not stop short with mere contrarieties in sound symbols and meanings of words in juxtaposition as முரண், but go very much farther and expound the charm of happy contrasts of situations as well as forming more felicitous background of the rhetoric base of antithesis. Similarly, you give a new and extended import and implication to மாட்டு in which you reckon not merely the appropriate syntaxical copulas, but also rightly include all the implied and unexpressed suggestions above and beyond the denotations and connotations of the words used.

As regards 'Nokku' (நோக்கு), I fear few, if any, of the Tamil Scholars are known to have correctly comprehended the true and full significance of this concept. In fact, most commentators betray their lack of lucid perception by giving merely tautalogical repetition which is no interpretation of the word நோக்கு in the Tholkappier's prosody. Even Ilampuranar who just attempts to catch a glimpse fails to explain himself clearly. Your note is the first correct exposition of the term, to my knowledge; and what is even more to your credit, you aptly and amply illustrate your genuine and innately accurate interpretation. 'Nokku' is the law of poetic justice and aesthetics, which ordains that all the unit cells and tissues of poetic physiology, must subserve the supreme function of life of the organism, that the anatomy of poems should consist not of mere rigid, brittle, ratling bones, but must also admit to the required extent of cartilaginous flexibility and ligamental elasticity to adjust them for the varying functional needs of the organs, that in short the mechanical parts of prosody should be adjusted to suit the operation of the dynamics of the poetic content.

The bones of poetry are of course (*1. மாத்திரை*) volume and weight of sounds (*2. எழுத்து*) orthographic euphony or letter combination (*3.* அசை) syllabic structure (*3.* சீர்) feet forms (*5.* அடி) lineal magnitudes. 'Nokku' of the tamil poetics enjoins that these structural materials should be so handled, as to body forth and present to the readers' mental vision, the image of the inexpressible suggestions of the poet by the magic of their manipulation. Your felicitous illustration of this underlying idea of Nokku, would, it is to be hoped, dispel the mists and fogs which now cloud the pandit's minds, and leave this basic cannon no longer in doubt.

The last item, (முடியா முடிவு) the terminalogical but eventually incomplete conclusion, opening out a perspective vista to the minds eye, will of course be a fitting denoument to superb imaginative poetry, when handled by skilled artists. Although, in my opinion this is not governed by the sutram cited by you which deals only with a specific category of versification Purapattu Vannam (புறப்பாட்டு வண்ணம்) it is covered by sutram 203 of Tholkapier's Cheyyulial (செய்யுளியல்) குறிப்பொடு முடிவுகொள் இயற்கை புல்லிய எச்சம். This (எச்சம்) suggestive ellipsis in poetics entirely different from the etymological ellipsis (குறிப்பெச்சம்) dealt with by sutrams 34 and 44 of Echcha Iyal (எச்ச இயல்) of Chollathikaram (சொல்லதிகாரம்). Whatever the appropriate authority may be, you do well in pointing this out as among characterestic features in Tamil Prosody. I congratulate you cordially on your very original critical review of this classic poem of Nakirar.

With best wishes.

I remain,
Yours sincerely,
(Sd.) **S. S. Bharati.**

Pasumalai,
27-9-1947.

Roa Sahib
A. C. Paul Nadar, B.A.,B.L.
M. B. Isaac Nadar, B.A.,B.L.

"Soundara Vilas",
Tuticorin,
Dated 30-11-1947.

அன்புமிக்க ஐயா,

வணக்கம்.

தங்கள் "நெடுநல்வாடை-பாநலன்" கிடைத்தது. தங்களுக்கு என் மனமார்ந்த வந்தனம்.

தங்கள் "பாநலன்" மிகவும் நன்றாயிருக்கிறது. திரு. சோமசுந்தர பாரதியார் ஒருகால் உயர்வு நவிற்சியாகப் புகழ்ந்துவிட்டார்களோவென்று கொஞ்சமும் ஐயப்பட வேண்டியதில்லை. நான் ரொம்பவும் அனுபவிக்கிறேன். ஏனையோரும் அனுபவிக்க வேணுமென்று ஆசிக்கிறேன். நான் ரொம்ப நாளாய் எதிர்பார்த்த முறையில் கட்டுரை அமைந்திருக்கிறது. பத்துப்பாட்டு ஆராய்ச்சி மறைமலை அடிகளின் "முல்லைப்பாட்டுக்கும்", "பட்டினப்பாலைக்கும்" பின்னால் ஒருவரும் கவனிக்கவில்லையே என்று வருந்தினேன். மறைமலை அடிகளுக்குப் பலபடி தாண்டித் தங்கள் கட்டுரை விளங்குகிறது. தமிழ்நாட்டில் நக்கீரருக்குப் பின் realistic and creative criticism இறந்துபோனது யென்று வருந்தி ஓர் இங்கிலீஷ் பத்திரிகைக்கு சில மாசங்களுக்கு முன்னால் எழுதினேன். தங்கள் பாநலன் பார்த்தபின்னர், மறுபடி உயிர்த்துவிட்டதென்று நினைக்கிறேன்.

தங்கள் கட்டுரையைத் திரும்பத் திரும்பப் படிக்கிறேன். பொருள் நலத்தைக் காட்டிலும் தங்கள் மொழி நடை முதிர்ச்சி பெற்றிருக்கிறது; வளைந்து, குழைந்து தீவிர வேகத்தோடு செல்கின்றது. Taine's History of English Literature போன்றிருக்கின்றது. அப் புத்தகம், World's Classics இல் ஒன்று என்பது தங்களுக்குத் தெரிந்த விஷயம். பத்தொன்பதாவது நூற்றாண்டு மத்தியில் Taine பாரிஸ் நகரத்தில் ஐரோப்பிய இலக்கிய அரசராய் விளங்கினார்.

ஒப்பம்: **A. C. பால் நாடார்.**

நெடுநல்வாடை

பா நலன்

க. பொருளும் பாட்டும்

முற்பகுதியில்[1] நெடுநல் வாடையின் பொருள் நலத்தினை ஆய்ந்தோம்; ஆய்ந்து அதன் திறந்தனைத் தெரிந்தோம்; தெரிந்து ஒருவாறு தெளிந்தோம். ஆய்ந்தும் ஆய்ந்தும் அதன் நலன்களை எல்லாம் கண்டிலோம். கண்டன சில; காணாதன பல. இச்சிறு பாட்டு அளக்கலாகா ஆழமும் பொருளும் உடையது; திறன் பல செறிந்த திண்மை பெற்றது. சிந்திப்பரியது வாடைப் பாட்டு; இப்பாட்டின் பொருள்!

1. பொருள்நலன் ஒன்றே புகழ்க்கிடம் அன்று

சிந்திப்பரிய பொருள் ஒன்றே ஒரு பாட்டிற்குப் பெருமையைத் தருவதன்று. பொருள் எனப்படுவது தான் ஒன்று? அன்று: பற்பல. இப்பொருளைப் பற்றிய கொள்கைகளும் பல; அக்கொள்கைகளுள்ளும் வேற்றுமைகள் பலப்பல. ஒன்றே பொருள் என்று ஒருவர் கூறின், வேறு வேறு என்பர் பலர். வேறு

1. 'முற்பகுதி' என்றது, 'நெடுநல் வாடை - திறன் ஆய்ந்து தெளிந்த' லின் முதற் பகுதியைக் குறிப்பது.

எனிலோ, அன்று அன்று என்பர் சிலர். இஃது உலக இயற்கை. இவ்வாறு பலதிறப்பட்ட பொருள்—முடிவிலா முரண்படு கொள்கையுள் மூழ்கிய பொருள்—ஒன்றே ஒரு பாட்டிற்கு எவ்வாறு பெருமையைத் தரும்? பொருள் நலம் ஒன்றே புகழுக்கிடம் அன்று. நெடுநல்வாடை கூறிய பொருள் யாது என்று சற்று நினைவு கூர்வோம். அப்பொருள் நலத்தால் அது பெற்ற புகழ்தான் என்ன என்பதைக் காண்போம்:

வாடைப் பாட்டின் பொருள் நலனை விரிவாக முற்பகுதியில் ஆராய்ந்தோம். இப்பாட்டில் உலகிற்கு ஓர் உயர் நடையைக் கீரர் உணர்த்தினர் என உணர்ந்தோம்; அன்பு நெறியை அல்லது தோழமை நெறியைக் காட்டினர் எனவும் கண்டோம். இதுவே இப்பாட்டுக் கூறும் பருப்பொருள். கீரர் ஒருவர் தாமா உலகிற்கு உயர்நெறி வகுத்தவர்! பலர் பலர் பல்வேறு நெறிகளை, உயர்நெறி என வகுத்துள்ளனர். கீரர் காட்டிய நெறி உயர்நெறி என்னில், அவர் கூறிய வழியே யார் யார் செல்கின்றனர்? எங்கெந்த இடங்களில் அது பின்பற்றப்படுகிறது? ஊரெலாம் தேடுவோம்; உலகெலாம் தேடுவோம். யாரும் அதைப் பின்பற்றக் காணோம். கீரர் இப்பாட்டில் காட்டிய அரசனே அன்றி வேறு எவரும் இதைப் பின்பற்றினரிலர்.

இரழ்ய நாட்டு மக்கள் கீரர் காட்டிய வழியே செல்கின்றார் என்பர். இரழ்ய மக்கள் மேற்கொண்டொழுகும் தோழமை நெறிக்கும், கீரர் காட்டிய தோழமைக்கும் ஒப்புமை உண்டு என்றும் கூறுவர். ஒத்து நோக்கின், ஒருவாறு ஒப்புமையும் காணலாம்.

பாட்டில் உயர்வு தாழ்வு என்ற வேற்றுமை காண்கிலோம். அரசன் தன் படைஞன் ஒருவனைத் தழுவிக் கொள்கிறான். அவர்களுள் உயர்வு தாழ்வில்லை. எல்லோரும் தோழர்கள்; நாட்டின் நலத்திற்குழைக்கும் நண்பர்கள். இஃது ஒருபுடை ஒற்றுமை. ஆழ்ந்து நோக்கின், ஒப்புமை காண்பது அரிது. இரஷ்ய மக்கள் தம் தோழமையின் தொடக்கமே கொலையில்; அது வளர்ந்ததும் கொலையால் என்பர். அவர் தம் தோழமை, பொருளை ஆதியாக - பொருள் ஆதாரத்தை அடிப்படையாக - கொண்டது. கீரர் தம் தோழமையோ, பொருளைப் பொருளாதாரத்தை எல்லாம் கடந்தது; அன்பையே அடிப்படையாகக்கொண்டு நிற்பது, இரஷ்யர்தோழமை மக்களிடையே நிகழும் தோழமை. கீரர் குறிக்கும் தோழமையோ, மக்களிடையே மட்டும் நிகழும் தோழமை யன்று: மக்களுக்கும் விலங்குக்கும் நிகழும் தோழமை; விலங்குக்கும் பறவைக்கும் நிகழும் தோழமை; உலகெலாம், உயிரெலாம் பற்றும் தோழமை. இத் தோழமை இரஷ்யர் தோழமையின் பன்மடங்கு உயர்ந்தது; பல வழியிலும் சிறந்தது. இச்சிறந்த நெறியை இரஷ்யர் பின் பற்றவில்லை என்றால் வேறு யாராவது பின் பற்றுகிறாரா? யாரும் பின்பற்றவில்லை. எந்த மக்கள் தொகுதியும் இதை ஏற்றுக்கொள்ளவில்லை. எந்த நாட்டிலும் இதற்கு வாழ இடமில்லை. உலகிற்கே இஃது ஒவ்வாத நடைபோலும்!

யாரும் பின் பற்றாத, பின்பற்ற முடியாத நெறி எனினும், கீரர் கூறிய நெறியை உண்மையாக உயர்ந்த நெறி என்றாவது உலகம் கருதுமோ? இதிலும் ஐயப்பாடுதான் தோன்றுகின்றது. அன்பு நெறியல்லாத

நெறிகளோ, உலகிற் பல உள. அவரவர் மனத்திற் கிசைந்த நெறியே உயர்ந்தது, சிறந்தது என்பர். அன்பு நெறியே உயர்ந்ததொன்றன்று என்றும் கூறுவர். அறிவு நெறியே அதனினும் சிறந்தது என்பர் சிலர்; 'அன்பு நெறியா? அதனுள் சென்று சென்று அழுதது போதும்! அறிவு நெறியில் செல்லுங்கள்; காணுதன வெல்லாம் காணலாம்' என்பர். அன்பு நெறியே உயர்ந்தது என்றால், ஏன் அஃது உலகில் தழைக்கக் காணோம்?

அன்பின் நெறியே தன் ஆருயிர் நெறியாகக் கொண்டது அருகன் அறநெறி. இந்நெறியாளர்தம் அன்பு சீரர் அன்பு நெறியையும் கடந்து சென்றது. இந்நெறியாளர் நிலத்திலும் நடந்து செல்லக் கூசுவர்; நடந்து சென்றால் கண்ணிற்காணு நுண்ணுயிர் பல இறக்கும் என அஞ்சுவர். இவ்வாறு காணு உயிர்க்கும் கையற்றுக் கையற்று ஏங்கியது அவர்தம் அறநெறி. சீரர்தம் அன்பு நெறி போன்று ஏட்டில் மாத்திரம் திகழ்ந்ததொன்றன்று அருகன் நெறி. ஒரு காலத்தே இதைப் பலரும் பின்பற்றினர் என்பர். இது பல நாடுகளிலும் பரவியது. இப்போது இதை எங்கே காணலாம்? இஃது எங்கோ ஒரு மூலையைத் தேடி ஒளிந்துகொண்டது. அன்பு நுணுகிச் செல்லச் செல்ல அறச் செயல்களையே வற்புறுத்திய அருகன் நெறிக்கே வாழ இடமில்லையே; சீரர் நெறி எங்கு இடம் பெறும்? எப்படி வாழும்?

பொருள் நலனால் இப்பாட்டிற்குப் புகழ் இல்லை போலும்! வேறு எவ்விதத்தில் இதற்குப் புகழ் கிடைத்தது? பெருமையை இஃது எவ்வாறு பெற்றது?

புகழும் பெருமையும் அற்ற பாட்டு எனில், இது முன்பே இறந்திருத்தல் வேண்டும். எப்படி இஃது இன்னும் இறவாதிருக்கின்றது? தமிழர் ஏன் இதனை இது வரையில் போற்றினர்? இன்றும் ஏன் போற்று கின்றனர்? இவற்றிற்கு விடைகாணத் தமிழர் இதற்கு அளித்த இடம் எது என்பதைத் தெரிதல் வேண்டும்.

தமிழ்ப்பெருமக்கள் தங்கள் நூல்களை நீதி நூல் என்றும், நெறி நூல் என்றும் பிரித்தனர். நீதியைக் கூறும் நூல்களோ அளவற்றன; அவற்றுள்ளும் இப்பாட்டைச் சேர்த்தாரிலர். நெறி கூறும் நூல்கள் பதினன்கு என்பர். அவற்றுள்ளும் இப்பாட்டை அடக்கினரிலர். பொருளை அகம் புறம் எனப் பிரித் தனர். அகப்பொருள் கூறும் நூல்களிலோ, புறப் பொருள் தழுவிய நூல்களிலோ, இதைச் சேர்த்திலர். ஆனல் இதனைப் பாட்டு எனத் தனிப் பாகுபாடு செய்து பத்துப்பாட்டுள் சேர்த்தனர். பொருள் பற்றி இதனைத் தமிழ்ப் பெரும்புலவர் பாகுபாடு செய்யாதிருந்தும், இதன் பொருள்நலத்தையே முற்பகுதியில் கருதிக் கருதி நின்றேம். பொருள் நலம் எல்லாம் புரட்சி யுற்றன. இப்பாட்டின் பொருள் நலத்தினும் பா நலனே சிறந்தது போலும்! ஆதலின், இதனைப் பாட்டு என வழங்கினர்; பத்துப் பாட்டிடைப் பெய் தனர். ஒரு பாட்டில் தோன்றும் நீதிநலத்தினும், நெறி நலத்தினும், நடை நலத்தினும், பொருள் நலத்தினும், பா நலனே பன்மடங்கு சிறந்தது போலும்! நீதி கூறுதல் இன்றியும், நெறி வகுத்தல் இன்றியும் பாவெனும் ஒன்று-பாட்டெனும் ஒன்று-திகழும் போலும்!

2 நீதி கூருத பாட்டு - நெறி உணர்த்தாத பாட்டு

குறுகுறு நடந்து சிறுகை நீட்டித் தாய்முகம் நோக்கிச் செல்லும் சிறுமகவைக் காண்கின்ருேம்; அதன் மழலைச் சொல்லைக் கேட்டு இன்புறுகின்ருேம்; அதன் தளர் நடை கண்டு களிப்பெய்துகின்ருேம். அச்சிறு மகவு நம் உற்ருர் மகவன்று; நம் உறவினர் மகவும் அன்று; நம் மகவும் அன்று. ஏன் அச்சிறு மகவைக் கண்டு நாம் களிப்பெய்துகின்ருேம்? அதன் செயல்களைக் கண்டு நாம் ஏன் இன்புறுகின்ருேம்? இச்செயல்களைக் கூறும் பாக்களில் ஏன் திளைக் கின்ருேம்? இந்நிகழ்ச்சிகள் ஏதாவது நீதி கூறு கின்றனவா? இல்லையே!

கடற்கரையில் நிற்கின்ருேம்: நீர்ச்சிறு காற்று நிறைந்து வீசுகின்றது. அலைகள் புரண்டு புரண்டு, திரைந்து திரைந்து எழுகின்றன; விழுகின்றன; மோதுகின்றன. கடல் ஒல்லென ஒலிக்கின்றது. அவ்வொலி ஓங்கி ஓங்கி உயர்கின்றது. வான் முகட்டில் நீலக்கடலினின்றும் வெண்மதி எழுகின்றது; திரையை விலக்கி மெல்ல மெல்ல உயர்கின்றது; நீர்ப்பரப் பெல்லாம் நிலப்பரப்பெல்லாம் வெண்ணிலவு படி கின்றது. இக்காட்சியில், அங்கெழும் ஓசையில், அங்குக் காணும் ஒளியில் ஏன் நம் மனம் ஈடுபடு கின்றது? இக்காட்சியைக் கூறும் பாட்டு ஏன் நம் மனத்தைக் கவர்கின்றது? இக்கடற் காட்சிதான் ஏதாவது நன்னெறி கூறிற்றுண்டோ? இல்லை.

பச்செனப் பொதுளிய பசுமலைச் சாரல்-அச்சாரல் எங்கணும் பல்வகைப் பூக்கள் - பல்வகை நிறத்தன- அரும்பியும் மலர்ந்தும் அழகு செய்கின்றன. பல்வகை

மணங்கள் கமழ்கின்றன ; மலையினின்று இழுமென் அருவி இழிதருகின்றது ; பொழுது புலர்கின்றது ; இள ஞாயிறு எழுகின்றது. இளங்கதிர் ஒளி, மரங்களை - செடிகளை - மலைச்சாரலை ஏமுறத் தழுவித் திகழ் கின்றது. ஏன் இக்காட்சிகளில் நம் மனம் திளைக் கின்றது? இக் காட்சிகளைக் கூறும் பாக்களில் எவ்வாறு நாம் ஆழ்கின்றோம்? இவற்றில் எவ்வாறு இன்பம் காண்கின்றோம்? இக் காட்சிகள்தாம் உயர்நடை ஏதாவது கூறுவனவோ? இல்லை.

இத்தகைய இயற்கைக் காட்சிகள் பற்பல. இவை எவையும் நீதி கூறுவன அல்ல ; அறநெறி கூறுவன அல்ல; உயர்நடை கூறுவனவல்ல. இவற்றை நேரே காணும்போதும், பாட்டிடைக் காணும்போதும், எவ்வாறோ இவை நம் மனத்தைக் கவர்கின்றன. ஈண்டு நீதிகளையோ அறநெறிகளையோ நம் மனம் தேடி அலைவதில்லை ; இயற்கைக் காட்சிகளிலேயே ஈடுபடு கின்றது. இக் காட்சிகளைக் காணக் காணக் கல் மனமும் கனிகின்றது. இவற்றை உற்று நோக்க நோக்க உள்ளம் பூரிக்கின்றது. ; உருகுகின்றது ; ஒருமுகப்படுகின்றது. ஆர்த்து எழும் அன்பினால் காணும் அனைத்துடனும் நாம் கலக்கின்றோம்; நம்மை மறக்கின்றோம். நம் மனம் சென்று சென்று இரண்டறக் கலந்துவிடுகின்றது ; என்பெலாம் கரைக்கும் நல் இன்பத்தில் திளைக்கின்றது.

எண்ணற்றவை இவ்வியற்கை வனப்புகள் - இயற்கை எழிற்படங்கள்! இவையெல்லாம் தீட்டாத ஓவியம்; "கைபுனைந்தியற்றாக் கவின் பெறு" ஓவியம்; எழுத்தும் சொல்லும் ஏற்றிலாப் பாக்கள்; இறைவன்

யாத்த இயம்பொணுப் பாக்கள். இவற்றில் எங்கும் பாமணம் கமழ்கின்றது; இயற்கையின் எழில்மணம் கமழ்கின்றது; எங்கும் பா இயல் தோய்கின்றது; இயற்கை இயல் திகழ்கின்றது. நீதியோ நெறியோ யாதொன்றும் புக-எட்டிப்பார்க்கவும் - இடமில்லை. இங்குக் காணும் பா நலமே நம் உள்ளெல்லாம் புகுகின்றது; உயிரெலாம் புகுகின்றது. இப்பா நலமே பெரிதும் காட்டி, இயற்கையின் எழில் நலம் பற்பல காட்டி மிளிர்வன சங்கப் பாக்களுட் பெரும்பாலன. இவ் வாடைப் பாட்டுள்ளும் இவ் வியற்கை நலம், இவ்வியற்கை எழில்கொள் பாநலம், நன்கு கனிந்து கனிந்து கற்போர் மனத்தைக் கவர் கின்றது; முதிர்ந்து முதிர்ந்து முதல் முதலாக முன்னே நிற்கின்றது.

இத்தகு இயற்கை அழகினை, இவ்வழகினைக் காட்டும் பா நலனைப் பருகி இன்பம் காணாது எங் கெங்கோ அலைந்தோம்; முழுகிச் சென்று முத்துக் குவியல்களைக் கண்டோம்; தோண்டியும், துளைத்தும் பொன்னும் மணியும் புதைபட்டன பற்பல எடுத் தோம். அவற்றின் பேரொளியே நம் கண்ணை மறைத்தது; இயற்கையின் அழகை நாம் காணவொட் டாமலும் தடுத்தது. அவற்றை எல்லாம் இப்போது ஓரிடத்தே பொதிந்து வைப்போம். அவற்றின் ஒளி மறைய மறைய இயற்கை அழகு நம் முன்பு தோன்று கின்றது; பாவழகும் தானே எழுகின்றது.

இவ்வழகுதான் அற்பமும் அன்று. பாட்டிடைப் புகுவோரை முதல் முதலாகப் பற்றுவதும் இது; பற்றியிழுப்பதும் இது. இதுகாறும் இவ்வழகு

ஒன்றே, ஏனைய நலனை எல்லாம் மறைத்தும் நின்றது. இவ்வழகு ஒன்றே இத்தகைய பேராற்றல் வாய்ந்தது எனின், இங்குச் சற்றேனும் நின்று இதனைக் காணாது செல்வதும் தகுமோ?

இவ்வழகினை இதுகாறும் காணாதார் யார் உளர்? இப்பாட்டிடைப் படிந்தோரெல்லாரும் இந்நலம் பருகியோராவர். இதனைக் காணக் காண இன்பம் கனி கின்றது; பருகப் பருக இதன் சுவையே மிகுகின்றது. இதைப் பற்றி ஈண்டு விரித்துக் கூறுதல் மிகைபடக் கூறுதலாகுமோ? முன்பும் இதைப்பற்றிச் சிற்சில கூறல் நேர்ந்தது. மீண்டும் அவற்றைக் கூறல் கூறியது கூறலுமாகும். ஆயினும், தொடர்பு பற்றிச் சிற்சில வேனும் இங்குக் கூறலே நேர்கின்றது.

3. வாடைப் பாட்டின் இயற்கை எழில் நலம்

புறவுரைகளில் காலம் போக்காது பாட்டைப் படிப்போம். பாட்டுத்தொடங்கும் போதே வாடையும் தொடங்குகின்றது. "உலகெலாம் குளிரச் செய் வோம்!" என மேகங்கள் எழுந்தன. விடாமழை பெய்கின்றது. கோவலர் கையில் கொள்ளியுடன் செல்கின்றனர். அவர்தம் உடல் நடுங்குகின்றது; தாழ்வாய் உதறுகின்றது; பல் பறை கொட்டுகின்றது. மா மேயல் மறந்து நிற்கின்றன. மந்திகள் கூனிக் குறுகிக் கூர்ந்துள்ளன. அந்தோ! பறவைகள் மரத்தில் படிவன, கீழே விழுகின்றன. கறவைகள் கன்றுகோள் ஒழிகின்றன; கடிய வீசுகின்றன. அந்தோ! குளிர்! குளிர்! வாடை! வாடைக்குளிர்! இக்குளிரால் குன்றும் குளிரும் போலும்!

குளிரும் வாடையும் மக்களை அலைக்கும்; விலங்கை வருத்தும்; பறவையைத் துன்புறுத்தும், இவை இயற்கை அழகினைக் குறைக்க வல்லவோ! இயற்கையின் அழகோ என்றும் நிலவும். புன்கொடி முசுண்டைப் பொறிப்புற வான் பூக்கள் தோன்றுகின்றன. இவை பொன் போற் பீரமொடு புதல் புதல் மலர்கின்றன. மக்களும் மாவும் புள்ளும் பிறவும் துன்புறக்கண்டு இவை நகைப்பன போலும்! அந்தோ! இவற்றின் உள்ளமும் மலர்ந்தால் இவையும் மலர்கள் போலத் துன்புறுபோலும்!

பெய்த மழையால் கரிய களிமண், கரைந்து கரைந்து வெண்மணலின்மேல் பாய்ந்து படிந்துள்ளது. மழைநீர் ஓட்டம் குறைகின்றது. அந்நீர்க்கெதிரே கயல்மீன்கள் ஏறிச்செல்கின்றன. கொக்குகள் கூட்டம் கூட்டமாக மெல்லெனப் பறந்து வருகின்றன. வல்லெனப் பறந்து செல்லின் கயலெல்லாம் சென்று ஒளிக்கும் போலும்! மெல்லெனப் பறந்து வந்த கொக்குகள் நாரைகளோடு எல்லா இடமும் கவர்ந்து கொண்டன.

மழை குன்றுகின்றது; சிறுசிறு துவலையாகத் தூவுகின்றது. மேகங்கள் தாம் கொண்ட மழையெல்லாம் பெய்து உடல் வற்றின; உரு வெளுத்தன; பொங்கிப் பொங்கி எழுகின்றன. நீர் நிறைந்தது வயலில்; தலை வணங்கின நெற்பயிர்; சேறுகொள முற்றின கமுகின் பசுங்காய். அகன்ற பொழில்களில் மரங்கள் நிறைந்து நிற்கின்றன. அவற்றின் கிளைகளிலெல்லாம் உச்சியைத் தொட்டு, செறிந்து நிறைந்து மலர்ந்துள்ளன பூக்கள். அவை எவ்வாறு தோன்றுவ

என்று உளக்கண்ணால் சற்றுக் காணுங்கள். அதோ! அவற்றில் சில மழைத் துளிகள் ஒட்டிக் கொண்டுள்ளன. பூக்களின் நிறத்தை அத்துளிகள் பெறுகின்றன. அத்துளிகள் தொங்குகின்றன; தொங்கி அசைகின்றன. அசைக மலரே! ஆடுகபூவே! அசைக அசைக துளியே! ஆடுக ஆடுக துளியே! நும் ஆடலுக்கேற்ற பாடலைப் பாடக் கீரரும் உள்ளார்!

கீரர் பெரும! பாடுக பாட்டே
இன்னும் பாடுக பாட்டே நுந்தம்
நன்னெடு வாடை பாடிய பாட்டே

என்னென்ன இயற்கைக் காட்சி! என்னென்ன இயற்கையழகு! எவ்வாறு கீரர் மனம் நுணுகி நுணுகி இயற்கை அழகுகளை நுகர்ந்துள்ளது காணுங்கள்!

தொங்கி அசைவதில் ஒரு தனியழகுண்டு. "மூங்கிலிலை மேலே தூங்கும் பனி நீரே" என்ற ஏற்றப் பாட்டும் இவ்வழகினைப் போற்றும். வடிவைப்போல-நிறத்தைப்போல - தொங்கி அசைவதும் மக்கள் மனத்தைக் கவரும் ஆற்றலுடையது. இதன் அழகில் ஈடுபடும் மாந்தரும் பலர். இதைப் பாடிய புலவரும் பலர். "அறற்குழற் பாணி தூங்கியவ" ரிடம் அழகு கண்டார் நத்தத்தனார். காதலி "தடமலர்த் தண் தாழைவீழ் ஊசல் தூங்க" காதலன் பின் வந்து அவளூசலை ஊக்குகின்றான். "மாழை மடமான் பிணையியல் வென்றாய் நின்னூசல் கடைஇ யான் இருப்ப நீ தூங்காய்!" என்று கூறி மகிழ்வான், மற்றொரு காதலன். தொங்கி அசைந்து ஆடுதல் எவ்வாறு மக்களை மகிழ்விக்கின்றது! காணுங்கள்! தொங்கி

யசையும் அழகும், மக்கள் அதிற்பெறும் மகிழ்வும் நல்லந்துவனூர் மனத்தைக் கவர்ந்தன; அவர் தம் புலமையில் பட்டன; அவர்தம் பாட்டிலும் இடம் பெற்றன. இந்நிகழ்ச்சிகளைக் கண்டு கீரர் மகிழார் போலும்! இத்தகு இன்பநிகழ்ச்சிகளில் ஒன்றேனும் ஏன் கீரர் கூறினரிலர்? மக்கள் ஆடுக ஊசல்! உந்தியும் ஆடியும் உளம் பூரித்து மக்கள் உவகையே பெறுக! பாணி தூங்கியும் பல நலம் பெறுக! புலவர்கள் இவற்றைக் கண்டு புனைக பாக்கள்! இவையெலாம் கீரருக்கு இன்பம் தாரா போலும்! கரவாடும் நெஞ் சுத்தார் கையாடக் காலாடக் காண்பதோ கருத்து ளார்க்கு மகிழ்வு தருவது? இவர் தம் அசைவிலோ அழகு காண்பது? இதோ இயற்கை களிநடம் புரி கின்றது. காண்மின்! இயற்கையின் ஊசல் எழில் பெற அமைந்ததைக் காண்மின்! பல நிறக்கோலம் ஏற்றுப் பனித்துளி தூங்கக் காண்மின்! இவ்வெழி லுக்கும், இவ்வெழில் தரு மகிழ்வுக்கும் மகளிர் ஆடலும், மைந்தர் மகிழ்வும் ஈடாவனவோ? என்னே அழகு! அழகு! குறைவிலா அழகு! கோதிலா அழகு!

நாம் இதுகாறும் கண்டதே பாநலன் என்று கூறத்தகுமோ? இதுவும் பொருள் நலனன்றோ? இங்குக் கண்ட இயற்கையழகும் இப்பாட்டில் பாடப் பெற்ற பொருளன்றோ? இதனைப் பொருள் நலன் என்றே கொள்ளாது, எவ்வாறு பா நலன் என்று கொள்ளத்தகும்? இயற்கையில் காணும் பா நலனுக்கு இயைபுடைமையின், இதுவும் பா நலனுள் கொள்ளப் பட்டது. இதனை ஈண்டுக் கருதியதில் இடர்ப்பாடு ஒன்றும் எய்தவும் இல்லை. பா நலன் வேருகவும் பொருள் நலன் வேருகவும் அறுதியிட்டுப் பிரிப்பது

இயல்வதும் அன்று. பொருளும் பாட்டும் பிணைப் புற்றே நிற்பன; பூவும் நிறமும் போலவும், உயிரும் உடலும் போலவும் பொருந்தியே நிற்பன. பொரு ளில்லாததோர் பாட்டும் உண்டோ? பொருளொடு பொருந்தாப் பாட்டே இல்லை! ஆனால் பாட்டே பெறாத பொருள்களோ பல உள. அவற்றை உரை நடையில் காணலாம்; பேச்சு வழக்கில் காணலாம். இவ்விரண்டுள்ளும் படாத பொருள்களும் பல உள. பாட்டிடைப் பட்ட பொருள் சிலவேயாயினும், சிறிதே யாயினும் அப்பொருள் பெரிதாகின்றது; பெருஞ் சிறப்படைகின்றது. பொருளுக்கு ஓர் ஒப்பற்ற உயர்வைப் பாத் தருகின்றது. பாவே ஓர் அணுவையும் அண்டமாக்கும்; அனைத்தினும் உயரச் செய்யும். இவ்வாறு பொருளுக்கு ஓர் உயர் தனிச் சிறப்பைத் தருகின்ற பா என்பதுதான் என்ன? அஃது எவ்வாறு சிறப்பைத் தருகின்றது? அதன் நலன் தான் என்ன? இனி இவற்றைக் காண்போம்.

4. பாக்களைப்பற்றிய பல்வகைக் கருத்து

பா என்பதுதான் யாது? இக்கேள்வியைக் கேட்பதோ எளிது; இதற்கு விடை தெரிதல் அரிது. **'கவி'** என்னும் பொருளில் 'பா' என்பது இங்கு வழங் கப்படும். கவி, பாட்டு, பா, செய்யுள் என்பன ஒரே பொருளைக் குறிக்கத் தக்கன என்பர் ஒரு சிலர். இவற்றுள் சிற்சில வேறுபாடுகளும் உள என்பர் வேறு சிலர். இவ் வேறுபாடுகளை நாம் ஈண்டுக் கருதவேண்டு வதில்லை. பா என்பது செய்யுளையும் குறிக்கும் என்றே கொள்வோம். செய்யுள் என்பது யாதெனப் பவ **ணந்தியார்** ஒருவாறு உணர்த்தியுள்ளார்; அவர் கருத்து யாதென நாம் முதலில் காண்போம்:

[1]பல்வகைத் தாதுவி னுயிர்க்குடல் போற்பல
சொல்லாற் பொருட்கிட னாக வுணர்வினின்
வல்லோ ரணிபெறச் செய்வன செய்யுள்"

என்றார் பவணந்தியார்.

ஈண்டு "உணர்வினின்" என்றதன் பொருள் என்ன? 'அறிவினால்' என்பதா? அல்லது 'உணர்ச்சியால்' என்பதா? உணர்ச்சியும் ஒருவாறு அறிவைத் தரும் எனினும், உணர்ச்சியும் அறிவும் ஒன்றல்ல என்பர். நுகர்வால் பெறும் உணர்ச்சியே உணர்வு என்பர். எண்ணி எண்ணியும், கருதிக் கருதியும், பகுத்தறிந்து காண்பது அறிவு, அறிவும் உணர்வும் ஒன்றே என்பர் சிலர். ஈண்டுப் பவணந்தியார் குறித்தது எதனை? அந்தோ! விளங்கவைத்திலர்! பின்னும் "அணிபெறச் செய்வது செய்யுள்" என்றார்.

அணிபெறச் செய்வதென்றால் என்ன? அணியிலக்கணம் கூறும் பல்வேறு அணிகளையும் ஏற்றவாறு அமையச் செய்வதா? அல்லது அழகு பெறச் செய்வதா? அழகுபெறச் செய்வதென்றால், அழகு என்பது யாது? அழகு ஒரு திறத்ததன்று.

1. நன்னூல் பெயரியல் 268—"தோல், இரத்தம். இறைச்சி, மேதை, எலும்பு. மச்சை, சுவேதநீர் என்னும் எழுவகைத் தாதுக்களினால், உயிர்க்கு இடனாக இயற்றப்பட்ட உடம்புபோல, இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்னும், நால்வகைச் சொற்களாற் பொருட்கு இடனாகக் கல்வி யறிவினாற் செய்யுளியற்ற வல்லோர், அலங்காரம் பெற இயற்றுவன செய்யுளாம். ஈண்டுப் பொருள் என்றது அகமும் புறமுமாகிய பொருள்களை. இங்ஙனங் கூறவே, எழுத்தான் இயன்றது சொல்லாதலின், எழுத்துச் சொற்பொருளணியென்னும் நான்கினும் நடப்பது யாப்பென்பதாயிற்று."

'இதுதான் அழகு; வேறொன்று அன்று' எனக் கூறத் தக்கதும் அன்று.

> அறியுங்கால் ஒன்றோ அழகும்? அறிவார்
> அறிவுபோல் வேறு படும்.

பவணந்தியார் கூறியன நமக்கு ஒரு முடிவையும் காட்டில; நாம் தொடங்கிய இடத்திற்கே மீண்டும் நம்மைக் கொண்டு சேர்த்தன; 'பா என்பது யாது?' என்ற கேள்விக்குப் பதிலாக, 'உணர்வு என்பது யாது? அணி என்பது யாது?' என இரண்டு கேள்விகளை எழுப்பிவிட்டன. பவணந்தியார் கூறியது விளக்கம் தரவில்லை என்றால், பிறர் கருத்துக்கள் தாம் எவை? அவையேனும் விளக்கம் தருவனவா?

'பா' என்பதைப்பற்றிய கருத்துக்கள் ஒன்றிரண்டல்ல. இக்கருத்துக்கள் பல திறத்தன. இவற்றுள் பல ஒன்றோடொன்று மாறுபடுவன. 'சீரும் தளையும் எதுகையும் மோனையுமே பாட்டிற்கு மிகமிக வேண்டற்பாலன' என்பர் சிலர்; 'சீர்புனைந்தியற்றும் பாட்டுச் சிறப்புடைத்தன்று' என்பர்; தளைகள் தாம் தவறும் பாக்கள் தள்ளுதற்குரிய என்பர்; 'எதுகையே பாட்டிற்கு ஏற்றம் தருவது - மோனையில் பாட்டு மொட்டைப் பாட்டு' என்று பற்பல கூறுவர். வேறு சிலரோ, 'இவை எல்லாம் பாட்டிற்கு இயல்பாக அமைந்த வரையில் கொள்ளத்தக்கன. இவற்றையே தேடித் தேடியும், வேண்டும் இடத்தும் வேண்டா இடத்தும், புகுத்திப் புகுத்தி இறுமாந்திருப்பது இழிவு இழிவு' என்று கூறுவர். இவர் ஆழ்ந்த கருத்தே பாட்டிற்கு வேண்டுவது என்பர்; கருத்திலாப் பாட்டுக் கண்ணிலா உடலென்பர். சிறந்த பொருளி

ருந்தும், உயர்ந்த கருத்திருந்தும், இவற்றை எல்லாம் பொருந்த அமைக்கும் யாப்பும் வேண்டும். 'யாப்பிலாப் பொருளைக் கேட்பார் உளரோ? கற்பார் உளரோ?' என்பர் சிலர். இம்மட்டோ, இன்னும் சிலர், 'அணி பெருப் பாட்டிற்கு அழகிலை' என்பர். 'அணியே கவிக்கொரு பிணியே' என்பர் வேறு சிலர். 'கற்பனை என்பது கற்ருேர் விருந்து' என்பர் சிலர். 'அன்று, அன்று; அற்பர்தம் விருந்தே கற்பனை என்பது' என்பர் வேறு சிலர். 'சொல்வதை அழகுறச் சொல்வதே பாட்டு; சொல்லழகில்லாப் பாட்டைக் கொள்ளுமோ உலகு?' எனச் சொல்வர் சிலர். 'நீரென ஓடும் பாட்டே, நிலவுதற்குரியது; நீண்ட நாள் நிற்பது; நிரம்பிய நலம் தருவது' என்பர் ஒரு சாரார். மற்ருெரு சாரார், 'அழுத்தமில் பாக்களே அழியத் தக்கன; அழிந்தே படுவன. அழுத்தம் ஒன்றே அறிவின் விருந்து. அழுத்தமில் பாட்டின் அழகு பாழ் பாழே?' என்று மறுப்பர். 'இன்பம் தருவதே பாட்டின் இயல்பு. மற்றவை எல்லாம் பாட்டிற்குப் புறம்பானவை. இன்பமில் பாட்டை ஏலாது உலகம்' என்பர் இன்பம் விழைபவர். உணர்ச்சியாளரோ, வேறு வேறு உரைப்பர். இவர், 'உணர்ச்சியைத் தருவதே பாட்டின் உயர்தனிக் குறிக்கோள். பாக்கள், திருந்திய உணர்ச்சி தந்து திருத்துவ மனத்தை. உணர்ச்சி திருந்த, உள்ளம் திருந்தும். உள்ளம் திருந்த உலகுதிருந்தும்' என இவ்வாறெல்லாம் கூறுவர்.

இக்கருத்துக்களுள் ஏதாவது ஒற்றுமை காணப் படுகின்றதா? இவற்றையே பற்றிச் சென்ருல் அடி காணுதலும் அரிது; முடி காணுதலும் அரிது. இவற்றையெல்லாம் கருதியே போலும் பவணந்தியார்

பொதுப்படக் கூறிச்சென்றார்! ஒரே பொருளைப் பற்றி இவ்வாறு பற்பல கருத்துக்கள் ஏன் எழுந்தன? அவரவர் அறிவிற்கேற்ப, அவரவர் உணர்ச்சிக்கேற்ப, அவரவர் நுகர்விற்கேற்ப, பா என்பது ஈதென உணர்த்தினர் போலும்! இவையலால் யாவரும் ஒப்பு மாறு பா என்பது ஈதென உணர்த்தல் இயலாது போலும்! 'என்னாய்? என்னென்ன ஆனாய்?' என்று என்று அதன் எழில்நலம் வியப்பதல்லால் 'உண்மைப் பா என்பது இது; அஃது இவ்வாறிருப்பது; இத்தன்மைத்து;' என்று எழுதொணாதது; எடுத்துக் கூறவும் இயலாதது போலும்! இதைக் கருதியே தொல்காப்பியர் பாட்டோ செய்யுளோ யாதென உணர்த்தினரிலர்;[1] ஆன்றோர் செய்யுளில் காணும் செய்யுள் உறுப்புக்களையே உணர்த்திச் சென்றார். இச்செய்யுள் உறுப்புக்களுள், ஒன்றோ, பலவோ, புலவன் ஆற்றலுக்கேற்பவும் அறிவிற்கேற்பவும் பாக்களில் அமைகின்றன. அவ்வுறுப்புக்களுக் கேற்ற அழகு, சுவை முதலியனவும் பாக்கள் பெறுகின்றன. சுவைகளும் பல வகைப்படுவன. மக்கள் யாவரும் ஒரே சுவையை விரும்புவோர் அல்லர். சிலர் சொற்சுவை விரும்புவர்; சிலர் பொருட்சுவை விரும்புவர்; சிலர் அழுத்தம் விரும்புவர்; சிலர் திருத்தம் விரும்புவர். நீதிவிரும்புவார் சிலர். இன்பம் விழைவார் சிலர். அவரவர் விருப்பிற்கேற்ப, சுவைக்கேற்ப, பாக்களைப் போற்றுவர்; பா உறுப்புக்களைப் புகழ்வர். அவரவர் விரும்பாதவைகளை இழித்துக் கூறவும் செய்வர். இவையும் உலக இயற்கை.

---

1. தொல்காப்பியர் கொள்கைக்கு இக்கால அறிஞர் அபர்கிராம்பி ஆதியோர் கருத்துக்கள் அரண்செய்கின்றன.

இந்நிலையில் பா நலம் காணப்புகுந்த நாம் யாது செய்யத்தகும்? வாடைப் பாட்டைப் பிரித்துப் பிரித்து ஆய்வோம்; என்னென்ன செய்யுள் உறுப்புக்கள் காணப்படுகின்றன என்று காண்போம்; அவை தரும் பா நலன் சுவைநலன் இவற்றையும் உணர் வோம்; இவற்றின் திறனெலாம் அறிவோம். திறன் ஆய்தலும், ஆய்ந்து தெளிதலுமே நாம் வேண்டற் பாலன. ஆய்தொறும் ஆய்தொறும் ஊறும் அறிவு.

இவ்வாறு பா நலன் காண்பதும் எளிதன்று. இதைக் காணச் செல்லும் வழியோ சிறுவழி. சிறு நெறி பிடித்தோர் செம்மையிற் சேர்தலோ அரிது. முன்பு பொருள் நலன் காணச் சென்ற வழியோ பெருநெறி; கல்லும் முள்ளும் நிறைந்திருந்த தெனினும், பலரும் கண்டும் கேட்டும் உணர்ந்த நெறி. இப்போது நாம் செல்லும் வழியோ அத்தன்மைய தன்று; நடப்பார் அற்றுக் குறுகிக் குறுகி, அருகிய ஒரு நெறி: இவ்வழியிலோ, சிற்சில இடத்து அடிச் சுவடு காண்டலும் அரிது. சிற்சில இடத்தே தூர்ந்து தூர்ந்து வழியடைக்கப்பட்டும் உளது. மண்டியிட்டும் மார்பால் நகர்ந்தும் செல்வோம்; உந்தி ஏறியும் உயரப் பற்றியும் பார்ப்போம். வழங்கா அதரிடை வழித்துணைவேண்டும். உண்மையே நமக்கு உறுதுணை யாகுக!

உ. பாட்டிற்காணும் பற்பல பாநலன்

இனி இப்பாட்டை நெருங்கிச் செல்வோம். இதன் தோற்றம் மிக்க பழைமையைக் காட்டுகின்றது; ஆனால், இதன் முடியோ நரைத்திலது. இளமையும் அழகும் இன்றும் இதன்பால் உள்ளன. இதன் வயதுதான் என்ன? பாட்டிற்கு வயது பகர்தல் எளிதன்று. இது தோன்றி இரண்டாயிரம் ஆண்டுகளாயின என்பர். இதுவரையில் இஃது எவ்வாறு உயிர் வாழ்ந்திருந்தது? ஆண்டு பல ஆகியும் நரையில வாகுதல் எதனால்? நரை திரையற்றுக் காலனை வெல்லும் ஆற்றலை இஃது எவ்வாறு பெற்றது? இது நலமெலாம் உண்டது - பொருள் நலன் ஒன்றையா-பா நலன் பலவற்றையும் வாரி வாரி உண்டது. இந் நலங்களே இதற்கு மூவா மருந்தாய், சாவா மருந்தாய் நின்றன.

காலத்தால் தோன்றும்நூல் காலத்தின் கைப்படா
சால நலத்த வெனின்.

இப்பாட்டுச் சால நலமுடையது; ஆதலின், காலத்தின் கையில் பட்டிலது; ஆனால், காலப் புழுதி இதன் மேலெல்லாம் படிந்து, இதன் தோற்றத்தை மறைத்தது; மழுங்கச் செய்தது. அதைத் துடைப்போம்; துலக்குவோம்; தூசியைப் போக்குவோம். தூசி போனபின் பாட்டின் ஒளி துலங்கும்; தோன்றும் நலமெலாம்.

இப்பாட்டைப் பிரித்துப்பிரித்து ஆய்தலே தக்கது என முன்பு மேற்கொண்டோம்; அவ்வாறே செய்யத் தொடங்குவோம். எந்தெந்தப் பகுதிகளாக, எவ்வாறு,

எவ்வாறு, இதைப் பிரித் தெடுப்போம்? அல்லது எந்த முறையில் இதனைக் கூறிட்டுக் காண்பது தக்கது? இப்பாட்டோ, ஓர் அரிய முறையில் அமைந்துள்ளது. இஃது, 'அடி துவக்கி - தங்கும் கொழுந்தென்று தள்ளாமல்' - எங்கும் தித்திப்பது. எந்த இடத்தைப் பிரித்தெடுப்பினும் அந்த இடத்தில் ஏதாவது சுவையே தோன்றும்; ஏதாவது நலமே காணப்படும். ஆதலின் நாம் எங்கிருந்தும் துவங்கலாம். முதலில் இப்பாட்டின் தொடக்கத்திலிருந்தே துவங்குவோம்.

1. பாட்டின் தோற்றுவாய்

படிப்போர் மனத்தை முதலில் பற்றுவது பாட்டின் தொடக்கம். அது தக்க முறையில் அமைதல்வேண்டும். அமைந்தால், மேலும் மேலும் அப்பாட்டைப் படிக்க அதுவே ஒரு பெருந் தூண்டு கோலாகும். தொடங்கும்போதே பாட்டுச் சுவையற்ற தாயின் அப்பாட்டை எவரும் தொடர்ந்து படிப்பது அரிது. ஆதலின் தொடங்கும்போதே தக்கமுறையில் தோற்றுவாய் அமைப்பது ஆசிரியர் இயல்பு. அத் தோற்றுவாய் இயல்பாகவே சிறந்த முறையில் ஆற்றல் தோன்றவும் அழகு பொருந்தவும் அமைவது உண்டு.

ஒருசெயலின் தொடக்கமே செய்வோன் திறனைக் காட்டிவிடும். அத்திறனைக் காணச் செயல் முடியும்வரை காத்திருக்கவேண்டுவதில்லை. இசையின் எடுப்பே இசைவலான் பண்பைக் காட்டும்; நூலின் தொடக்கமே நுவல்வோன் திறனைக் காட்டும் பாட்டின் தொடக்கமே பாவலன் தன்மையைக் காட்டிவிடும்.

கீரர் எவ்வாறு பாட்டைத் தொடங்குகின்ருர்? அத்தொடக்கத்தில் அவர் காட்டும் திறன் என்ன? அங்கு என்னென்ன நலங்கள் காணப்படுகின்றன என்பதை நாம் இப்போது காண்போம். வெளிப் போக்காக அல்லது மேற்போக்காக அவர் திறனைக் காண்பது அரிது. அத்தொடக்கத்துள் ஆழ்ந்தே அவர் திறனைக் காணல் வேண்டும். அவ்வாறே காண் போமாக. பாட்டின் முதலிரண்டு அடிகளைப் படிப் போம் :—

"வையகம் பனிப்ப வலனேர்பு வளை இப்
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென"

என்று பாட்டுத் தொடங்குகின்றது. இவ்வடிகளில் உள்ள ஒவ்வொரு சொல்லும் அழுத்தமாய் அமைந்தது. இவற்றை ஆழ்ந்து நோக்கவேண்டு மாயின், இவை கூறப்புகும் காலம், அக்காலத்தின் இயல்பு முதலியவற்றை முன்னர் உணரல் வேண்டும்.

பாட்டுத் தொடங்குவது கூதிர்க்காலத்தில். கூதிர்க் காலம் என்பது எது? கூதிர் என்ற சொல் இப்போது வழக்கத்தில் இல்லை. இப்பெயரையே தமிழர் மறந்து விட்டனர். 'கூதிர்க்காலம் என்பது மழைக் காலமா? மழைக் காலமன்று. மழைக்காலம் என்பது கார்காலம் என்பர். கூதிர்க்காலத்திலும் மழையுண்டு; ஆனல், கார்காலம் என்பது வேறு; கூதிர்க்காலம் என்பது வேறு.

கார்காலத்தில் பருவ மழை பெய்யும். இயல்பாக அதுவே பெருமழைக் காலம். பெருமழை பெய்ய ஆறுகள், ஏரிகள், குளங்கள், குட்டைகள் எல்லாம் நிரம்பும். போர்மேற்சென்ற படைஞர்கள், தொழின்

மேற்சென்ற ஆடவர்கள், திரைகடலோடிய தேட்டாளர்கள் தங்கள் ஊருக்குத் திரும்புவார்கள்; தத்தம் மகளிருடன் இல்லத்தே உறைவார்கள். வீடுதோறும் இன்பமும் மகிழ்வும் - ஊரெலாம் உழவும் பயிரும் - நாடெலாம் நன்மையும் செழிப்பும் - இக் கார் காலத்தை அடுத்து நிகழ்வது கூதிர்க்காலம். கூதிர்க் காலத்தில் எப்போதும் பெருமழை பெய்வது இயல்பன்று. இயல்பாகச் சிறு மழை தூறிக்கொண்டேயிருக்கும்; விடாது தொடர்ந்தும் தூறும். இதனைக் 'காரெதிர் கிளை மழை' என்பர். குளிரும் பனியும் கூடிய வாடை வீசுவது இக்காலத்தின் இயல்பு. ஆனால், சில வேளைகளில் பெருமழையும் பெய்வதுண்டு. இக்கூதிர்க்காலத்தில் இப்பாட்டுத் தொடங்குகிறது.

பாட்டின் தொடக்க அடிகளுக்கு இப்போது பொருள் காண்போம்: முதல் இரண்டு அடிகளிலும் உள்ள சொற்களின் பொருளோ சில. இவை தரும் இசைப் பொருளும், குறிப்புப் பொருளும், எச்சப் பொருளும், பற்பல. இச்சொற்களை ஒவ்வொன்றாக எடுத்தும், ஒன்றை மற்றொன்றோடு இணைத்தும் பொருள் காண்போம். அப்படிக் காணும் பொருள்கள் என்னென்ன எண்ணங்களை எழுப்புகின்றன, எந்தெந்த உணர்ச்சிகளைத் தருகின்றன என்பதையும் உணர்வோம்.

'புதுப்பெயல் பொழிந்தென'

புதுப்பெயல் என்பது என்ன பெயல்? பெயலுக்கு இப்பெயர் புதிதாய் அமைந்திருக்கின்றது. புதுப் பெயல் என்பது முதற்பெயலா? அன்று. முதற்

பெயல் என்பது முதல்முதல் பெய்கிற பெயல் என்பர். வேனிற்காலத்தில் வெயிலால் உலகம் தவித்து நிற்கும். ‘எப்போது மழை வரும்? எப்போது கார் காலம் தொடங்கும்?’ என்று உலகத்தார் எதிர்பார்த் திருப்பர். கானம் கவின் வாடி நிற்கும். வான் நோக்கி நிற்கும் மரங்களும் செடிகளும். பருவ மழை தப்புவதில்லை. வழக்கம்போல எதிர் பார்த்த காலத்தில் மழை பெய்யத் தொடங்கும். இது முதற்பெயல். பருவ மழை வழக்கம்போலப் பெய்வது இது. இதிற் புதுமை ஏது?

நாம் இப்போது பாட்டிடைக் காண்பது கூதிர்க் காலம். இக்காலத்தில் பெய்வது முதற்பெயலா? மழைக்காலம் முன்பே தொடங்கி முதற்பெயல் பெய்துவிட்டது. இப்போது பெய்வது முதற்பெயல் அன்று. தலைப்பெயலா? அதுவுமன்று. பெரும் பெயலா? அதுவுமன்று. இது புதுப் பெயல். இது வரையில் இவ்வாறு பெய்ததில்லை. கூதிர்க்காலத்தில் இவ்வாறு பெய்ததில்லை; புதிதாகப் பெய்கின்றது; இதுகாறும் பெய்த முதற்பெயல், தலைப் பெயல், பெரும்பெயல் முதலிய பெயல்களையெல்லாம் கடந்து பெய்கின்றது. பெய்கின்றதா? பொழிகின்றது. குடம் குடமாக ஊற்றும் போலும்! புதுமை! புதுமை!! வியக்கத்தக்கது இப் பெயல்!

‘வளைஇப் புதுப்பெயல் பொழிந்தென’

வளைத்துக்கொண்டு புதுப்பெயல் பொழிகின்றது. பொழிவதில்மட்டுமோ புதுமை! அன்று; புதுமையாக வளைத்துக்கொண்டும் பெய்கின்றது. மேகங்கள் வானிடைப் பரவுவது வழக்கம். “விசும்பு கண்

புதையப் பாஅய்ப் பெய்வன" என்பர். வானம் மறைய மேகங்கள் குவிவன; பரவுவன. அவை "மாதிரம் புதையப் பாஅய்க் கால் வீழ்த்து"ப் பொழிவன. "இரும்பிடித் தொழுதியின் ஈண்டுவன குழீஇ", "விசும்புரிவதுபோல் வியலிடத் தொழுகி, மங்குல் மா மழை தென்புலம் படரும்" என இவ் வாறெல்லாம் மேகம் பரவுவதைப்பற்றி அழகாகக் கூறுவர். இவ்வாறு ஒன்றும் நக்கீரர் கூறினரிலர். மேகங்கள் வளைத்துக்கொண்டு பொழிந்தன என்றார். வளைத்துக் கொண்டன என்றால், அவற்றினின்றும்—அவை பொழியும் மழையினின்றும்,—தப்பி ஓட எவரையும் விடா போலும்! மழை வருவதென்று தெரிந்தால் ஓடி ஒதுங்கிடம் தேடிக்கொள்வார்கள் மக்கள்; விலங்குகளும் அவ்வாறே தேடிக் கொள்ளும். மழை திடீரென வந்தால், அஃது எவரை யும் ஓடிப் போக விடாது வளைத்துக்கொள்ள முடியும். திடீரென வளைத்துக்கொண்டன போலும் மேகங்கள்! அந்தோ! என்ன ஆகுவர் வளைத்துக் கொள்ளப்பட்ட மக்கள்! வளைத்துக்கொள்வது பகை வர்கள் இயல்பன்றோ? வானமும் பகைகொண்டதோ? வான் பகை கொண்டால், வாழ இடமுண்டோ! ஐயோ! இஃது! என்ன புதுமை! இனி என்ன நடக்குமோ!

'வையகம் வளைஇ, வையகம் பனிப்பப்
பொழிந்தென'

இம்மட்டோடு விட்டதோ வானம்! இல்லை. வையகத்தையே வளைத்துக் கொண்டது; வையகம் பனிப்பப் பொழிகின்றது; வையகம் நடுங்க, உலகம் குளிரால் நடுங்கப் பொழிகின்றது. வையகம் அல்லது

உலகம் என்பது எதை உணர்த்தும்? யாரைக் குறிக்கும்? உலகம் என்பது உயர்ந்தோரைக் குறிக்கும் என்பர். உயர்ந்தோரை மாத்திரமா மழை தரும் குளிர் வருத்தும்? உயர்ந்தோர் தாழ்ந்தோர் பலரையும் குளிர் வருத்துவது இயல்பு. உலகம் என்பது உலகத்தில் வாழும் உயிருள்ளன எல்லாம் என்பர். உண்மையே இது. குளிரால் வருந்துவன உயிருள்ளவைகளே; வேறு எவை வருந்துவ? உயிர் இல்லாதவைகளுக்குக் குளிரால் துன்பம் ஏற்படுவதில்லை. ஆனால், இவ்வாடைக் குளிரோ, உயிருள்ளவைகளோடு நின்றிலது; "குன்று குளிர்ப்பன்ன கூதிர்". குன்றையும் குளிரச் செய்வது போன்ற கூதிர்க்குளிர். குளிரால் மழையும் நடுங்கக் கூதிர் மழை பெய்கின்றது; மண்ணும் நடுங்கப் பெய்கின்றது; குன்றும் குளிரால் வருந்தும் என்றால், அந்தோ! மக்களும் விலங்கும் மற்றைய உயிர்களும் எப்பாடு படுமோ! துன்பம்! துன்பம்! இதுவும் இப்பெயல் காட்டும் புதுமை!

'வலனேர்பு பொழிந்தென'

வலனேர்பு[1] என்றால் வன்மை ஏறி அல்லது வல்லமை பெற்று என்று பொருள் கொள்ளலாம்.

---

1. 'வலன்ஏர்பு' என்பதற்கு 'வலமாக எழுந்து' என்று பொருள் கொண்டார் நச்சினார்க்கினியர். இதற்கு 'வன்மை எழுந்து' அல்லது 'வலிமை ஏறி' அல்லது 'வன்மை உற்று' எனப் பொருள் கொள்ளலும் கூடும். பத்துப் பாட்டில் பலவிடங்களில் 'வலனேர்பு' என்ற தொடர் ஆளப்பட்டுள்ளது. 'வலமாக எழுந்து' என்ற பொருளை நச்சினார்க்கினியர் அவ்விடங்களில் எல்லாம் ஒரே விதமாகப் பொருத்திக் காட்டினாரிலர். திருமுருகாற்றுப் படையில் 'மகா மேரு மலையை வலமாகத் திரிதரும்' என்று கொண்டார். அங்கு எழுந்தது, ஞாயிறு. இங்கு எழுந்ததோ,

இப்புதுப் பெயலும் வன்மை பெற்றுப் பெய்கின்றது; முன்பே இது சூழ்ந்துகொண்டு பொழிகின்றது; உலகமே குளிரால் நடுங்கப் பொழிகின்றது. இவை போதுவன அல்லவோ? இன்னும் இப்பெயலுக்கு வன்மையும் வேண்டுமோ? தக்கவாறு சூழ்ந்து கொள்ள, எவரையும் தப்பி ஓட விடாது, வளைத்துக் கொள்ள வன்மை வேண்டும்; சூழ்ந்து வளைத்துக் கொள்ளக் கருதிய பகைவர்கள், அதற்குத் தக்க வன்மையற்றுத் தொடங்கினுல், இடை வழியே தோற்றுத் திரும்புவார்கள். வன்மை அற்ற மேகங் களும் அவ்வாறே இடை வழியே பெய்துவிட்டுத் திரும்புவன. அவ்வாறு செய்வன அல்ல இம்மேகங்கள். முற்றிலும் சூழ்வன; சூழ்ந்தும் பெய்வன. குன்றை யும் குளிரச் செய்வது எளிதா? இதற்கு இணையற்ற ஆற்றல் வேண்டும். உடைத்தம் வலியறியாது

மேகம். இது 'மேரு மலையை வலமாய் எழுந்தது' என்பது பொருந்தவில்லை. 'தான் கிடந்த மலையை வலமாக வளைந்து எழுந்து' என்று கொண்டார், மலையிலிருந்தோ மேகங்கள் எழுவன? எழுவனவே எனினும் என் அம்மலையை வலமாக வளைந்து எழ வேண்டும்? பட்டினப்பாலை அடி 67ல் "நீனிற விசும்பின் வலனேர்பு திரிதரு கோள்மீன் விராய நாள் மீன்" என்றவிடத்து மேருவும் பொருந்தவில்லை, கிடந்த மலையும் பொருந் தவில்லை! 'ஆகாயத்தே வலமாக எழுந்து' எனக் கொண்டார். முல்லைப்பாட்டு அடி 91ல்'வலனேர்பு வயிரும் வளையும் ஆர்ப்ப" என்ற இடத்து, மகா மேருவோ, மலையோ, ஆகாயமோ ஒன்றும் பொருந்தவில்லை. வலன் = வெற்றி எனக்கொண்டார். இவ்வெல்லா இடங்களிலும், அல்லது மேகங்களைக் குறிக்கும் இடங்களிலேனும், வலன் என்றதற்கு 'வன்மை' என்றுகொள்ளத்தகும். வலனேர்பு = வலன் + ஏர்பு, அல்லது வலன் + நேர்பு எனப் பிரிக்கத் தகும். வலன் = வலம், வன்மை, வலிமை. ஏர்பு = எழுந்து, எதி. நேர்பு = நேர்ந்து, உற்று.

தொடங்கின் இடைக்கண் முறியாரெவர்? ஆதலின் இவ்வானம் தொடங்குமுன் உலகையே நடுங்கச் செய்யும் ஆற்றலைப் பெற்றுப் பொழிகின்றது. இத் தகைய வன்மைகளைப் பெற்றுப் பெய்யும் பெயல், இதுவரையில், பெய்ததில்லை. வன்மைப் புதுப்பெயல்! சூழல் புதுப் பெயல்! பனிக்கும் புதுப் பெயல்! அந்தோ! இப்புதுப் பெயலின் முடிவு என்ன ஆகுமோ! ஊரெலாம் மூழ்குமோ! நாடெலாம் அழியுமோ!

இத்தகு வியப்பைத் தருகின்றது இப்பெயல். இதன் விளைவில் அச்சமும் முளைக்கின்றது. இவ் வுணர்ச்சிகள் எழுமாறு, இவ்வெண்ணங்கள் எழு மாறு, பாட்டின் தொடக்கம் அமைந்திருக்கின்றது. கீரர் புதுமையைக் காட்டி வியப்பு உணர்ச்சியை எழுப்புகின்றார்; வியப்பை மிகச் செய்து, அச்ச உணர்ச்சியைத் தூண்டுகின்றார். வியப்புப் பெருகப் பெருக அச்சமும் பிறக்கும். வியப்பைத் தந்து அச்சத் தைக் காட்டி இனி என்ன நடக்கப் போகின்றது என்று காணும் அவாவை எழுப்புகின்றார். வியப்பைத் தந்து விளைவதறியும் வேட்கையை எழுப்பும் முறையைக் காண்க! அச்சுறுத்தி அவாவை எழுப்பு கின்ற அழகைக் காண்க!

அடங்காச் சிறுவர்களை அடக்கக் கதை சொல் லுதல் உலகத்தார் வழக்கம். வியப்பைத் தருமாறு கதையைத் தொடங்குவார்கள்; 'ஒரு பெரீஇஇய புலி வந்தது!' என்று தொடங்குவார்கள்; 'ஒரேஎ பாய்ச் லாகப் பாய்ந்தது!' என அச்சம் தோன்றுமாறு தொடர்ந்து சொல்வார்கள்; கதை சிறிதாயினும்.

சுவையற்றதாயினும், அதைச் சொல்கின்ற முறை யிலே சிறுவர்கள் அதை ஊன்றிக் கேட்குமாறு சொல் வார்கள். அடங்காச் சிறுவர்களை அடக்கும்முறை இது. அழுகின்ற சிறுவரையும் அமர்த்தும் முறை இது. வியப்பு உணர்ச்சியும், அச்ச உணர்ச்சியும் குரங்கெனக் குதிக்கும் சிறுவரின் மனத்தையும் இழுத்துக் கதையில் சேர்க்கும்; அவர் தம் குறும்பெலாம் அடக் கும். இவ்வாறு தொடங்கும்போதே கதையில் சிறுவர் மனம் ஆழ்ந்துவிடுகிறது. கதையைச் சொல்ப வன் சற்று ஓய்ந்தாலும், அவனைத் தூண்டித் தூண்டிக் கதையைக் கூறுமாறு அச்சிறுவர்கள் துன்புறுத்துவார்கள். இவை நாம் உலகத்தில் இயல் பாகக் காண்பவை.

திரியும் மனத்தைத் திரியாது இழுக்கும் ஆற்றல் வியப்புணர்ச்சிக்கும் அச்ச உணர்ச்சிக்கும் உண்டு. இது உளநூல் வல்லார் கண்ட உண்மை. இந்த உண்மையை உணர்த்த உளநூல் சான்றும் வேண்டுமோ? கல்லா மக்களும் அடங்காச் சிறுர்களை அடக்க இவ்வுணர்ச்சிகளைப் பயன்படுத்துகிருர்கள் எனக் கண்டோம்.

கீரர் நம்மையும் சிறுவர்கள் என்று கருதினுர் போலும்! நம்மை ஏமாற்றுதற்கென்றே இப் பாட்டை வியப்புத் தோன்றும் முறையில்-அச்சம் தரும் முறையில்-தொடங்குகின்ருர். நம்மை ஏமாற்ற நினைத்திருந்தால் அவரே ஏமாந்தவராவர். இந்த மருட்டும் உருட்டும் நம்மிடம் செல்லுமோ ? இறைவனை மருட்டியவாறு நம்மையும் மருட்டவோ நினைத்தார்! ஐய! புலவர் பெரும! நும் காசு

எம்பாற் செல்லாது. நீர் இறையனார் பாட்டை ஆய்ந்து ஆய்ந்து குற்றம் கண்டவாறு உம் பாட்டையும் ஆய்வோம்; குற்றமும் காண்போம்; தூள் தூளாக உடைப்போம். "ஏடா! நீயோ உடைக்க வல்லவன்? விடு! விடு!; காவினெம் கலனே, சுருக்கினெம் கலப்பை" என்று கூறினும் விடோம்; உடைத்தே தீர்வோம்; "புகழ்ந்த செய்யுள் கழாஅத் தலையை இகழ்ந்ததன் பயனை அறியாயோ நீ?" என்று கூறினும் விடோம். அறிவோம் அதனை; அஞ்சோம் எதையும்.

முதலிரண்டடிகளை உடைத்தோம்; அச்சமும் வியப்பும் அவற்றிற் கண்டோம். இவ்வுணர்ச்சிகள் மக்கள் உள்ளத்தைக் கவர்வன. இக்காலத்திலும் பேராசிரியர்கள் இவ்வியப்புணர்ச்சியையும், அச்ச உணர்ச்சியையும் பெரிதும் பயன் படுத்துகின்றார்கள்; எங்கோ திடீரென்று வியப்புத் தோன்றக் கதையைத் தொடங்குகின்றார்கள்; வியப்புத் தோன்றும் நிகழ்ச்சிகளை-மனத்தைப் பற்றி இழுக்கும் நிகழ்ச்சிகளை-முதலில் அமைக்கின்றார்கள். நாடகப் பேராசிரியர்கள் இவற்றை மிகவும் கையாள்வதைக் காணலாம். இவற்றை எல்லாம் கீரர் மிகப் பழைய காலத்தே அறிந்திருந்தாரா? இவரும் வியப்பைத் தரும் முறையில் தம் பாட்டைத் தொடங்குகின்றார்.

வியப்பைத் தருவதற்குக் கீரர் புதுமையைப் பயன்படுத்துகின்றார். புதுமையைக் காட்டிப் பாட்டைத் தொடங்குகின்றார் என்று முன்பே கண்டோம்; புதுமை எவ்வாறு வியப்பைத் தருகின்றது என்றும் கண்டோம். புதுமை மதிமை சாலா மருட்கை தரும்[1]

1. 'புதுமை பெருமை சிறுமை ஆக்கமொடு
மதிமை சாலா மருட்கை நான்கே.' —தொல். மெய். 7.

என்பர். புதுமை தருவது வியப்பு; வியப்புத் தருவது மருட்கை. வியப்பிற்கு மதியை மயக்கும் இயல்பு உண்டு. மயக்குண்டபின் வியப்பைத் தரும் பொருள் மீதே மதி செல்லும். வியப்பின் வயப்பட்ட மதி அல்லது அறிவு தன் ஆற்றல் குறைந்து நிற்கும்; தான் வேண்டியபடி யெல்லாம் திரியுமியல்பு குன்றி நிற்கும்; தான் காணும் பொருளைச் சீர் தூக்கி மதிக்கும் ஆற்றல் குறைந்து மயங்கும். ஆதலின் இம்மருட்கையை, 'மதிமை சாலா மருட்கை' என்றனர். உணர்ச்சி (Emotion) எழுந்து அறிவை அடக்கி ஆளும் முறையில் தோன்றுவது இது. அடக்குமுறை ஆட்சியை உணர்ச்சியும் கையாளும் போலும். உணர்ச்சி கையாளும் அடக்கு முறைகளை, அறிவும் உணர்ச்சியும் ஒன்றை ஒன்று பொருதுபடும் போரினை, ஒன்றை ஒன்று வஞ்சித்தேறும் வன்மையைப் பார்த்துப் பார்த்து இருந்தனர் புலவர். உணர்ச்சியே வென்றது. ஆர்த்தனர் புலவர். அவருக்குத் தக்க வாய்ப்புக் கிடைத்தது. உணர்ச்சிக்கும் அறிவுக்கும் இப்போராட்டம் இல்லையேல் பாவலர் எங்கே? அவர் பாடல்தான் ஏது? உணர்ச்சிகளைப்பற்றப் பாவலர் கண்ணும் கருத்துமாகக் காத்திருப்பர்.

வியப்பு அச்சம் எனும் இவ்விரண்டே மக்கள் உள்ளத்தை இயக்கும் உணர்ச்சிகளா? அல்ல: இன்னும் பல உள. இந்த உணர்ச்சிகளை எங்கெந்த இடத்தில் எவ்வாறு, எவ்வாறு கையாள வேண்டுமோ, அவ்வாறு, அவ்வாறு புலவர்கள் கையாள்வார்கள். இவ்வுணர்ச்சிகளே பாக்களுக்கு அல்லது இலக்கியங்களுக்குச் சுவை தருவன. உப்புத் தருவது உணவிற்குச் சுவை; உணர்ச்சி தருவது நூலிற்குச் சுவை.

படிப்போன் உணர்ச்சியைப் பாவலர் பாட்டு இயக்கா தெனின், அவன் கண்கள் அப்பாட்டின் சில அடிகளைப் பார்க்கும்; அவன் மனம் அவைகளை விட்டு எங்கெங்கோ திரியும். அறிவின் முனைப்பால் முயன்றே படிப்பினும், சிறிது நேரத்தில் அலுப்புத் தோன்றும்; படிப்போனும் தூக்கத்தில் ஆழ்வான். அவன் படித்த பாட்டோ, என்றும் விழியாத - எவரும் எழுப்பாத-தூக்கத்துள் வீழ்ந்துபடும். படிப்போனை அடிமை யாக்கப் பாவலர்கள் முதல் முதல் அவன் உணர்ச் சியைக் கைப்பற்றுவார்கள்; உணர்ச்சியை ஆளும் தன்மை அவர்களுக்குக் கிடைத்துவிட்டால், கனலையும் கடுவையும் அவ்வுணர்ச்சியிற் குழைத்து, கற்கண் டென ஊட்டிவிடுவார்கள். அப்போது படிப்போன் ஒருவனோ அவர்களுக்கு அடிமை? அவன் அறிவு அடிமை! அவன் பசி அடிமை! அவன் பண்பெலாம் அடிமை! அப்பாவலர்களுக்கே அவன் பகலும் அடிமை, இரவும் அடிமை! அவர்தம் பாட்டிற்கும் அடிமை!

நக்கீரர் தொடக்கத்திலேயே இவ்வுணர்ச்சித் துறையில் இறங்குகின்றார். நக்கீரர் மட்டுமல்லர் சங்கப் புலவர் எல்லோரும் இவ்வுணர்ச்சி முறையை நன்கறிந் தவர்; இவ்வுணர்ச்சிகளைப் பாக்களில் கையாள்வதில் வல்லுநர். ஆதலின், அவர்தம் பாக்கள் (சங்கப் பாக் கள்) இன்றும் சுவை தந்து நிற்கின்றன; படிப்போன் மனத்தைப் பற்றிக்கொள்கின்றன. நக்கீரரோ, இவ் வுணர்ச்சிகளைக் கையாள்வதில் மிக வல்லவர்; ஏனைய புலவர் தம்மினும் திறம் பெற்றவர். இவ்வன்மையைச் செல்லச்செல்ல இன்னும் காண்போம். உள்ளத்தின் இயல்பிற்கு ஒப்ப-உணர்ச்சிகளின் தன்மைகளைத்

தழுவி, இக்காலக் கொள்கைகளுக்குப் பொருந்த - இப்போது ஆசிரியர்கள் கையாள்கின்ற முறைகளை ஏற்று, எவ்வளவு திறம்பட அமைந்துள்ளது இப்பாட்டின் தொடக்கம் !

இதனுடன் இத்தொடக்கம் முடிந்த தன்று. இத்தொடக்கத்திலுள்ள சொல் தொடர்களில் விளக்கம் பெற வேண்டுவது ஒன்றுள்ளது. அது 'பொய்யா வானம்' என்ற தொடர்.

'பொய்யா வானம்'

'பொய்யா வானம்' என்பது, 'தவறாது பெய்கின்ற வானம்' என்று பொருள்படும். 'பொய்யா வானம்' என்ற பெயர் வானத்திற்கு எப்போது பொருந்தும்? இயற்கையாக வானம் அதன் தொழில்களைச் செய்தால், அது பொய்யா வானம் எனப்படும். அதன் இயற்கையான தொழில்கள் எவை? தக்க காலத்தில் தவறாது தொடங்குதல், தொடங்கிய பின்பும் தவறாது பெய்தல் அதன் தொழில்கள். தொடக்கம் ஒன்றே வானத்திற்குப் 'பொய்யா வானம்' என்ற பெயரை அல்லது புகழை நிலை நாட்டுவதன்று. மழை தொடங்கிய பின்னர் நின்றுவிடுமாயின், தொடர்ந்து வழக்கம்போலப் பெய்யாதாயின், அவ்வானம் பொய்யா வானமாவது எப்படி? தக்க காலத்தில் தொடங்கலும் வேண்டும்; தொடங்கிய பின்பும் ஏனைய காலங்களிலும் உரிய அளவு பெய்தலும் வேண்டும். இவையே வானத்தின் வெளிப்படையான இயற்கை. இவையன்றி மற்றோர் இயல்பும் அதற்கு உண்டு.

"கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்ப தூஉம் எல்லாம் மழை"

என்ருர் வள்ளுவஞர். கெடுப்பதும் கொடுப்பதும் வானத்தின் இயல்பு. கொடுப்பதைக் கொண்டு மாத்திரம் வானத்தைப் புகழ்வது நடு நிலேமை ஆகாது. கெடுப்பதும் நிகழுமாயின் அப்போதுதான் வானம் தன் உண்மையில் பொய்யாததாகும். பல புலவர்களும் மழை தரும் நன்மையையே கூறுவார்கள்; கூறி அதனேப் புகழ்வார்கள். இஃது ஒருபுடைப் புகழ். கீரரோ, அவ்வாறு செய்யார். ‘பனிப்ப’ என்று தொடங்கி, வானம் தரும் கெடுதியையும் துன்பத்தையும் கூறப் புகுகின்றேன் என்று கூறுவது போலப் பாட்டைத் தொடங்குகின்ருர். கீரரின் வானத்திற்கு இதுவும் ஒரு புதுமை போலும்!

இவற்றை எல்லாம் கருதியோ கீரர் இத்தொடக்கத்தை அமைத்தார்? இவையெலாம் புனேந்துரை ஆவனவோ, அல்லால் வேண்டாதன புகுத்தி வலிந்து உரைகொண்டனவாகுமோ? மேற்கூறிய பொருள்களே எல்லாம் இத்தொடக்கமே உணர்த்த வேண்டுமென்பது நக்கீரர் எண்ணமா? அவர் எண்ணம் இதுவே என்பதை எப்படிக் காண்பது? இவை தக்க கேள்விகளே. இவற்றிற்கு விடை அவர் பாட்டே பகரும். பாட்டையே கேட்போம். இப்பாட்டுப் பகர்வது என்ன? ‘வையகம் பனிப்பப் பாடுகிறேன் என்று பகர்கின்றது. திருமுருகாற்றுப்படையில் இவர் தொடங்கிய தொடக்கத்தைக் காண்போம். ‘உலகம் உவப்ப’ என்று தொடங்கினர். இங்கு ஏன் அதற்கு முற்றிலும் மாருகத் தொடங்குகின்ருர்? ‘அங்கு உலகம் உவக்கும் ஆற்றினே உணர்த்தினேன்; இங்கு வையகம் பனிக்கும் ஆற்றினே வகுத்துக் காட்டுகிறேன்; அங்கு உவகை இயல்பு காட்டினேன்; இங்குத்

துன்ப இயல்பு கூறுகிறேன்' என்று விடைபகர்வதை இவ்விரு பாக்களின் தொடக்கமே காட்டும். இவை யெல்லாம் நினையாது கூறியனவா? இப்பாட்டு துன் பியல்பாட்டு என்பதற்குவேறு சான்றும் வேண்டுமோ?

'வையகம்' என்ற சொல்லோடு இப்பாட்டைத் தொடங்கியதே துன்பத்தைக் குறிக்கும் என்பாரு முளர். 'வை+அகம்' என இச்சொல் பகுக்கப்படும். 'வை' என்பது நிந்தி அல்லது நிந்தனை செய் என்று பொருள்படும். மக்கள் அன்றும் வைத அகம், இன்றும் வைகின்ற அகம், இனியும் வையும் அகம் என்று புதுமைஉலகு அதன் வேரைக் கல்லிப் பொருள் காணும். அம்மம்ம! துன்பம் அன்றி இவ்வுலகிற்கு வேறு இயல்பும் உண்டோ? தூற்றுதார் யாருளரோ இத்தொல்லுலகை? இத்துன்ப உலகிற்கு இதைவிடப் பொருத்தமான பெயரும் அமையுமோ? இத்துன்பியல் பாட்டை, நிந்திக்கப்பட்ட **உலகு** என்ற பெயரோடு தொடங்கியது எவ்வளவு பொருத்தமாய் அமைந்துள் ளது! ஆனல், முற்று இயல்பிற்று மொழி நூல் அறிவு. இதுதான் இதற்கு வேர் என ஒருவர் கல்லிக் கண்டால், இதோ மற்றுமோர் ஒட்டு வேர் ஓடுகிறது என்பர் சிலர். ஆதலின், இச்சான்று வேண்டா. வேறு சான்றும் இப்பாட்டே பகரும்.

பாட்டின் தொடக்கத்தை ஆய்ந்த போது, உலகத்தையே குளிரச்செய்வன போன்று-மண்ணையும் மலையையும் குளிரச் செய்வன போன்று - எழுந்தன மேகங்கள் என்று பொருள் கண்டோம். இப்போது பாட்டைப் பார்ப்போம். மேகங்கள் மாந்தரைக் குளிரால் நடுங்கச் செய்தன; விலங்குகளை நடுங்கச்

செய்தன; பறவைகளை வீழ்த்தின. குன்றையும் குளிரச் செய்வது போன்றது குளிர். இக்குளிரில் அகப்பட வேண்டியவர்கள் உலகில் வேறு யார் உளர்? வேறு எவை உள? மேகங்கள் உலகத்தையே வளைத்துக் கொண்டன என்றும் பொருள் கண்டோம். பாட்டிற் காண்பன யாவை? கோவலரை வளைத்தன; அரசரைச் சூழ்ந்தன; அவர் படையை வளைத்தன; ஆடவரைச் சூழ்ந்தன; மகளிரைச் சூழ்ந்தன; வயலை வளைத்தன; தெருவை வளைத்தன; ஆவணம், உயர் நிலைமாடம் அனைத்தையும் வளைத்தன. இனிச் சான்றும் வேண்டுமோ? பொருள் நலப்பகுதியில் இவற்றின் விரிவெலாம் காண்க.

பாட்டில்வரும் பொருளை எல்லாம் இத்தொடக்கம் முன்னின்று உரைக்கின்றது. வருபொருளுரைத்தலும் தொடக்கத்திற்கு ஓர் அழகு என்பர். இதைப் பிற்காலத்தவர் பெருங்காவியங்களுக்கு ஓர் இலக்கணமாகக் கொண்டனர். காளிதாசர் இயற்றிய சாகுந்தல நாடகத்தில் இவ்வழகைக் காணலாம். ஷேக்ஸ்பியர் நாடகங்களில் இவ்வாறு வருபொருள் உரைத்துத் தொடங்கும் குறிப்பைக் காணலாம். கீரரும் இதை இப்பாட்டிடைப் பெய்து காட்டுகின்ருர். விரிந்து பரந்து வளரும் மரமெலாம் சிறு வித்தில் அடங்கிக் கிடப்பது இயற்கை. விரிந்த இப் பாட்டும் சிறந்த இத்தொடக்கத்துள் அமைந்து கிடக்கின்றது. பாட்டு நுதலிய பொருளெல்லாம் இதனுள் பதிந்து கிடக்கக் காணுங்கள்.

பாட்டுள் கூறப்படும் பொருளுக்கு எவ்வளவு பொருத்தமாக அமைந்துள்ளது இத்தொடக்கம்! இப்

பாட்டிற்கே இஃது ஓர் அழகைச் செய்கின்றது; ஒளியைத் தருகின்றது. 'திருவமைந்த நகரத்திற்கு உருவமைந்த வாயில் மாடம்' அமைந்தது போல அமைந்துள்ளது இத்தொடக்கம். அந்த மாடமோ, நின்ற இடத்திலிருந்து புகு முகத்திற்கு அழகு செய்வது; நகருடெல்லாம் ஒளி தரப் புகுவதன்று. ஆதலின், இத்தொடக்கத்திற்கு இவ்வுவமை பொருத்தமில்லை. அளப்பரிய வானத்திற்கு விளக்கமாகிய திங்களும் ஞாயிறும் அமைந்தாற் போன்று, இவ்விரு தொடக்க அடிகளும் அமைந்துள்ளன. இப்பாட்டுள் சென்று காண, இவ்வடிகளே ஒளி தருகின்றன. இவை வீசும் ஒளியில் இப்பாட்டின் உள்ளெலாம் உலாவலாம். காணு இடத்தும் இவை நமக்கு வழிகாட்டிச் செல்லும். இவையே இப்பாட்டிற்கு ஒரு பாயிரம் எனவும் தகும்.

இத்தொடக்கத்தே வாழ்த்தும் கூறினரென்பர். பொய்யா வானம் என்று புகழ்ந்தது எதற்கு? வாழ்த்து ஒன்றோ கூறுகின்றார்? வாழ்த்தொடு வணக்கமும் சேர்ந்தது போலும்! வாழ்த்துப் புறநிலையாகாது, பாட்டிலே அமைந்து கிடப்பதும் வாழ்த்தியல் வகையில் ஒன்று. இஃது இயற்கை வாழ்த்து எனவும்படும். இங்கு இயற்கையாய் அமைந்தது வாழ்த்து. இயற்கையை வாழ்த்தும் வாழ்த்து இஃது என்றும் கொள்ளத்தகும். வாழ்த்துக் கூறுகின்றார், வருபொருளுரைக்கின்றார் என்று தோன்றாது இயற்கையாகப் பாட்டோடு பாட்டாய்ச் சேர்த்துப் பாடி நம்மை ஏமாற்றிய வன்மையே வன்மை!

தொடக்கம் இம்மட்டோடு நின்றதோ? பொய்யா வானம் பொழிகின்றது, பொழிகின்றது!

கிரர்தம் பொய்யா நாவும் நெளிய நெளியப் பாடுகின் றது; பாமழை பொழிகின்றது! வானம் உலகைவளைத் தது. இவர் பாட்டும், உலகை, உலகில் உள்ளாரை, அவர் உள்ளத்தைப் புறத்தை யெல்லாம் வளைத்தது. வானம் பெய்தது புதுமழை. இவர் நாப் பெய்ததும் புதுப்பாட்டு, புதுப் பாமழை. இதற்குமுன் வாடை யைப் பாடியோர் உண்டோ? யாரும் இலர். குன்றம் பாடியோர் உளர்; கார் பாடியோர் உளர்; முல்லை, மரு தம், நெய்தல், குறிஞ்சி பாடியோர் உளர். வாடை யைப் பாடியோர் யாருமிலர். வானத்தால் வையகம் குளிர்ந்து, துன்புற்று, அன்பில் அதனை மறந்தது. இவர் பாட்டும் துன்பம் காட்டி அன்பை நாட்டிற்று. வையகம் துன்பத்துள் வீழ்ந்தது; இருளுற்றது; குளிர் பெற்றது. கைக்கொள்ளி - சுடர்விடாக் கொள்ளி - அவற்றைப் போக்கிற்றில்லை. அவற்றைப் போக்க, அன்பெனும் "பரூஉச்சுடர் அழலக்" காண்மின். துன் பெனும் வடந்தைத் தண்வளி யெறிதொறும் அன் பெனும் பரூஉச்சுடர் அவியவில்லை; நுடங்குகின்றது. தெற்கேர்பு இறைஞ்சிய தலையைப் பெற்றது; பணிந்து தொண்டாற்றுகின்றது.

இவற்றை எல்லாம் உள்ளுறை என்கோ! உள் ளுறைச் சுட்டு என்கோ! புதைபொருள் என்கோ! இசைப்பொருள் என்கோ! இவை எல்லாம் சேர்ந் தன என்கோ! எவை எனப் புகல்வது? பெயர் இடு வது, அவரவர் பெற்றிக்கேற்பது; போர் விளைப்பது. பெயர் யாதாயினும் ஆகுக, பா தரும் நலன் ஒன்றே. பாநலனைப் போற்றுக! அந் நலன் தரும் நுகர் வைப் போற்றுக! அம்மம்ம! என்னே இக்கிழவர் வன்மை! பாட்டின்தொடக்கம் கொண்டன இரண்டே

அடிகள்; பத்தே சொற்கள். இவை விண்ணிடை மீனென மின்னுகின்றன; நினைக்க நினைக்கத் திகைக்கச் செய்கின்றன. என்னே இவர் புலமையின் ஆழம்! புலமையின் அழகு!

2. ஒப்பிட்டுணர்தல்

இப்பாட்டின் தொடக்கத்தை மற்றொரு பாட்டின் தொடக்கத்தோடு ஒப்பிட்டுக் காண்போம். திறன்தனைக் காணவேண்டின் சீர்தூக்கிக் காணல் வேண்டும். ஒன்றுடன் மற்றொன்றை வைத்தல், ஒப்பிட்டு அவற்றைக் காணல், உற்று உற்றறிந்து அவற்றின் திறன்தனைத் தேர்தல், தேர்ந்த அத்திறனைச் சீர்தூக்கல், தூக்கித் தெளிதல் இவையே திறனாய்தலுக்கு ஏற்ற முறையாவன. ஒப்பிட்டுத் தேர்ந்த அறிவே உரம் பெறு அறிவு என்பர். இவ்வாறு ஒப்பிட்டுக் காண்பது ஒருவரை இழிப்பதற்கன்று; மற்றொருவரைப் புகழ்வதற்கன்று; உண்மையைக் காண்பதற்கு. ஒப்பிட்டுக்காணும் நெறி உண்மையிற் சேர்க்கும் நெறி. நாம் இவ்வழியிலும் சென்று காண்போம். ஒப்பிட்டு நோக்கப் பிறிதொரு பாட்டும் வேண்டும். இதற்கும் முல்லைப் பாட்டே அகப்படுகின்றது. முன்பு அரசனைக் கூறிய பகுதியில் முல்லைப் பாட்டின் சில அடிகளைச் சீர் தூக்கிக் காணல் நேர்ந்தது. இங்கும் அதன் தொடக்கத்தையும், இப்பாட்டின் தொடக்கத்தையும் ஒப்பிடுவோம். முல்லைப் பாட்டுத் தொடங்குவதைக் காண்க:

"நனந்தலை யுலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல நிமிர்ந்த மாஅல் போலப்
பாடுஇமிழ் பனிக்கடல் பருகி வலன்ஏர்பு

கோடுகொண் டெழுந்த கொடுஞ்செலவு எழிலி
பெரும்பெயல் பொழிந்த சிறுபுன்மாலை''

இத்தொடக்கத்தை நப்பூதனுர் ஆறு அடிகளில் முடித்தார். அடிகளின் அளவை அல்லது அவற்றின் எண்களைக் கருதுதல் வேண்டற்பாலதன்று. பெருமையைத் தருவன பெருகிய அடிகள் அல்ல. அவ்வடிகள் சுமந்த கருத்தே அவற்றைப் பெருமையிற் படுத்தும் அல்லால் சிறுமையில் சேர்க்கும். இவ் அடிகள் உணர்த்தும் பொருளை, அவற்றின் கருத்தை உணர்வோம். பனிக்கடல் ஒலிக்கின்றது. அங்கிருந்து மேகங்கள் நீரைப் பருகிப்பருகி வன்மையுற்று எழுகின்றன; உலகத்தை வளைக்கின்றன; மழையைப் பொழிகின்றன. இஃது எவ்வாறு இருந்தது? சங்கும் சக்கரமும் கையில் வைத்துத் திருமகளையும் தாங்கிய திருமால் மூவடி மண்கொள வளர்ந்தது போன்று இருந்தது. நீர், தம் கைகளிலிருந்து ஒழுக, ஒழுக வளர்ந்து, வளர்ந்து விண்ணுறத் திருமால் எழுந்தார். மேகங்களும் மழை நீரைப் பொழிந்துகொண்டே எழுந்து, எழுந்து சென்றன. நக்கீரரைப் போன்றே இப்புலவரும் மேகங்கள் எழுவது, வளைத்துக் கொள்வது முதலிய செயல்களைக் கூறினுர்; இவற்றை விளக்க ஓர் உவமையும் தந்தார். கீரர் கூறியது போல மேகங்கள் எழுந்தன, வளைத்தன, பொழிந்தன என்று கூறினுல் அது போதியதன்றே? இவ்வுவமை எதற்கு! புலவர்களெல்லாரும் ஒரே விதமாகப் பாடுபவர்களல்லர். சிலர் சொற்களைப் பொழிந்து, சொல்லும் பொருளும் சிறக்க அமைப்பர். சிலர் உவமையால் விளக்குவர். சிலர் கற்பனை கூறித் தம் கருத்தெலாம் அதனிடம் அமைப்பர். சிலர் அணி பல

பெய்வர். இங்கு உவமை முகத்தால் புலவர் பொருளை விளக்குகின்றார். உவமையைக்கொண்டே பாட்டைத் தொடங்குகின்றார்.

தெரியாத அல்லது எளிதில் அறியாத ஒரு பொருளை விளக்க உவமை கூறுவது இயல்பு. 'ஆமா' (காட்டுப்பசு) என்பது எவ்வாறிருக்கும் என்று அறியான் ஒருவன்; 'ஆ' போலும் ஆமா என்ற உவமை ஒன்றை அறிவான்.[1] அவன் காட்டுக்குள் சென்றான்; 'ஆமா' வைக் கண்டான்; 'ஆ' போலும் என்ற உவமையைக் கொண்டு, 'ஆமா'வே தான் கண்டது என்று அறிகின்றான். இஃது உவமை பயந்த நன்மை. பாட்டுள்ளும் இந்த நன்மையே உவமை பயக்கும்; புலப்படாப் பொருளைப் புலப்படச் செய்யும்.

இத்தொடக்கத்தில் கூறிய உவமத்தால் பொருள் எவ்வாறு விளக்கம் பெற்றது? திருமால் கரிய நிற முடையவர்: மேகங்களும் கரிய நிறம் உடையன. திருமால் கையிலிருந்து நீரொழுகியது: மேகங்களும் நீரைப் பொழிந்து எழுந்தன. இந்த உவமையால் மேகங்கள் விளக்க முற்றனவா, அல்லது திருமால் விளக்கமுற்றனரா? மேகங்கள் கருநிறமுடையன என்பதை எல்லோரும் அறிவர். திருமாலை உவமை கூறியதால் மேகத்தைப் பற்றிய அறிவு விளக்கம் பெற்றிலது. திருமாலை யாரும் கண்டிலர்; அவர் நிறத்தையும் கண்டிலர்; அவர் உருவத்தையும் கண்டிலர்; அவர் நிமிர்ந்ததையும் கண்டிலர். புலவர் கூறிய உவமையால், 'திருமால் நிறம் இவ்வாறுதான்

1. தொல். உமவியல். 276 உரை மேற்கோள்.

இருப்பது போலும்! உருவம் இவ்வாறுதான் இருப்பதுபோலும்! அவர் நிமிர்ந்ததும் இவ்வாறேபோலும்!' என்று படிப்போர் உணர்கின்றனர். இந்த உவமையால் விளக்கமுற்றவை மேகங்கள் அல்ல; திருமாலே விளக்கமுற்ருர். இங்குப் புலவர் திருமாலே விளக்க முன் வந்தாரா அல்லது மேகத்தை விளக்க முன்வந்தாரா? மேகத்தையே உணர்த்தப் புகுந்தார். அந்தோ! அவர் உவமை வேறு ஒன்றை விளக்கியதே! இந்த உவமத்தால் பொருள் புலப்பாடு ஒன்றும் காண்கிலோம். பொருள் புதைபட்டுத் திருமாலே புலப்படக் காண்கின்ருேம்.

இம்மட்டோ! பூதனர் நேமியை ஏன் இங்குக் குறிப்பிடுகின்ருர்! வலம்புரியை ஏன் குறிப்பிடுகின்ருர்? எவ்வாறு இவை மேகத்திற்குப் பொருந்துவன? இவையெல்லாம் வேண்டாச் சொற்கள், பயனிலா மொழிகள் அல்லவோ? இந்த உவமையும் இந்த உவமை பெற்ற அடைமொழிகளும் ஈண்டுப் பொருந்தாதன ஆமோ? வேண்டாதவற்றை, வேண்டா இடத்துப் புகுத்தியும், ஒலியை மிகுத்தும், அடியைப் பெருக்கியும், பாட்டைப் பெருகப் பெருகப் பாடும் பாவலர் அல்லர் சங்கப்புலவர். இவர்தம் பாக்களில் காண்பன, வேண்டா உவமை, வேண்டாச் சொற்கள், வேண்டாச் சொற்ருெடர்கள் என நாம் தள்ளத் தக்கன ஆகா போலும். இங்குச் சற்று ஆழ்ந்து பொருள் காணல் வேண்டும். இவ்வுவமையை வேறு எவரும் கையாண்டுளரா? அவரிடமிருந்து ஒளி பெற முயல்வோம். இவ்வுவமையோ? திருமாலேப் பற்றியது. திருமால் அடியார் இதனைக் கையாண்டிருத்தல் கூடும். அவ்வடியார் பாசுரங்களில் இதனைத் தேடுவோம்.

ஓர் அம்மையார் இவ்வுவமையை அப்படியே கையாண்டுள்ளார். அவ்வம்மையார் பெயரோ ஆண்டாள்! நண்ணிய இடர்ப்பாட்டினின்றும் நம்மை ஆண்டாள்! அவ்வம்மையார் பாடலைக் கேட்போம்;

[1]"ஆழி மழைக்கண்ணா! ஒன்றுநீ கைகரவேல்;
ஆழியுள் புக்கு முகந்துகொடு ஆர்த்தேறி
ஊழி முதலவ னுருவம்போல் மெய்கறுத்துப்
பாழியம் தோளுடைப் பற்பநா பன்கையில்
ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்க முதைத்த சரமழைபோல்
வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும்
மார்கழிநீ ராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்."

முல்லைப்பாட்டை விளக்க எழுந்தது போன்று அமைந்துள்ளது இப்பாசுரம். அம்மையார் பூதனார் உவமையில் ஈடுபட்டு, இதனுள் ஆழ்ந்து ஆழ்ந்து இதன் நலனெலாம் அறிந்தார் போலும்! பூதனார் குறிப்பாக விட்டுச் சென்ற பகுதியை இவர் தெளிவாக விளக்கியுள்ளார். மேகங்கள் நேமி போல மின்னுகின்றனவாம்; சங்கு போல ஒலிக்கின்றனவாம். வேண்டாத சொற்கள் எனக் கருதியவற்றின் பொருள் இப்போது தெரிகின்றது. மேகங்கள் மின்னி இடி இடித்து மழையைப் பொழிந்தன. இதை விளக்க அன்றோ பூதனார், "நேமியொடு வலம்புரி பொறித்த தடக்கை" எனக் குறிப்பிட்டார்? இதன் பொருத்தம் இப்போது விளங்குகின்றது. ஆனால், 'மா தாங்கு திருமால்' என்று ஏன் குறிப்பிட்டார்? திருவை அல்லது இலட்சுமியைத் திருமால் தாங்கினார். இதை ஒப்ப மேகங்கள் ஒன்றையும் தாங்கவில்லையே! இதன்

1. திருப்பாவை, 4.

பொருத்தமும் விளங்கவில்லை. அம்மையாரும் இதை விளக்கிஞரிலர். அம்மையாரின் பாட்டையும் ஈண்டு நுணுகி உணரல் வேண்டும். "வாழ உலகினில் பெய்திடாய்" என்ருர். திரு என்பதை வாழ்வு அல்லது திருவைத் தருவது வாழ்வு என்று கொள்ளலாம். மேகங்கள் வானில் மழையையோ தாங்கி நிற்கின்றன? அன்று அன்று; திருவைத் தாங்கி நிற்கின்றன; மக்களுக்கு வாழ்வைத் தாங்கி நிற்கின்றன; திருவைத் தரும் வாழ்வைத் தாங்கி நிற்கின்றன. 'மாமுத்தம் நிதி சொரியும் மாமுகில்கள்' இவை. திருமால்பால் காண்பது மாதாங்கு தடக்கை; மேகங்கள்பால் காண்பது மாதாங்கு மழை. பயனற்ற அடைமொழிகளென நாம் சற்று முன்பு கண்டவை எவ்வாறு இவ்வம்மையார் அறிவால் பயன் பெற்றன காணுங்கள்! எவ்வாறு எவ்வாறு இவ்வம்மையார் இம்மேகத்தின் இயலில், இவற்றின் அழகில் ஈடுபட்டுள்ளார்! இவர் கண்டது மேகங்களை அன்று; தம் காதலனைக் கண்டார்; கட்டி அணைக்கக் கைகளை நீட்டி நின்ருர்: கனிகின்ருர்; கவி மழை பொழிகின்ருர்.

இவ்வம்மையார் சென்ற இடத்திற்கு அப்பாலும் செல்ல வழியுமுண்டு. 'நேமி' என்பது 'ஆணை'யைக் குறிப்பது. பருவ காலம் வந்தது, இறைவன் கட்டளைப்படி மேகங்கள் மழை பொழிதல் வேண்டும். நேமி உருள்கின்றது; இறைவன் ஆணை நிறைவேறுகின்றது. மேகத்திடையே மின்னல்கள் மின்னுகின்றன; இடி இடிக்கின்றது. தக்க காலத்தே மழை பொழிகின்றது. இயற்கை எழில்களை இறைவன் செயல்களாகக் கூறுவதும் ஒருவித மரபு. இது பௌராணிக மரபு என்பர். இயற்கை வேறு, இறைவன் வேறல்ல.

இயற்கையே இறை; இறையே இயற்கை. இறைவனுக்கு மக்களைப்போல, தேவரைப்போல, உயிரும் உடம்பும் அமைத்துக் கூறுதல், எல்லா மாந்தரும் எளிதே உணரும் பொருட்டு. இது புராண முறை என்பர்.

இன்னும் ஆழ்ந்து செல்லச் செல்ல, இவ்வுவமையில் பற்பல பொருத்தங்கள் அமைவதைக் காணலாம். மாவலி நீர்வார்த்த பொழுது திருமால் குறள் வடிவாய் இருந்தனர். மேகங்களும் வான்முகட்டில் ஒரு பகுதியில் முதன்முதல் குறள் வடிவாய்த் தோன்றின; அதன் பின்பே உயர்ந்து உயர்ந்து உலகெலாம் வளைத்துக்கொண்டன. மாவலி நீர் வார்த்தபொழுது அதில் நீர் அதிகம் விழவில்லை. வெள்ளிவானவன் ஒரு வண்டாய்ச் சென்று அந்நீரோட்டத்தை அடைத்து நின்றான். மேகங்களும் தொடக்கத்தே சிறிது சிறிதாக மழை பொழிந்தன. அதன் பின்பே அச்சிறு பெயல் பெரும் பெயலாய் மாறிற்று. இம்மட்டோ! மாவலி நீர் வார்க்கின்ற பொழுதே திருமால் வளர்ந்தார்; நீர் வார்த்து முடிந்த பிறகு வளரவில்லை. குட்டை வடிவாய் இருந்த பொழுதே நீர் வார்த்தது முடிவு பெற்றால், அக்குறள் வடிவிற்கு அமைந்த சிறு அடியாலல்லவோ தாம் பெற்ற மண்ணை அளந்து கொள்ளல் வேண்டும்? கொடுத்தது ஓர் அளவைப் பற்றி, பிறகு அதைக் கொண்டது வேறு அளவைப் பற்றி என்றால் அது பொருந்துமோ? ஆதலின், நீர் வார்த்துக்கொண்டிருந்த போதே திருமால் வளர்ந்து விட்டார் என்பர். மேகங்களும் நீரைப் பொழிந்து கொண்டே உயர்ந்தன; உயர உயர வளர்ந்தன. திருமால் வளர்ந்து வளர்ந்து விண்ணுலகை ஓர் அடி

யால் அளந்து பற்றிக் கொண்டார். மேகங்களும் வளர்ந்து வளர்ந்து விண்ணுலகை எல்லாம் பற்றிக் கொண்டன. மற்றோர் அடியால் திருமால் நில உலகெல்லாம் அளந்தார். மேகங்களும் நிலப்பரப்பெல்லாம் பரவி எல்லா விடத்தும் பெய்து நில உலகைப் பற்றிக் கொண்டன. திருமாலின் செயல் நில உலகத்தையும் வானுலகத்தையும் அளந்ததோடு நின்றிலது. இவர்தம் மூன்றும் அடியோ, மாவலியுடன் பாதாளத்துட் சென்றது; அதனையும் அளந்தது என்பர். இம்மேகங் களும் அவ்வாறே செய்தன; முதலில் வானெலாம் வளைத்தன; உலகெலாம் நிறையப் பொழிந்தன; பொழிந்த நீர் பாதாளத்துள்ளும் ஊறி ஊறிச் சென்றது.

பெரும் பெயல் எனப் பாட்டுக் கூறுவதைக் கருதுக. ஒன்று நீகை கரவேல் என்று அம்மையார் கூறுவது பெரும்பெயல் என்பதை விளக்க எழுந்தது. ஒன்றையும் ஒரு சிறு துளியையும் ஒளித்து வைத்துக் கொள்ளாது பெய்வது பெரும் பெயல், தன்னையே கரைத்துக் கரைத்துத் தன்னிடம் ஒரு துளி நீரும் இன்றிப் பெய்வது பெரும் பெயல். இவ்வாறே இறைவனும் தன்னையே தமர்க்கு நல்கும். உலகம் வாழத் தன்னையே மழை அல்லது பெயல் நல்குவது போல இறைவன் உயிர்கள் உய்யத் தன்னையே தமர்க்கு நல்கும் பட்டர்பிரான் கோதைக்குத் தன்னையே இறைவன் நல்கியதையும் ஒப்பிட்டுக் காண்க.

இஃதன்றோ உவமை! எவ்வளவு அழகு! எவ்வளவு பொருத்தம்! இச்சிறு உவமை எத்தனை எத்தனைக் கருத்துக்களை உள்ளடக்கி நிற்கின்றது! விரிக்க விரிக்கப்

பெருகுகின்றது! திருமால் போன்றே இவ்வுவமையும் வளர்கின்றது. மேகங்கள் நீரைப் பொழிந்துகொண்டே உயர்ந்தன. பூதனார் உவமையோ, பொருளைப் பொழிந்துகொண்டே உயர்கின்றது. இன்னும் உயரும் போலும்! இவர் தந்த உவமை இவர் உவமைக்கே உவமையாய் அமைந்த அழகைக் காணுங்கள்.

'உவமப் பொருளின் உற்றதுணரும் தெளி மருங் குளவே'[1] என்பர்: அவ்வாறு உற்றது உணர்த்துவதும் புலவன் திறத்தியலால் அமைவது. எங்கோ நிறமும் உருவமும் பற்றி எழுந்த உவமை, எங்கெல்லாம் சென்றது! தொழிலுவமமாயிற்று; பயன் உவமமாயிற்று. வினை, பயன், மெய், உரு என்ற நான்கும் ஒரே உவமையில் அமைந்துள்ள அழகைக் காணுங்கள்[2] உவமைப் பொருளும், உவமிக்கப்படும் பொருளும் ஒன்றோடொன்று பிணைப்புற்று நிற்கின்றன; ஒன்றை ஒன்று கட்டித் தழுவுகின்றன; ஒன்றை ஒன்று வளம்பெறச் செய்கின்றன; இரண்டும் சேர்ந்து ஒன்றாய், எழில் பேருவமையாய் அமைகின்றன. இவ்வுவமை ஒன்றே இதன் ஆசிரியரைப் பெரும் புலவராக்கத் தக்கது.[3]

நன்று நன்று பூதனார் புலமை! கீரனார்க் கேற்ற பூதனார்; பூதனார்க்கேற்ற கீரனார். ஒருவருக்கொருவர் இளைத்திலர். ஈண்டுக் கீரர் புலமையைப் போன்றே பூதனார் புலமையும் சிறந்தே தோன்றுகின்றது. இத்திற

1. தொல். உவமவியல்—295 2. தொல். உவமவியல்—276

3. நக்கீரரும் திருமுருகாற்றுப்படையை ஓர் உவமையைக் கொண்டு தொடங்குகின்றார். அவ்வுவமையும் வினை, பயன் மெய், உரு எனும் நால்வித நலனும் பொருந்தியது. அங்கு அதன் நலத்தினையும் ஆழத்தினையும் கண்டுகொள்க.

னெலாம் கண்டே பூதனாரையும் நல்பூதனார் எனச் சங்கத்தவர் கொண்டார் போலும்! நப்பூதனார் பௌராணிகர்; இறைவன் இயற்றிய செயல்களைச் சொல்லி மக்கள் மனத்தைப் பற்றுபவர். நக்கீரரோ, இங்கு அறிவியல் துறையில் நின்று இயற்கை அழகுகளை, நிகழ்ச்சிகளை உணர்த்துகின்றார். நப்பூதனாரின் உவமை பலருக்கும் எளிதே விளங்குவது; மகிழ்ச்சி தருவது. கீரர் முதுசொல் அறிவியல் துறை அறிஞர்களுக்கு மகிழ்வளிப்பது.

மழையின் ஓர் இயல்பு மக்களுக்கு வாழ்வைத் தருவது. பயிரை வளர்ப்பது; விளைவைத் தருவது. இந்த இயல்பில் பூதனார் ஈடுபட்டவர். இந்த இயல்பு தோன்றப் பாட்டைத் தொடங்குகின்றார்; காக்கும் கடவுளாகிய திருமாலுக்கு மேகங்களை ஒப்பிட்டுப் பாட்டைத் தொடங்குகின்றார். நக்கீரரோ இதற்கு முற்றிலும் மாறாகத் தொடங்குகின்றார். வாழ்வளிப்பது ஒன்றுதான் மழையின் இயல்பா? அது துன்பமும் தரும்; துன்பமே அறியாத வாழ்வு தீமையில் முடியும். துன்பமும் வேண்டற்பாலது. துன்பத்தை மாற்ற அன்பு எழும்: அன்பு எழுந்து ஆருயிரை உயர்த்தும். இத்துன்பியல்புணர்த்தும் துன்பியல் புலவர் நக்கீரர்.

கீரர் தம் பாட்டின் தொடக்கத்தில் காட்டும் பொருண்மை தொடக்கத்தோடு நின்றதன்று; பாட்டின் உள்ளெல்லாம் செல்கின்றது; பாட்டிற்கே ஓர் ஒளி தருகின்றது. பூதனார் உவமை பாட்டின் உள்ளே சென்று ஒளி தருதல் இல்லை; தொடக்கத்தை அழகு செய்வதோடு நின்றுவிடுகிறது.

நப்பூதனார் தம் புலமையின் வன்மையைக் காட்டினார். கீரனார் தம் சொல்லில், சொல்லமைப்பில், அச்சொல் தரும் ஒளியில் தம் புலமையைக் காட்டினார். சொற்பொருள் ஒன்றன்றி ஏனைய பற்பல பொருள்களைத் தரும் ஆற்றலும், ஓசையும், ஒளியும் சொற்கள் எவ்வாறு பெறுகின்றன? இச்சொற்களை நக்கீரர் ஆளும் திறன் எவ்வாறு அமைந்துள்ளது என்பதை இனிக் காண்போம்:

3. சொல்லின் திறன்

மக்களைப்போலவே சொற்களும் ஒன்றோடொன்று சேர்ந்து வாழ விரும்புவன; ஒன்றை ஒன்று தழுவுவன; ஒன்றுடன் ஒன்று நட்புக்கொள்வன. இன நலம் மக்களுக்கேயன்றிச் சொற்களுக்கும் ஏமாப்புடைத்து; இன நலம் எல்லாப் புகழும் தரும். இவற்றின் இன நலத்தை அல்லது தொகுதி வாழ்வின் திறனை நக்கீரர் பாக்களில் காணலாம். இப்பாட்டின் முதலிரு அடிகளே இத்திறனையும் காட்டும்.

அவ்விரண்டடிகளை மற்றுமொரு முறை நினைவு கூர்வோம். அவ்வடிகளில் காணும் சொற்களின் பொருள்கள் தொடக்கத்திலே விளக்கப்பட்டன. அச்சொற்களின் திறனும் அங்கு உணர்த்தப்பட்டது. இங்கு அவை ஒன்றோடொன்று தழுவும் அழகை, ஒன்றோடொன்று உறவாடும் தன்மையைக் காணலாம். இங்கு அவற்றுள் சில சொற்களையே எடுத்துக் காண்போம். பொய்யா வானம் எவ்வாறு இன நலத்தால் புகழ் பெற்றது? இது (1) பனிப்பப் பொய்யா வானமாயிற்று; (2) வலை இப் பொய்யா வானமாயிற்று; (3) புதுப் பெயல் பொய்யா வானமாயிற்று; (4) வல

னேர்பு பொழிந்தெனப் பொய்யா வானமாயிற்று. இவ்வானம் வழக்கமாகக் கருதுகின்ற ஒரே தன்மையையுடைய பொய்யாமையையுடையதன்று ; நால் விதப் பொய்யாமையைப் பெற்றது. இப்பொய்யா வானம் என்ற சொற்றொடர் தன் இன நலத்தால் நாற்பெரும்புகழ் படைத்தது. இவற்றின் விரிவெலாம் முன்பே உணர்த்தப்பட்டன. இவ்வாறே புதுப்பெயலுக்கும் நான்கு விதப் புதுமைகள் சேர்கின்றன: (1)வலனேர்பு பனிக்கும் புதுமை; (2) வலனேர்பு வளை இய புதுமை; (3) வலனேர்பு பொழிகின்ற புதுமை; (4) வலனேர்பு பொய்யாப் புதுமை.

எவ்வாறு எவ்வாறு சொற்கள் ஒன்றோடொன்று சேருமாறு, சேர்ந்து பொருள் தருமாறு இங்கு அமைந்துள்ளன காணுங்கள்! இச்சொற்களோ சிறியன. அவை, அமைந்த இடத்திற்கேற்ப, அவற்றின் இணைப்பிற்கேற்ப அளவற்ற பொருள்களை உணர்த்துகின்றன; ஆழ்ந்த எண்ணங்களை எழுப்புகின்றன; ஓசையைத் தருகின்றன ; ஒளியைப் பெருக்குகின்றன. இவ்வாறு சொற்களை ஆளும் திறன் ஒரு சிலருக்கே வாய்ப்பது. சொற்கள் ஒன்றை ஒன்று சேருமாறும், அச்சேர்க்கை பற்பல பொருளைத் தருமாறும் அமைப்பதில் கீரர் வல்லுநர். இவ்விதச் சேர்க்கையால், நட்பால், உறவால், இனநலத்தால், பொருள் சிறவாத சொற்கள் எவையேனும் இவ்வடிகளில் உளவோ என்று சொற்களை இணைத்து இணைத்து அவை தரும் பொருள்களைக் கருதிக் கருதிக் காணுங்கள்.

சொற்களெல்லாம் இயல்பாக மக்களால்சிறையில் அடைக்கப்பட்டவை என்பர். இன்ன சொல்லுக்கு இன்ன பொருள் என்று வரையறுத்து மக்கள் அறுதி

யிட்டனர் ; அறுதியிட்டதோடு நின்றிலர் ; அவற்றை ஆணியறைந்து அங்கு இங்கு அசைய விடாதபடி அகராதியிற் பதித்தனர். அந்தோ! என் செய்வன சொற்கள்! அவற்றை விடுவிக்கப் பாவலர் தோன்றினர் ; விடுவித்து வேண்டியவாறெல்லாம் விளையாட விடுவர் ; முன் காணாத பொருள்களைக் காட்டவும் செய்வர். கீரரும் ஒரு விடுதலையாளர்.

கீரர் சொற்களுக்கு விடுதலையளித்ததோடு அமைந்திலர்; அவற்றைச் சோம்பித்திரிய விடார்; அவற்றிற்கு ஓய்வு சிறிதும் கொடார். அவற்றை வேலை வாங்குவதில் கீரர் மிக வல்லுநர். அவற்றை எங்கெங்கோ ஓடச்செய்வார் ; எந்த வேலைகளையும் அவற்றிற்கு அளிப்பார். அவற்றைச் சேர்த்துச் சேர்த்து இவர் வேலை வாங்குவது பெரிதன்று; ஒரு சொல்லின் தலையிலே அளவற்ற சுமைகளைச் சுமத்தி அவற்றை எல்லாம் தூக்கிச் செல்லுமாறு பணிப்பர். அந்தோ! எப்பாடு படுவனவோ அச்சொற்கள்!

"பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டஞ்
சால மிகுத்துப் பெயின்"

என்ற குறளின் உண்மையை இவர் அறியார் போலும்! சொற்களின் தலையில், அச்சொற்களைக் கொண்ட பாக்களின் தலையில் அளவற்ற, பொருட் சுமைகளை ஏற்றினர். ஆதலின், இவர் சகடு அச்சொடிந்து கிடக்கின்றது. இப்போது அஃது ஓடவில்லை. அதற்கு அச்சிட வல்ல கைவல் கம்மியன் என்றேனும் தோன்றுமோ!

சிறு சிறு சொற்கள் இவரிடத்தில் அகப்பட்டுப் படும் பாட்டை நாம் கண்ணுற் காண்போம். புதுப்

பெயல் பொழிந்தது எனத் தொடக்கத்தில் கண்டோம். பொல்லாத வானம், அப்பொய்யா வானம்! அஃது ஆர்கலியை எழுப்பிற்று; கோவலரை ஓட்டிற்று; பறவையை வீழ்த்திற்று; மக்களை வருத்திற்று; மாவைத் துன்புறச் செய்தது. இவ்வாறு துன்புறுத்திய வானம், இதோ துவலை கற்கின்றது! பாட்டின் இருபதாவது அடியைப் பார்க்க.

'அகலிரு விசும்பில் துவலை கற்ப'

துவலை தூறவில்லை; துவலை கற்கின்றது. கற்கின்றதென்றால் என்ன? கீரர் இவ்வானத்தைப் பள்ளிக்கு அனுப்பினர் போலும்! இது பள்ளியில் பாடம் கற்கின்றது. அடங்காச் சிறுவர்களைப் பள்ளியிலிட்டு அடக்குவது வழக்கம். இது பழைய முறை. இக்கால முறைப்படி, பள்ளிக்கு அனுப்புவது அடங்காமையை மிகுதிப்படுத்த. கீரரோ பழையவர். அப்பழைய முறையைக் கையாளுகின்றார். இவருக்குப் பழமை என்ற ஒன்று மட்டும் உரிமையன்று. இவர் கணக்காயனார் மகனார் அல்லரோ? சிறுவர்களுக்குப் பாடங் கற்பிப்பது இவர் தந்தையார் தொழில். இவர் தந்தையார் சிறுவர்களைக் குட்டி வருத்தியும், கோதண்டத்திட்டும், இரு என இருத்தியும், படி எனப் படிப்பித்தும், அடக்கம் கற்பித்ததை இவர் கண்டு உள்ளங்கொண்டார் போலும். இவரை அறிந்தோ அறியாமலோ இவர் மனத்தில் பதிந்திருந்த எண்ணம், இவர் பாட்டுள்ளும் பதிந்தது. அடங்காத வானத்தை அடக்கப் பள்ளிக்கு அனுப்பினர். வானம் பள்ளிக்குச் சென்றது; அடக்கம் கற்கின்றது; தன் கடமையைக் கற்கின்றது; கற்று அறிவு பெறுகின்றது. கல்வி கற்ற மழை, புதுமழை பெய்கின்றது. முதலில்

புதுப் பெயலுக்கு வேறு வேறு புதுமை கண்டோம். அப்புதுமை இங்குந் தொடர்ந்து செல்கின்றது.

இது புது வானம்; கல்வி கற்ற வானம். இப் புதுமை ஒளி, தொடக்கத்தோடு மாத்திரம் நின்றதன்று; பாட்டின் ஊடெல்லாம் வீசுவதைக் காணுங்கள். இக்கல்வி கற்ற வானம் என்ன செய்கின்றது காண்போம். கற்றதனாலாய பயனென் கொல் இவ் வானம் தன் தீத்தொழில் நீங்காதெனின்? இவ் வானம் தன் தீத்தொழிலிலிருந்தும் நீங்கிற்று. இதன் பின் இஃது எவரையும் வருத்துவதில்லை; நன்மையே தருகின்றது; 'நல்வாடை' எனப் பெயரும் பெற்றது; இதன் விரிவைப் பொருள் நலப் பகுதியில் காண்க.

'பனிப்ப' என்று துன்பத்தைக் காட்டித் தொடங்கிய வாடையைக் 'கற்ப' என்று இடைமறித்துக் கூறி அவ்வாடையை நல்வாடையாக மாற்றும் நலத்தைக் காண்க.

இத்துவலையைக் கற்பது எது? அதன் தன்மை என்ன? கீரர், கற்போன் தன்மையை எவ்வாறு கூறுகின்றார்? இவ்வடிக்குமேல் உள்ள அடியைக் காண்போம். "வெண்மழை அகலிரு விசும்பில் துவலை கற்ப" என்று கூறுகின்றார். மழை என்று கூறுவதோடு கீரர் அமைந்தாரிலர்; அதற்கோர் அடைமொழி கொடுத்தும் கூறுகின்றார். வெண்மழை கற்கின்றது. வெண்மழை என்பது என்ன மழை? இது வெண்மையான மேகங்கள் என்று பொருள்படும். மேகங்கள் பெய்து பெய்து உடல் வற்றி வெளுத்துப்போயின. ஆதலின், அம்மழை வெண்மழை யாயிற்று. இது வெளிப்படையான பொருள். இதற்கு வேறு

பொருளும் உண்டு. வெண்மை என்பது அறியாமை யையும் உணர்த்தும். கீரர் மேகங்களுக்குக் கல்வி கற்பிப்பதற்கு முன் அவற்றிற்கு அறியாமை அமைந் துள்ளதை உணர்த்துகின்றார். அறிவிலார்க்கே வேண் டுவது கல்வி. அறிவுடையோர்க்குக் கல்வி எதற்கு?

அறியாமையே ஓர் இயற்கை. இஃது இயல்பாக எல்லாப் பொருள்களிடமும் அமைந்துள்ளது. இதுவே "முது பேரியற்கை" என்பர். அறியாமையை அகற்றுவது கல்வி. இயற்கையின் அறியாமையை உணர்த்தி, அவ்வியற்கை பண்புற்று, அதன்பின் கல்வி கற்றுப் பயன்படும் இயல்பை,-பண்பட்டுப் பண்பட்டுப் பயன்படும் இயல்பை - உணர்த்துகின்றார். இஃது ஒரு பெரும் தத்துவக் கருத்து என்பர்.

படைப்பின் தொடக்க காலத்தே தீ, நீர் வளி முதலிய இயற்கை முதற்பொருள்கள், மிக மிக ஆற்றல் வாய்ந்தனவாய் இருந்தன. இவை மக்களுக் குப் பயன்படா நிலைமையில் அடக்குவாரற்று ஆற்றல் மிகுந்து திரிந்தன என்பர். நாம் வாழும் உலகம் தீயேயாகி நின்ற காலமும் உண்டு; நீரிலே மூழ்கிக் கிடந்த காலமுமுண்டு. இம்முதற்பெரும்பொருள்கள் பழகிப் பழகிப் பயின்று பயின்று, கல்வி கற்றும், நல் நடை ஏற்றும் உயிர்களுடன் நட்புக்கொண்டன; உயிர் வாழ இடமும் தந்தன. ஆயினும், இடை இடையே முன்னை அறியாமையே இவற்றிற்கு மிகுத லும் உண்டு. இவ்வறியாமை மேலிட்டு முதலில் வானம் பொழிந்தது; பின் கல்வி கற்றது. அம்மம்ம! எத்தனை எத்தனைக் கருத்துக்களை ஒரு சிறு சொல் தாக்கி நிற்கின்றது. அதைத் தாக்கத் தாக்க அதன்

திறனே மிகுகின்றது. அதை உரைக்க உரைக்க அதன் ஒளியே மிகுகின்றது.

இவற்றை யெல்லாம் கருதி - தம் சிறு சொல் இவ்வாறு அளவற்ற பொருளை உணர்த்த வேண்டும் என்று எண்ணி - கீரர் இச்சொல்லை அமைத்திருப் பாரா? இன்னும் சில அடிகள் மேலே சென்று அவர் பாட்டையே பார்ப்போம். 64 ஆம் அடியைக் காண்க. "கல்லென் துவலை தூவலின்" என்று அங்குக் கூறு கின்றார். துவலை தூவல் இயற்கையான தொழில். "இதற்கு வேறே பொருள் தருமாறு மேலே அமைத் திருக்கின்றேன்; அங்கு மாறுபடக் கூறியுள்ளேன். இம் மாறுபாட்டைக் கொண்டு 'கற்ப' என்று கூறிய தற்கு யான் கருதிய பொருளைக் கருதிக் கருதிக் கண்டு கொள்ளுங்கள்" என்று உணர்த்தவோ இவ்வாறு மாறு படப் பாடுகின்றார்? இயற்கையாக ஒரு பொருளை உணர்த்தும் சொல் இருந்தும், அப் பொருளை, இவர் அறிந்திருந்தும், அச் சொல்லை இவரே இயற்கையான பொருளில் கையாண்டிருந்தும் அதை மாற்றி, 'கற்ப' என்று கூறியது வாளா கூறியதோ? அறியாமையை மழைக்குச் சேர்த்ததும் அறியாமல் சேர்த்ததோ? இவை யெல்லாம் கருதாது செய்தனவோ? அல்லது கருத்திலார் செயலோ? கருதுக:

இங்குக் கூறிய தத்துவக் கருத்துக்கள் இக்காலக் கருத்துக்களல்லவா? இவற்றையெல்லாம் தமிழர்கள் முன்பே உணர்ந்திருப்பார்களா? உணர்ந்திருப்பார் களேயானல், அவர்களின் அறிவு வியக்கத்தக்கது. பற்பல நூற்றாண்டுகளுக்கு முன்பே பற்பல மக்கள் தொகுதிகள் விலங்கொப்ப, மாக்களாய், நாடோடி

களாய் உலகில் திரிந்த காலத்தில், ஓரறிவுயிர், ஈரறிவுயிர் எனப் புல் பூண்டுகள் முதல் உயிர் பெற்றன எனக் கண்டு, உணர்ச்சி வாயிலாய், அறிவு பெறுதற்கேற்பப் பாகுபாடு செய்த தமிழ்ப் பெருமக்கள் இயற்கையின் அறியாமையை உணர்த்தியதும் ஒரு பெரு வியப்பு ஆகுமோ!

கீரரின் சொல்லும், அது தரும் ஒளியும் நம்மை மயக்கின; புற உரையில் இழுத்துச் சென்றன. நாம் சென்ற வழியை மீண்டும் சேர்வோமாக! 'கற்ப' என்ற ஒரு சொல்லைக் கீரர் கற்பனைக் கடலாக்கும் திறனைக் காண்க. ஒரு சிறு குறளைத் துளைத்து அதனுள் ஏழு கடலை வள்ளுவப் பெருந்தகை புகட்டினார் என்பர். இதற்குமேல் சென்றது கீரர் செயல். இவர் ஒரு சொல்லையே துளைத்து அதனுள் ஏழுகடலைப் புகட்டி விட்டனர், காண்க. ஒரு சொல்லை எடுத்து அதற்குச் சுடரேற்றுகின்றார். அது சுடர்பெற்று மின்னாற்றலைப் பெறுகின்றது; மின் என, மின் மின் என மின்னுகின்றது. அம்மின்னின் ஆற்றல், ஆற்றல் சேர் ஒளி, வானெலாம் வீசுகின்றது; இப் பாட்டின் ஊடெலாம் பரவுகின்றது; பாட்டுள் சென்று பாட்டெலாம் இயக்குகின்றது. என்னே அதன் ஒண்மை! இந்த ஒண்மையும் அதற்கொரு பாநலம். ஒளிதரு சொற்களே பாட்டிற்கு உயிர்தரு சொற்கள் என்பர்

இவர்தம் சிறு சொற்களின் பெருமையைக் காண்க. ஒரு சொல், ஓர் அடைமொழி, ஒரு சொற்றொடர், அதில் அதில் எத்தனை எத்தனை பொருள்கள்! என்னே அதன் ஒண்மை! தீட்டியும் தீட்டியும் கூர்மை தேர்ந்து அமைத்த சொற்களோ இவை? அல்லால் இயல்பே அமைந்தவை தாமோ! சிறு சிறு

சொற்கள் குறுமுனி போன்றன; தோற்றத்திற் சிறியன; ஆற்றல் பெரிதுடையன. இச் சொற்கள் நுண்மையொடு சுருக்கமும், ஒளியொடு தெளிவும் எவ்வாறு பெற்றனவோ! பாவலன் மனத்தில் பலநாள் கிடந்து அழுத்தம் பெற்றனவோ! முற்றி முற்றி நரைமுது சொற்களாய் நலம் பல செறிந்தனவோ!

நிறைமொழி மாந்தர் ஆணையில் கிளந்த மறைமொழியாமோ இவை? சீரிற் சிறந்த நிறைமொழி மாந்தரைக் காண்பது அரிது. ஆரியம் சிறந்தது என்றும், தமிழ் தாழ்ந்தது என்றும் இறுமாந்த ஒருவனைத் தம் சொல்கொடு கொன்றார்[1] சீரர் என்பர்; பிறகு தம் சொல் கொண்டே எழுப்பினர் என்றும் கூறுவர்.[2] இவர் சொல்லின் ஆற்றலை உணர்த்த எழுந்த கதையோ இது? அல்லால், உண்மை நிகழ்ச்சியேயாமோ? உண்மை அறிவதற்கில்லை. இஃது யாதாயினும் ஆகுக; நாம் இங்குக் காண்பது என்ன? மறை மொழி ஒன்று ஓதப்படுகின்றது. மறைந்த பொருள்களையுடைய ஒரு சொல் - பொருள்களை மறைத்து அமைந்த ஒரு சொல்-ஓதப்படுகின்றது. பற்பல எண்ணங்கள், பற்பல கருத்துக்கள் எழுகின்றன; எழுந்து குதிக்கின்றன. இவை தாம் ஆடுவதோடு நிற்பன அல்ல; படிப்போர் மனத்தையும் ஆடச் செய்

1. "ஆரியம் நன்று தமிழ்தீதென உரைத்த
காரியத்தாற் காலக்கோட் பட்டானைச்—சீரிய
அந்தண் பொதியில் அகத்தியனார் ஆணையால்
செந்தமிழே தீர்க்கசுவா கா"

2. "முரணில் பொதியில் முதற்புத்தேள் வாழி!
பரண கபிலரும் வாழி!—அரணியல்
ஆனந்த வேட்கையான் வேட்கோக் குயக்கோடன்
ஆனந்தம் சேர்க்கசுவா கா."

கின்றன. செய்யுளுள் மந்திரச் செயல்கள் என்பன இவையேயோ? கருதுக! கருதுக!

இச் சொற்களின் ஆழந்தான் என்னே! ஒவ்வொரு சொல்லுள்ளும் இவ்வாறு ஆழ்ந்து ஆழ்ந்து சென்றால் ஏனைய சொற்களின் ஆழத்தை எப்படிக் காண்பது? இச் சொற்கள் தரும் ஒளியே கண்ணைப் பறிக்கின்றது; கருத்தைப் பறிக்கின்றது. கண்ணுக்கு எட்டாத தூரத்திலும் அவ்வொளி படர்கின்றது. இவற்றை யெல்லாம் எவ்வாறு ஊன்றிக் காண்பது? இவையல்லால் ஏனை நலன்களை எப்போதுதான் காண்பது? இச்சொற்களின் அழுத்தந்தான் என்னே! அணுவை உடைப்பதுகூட எளிதாயிற்று. அணு உருக்கொண்ட இவர் சொற்களை உடைப்பது அரிதாகின்றது. இவற்றையெல்லாம் கருதிக் கருதியே போலும் அடியார்க்கு நல்லாரும்,

'எழுத்தின் திறனறிந்தோ இன்சொற் பொருளின்
அழுத்தந் தனிலொன் றறிந்தோ - முழுத்தும்
பழுதற்ற முத்தமிழின் பாடற் குரையான்
எழுதத் துணிவதே தான்'

என்று கூறினார்! பழுத்த அறிவின் பழந்தமிழர்களே இவ்வாறு அழுங்கினபோது, தமிழின் சொற்றிறனை, அதிலும் கீரரின் சொற்றிறனை, நாம் முற்றிலும் காணல் இயலுமோ! நுனிப்புல் மேய்தலே வல்லோம். ஈண்டு மேய்ந்தது போதும். வேறு புல்தரை தேடிச் செல்வோமாக

4. பாட்டின் போக்கு

பாட்டைத் தொடர்ந்து மேலே செல்வோம். மழை பொழிந்தது; வெள்ளம் எழுந்தது. அஃது

எவ்வித வெள்ளம்? 'ஆர்கலி'; ஒலியோடும் ஆரவாரத்தோடும் ஓடுகின்ற வெள்ளம். சிறு பெயல் பெய்ததால், பல இடங்களில் பெய்த மழைநீர் எல்லாம் சிறிது சிறிதாக ஒன்று சேரும்; ஒன்று சேர்ந்த பின் வெள்ளம் எழும். இவ்வாறு ஒன்று சேர, சேர்ந்து வெள்ளம் எழ, பெயலின் அளவுக்கு ஏற்றவாறு காலம் செல்லும். இப்போது பொழிந்ததோ புதுப் பெயல். இப்பெயலின் தன்மையெல்லாம் முன்பே கண்டோம். பெய்கின்ற போதே வெள்ளம் தொடங்கிற்று. 'பொழிந்தென' என்று பாட்டின் இரண்டாவது அடியை முடித்ததும், மூன்றாவது அடியை 'ஆர்கலி' என்று கீரர் மிக விரைவாகத் தொடங்குகின்றார்.

வெள்ளம் தொடங்கியதைத்தான் கண்டோம்; வெள்ளப் பெருக்கத்தை, அதன் அழகை, அதன் ஓட்டத்தை நாம் காண்கிலோம். இவ்வெள்ளத்தை நாம் சற்றேனும் நின்று காணக் கீரர் விடுகின்றாரிலர். இதை நம் கண்ணிலும் காட்டவில்லை 'ஆர்கலி' என்ற ஒரு சிறு தொடரால் வெள்ளத்தை உணர்த்திப் படிப்போரைப் பிடர் பிடித்துத் தள்ளிச் செல்கின்றார்; மிக மிக விரைவில் கோவலரிடம் சேர்க்கின்றார். புதுப் பெயலுக்கு அமைத்த அடிப்படை எவ்வளவு! அடுக்கு அடுக்காக அடிப்படை எடுத்தார். இந்த அடிப்படையைக் கொண்டு, ஏதோ பெரிய வெள்ளம் ஒன்றைப் பாடப்போகிறார் என்று படிப்போர் எதிர்பார்த்தல் கூடும். அவர் எதிர்பார்ப்பதற்கு மாறாக, வெள்ளத்தைக் குறித்து ஒரு சிறு குறிப்பே காணப்படுகின்றது. அடிப்படைக்கு ஏற்பச் சிறிதேனும், கட்டடம் எழ வேண்டாவா? கோவலருக்கு நான்கு அடிகள் எழுதிய

வர், வெள்ளத்திற்கு இரண்டு அடிகளாவது எழுதல் கூடாதா? இஃதும் ஒரு புதுமுறை போலும்! புதுப் பெயலின் புதுமை இங்கும் தொடர்கின்றதா?

இவ்வாறு பாட்டை நடாத்திச் செல்லுதல் புது முறையாகத் தோன்றுவது இயல்பே. கீரர் காலத்து அல்லது சங்க காலத்து முறை வேறு; அதற்குப் பிற் காலத்தவர் முறை வேறு. பிற்காலப் புலவரிடம், வெள்ளமோ, அல்லது வெள்ளத்தைக் காட்டும் அருவியோ, ஆருே அல்லது அதன் தொடர்புடைய ஏதேனும் ஒன்ருே அகப்பட்டால் போதும்! பாமழை தொடங்கிவிடும். புதுப்பெயலினும் பெரும்பெயலாக அப்பாமழை முடியும். ஆறு இயல்பாகப் பாட்டின் பொருளாக அமையாவிடினும், இக் காலத்தவர் 'ஆற்றுப்படலம்' என ஒன்று வகுத்துக்கொண்டு ஆறு களைப் பாடுவர், அப்பாடல்களை ஏற்ற ஆறுகளைத் தாங்கள் நேரே கண்டிலராயினும், கற்பனை கொண்டு கவி கவியாகப் பாடிக் குவிப்பர். இக்காலப் பாக்களின் போக்கு ஒருவிதம்; சங்க காலப் பாக்களின் போக்கு மற்ருெரு விதம். கீரர் பாக்களின் தன்மையைக் காண, அவற்றின் திறனைத் தெரிய இவ்விரு காலத்துப் பாக் களின் தன்மையை அறிதல் வேண்டும்; இவ்விரு வகைப் போக்குகளில் காணும் ஒற்றுமை வேற்றுமை களை உணர்தல் வேண்டும். இங்கு நாம் காணப்புகுந்த வெள்ளத்தைக் குறித்துப் பிற்காலப் பாக்களின் போக்கு எவ்வாறு இருந்தது என்பதைக் காண்போம்:

பிற்காலப் பாட்டின் போக்கு

சங்க காலத்தை அடுத்துத் தோன்றியவர் திருத்தக்க தேவர். வெள்ளத்தைக் குறித்துத் திருத்தக்க தேவர்,

"வள்ளல் கைத்தல மாந்தரின் மால்வரைக்
கொள்ளை கொண்ட கொழுநிதிக் குப்பையை
உள்ளம் இல்லவர்க்கு ஊர்தொறும் உய்த்துராய்
வெள்ளம் நாடு மடுத்து விரைந்ததே"[1]

என்று பாடுகின்றார். 'வெள்ளம் பெரிய மலைகளி லிருந்து, கொள்ளை கொண்ட கொழுத்த நிதித்திரளை ஊக்கம் இன்றி மடிந்திருந்தவர்களுக்கு வள்ளல்களைப் போலக் கொடுத்தது' என்கிறார். தேவருக்குப் பின் தோன்றிய **கம்பர்** இந்த உவமையை - வள்ளலுக்கு ஒப்புமை கண்டதை - எடுத்து ஆண்டுகொண்டனர். ஆனால் இவர் கருத்தை அப்படியே எடுத்து ஆண்டா ரிலர்; அதைத் தம் மனப்பான்மைக்கு ஏற்பத் திருத்தித் தம் பாட்டில் அமைத்துக் கொண்டனர். திருத்தக்க தேவர் கூறியவை எல்லாம் பொருத்த முள்ளனவாகக் கம்பருக்குத் தோன்றவில்லை. இவர் திருத்தத் தக்க தேவர் என்று கொண்டனர் போலும்! கொள்ளை கொள்பவர், கொள்ளைகொண்ட பொருளை வழங்கு பவர், திருடர். அவருக்கு வள்ளல் என்னும்பெயர் எப்படிப்பொருந்தும்! திருடிக்கொடுப்பவரை வள்ளல் என்பது தமிழ்மரபன்றே என்று கம்பர் எண்ணினார் போலும்! இவ்வள்ளல் தன்மையைக் கொள்ளைகொள் வெள்ளத்துக்கு அமைத்தது தவறு, தவறு. இவ் வள்ளன்மை வெள்ளத்தைவிட மழைக்கே அல்லது மேகத்துக்கே தகும் என்று கொண்டார்; மேகங்களை வள்ளலுக்கு ஒப்பிட்டு உவமை காட்டுகின்றார்.

[2]"உள்ளி உள்ளவெல் லாம்உவந் தீயும்அவ்
வள்ளி யோரின் வழங்கின மேகமே"

1. சிந்தாமணி, நாம. 7.
2. பாலகாண்டம் - ஆற்றுப்படலம், 5.

என்று மாற்றிப் பாடுகின்றார். வள்ளல்களைப் போல மேகங்கள் வழங்கின. இங்கு வள்ளல்கள் கொள்ளை கொண்ட வள்ளல்கள் அல்லர்; நன்றாக நினைத்துப் பார்த்து உள்ளவற்றையெல்லாம் மன வருத்தமின்றிக் கொடுக்கின்ற வள்ளல்கள். இவ்வள்ளல்களைப்போல வழங்கின மேகங்கள் என்று திருத்தி அமைத்துக் கொண்டனர். 'உள்ளி' என்றால், எதை நினைத்து? இங்கும் கீரரின் சொற்களைப் போலக் கம்பரின் சொல்லும் விரிக்க விரிக்கப் பொருள் பெருகும். ஆனால், அப்பொருள் பெருக்கம் இங்கு வேண்டுவ தன்று. திருத்தக்கதேவர் உவமையை மேகங்களுக்குப் பொருத்திவிட்டு, வெள்ளத்திற்குக் கம்பர் வேறு உவமை கற்பித்தார்.

[1]"மானம் நேர்ந்தறம் நோக்கி மனுநெறி
போன தண்குடை வேந்தன் புகழென
ஞான முன்னிய நான்மறை யாளர்கைத்
தானம் என்னத் தழைத்தது நீத்தமே."

வேந்தன் புகழைப் போல, நான்மறையாளர்க்குக் கொடுத்த தானத்தைப்போலத் தழைத்ததாம் நீத்தம் அல்லது வெள்ளம். இந்த ஓர் உவமையோடு விட்டா ரிலர்;

[2]"கல்லிடைப் பிறந்து போந்து
கடலிடைக் கலந்த நீத்தம்
எல்லையில் மறைக ளாலும்
இயம்பரும் பொருளீ தென்னத்
தொல்லையில் ஒன்றே யாகித்
துறைதொறும் பரந்த சூழ்ச்சி
பல்பெருஞ் சமயஞ் சொல்லும்
பொருளும்போல் பரந்த தன்றே"

1. பாலகாண்டம் - ஆற்றுப்படலம், 4.
2. பாலகா. ஆற்றுப்படலம், 19.

என்றும் உவமை கூறுவர். 'இறைவர் ஒருவரே. அவரைப் பற்பல சமயத்தவர், அவரவர் அறிவுக் கேற்பப் பற்பல பெயரிட்டு வழங்குவர். அதேபோன்று, வெள்ள நீர் ஒன்றேயாயினும், ஏரி, குளம், வாய்க்கால் முதலியவற்றில் அது செல்லும்போது, அந்தந்தப் பெயரோடு, அவ்வவ்விடங்களில் பரவிச் சென்றது' என்று அழகுபட, தம் அறிவின் ஆற்றல் தோன்ற, அறிவாளிகளுக்கு விருந்தாகுமாறு உவமை காட்டினர். இவ்வளவு உவமைதானா! 'வெள்ளம் விலையின் மாதரைப் போன்றது; வணிக மாக்களைப் போன்றது; வானவில்லை நிகர்ந்தது; தேனுகர் மாந்தரை மானும்; புணரிமேற் பொரப் போவது போன்றது; சேனையை ஒத்தது; வினை எனச் சென்றது' என்றெல்லாம் உவமை காட்டினர். அம்ம! எத்தனை எத்தனை உவமை! எவ்வளவு எவ்வளவு அறிவு! இவர் புலமையே ஓர் உவமைக் கடல். இவர் அறிவிற்கும், அறிவு தந்த உவமைக்கும் ஓர் அளவேயில்லை.

வெள்ளத்தை மற்றப் புலவர்களும் மறந்தேனும் விட்டுவிடுவார்களா? 'உள் நெகிழ் கருணையின் ஒழுக்கம் போன்றது' என்று ஆழ்ந்த பொருளொடு உள்ளம் நெகிழ்ந்து உரைப்பார் **சேக்கிழார்** பெருமான். அவர் கூறுவது:—

[1]"வண்ணம்நீள் வரைதர வந்த மேன்மையால்
எண்ணில்பேர் அறங்களும் வளர்க்கும் ஈகையால்
அண்ணல்பா கத்தையா ளுடைய நாயகி
உள்நெகிழ் கருணையின் ஒழுக்கம் போன்றது."

உவமை காண்பதில் இவரும் கம்பருக்கு இளைத் தவரல்லர். வெள்ளம் மலர்களைத் தூக்கிச் செல்லும்,

1. பெரியபுராணம், திருநாட்டுச் சிறப்பு, 6.

சிவாலயத்திற்குச் செல்லும், இறைஞ்சும்; ஆதலின், அன்பரைப் போன்றது என்றும் கூறுவர்.

வெள்ளப் பெருக்கை நான் மறையாளர் கைத் தானத்துக்கு ஒப்பிட்டுரைத்த கம்பர்தம் கற்பனையைக் கண்டார், கம்பருக்குப் பின் தோன்றிய **வீரகவிராயர்.** திருத்தக்கதேவர்தம் உவமையைத் தேர்ந்தார். இவர்கள் கூறியவை அவருக்குப் பொருத்தமாக தோன்றவில்லை. தானம் என்ற கற்பனையை அவர் வளம்படுத்த முயன்றார்; திருத்தியும் அமைத்துக் கொண்டார்.

> [1]"கள்ளம், கொலை, கள், புலை, காமம்
> என்றைந்தும் அற்றார்க்கு
> உள்ளம் தெளிந்தோர் தரும்உத்தம
> தானம் என்னப்
> பள்ளம் திடர்மால் வரைகானகப்
> பக்கம் எங்கும்
> வெள்ளம் பெருகிப் பரந்தோடி
> விரைந்த தன்றே."

என்பது அவர் பாட்டு. கம்பர் கூறியபடி நான்மறை யாளர் கைத்தானம் ஒன்றே பெருகிப் பெருகிப் பலனைத் தருவதன்று. உத்தம தானம் ஒன்றுதான் பெரும்பயனைத் தருவது. உத்தம தானம் என்பது எது? தானத்தைக் கொடுப்பவன் மட்டுமன்றித் தானத்தை வாங்குபவனும் உத்தமனாய் இருத்தல் வேண்டும். அப்போதுதான் அத்தானம் உத்தமதான மாகக் கருதப்படும். அப்போதுதான் அது பெரும் பயனைத் தரும். ஆதலால், கம்பர் சொன்ன உவமை பொருத்த முள்ளதன்று. அதைத் திருத்தி உத்தம

1. அரிசந்திர புராணம், நாட்டுச்சிறப்பு, 6.

தானம் என்று வீரகவிராயர் அமைத்துக் கொண்டார்; கம்பர் திருத்தக்கதேவரைத் திருத்திஞரல்லரோ? கம்பரைத் திருத்த ஒரு வம்பரும் தோன்றிஞர். 'உள்ளி உள்ளவெல்லாம் உவந்தியும்' என்று கம்பர் கூறியதில் கொடுப்பவன் 'உத்தம' இயல்பு அமைந்து கிடக்கின்றது. அதை ஒருவாறு தழுவி உள்ளம் தெளிந்தோர் தரும் உத்தமதானம் என்று மாற்றிக் கொண்டார். ஆஞல், தானம் வாங்குவோரைப் பற்றிக் கம்பர் கூறியது தகுதி அற்றதாய் இவருக்குத் தோன்றிற்று. 'ஞானம் முன்னிய நான்மறையாளர் கைத்தானம்' என்று கம்பர் கூறியது எவ்வாறு உத்தம தானமாகும்? ஞான முன்னிய நான்மறையாளர் அல்லால் தானம் பெறக்கூடியவர் வேறு எவருமிலரா? ஞானம் உன்னியும், ஞானமே அறியாத நான்மறையாளர் பலர் எத்தனை எத்தனைத் தீங்கு செய்கின்றனர்? அவர் யாவரும் உத்தமர் ஆவரா? அவர்களில் கள்ளமுடையவர் பலர்; நயவஞ்சகர் பலர்; காமக் களியாட்டயர்வார் பலர். ஆதலின், கம்பர் கூறியது தவறு, பெருந்தவறு என்று வீரகவிராயர் கருதிஞர் போலும்! அவர் உவமையில் இந்தப் பகுதியை மாற்றிக் கள்ளம், கொலை, கள், புலை, காமம் என்று ஐந்தும் அற்ருர்க்குத் தரும் உத்தம தானம் என்று தம் பாட்டில் அமைத்துக் கொண்டார். நான்மறையாளர் மாத்திரம் உத்தமர் அல்லர். எத்தொழிலாளர் ஆயினும், எந்த வகுப்பினராயினும், கள்ளம், கொலை, கள், புலை, காமம் என்ற ஐந்தும் அற்றவர் உத்தமர் என்று கொண்டார் வீரகவிராயர்.

நன்று, நன்று, கவி வீர! கம்பரைத் திருத்திய வீரம் நன்று! ஆஞல், கம்பர் பாட்டைப் போன்று

நும் பாட்டுத் திருந்திற்றில்லை! உம் கைக்குட்டு ஏற்பது அன்று கம்பர் புலமை. நீர் திருத்தியதைக் கம்பர் கண்டிருந்தால், உம் உரத்தைத் தகர்த்திருப்பர்; உம் புலமையைக் கலக்கியிருப்பர். கம்பரிடத்தோ உமது கை வரிசை செல்லும்! இக்கவிராயர் பாட்டின் திறத்தைச் சற்று ஆய்ந்து காண்போம் :

வீரகவிராயர் எவ்வளவு முயன்று முயன்று திருத்தியும் - அந்தோ ! - கம்பரின் மிக்கவராகக் கருதப்படுவாரல்லர். இவர் கவிதான் கம்பர் கவியினும் சிறந்ததானதா? சீர்தூக்கிக் காணுங்கள். கம்பர் கருத்துத்தான் கவிராயர்கையில்பட்டது. ஆனால்,அவர்பாட்டின் தன்மை எங்கோ பறந்து போயிற்று. இவர் பாட்டை மறுமுறை படித்துப் பார்ப்போம். முயன்று முயன்று கவிராயர் திருத்தியதாகக் கண்டோமே, அவர் அறிவின் ஆற்றலையாவது இப்பாட்டில் காண்கிறோமா? இல்லை. அறிவு சிறக்கவில்லை. அது புலப்படவுமில்லை. இவர் பாட்டு உப்பிலா உணவுபோல் சுவையற்று அமைகின்றது; உள்ளீடின்றி வற்றி உலர்ந்த சுரை போல மிதக்கின்றது? இதன் பொருள் சிறக்கவில்லை. இதிற் சுவையையும் காணோம். ஏன்? பாட்டின் நலமே இக்காலப் பாக்களை நீங்கிப் பறந்தோடின போலும்! பாநலமில்லாப் பாட்டும் சிறக்குமோ? இவர் பாட்டை உரைநடையாக எழுதிக் காண்போம். "கள்ளம், கொலை, கள், புலை, காமம் என்ற ஐந்தும் அற்றார்க்கு உள்ளம் தெளிந்தோர் தரும் உத்தமதானம் எனப் பள்ளம், திடர், மால்வரை, கானப்பக்கம் எங்கும் வெள்ளம் பெருகிப் பரந்து ஓடி விரைந்தது." பாட்டில் உள்ளபடியே பதம் பிரித்து மட்டும் இங்கு எழுதப்பட்டுள்ளது. இவர் பாட்டோடு இவ்வாறு

எழுதியதை ஒப்பிட்டுக் காண்க. உரைநடைக்கும் இவர் பாட்டிற்கும் ஏதாவது வேற்றுமை உண்டா? இல்லை. ஆனால், அன்றே என்று ஓர்அசையைப் பெற்று இப்பாட்டு முடிகின்றது. இதைத் தவிர, உரைநடைக் கும், இவர் பாட்டுநடைக்கும் யாதொரு வேற்றுமை யும் காணப்படவில்லை; இந்த 'அன்றே' என்ற அசை, இவர் பாட்டைப் 'பாட்டு அன்றே!' என்று காட்டுவது; அல்லால் அதைப் பாட்டாகச் செய்ய வல்லதன்று. மனத்தைப் பற்றும் ஆற்றல் இப்பாட் டில் ஏதேனும் காண்கின்றோமா? இல்லை. உணர்ச்சியை எழுப்பும் ஆற்றல் ஏதாவது காண்கின்றோமா? இல்லை. இப்பாட்டில் உவமை அமைந்திருந்தும், கற்பனை அமைந்திருந்தும், இப்பாட்டு சுவை தரவில்லை. காலம் செல்லச் செல்லப் பாட்டு நலிந்து நலிந்து, அதன் பாத் தன்மையை இழந்து, உரைநடையோடு ஒத்து நடக்குமாறு நேர்ந்தது போலும். இவ்வாறு செல் கின்றது பாட்டின் போக்கு.

இங்குக் குறிப்பிடத்தக்கது மற்றொன்றுளது; தானத்தைப்பற்றி இரு புலவர்கள் எது சிறந்தது என்று தடுமாறுகிறார்கள். வள்ளுவப் பெருந்தகை யார் இத்தடுமாற்றத்தை எவ்வாறு தீர்ப்பார் என்று காண்போம்:

"வறியார்க்கொன் றீவதே யீகைமற் றெல்லாம்
குறிஎதிர்ப்பை நீர துடைத்து."

இல்லாதவர்க்கு ஈவதுதான் ஈகை; மற்றெல்லாம் ஏதோ ஒரு குறிப்பை எண்ணியே, ஒரு பயனைக் கருதியே, ஏதோ கைம்மாற்றை எதிர்பார்த்தே செய்யப்படும் என்றார் வள்ளுவர். எவ்வளவு பரந்த

நோக்கம்! எவ்வளவு உயர்ந்த கொள்கை வள்ளுவர் தம் கொள்கை! இக்கால உலகும் இதனை ஏற்றுக் கொள்ளும். திருவள்ளுவரைப் பல இடங்களில் பின்பற்றிய கம்பர், வறுமையுற்ற ஏழை மக்களுக்குக் கொடுக்கும் தானத்தையன்றோ புகழ வேண்டும்? வள்ளுவர் கொள்கையில் கம்பருக்கு உடன்பாடில்லை போலும்! வறியவருக்குக் கொடுப்பதே சிறந்த ஈகை என்பது தவறு என்று கொண்டார் போலும்! திருத்தக்க தேவர், தம் பாட்டில் கூறிய வாறு 'உள்ளம் இன்றி மடிந்திருந்தவர்க்குக் கொடுப் பதும் சிறந்த ஈகையாகாது' என்றும் கருதினார் போலும்! 'வறியவர் வருந்திப் பொருள் தேடினால் அவருக்குப் பொருளின் அருமை தெரியும். சோம்பி யிருப்பவருக்கு-உழைக்க உள்ளமின்றியிருப்பவருக்கு-வறியோருக்குப் - பிறர் கொடுக்கத் திடீரென்று பொருள் கிடைத்துவிட்டால், அவர் தலைகால் தெரி யாது நடப்பர்; தீத்தொழிலில் சேர்வர்; தீமையே புரிவர். உழைத்துப் பெருத பொருள் ஒருகோடித் தீமை சேர்க்கும். உழப்பிலாதார்க்குக் கொடுக்கின்ற தானம் பெருகிய பயனைத் தாராமல் இருப்பதோடு நிற்பதன்று; அவர் தமைத் தீமையில் உய்த்துவிடும்' என இவ்வாறெல்லாம் எண்ணினார் போலும்! ஆதலின், வள்ளுவர் கருத்துக்களை எல்லாம் கம்பர் மாற்றினார்; நான்மறையாளர் கைத்தானம் என்னத் தழைத்தது நீத்தமே என்று அமைத்துக்கொண்டார். வள்ளுவர் கொள்கையை, திருத்தக்க தேவர் உவ மையைக் கம்பர் ஏற்றுக் கொள்ளாததுபோலக் கம்பர் கொள்கையை வீர கவிராயர் ஏற்றாரிலர். எப்படி எப்படித் தமிழர் கருத்துக்கள் மாறுபட்டு வந்தன

என்பதைக் காணுங்கள். ஒருவர் நினைந்து நினைந்து அமைத்த உவமையை மற்றவர் கூட்டுவதும் குறைப்பதும் அவற்றில் தம் திறமையைக் காட்டுவதுமே தமிழ்ப் புலமை, தமிழ்ப் பாநலம் என்று கருதினர் போலும்!

இவ்வாறு பாக்களில் காணும் வேற்றுமைகளும் மாற்றங்களும் காலப்போக்கால் ஏற்படுவன. அவ்வக் காலத்திற்கேற்ப, அக்காலத்தில் மக்கள் மனத்தை அலைக்கும் நோக்கங்களுக்கேற்ப, பல்வேறு கலைகளின் கலப்பிற்கேற்ப, அக்கலப்புத் தரும் சுவைக்கேற்ப, பாக்களின் போக்கும் பொருளும் அமைவன. காவலராயினும் பாவலராயினும் காலத்திற்கடங்கியே நடக்கக் கடவர். இக்காலக் கூறுகளை எல்லாம் தாமே கருதிக் கருதிப் பாவலர் தம் பாக்களைச் செய்யார் எனினும், காலத்தின் இயல்பு, அவர்தம் பாக்களில் தானே சென்று பதிந்துவிடும். காலங்கடந்து நின்ற பாவலர் எவரையும், பாக்கள் எவற்றையும் பார்ப்பதே அரிது. ஒரு நிலையிலும் நின்றிடாப் பொருளும், நீரிடைக் கிடந்து நெடுநாள் பழகின், பாசி அதனைப் பற்ருது விடுமோ? காலப் போக்குக்கு ஏற்பப் பாட்டின் போக்கு அமைகின்றது.

வெள்ளத்தை நாம் மீண்டும் அடைவோம் புலவர்கள் வெள்ளத்தைக் கூறுவதில் ஒருவரோடொருவர் போட்டி யிட்டார்கள். உவமையில் போட்டி-அதைத் திருத்துவதில் போட்டி - தங்கள் தங்கள் அறிவைக் காட்டிக்கொள்வதில் போட்டி - இப்போட்டியில் நக்கீரர் கலந்துகொள்ளவும் இடமில்லை. இவருடைய 'ஆர்கலி'யும் ஒரு கலியாய் நிற்கின்றது.

சங்க காலப் பாட்டின் போக்கு

நக்கீரர் ஏன் பிற்காலப் புலவர்களைப் போல வெள்ளத்தை விரித்துக் கூறினாரிலர், இவர் அவ்வாறு பாட வல்லவர் அல்லரோ? அன்றி வெள்ளம் எதையும் கண்டறியார்கொல்லோ! ஆனால், வெள்ளத்தைக் காணாதவர் எவரும் உண்டா? இப்படிக் கருதுவதற்கு இடமில்லை. கீரர் வெள்ளத்தைப் பாடவில்லை எனினும், வெள்ளம் தரும் மலை அருவியைப் பாடியுள்ளார். மலையினின்று இழிதரும் அருவி, படுகின்ற பாட்டைத் திருமுருகாற்றுப்படையில் காணல்வேண்டும்:

'அகில்சுமந்து
ஆர முழுமுதல் உருட்டி வேரல்
பூவுடை அலங்குசினை புலம்பவேர் கீண்டு
விண்பொரு நெடுவரைப் பரிதியிற் றொடுத்த
தண்கமழ் அலர்இறால் சிதைய நன்பல
ஆசினி முதுசுளை கலாவ மீமிசை

---

296. அகில் சுமந்து - அகிற்கட்டைகளைச் சுமந்து.

297. ஆரம் - சந்தனமரங்களின். முழு முதல் உருட்டி - பெரிய அடிக்கட்டைகளை உருட்டிக்கொண்டு. வேரல் - சிறு மூங்கிலின்.

298. பூவுடை - பூவை உடைய. அலங்கு - அசைகின்ற. சினை - கிளைகள். புலம்ப - வருந்த. வேர் கீண்டு - வேரைத் தோண்டி.

299. விண்பொரு - ஆகாயத்தை மோதுகின்ற. நெடுவரை - நீண்ட மூங்கில்களில், பரிதியிற் - சூரியனைப்போலத் தோன்றும்.

300. தண்கமழ் - குளிர்ந்த, மணம் பொருந்திய. அலர் இறால் சிதைய - பூத்தேன் கொண்ட தேன்கூடுகள் கெட. நன்பல - நல்ல பல.

301. ஆசினி - ஆசினி என்னும் பலாமரத்தின். முதுசுளை - முற்றிய சுளைகள். கலாவ - கலந்துவர. மீமிசை - மேலே உள்ள.

நாக நறுமலர் உதிர யூகமொடு
மாமுக முசுக்கலை பனிப்பப் பூநுதல்
இரும்பிடி குளிர்ப்ப வீசிப் பெருங்களிற்று
முத்துடை வான்கோடு தழீஇத் தத்துற்று
நன்பொன் மணிநிறங் கிளரப்பொன் கொழியா
வாழை முழுமுதல் துமியத் தாழை
இளநீர் விழுக்குலை உதிரத் தாக்கிக்
கறிக்கொடிக் கருந்துணர் சாயப் பொறிப்புற

---

302. நாகம் - புன்னைமரங்களின். நறுமலர் - வாசனையுடைய மலர். உதிர - சிந்த. யூகமொடு - கருங்குரங்குகளோடு.

303. மாமுக - கரிய முகத்தை உடைய. முசுக்கலை-முசு என்னும் ஒருவகைக்குரங்குகளின் ஆண்களும். பனிப்ப-வருந்த. பூநுதல் - புள்ளிகளைக்கொண்ட நெற்றியை உடைய.

304. இரும்பிடி - பெரிய பெண் யானைகள். குளிர்ப்ப - குளிரால் நடுங்க. வீசி - நீர்த்துளிகளையும் அருவிகளையும் வீசி. பெருங்களிற்று - பெரிய ஆண் யானைகளின்.

305. முத்துடை - முத்துக்களை அடியில் கொண்ட. வான்கோடு - பெரிய கொம்புகளை. தழீஇ - தழுவி அல்லது அடித்துக் கொண்டு. தத்துற்று - தத்தித்தத்திக் குதித்துக் குதித்து.

306. நன்பொன் - நல்ல பொன்னின். மணிநிறம் - அழகிய நிறம். கிளர - விளங்கித் தோன்ற. பொன் கொழியா - பொன் கொழித்துக்கொண்டு.

307. வாழை முழுமுதல்-வாழையின் பெரிய அடிமரங்கள். துமிய - ஒடிய. தாழை - தென்னையின்.

308. இளநீர் விழுக்குலை - இளநீர்ப் பெருங்குலைகள். உதிரத் தாக்கி - உதிரும்படி மோதி (தென்னைமரங்களின்மீது அருவிநீர் தாக்குகின்றது ; தென்னைமரங்கள் அசைகின்றன ; இளநீர் உதிர்கின்றன.)

309. கறி கொடி-மிளகுக் கொடிகளின். கருந்துணர்-கரிய நிறமுடைய கொத்துக்கள். சாய - கீழே சாய. பொறிப்புற - புள்ளிகளைப் புறத்திலே உடைய.

310 மடநடை மஞ்ஞை பலவுடன் வெரீஇக்
கோழி வயப்பெடை இரியக் கேழலொ
டிரும்பனை வெளிற்றின் புன்சா யன்ன
குரூஉமயிர் யாக்கைக் குடாவடி உளியம்
பெருங்கல் விடர்அளைச் செறியக் கருங்கோட்
டாமா நல்லேறு சிலைப்பச் சேண்நின்
316 றிழுமென இழிதரும் அருவி'

இப்பாட்டின் நடையே பெருமித நடை; வயக் களிற்றின் வன்மை நடை. கிழவர் நடையா இது? அன்று; முடலை யாக்கை முழுவலி மக்களின் முறுக்கு மிகுநடை. என்ன எடுப்பு! என்ன மிடுக்கு! என்ன உருட்டு! என்ன மருட்டு! இளைஞர் நடையினும் இவர் நடையில் ஒருவகை வன்மை தோன்றுகின்றது.

---

310. மடநடை - மெல்லிய நடையினையுடைய. மஞ்ஞை - மயில்கள். பலவுடன் - பலவற்றோடு. வெரீஇ - வெருண்டு அல்லது பயந்து.

311. கோழிவயப்பெடை - கோழியினுடைய வலிய பெட்டைகள். இரிய - கலங்க. கேழலொடு - ஆண் பன்றிகளோடு.

312. இரும்பனை - கரிய பனையின். வெளிற்றின் - வயிரமில்லாத உள்பகுதியினுடைய அல்லது உட்சோற்றினுடைய. புன்சாய் அன்ன - மெலிந்த சிலாம்புகளின் தோற்றத்தைப் போன்ற தோற்றத்தையுடைய.

313. குரூஉமயிர் - கருமையான மயிரையுடைய. குடாவடி - வளைந்த அடிகளோடு கூடிய. உளியம் - கரடிகள்.

314. பெருங்கல் - பெரிய மலையின். விடர் - பிளப்பாகிய. அளை - குகைகளில். செறிய - ஒடுங்க. கருங்கோட்டு - கரியகொம்புகளை உடைய.

315. ஆமா - காட்டுப்பசுவின். நல்ஏறு - நல்ல காளைகள் சிலைப்ப - கத்த. சேண்நின்று - மிக்க தூரத்திலிருந்து.

316. இழும்என - இழும் என்ற ஓசையோடு. இழிதரும் அருவி - இறங்கும் அருவி.

இளைஞர் எவருக்கும் இக்கிழவர் சற்றும் இளையார் போலும்! இளைஞர் உவமையை உருட்டினால் கிழவர் சொற்களை உருட்டுகின்றார். இவர் அருவி உருண்டு புரண்டு ஓடிவருதலின், இவர் சொற்கள் எழுந்து எழுந்து புரள்வதே புதுமையாகின்றது. இவர் பாட்டையும் இளைஞர் பாட்டையும் ஒப்பு நோக்குவோம். நோக்குங்கால் பல ஒற்றுமைகள் காணப்படுகின்றன.

நக்கீரர் அருவி மலையினின்று இழிதரும்போது அகில் சுமந்தது; சந்தன முழுமுதல் உருட்டிற்று; யானைக் கொம்புகளைத் தழுவிச் சென்றது; நல்பொன் மணி நிறங்கிளரத் தத்துற்று ஓடிற்று; திருத்தக்க தேவர்தம் அருவியோ, மால்வரைக் கொழுநிதிக் குப்பையைக் கொள்ளை கொண்டது. கொழுநிதிக் குப்பை என்பன எவை? கீரர் கூறியவைதாமோ? சந்தன முழுமுதல் உருட்டி, நறுமலர் உதிர, முதுசுளை கலாவ, இளநீர் விழுக்குலை உதிர இழிதரும் அருவி என்று கூறினர் கீரர். "செய்ய சந்தனம் தீம்பழம் ஆதிய நைய வாரி நடந்தது" என்றார் திருத்தக்க தேவர். பழம் ஆதிய என்றதால் பூ, பிஞ்சு, காய், பழம் யாவற்றையும் அடக்கிக்கொண்டார் போலும்!

முன்பு கம்பர், திருத்தக்க தேவர் கூறியதை எடுத்து ஆண்டுகொண்டதைக் கண்டோம். இவர் கீரரையும் விட்டார் இலர். கீரர் குறித்த மலைக் குப்பையைத் திருத்தக்க தேவர் வெள்ளம் கொள்ளை கொண்டது என்றது கம்பருக்குப் பொருத்தமாகத் தோன்றவில்லை; கொழுநிதிக் குப்பையை என்றது கூடப் பொருந்தவில்லை. இவற்றை மாற்றினர். மலையின் உள்ளவெல்லாம் மண்டலால் விலையின்

மாதரை ஒத்தது என்றார். சில பொருளை மாத்திரம் வெள்ளம் உருட்டிச் சென்றது என்று ஏன் கீரர் கூறினார். மலையில் உள்ளவெல்லாம் போகட்டுமே, மலை மொட்டையாகட்டுமே! பாவலர்தமக்கு எது எப்படி ஆயினும் என்ன! அவர்தம் பாட்டுச் சிறப்புற வேண்டும். இவ்வளவோடு விட்டாரிலர் கீரரை!

'அகில் சுமந்து, ஆர முழுமுதல் பறித்து, முத்துடை வான் கோடு தழீஇத் தத்துற்று, நன்பொன் மணி நிறம் கிளர இழிதரும்' என்றார் கீரர். இதோ கம்பர் கவியைக் காணுங்கள் :

[1]"மணியும் பொன்னும் மயிற்றழைப் பீலியும்
அணியும் ஆனைவெண் கோடும் அகிலும்தண்
இணையில் ஆரமும் இன்னகொண் டேகலால்
வணிக மாக்களை ஒத்ததவ் வாரியே"

என்றார் கம்பர். இஃதோடும் நின்றாரிலர். 'நறுமலர் உதிர, இருள் சிதைய, பொன் கொழியாச் சென்றது' என்றார் கீரர். கம்பரோ,

[2]"பூசி றைத்துமென் றுது பொருந்தியும்
தேன ளாவியும் செம்பொன் விராவியும்
ஆனை மாமத ஆற்றொடு அளாவியும்
வான வில்லை நிகர்த்ததவ் வாரியே"

என்றார். கீரர் 'நறுமலர் உதிர' என்று மாத்திரம் ஏன் சொன்னார்? [3]மலர் உதிர்ந்தால் தாதும் உதிராதிருக்

1. பாலகா. ஆற்றுப்படலம், 7.

2. பாலகா. ஆற்றுப்படலம், 8.

3. ஈண்டுக்கூறவன கம்பர் புலமையைக் குறைத்துக் காட்ட அல்ல. புலமையில், அறிவில் கம்பர் கீரருக்குச் சற்றும் தாழ்ந்தவர் அல்லர். இங்குக் காட்டுவது அணிகள் அமைக்கும் ஆவலை, அது தரும் குறைவை. இத்தகை ஆவல் காலப்போக்கால்

குமோ? தாதுவையும் சேர்ப்பதுதான் இயற்கையோடு பொருந்துவது என்று கம்பர் 'தாது பொருந்தியும்' என்றார் போலும். 'இறால் சிதைய' என்றார் கீரர். தேன்கூடு சிதைந்தால் தேன் எங்கு விழும்? வெள்ளத்தில் தானே விழும்? ஆதலின், 'தேன் அளாவி' என்று கம்பர் திருத்திக்கொண்டார் போலும்! 'பொன் கொழியா' என்று வாளா கூறினர் கீரர். பொன் என்பது கரும்பொன்னா, செம்பொன்னா? அந்தோ! மயங்கவைத்தனர் கீரர்! செம்பொன் என்று திருத்தி அமைத்தனர் கம்பர். கீரர் 'கொழித்தது' என்றதும் அவ்வளவு சரியன்று. பொன் விராவி வந்த பின் அன்றோ பொன் கொழித்தல் வேண்டும்? முதலை விட்டுக் கீரர் முடிவைக் கூறினர். முதலைக் கூறினால் முடிவை உய்த்துணரலாம். முடிவைக் கூற நக்கீரருக்கு உரிமை உள்ளபோது முதலைக் கூற மற்றவருக்கு உரிமையில்லையா? 'செம்பொன் விராவி' என்று பாடினார் கம்பர்.

யானைக் கொம்பைக் கூறினார் நக்கீரர்; ஏன் யானை மதத்தைக் கூறினாரிலர்? யானை மதம் கொண்டபோது அதன் தலையிலுள்ள திரைப்பிலிருந்து மதநீர் சிறிது சிறிதாக வடியும் என்பர். சிறிது சிறிதாக வடிந்தாலும், சிறு துளி பெரு வெள்ளமாய் முடியும். மதம் ஓர் ஆறாய் ஓடிற்றாம்! அந்த ஆறு இந்த வெள்ளத்தோடு கலந்து கொண்டதாம்! கீரர் புதுப்பெயலினும் இஃதொரு புதுவெள்ளம். மேலே கூறியவற்றால் யாதும் விளக்கமில்லை. இதோ அவற்றை விளக்க ஓர் உவமை: 'வானவில்லை

அமைந்தது. பெரும் பெரும் புலவர்தாமும் இதனின்றும் விடுதலையடைய ஆற்றார் ஆயினர்.

நிகர்த்ததவ் வாரியே' என்று உவமை கண்டார் கம்பர். வானவில்லின் நிறங்கள் ஒன்றை அடுத்து ஒன்ருகத் தனித் தனியே திகழ்வன. அவை எல்லாம் ஒன்ருய்ச் சேர்ந்து, கலந்து ஒரு புதுநிறமாதல் இல்லை. வெள்ளத்தில் வீழ்ந்த தேன், பொன், தாது, யானை மதம், எல்லாம் வெள்ளத்தோடு விராவி அல்லது கலந்து செல்வன; தனித் தனியே வெள்ளத்தில் ஓடுவன அல்ல. இவை வெள்ளத்தில் கலந்தால் ஒரு புது நிறத்தை வெள்ளத்திற்குத் தருவன; வானவில் போன்று ஒவ்வொரு நிறமும் தனியே திகழ்வது அன்று. ஒவ்வொரு நிறப்பொருளும் தனித்தனியே தோன்றுமாறு ஒன்றை அடுத்து ஒன்ருக வெள்ளத்தில் ஓடுதல் இல்லை. வெள்ளத்திற்கும் வானவில்லிற்கும் ஒற்றுமை புலப்படவில்லை. வானவில் நிறமெல்லாம் ஒன்று கலந்தால், அந்நிறம் எவ்வாறிருக்குமோ அவ்வாறு வெள்ளம் இருந்தது என்றும் கொள்ளலாம். வானவில் நிறமெல்லாம் ஒன்ருய்க் கலந்தால் அந்நிறம் எப்படி இருக்கும்? அது யாருக்குத் தெரியும்? வெள்ளத்தின் நிறம் உவமையால் விளக்கமுற்றதைக் காணுங்கள். அல்லது அதன் வடிவம் விளக்க முற்றதைக் காணுங்கள். வெள்ளத்தைக் குறித்துப் 'பல்பெருஞ் சமயம் சொல்லும் பொருளும்போற் பரந்ததன்றே,' என்ற உவமையைத் தந்தார் கம்பர்: 'ஓதிய உடம்புதோறும் உயிரென உலாயது' என்றும் கூறிஞர். 'செல்லுறு கதியிற் செல்லும் வினையெனச் சென்றது,' என்றும் உணர்த்திஞர். எவ்வளவு அரிய உவமைகள் இவை! அறிவிற்கிட்ட அரும்பெரு விருந்தாவன இவை. இவ்வாறு தாமே தனித்து உவமைகளை அமைக்க வல்லவர், நக்கீரர் கூறியவற்றை

ஏன் கடன் கொண்டனர்? கீரர் கூறியன விளக்க மின்றி அமைந்தனவா? அவற்றிற்கு ஏன் உவமை கற்பிக்கின்றார்? இவர் இங்கு உவமை காட்டுவ தால் பொருள்தான் விளக்கமுற்றதா? அல்லால் அறிவுதான் இங்குச் சிறந்து விளங்குகின்றதா? ஏன் இவ்வாறு வேண்டா விடத்தும் உவமை காண அலைகின்றார்? உவமை மோகமோ? அல்லால் உவமைப் போட்டியோ? அல்லால் அணியிலக்கணம் பரவிப் பரவித் தந்த பிணியெனத் தகுமோ இதை?

உவமைத்திறனும் கற்பனைத் திறனும் எவ்வாறாயி னும் ஆகுக. நாம் காணவேண்டுவது பாட்டின் போக்கு. கீரர் பாட்டின் போக்கும் ஏனையோர் பாட்டின் போக் கும் எவ்வாறு இருந்தன என்பதை மேலே கூறியவை நன்கு விளக்குவன. மலைநாடுகளில் அருவிகள் மரங்களை வேர் கீண்டி உருட்டிச் செல்வதைப், பூ, பழம், காய் முதலியன சிதறிச் செல்வதை, வெள்ளநீர் தத்தித் தத்திச் செல்வதை எல்லாம் இன்றும் காணலாம். இவ்வெள்ளநீர்ப் பெருக்கை நேரிற் கண்டவர் 'தத்துற்று' என்ற சொல்லின் அழகையும், இவ்வொரு சொல் எழுப்பும் அளப்பருங்காட்சியையும் நினைத்து நினைத்து மகிழ்வர். மேடு பள்ளமில்லாத மருத நிலத் தில், நெய்தல் நிலத்தில் இவ்வாறு ஓடுதல் இல்லை. மலைநாட்டில் இவற்றைக் கண்ட ஒருவர், 'கீரர் அருவியே' அவர் பாட்டிடைக் காண்பாராயின் அவ் வருவியே தம் முன் ஓடுவதை மனக்கண்ணால் காணலாம். அப்பாட்டின் ஓசையே, அவ்வடிகளின் அமைப்பே அவ்வருவி உருள்வது, புரள்வது,தத்துவது போல அமைந்துள்ளது. கீரரும் அவர்காலப் புலவர் பலரும் தாம் எடுத்துக்கொண்ட பொருளைத் தாம்

கூறும் பொழுது, எவ்வாறு படிப்போர் மனத்தில் பதிப்பது என்ற நோக்கத்தோடே பாடினர். தாம் கண்டவாறே படிப்போனும் தன் மனக்கண்ணால் காணல் வேண்டும்; இதுவே அவர் தம் நோக்கம். திருமுருகாற்றுப் படையில் அருவியைக் கூறும் அடிகளைச் சொற்பொருள் தெரிந்தோ தெரியாமலோ படித்துப்பாருங்கள். அவர் சொற்களின் ஓசையே பொருள் தரும். இரண்டொரு சொல்லின் உதவி கொண்டே, படிப்போன் தன் மனக்கண் முன் அவ்வருவி உருள, இழிதரக் காணலாம். இவ்வாறே சங்க காலப்பாக்கள் பலவும் தாம் கூறும் காட்சிகளை, நிகழ்ச்சிகளை நிகழ்ந்தவாறு, அமைந்தவாறு, அப்படியே படிப்போன் மனக்கண் முன் காட்டுவன.

பிற்காலப் பாவலர்களோ, தாம் பாடும் பொருள் ஒருபுறமிருக்க, தம் அறிவையே படிப்போன் காணுமாறு, கண்டு வியப்புறுமாறு, ஒருவரோடொருவர் போட்டியிடுவார்கள். கம்பருடைய உவமைகளை மற்றும் ஒருமுறை நினைவுகூர்வோம். எல்லையில் மறைகளாலும் இயம்பொணா இறைவன் பல்பெருஞ் சமயம் சொல்லும் பொருளும்போல வெள்ளம் துறைதொறும் பரந்தது; உயிரென உலாயது; வினையெனச் சென்றது எனக் கூறியது ஆழ்ந்த தத்துவக் கருத்துக்களை, ஞான நூல்களின் துணிவுகளை வடித்தெடுத்து உவமைகளாக்கி வெள்ளத்துக்கு ஒப்பிட்டதாகும். சேக்கிழார் உவமையும் இவ்வாறே சிறந்தது. சித்தாந்த நூல்களின் துணிவை வடித்தெடுத்துக் கருணையைச் சிவத்திடத்தின்றிச் சிவசத்தியின்பால் உய்த்தது, இதற்கும் வெள்ளத்திற்கும் ஒப்புமை கண்டது, ஆகியன போற்றத்தக்கன.

இந்த உவமைகள் எத்துணையும் பொருட்கிசையும் இலக்கணமில் கற்பனையா? அன்று அன்று; எத்துணையும் பொருட்கிசையும் இலக்கணமுள் கற்பனையே. ஆனாலும், இவ்வுவமைகளில் நாம் காண்பது வெள்ளமா, அறிவின் திறமா? அவரவர் அறிவின் ஆற்றலை வியக்கின்றோம். உவமை பொருத்தமாக அமையின், உவமையின் அழகில் ஈடுபடுகின்றோம். வெள்ளம் எங்கோ ஒருமூலையில் பதுங்கிவிட்டது. அதைத் தேடிப் பிடிக்கவேண்டும். வெள்ளத்தின் அழகைவிடப் பாவலர் அறிவின் அழகையே, அவர் கருத்தின் அழகையே, நாம் காண்கின்றோம்; அதுவே நம் மனத்தைக் கவர்கின்றது. சங்கப்புலவரோ, தங்கள் அறிவின் முனைப்பிற்கு இடம் கொடுப்பாரல்லர். படிப்போர்க்கு அறிவூட்டுமாறு தாம் கூறப்புகுந்த பொருளைப் படிப்போன் மனத்தில் பதித்திட எவ்வளவு வேண்டுமோ அவ்வளவிற்கே தம் அறிவைக் கையாளுவர். வெள்ளம் சேனையைப் போன்று தோன்றுவது அவருக்குப் பெரிதன்று; யானையைப்போலத் தோன்றுவதும் பெரிதன்று; அது பூனையேயாயினும் அதை அவர் பொருட்படுத்தார். வெள்ளம் படிப்போன் முன் ஓடல்வேண்டும். இதுவே அவர்தம் முதல் நோக்கம்.

இவ்வாறே கூறுவது அறிவாளிகளுக்கு விருந்தாகுமா? அறிவிற்கு விருந்து வேண்டுமானால் காணும் காட்சிகளைக் கண்டு நலம் துய்த்தபின் அதனுள் புக வேண்டும்; அங்குப் பொற்குவியல்களைக் காணலாம்; மணிக்குவியல்களைக் காணலாம். பொருள்நலப் பகுதியில் அவ்வாறே கண்டோம்; 'கற்ப' என்ற ஒருசொல் தரும் அறிவின் விருந்தையும் கண்டோம். முன்பு கூறிய

ஆற்றுப்படை அருவியும், வாழ்க்கைப் பேரருவியைக் குறிக்கும் என்பர். இவையெலாம் விரிக்கிற் பெருகும். பா இவற்றை எல்லாம் மூடிப்பரந்து செல்லும்; பா மணமே எங்கும் கமழும்; அறிவு மணம் வெளிப் படுதலில்லை. உட்சென்று காணுதல் எளிதன்று என்று எண்ணினர் போலும் பிற்காலத்தவர்; அறிவெலாம் வெளியே வெள்ளத்தில் மிதக்க விட்டனர். தம் அறிவைக் காட்டுவதில் ஒருவரோடொருவர் போட்டி! உவமை கற்பிப்பதில் போட்டி! அணிகள் அமைப்பதில் போட்டி!

இவ்வுவமைப் பித்தம் நம்மையும் பற்றிற்றுப் போலும்! நம்மை மயக்கிற்று. நாம் சென்ற வழியை விட்டுப் புறத்தே சென்றோம். சென்ற வழியை நாம் மீண்டும் சேருவோமாக.

5. செட்டு, விரைவு, செய்யுள் எச்சம்

கீரர் செட்டுச் செறிந்த திண்மை சேர் புலவரா யினும், வேண்டுமானால் வெள்ளத்தைப் பற்றியும் விரிவாய்ப் பாடவல்லவர் என்பதைக் கண்டோம். அப்படியிருந்தும், இப்பாட்டில் வெள்ளத்தைக் குறித்து ஏன் விரித்துக் கூறினாரிலர்? புதுப்பெயல் பொழிந்தது; அதற்கு அடுத்து நிகழ்வது வெள்ளம். அப்புதுப் பெயலுக்கு ஏற்ப வெள்ளம் எழல் வேண்டுமே! ஆற்றுப்படையின் அருவியைப்போல ஏன் இங்கு வெள்ளம் படிப்போர் முன் ஓடவில்லை? ஆர்கலி என்ற சொல்லால் இவ்வெள்ளத்தைச் சுட்டி விட்டு அஃது எவ்வாறிருந்தது என்று ஒன்றும் கூறாது மேலே சென்றுவிடுகின்றார். ஏன் இவ்வாறு செல்கிறார்? இதற்குத் தக்க காரணம் இருத்தல் வேண்டும்.

பாட்டைத் தொடங்கும்போதே தாம் கூறப் புகுவதை 'வையகம் பனிப்ப' என்று தோற்றுவாய் செய்தார். வையகம் பனிப்பதை விட்டு வெள்ளத்தை விவரிக்கத் தொடங்கினுல் மற்ருென்று விரித்தல் ஆகும் என்று கருதினுர் போலும்! ஆதலின், சரே லெனக் கோவலரிடம் தாண்டிவிடுகின்ருர். வெள்ளம் எழுந்தது ஓடிற்று என்று இரண்டு வார்த்தைகள் சொன்னுல்கூட மற்ருென்றை விரித்தலாகுமா? வேண்டுமெனின் எல்லாவற்றிற்கும் ஏதாவது காரணம் கூறிவிடலாம். வாரம் பற்றிடில் தீயதும் நல்லதாம்.

அப்படியன்று; இதற்கு மற்ருெரு காரணமும் உண்டு. வெள்ளத்தைப் பற்றிக் கூறினுல் படிப்ப வர்கள் மனம் திரிந்து சிதையும். படிப்பவரின் முழு மனமும் வேறு இடத்தில் தேவை. முதலில் தந்த வியப்புச் சுவை மாறுமுன் வேறு சுவையில் மனத்தைக் கொண்டு சேர்க்க வேண்டும். அவர்கள் மனத்தை வெள்ளத்திடத்தோ வேறு வேண்டா இடத்திலோ இழுத்துச் சென்ருல், அலுப்புத் தோன்றும். வெள்ளத்தைக் காண வேண்டிய இடம் வேறு. இங்குக் காணவேண்டுவது பனிப்பு என்று கருதினுர். ஆதலின், 'ஆர்கலி' என்று ஒரே தொடரால் வெள்ளத் தைக் குறித்தார், அவ்வாறு குறித்த சிறு குறிப்பிலும் மனம் நின்று, என்ன வெள்ளம் என்று கருதவும் விடார், காணவும் விடார். வெள்ளத்தைக் கோபத் திற்கு அடைமொழியாக்கினுர்: கோபத்தைக் கோவலருக்கு அடைமொழியாக்கினுர். வெள்ளத்தை முனிந்த கோவலர் என்று மனத்தைக் கோவலரிடம் சரேலெனச் சேர்த்துவிடுகின்ருர். வெள்ளத்தை

'முனை இ' என்ற சொல்லொடு சேர்க்காமல், வெள்ளம் (ஆர்கலி) எழாக் கொடுங்கோல் கோவலர் என்று சேர்த்துப் பார்ப்போம். வெள்ளம் எழா என்ற இடத்தில் மனம் சற்று நின்று விடுகிறது. வெள்ளத்தைப் பற்றிய நினைப்பிற்கும் கோவலரைப் பற்றிய நினைப்பிற்கும் இடையே சிறிது வெளியேற்படுகின்றது. இரண்டு நினைப்பும் துண்டித்து நிற்கின்றன.

ஆம், துண்டித்தே நின்றால் தவறென்ன? எண்ணங்கள் எல்லாம் தொடர்ந்து புகை வண்டித் தொடர் போன்று செல்ல வேண்டுமா? இதற்கெல்லாம் பலரும் அறியா 'உளநூல்' சான்று ஒன்று காட்டுவதுதான் தக்க வழி. ஏனெனில், அதை அளந்து காணுதல் எளிதன்று. இதைவிட வெள்ளத்தைக் கூற வந்தவர் ஏதோ விட்டுவிட்டார், தவறிவிட்டார் என்று அவர் தவற்றை ஏன் ஒப்புக்கொள்ளக்கூடாது? ஒரு தவற்றால் அவர் பாட்டும் கெட்டுவிடுமா? ஏன் பெருந்தன்மையோடு நடுவிகலாத்திறன் ஆயும் மரபு வழாமல் தவற்றை ஒப்புக்கொள்ளக் கூடாது?

இவை தக்க கேள்விகள். எண்ணங்கள் எல்லாம் புகைவண்டித் தொடர்போல, மழை வருமுன் வெளியேறிச் செல்லும் எறும்பின் சாரைபோல ஒன்றை ஒன்று பின்பற்றியே செல்கின்றன. இஃது ஒரு பெருங் குறைதான். இஃது அக்காலத்து முறை. இம் முறையே இக்காலத்தில் இப் பாட்டுகளைத் தக்கவாறு உணரத் தடை செய்து நிற்கின்றது. ஆயினும், பிரித்தெடுக்க முடியாதவாறு ஒரே வார்ப்பாக வண்டித் தொடர் முழுதும் ஒரே வண்டியாக அமைந்தது அன்று. பற்பல வண்டிகள் சேர்ந்தே ஒரு தொட

ரானது. ஆதலின், வேண்டும்போது, வேண்டும் வண்டியை மற்ற வண்டியின் தொடர்பு நீக்கி, அப்பால் தள்ளிச் சென்று காணலாம்; பின்பு அத்தொடரோடு சேர்க்கலாம்; சேர்த்தும் காணலாம். இதனால் வண்டிக்கும் கெடுதியில்லை, வண்டித் தொடருக்கும் கெடுதியில்லை. வண்டியை இயைத்த இடத்தில் பிணிப்பவிழ்த்தல் வேண்டும். அவ்வாறன்றி, நடுவே வண்டியை வெட்டிப் பிரித்தல், வண்டியை அழித்தல் ஆகும்; சோதித்துக் காண்பது அன்று. இங்குப் பாவலர் ஏன் எண்ணங்களைப் பிரித்துவிடாது ஒன்று சேர்க்கின்றார் என்று காணலே தக்க முறை. இடை இடையே அவற்றைத் துணித்துவிடுதல் தக்கது என்பது தவறு. கீரர் இங்குச் சில நிகழ்ச்சிகளைக் கூற விட்டுவிட்டார் என்பது உண்மை. இவை, தெரிந்தே, விழிப்புடன், வேண்டுமென்றே, விடப்பட்டவை; ஏமாறியோ, தவறியோ விட்டவை அல்ல. இவர் விரைந்து செல்லும் செலவே, ஏதோ ஒன்றை மறைக்க விரும்புவார் படபட என்று, இதை அதைக் காட்டி, வேண்டுமென்று மறைத்துச் செல்லும் செலவைக் காட்டும்.

புதுப்பெயலுக்கும் கோவலர் முனிவுக்கும் இடையே நிகழ்ந்த நிகழ்ச்சிகள் பல. புதுப் பெயல் பெய்தபின் வெள்ளம் எழல்வேண்டும்; பரவல் வேண்டும்; கோவலரிருந்த இடத்தைப் பற்றல் வேண்டும். இந்நிகழ்ச்சிகளே கோவலர் முனிவிற்குக் காரணமாவன. இவற்றில் ஒன்றையும் கீரர் கூறினாரிலர். இயல்பான முறையில் கூறுங்கால் 'வெள்ளம் எழுந்தென, இடம் கவர்ந்தென ஆர்கலி முனைஇய' என்று கூறல்வேண்டும். அவ்வாறு கூறாது 'ஆர்கலி

முனைஇய' என்று மாத்திரம் கூறுகின்றார். இடை நிகழ்ந்த நிகழ்ச்சிகளை அல்லது பொருளை எஞ்ச விட்டார்; அப்பொருளை உணர்த்தும் சொற்களை எஞ்சவிட்டார். இங்குச் சொல்லிலும் எச்சம்—பொருளிலும் எச்சம்—சொல்லொடு முடியும் எச்சம்[1] —எஞ்சிய பொருளின் குறிப்பொடு முடியும் எச்சம். இடை நிகழ்ச்சிகளையெல்லாம் வேண்டுமென்றே விட்டுவிட்டுச் செல்லும் விரைவில் 'காண்பாயாகிற் காண் எனக்' குறிப்புணர்த்திச் செல்கின்றார். 'ஆர்கலி' என்ற ஒரு தொடரைக் காட்டி அதுவும் நின்று பொருள் தாராதபடி மற்றச் சொற்களோடு இணைத்தும், பிணைத்தும், அச்சொற்களைக் கொண்டே மறைத்தும் கோவலரிடம் ஓடிவிடுகின்றார்.

பிற்காலப் பாவலர்களோ, இந்த ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் பற்பல பாடல்கள் பாடுவார்கள்; புதுப் பெயற்படலம், வெள்ளப் படலம், இடங்கவர் படலம், கோவலர் போர்க்கெழு படலம் எனப் படலம் படலமாகப் பாடிவிடுவார்கள். கீரர் இந்நிகழ்ச்சிகளை எல்லாம் சுருக்கிப் பிடித்து வெள்ளம், கோபம், கோவலர் என்ற மூன்றே சொற்களில் அடக்கி விட்டனர். வெள்ளம் எழுவதை, ஓடுவதைக் கோவலரிடத்தைக் கவர்வதை எல்லாம் நீங்கள் காணவேண்டா என்று தள்ளிக்கொண்டு போவதுபோன்றது இவர் செயல். இச் செயல் தரும் நலம் யாது? இங்குப் பெறும் பா நலன் யாது?

பெய்ததோ புதுப்பெயல். அந்தப் பெயலின் தன்மையை எல்லாம் கண்டோம். வலனேர்பு பொழிந்தது.

1. 'சொல்லொடும் குறிப்பொடும் முடிவுகொள் இயற்கை புல்லியகிளவி எச்சம் ஆகும்.' —தொல். செய்யுள். 204

பொழிந்து முடியவும் நேரமில்லை, உடனே, பொழியும் போதே, வெள்ளம் எழுந்தது; எழவும் நேரமில்லை, கோவலரிடத்தைக் கவர்ந்தது. இப்படி எல்லாம் நேருமென்று எண்ணவும் நேரமில்லை. எல்லாம் உடனுக்குடன், உடனுக்குடன் நிகழ்ந்தன. ஒன்றுக் கொன்று இடையிட்ட காலமேயில்லை என்று காட்ட இவ்விரைவுணர்ச்சியைத் தருகின்றார். படிக்கின்ற போதே இந்தப் படபடப்பையும் விரைவையும் உணர் கின்றோம். ஆனால், அவற்றின் காரணம் ஆதியன தோன்றுவனவல்ல; ஆழ்ந்து காணவே தோன்றுவன வெளிப்படையாகக் காணப்படுமானால், அவை அவ் வளவு சுவை தாராபோலும்; விரைவுணர்ச்சியின் சுவையைத் தந்தாலும் விரைவின் தோற்றத்தைத் தாரா போலும்; இடை நிகழ்ச்சிகளை எஞ்சவிடுதல், அதனால் விரைவுணர்ச்சியைத் தருதல், அவ்விரைவின் தோற்றத்தையும் தருதல், காரணத்தை உய்த் துணருமாறு அமைத்தல் எளிய அல்ல. கைவல் பாவலனுக்கே வாய்ப்பவை இவை.

இவ்வுணர்ச்சியைக் கம்பரும் கையாள்கின்றார். சீதையை மணக்குமுன் இராமர் சனகன்வில்லை வளைத்தார் என்பது பலரும் அறிந்தது. இராமர் அவ் வில்லை வளைத்த விரைவைக் காட்டக் கம்பர், 'எடுத்தது கண்டனர் இற்றது கேட்டார்' என்று கூறுவர். இடைநிகழ்ச்சிகளை விட்டுக் கூறுவதால் விரைவுணர்ச்சி தரும் முறையை இப்பெரும்புலவரும் கையாளுவதைக் காணுங்கள். ஆனால், அவர் போக்கு வேறு.

சொற்செட்டிலும் ஒரு வன்மை, ஒரு திறன்; 'ஆர் கலி முனைஇய' என்ற மூன்றே சொற்களில், இச்சொற்

களின் அமைப்பில், இச்சொற்களை ஆளும் திறமையில், இவற்றால் செய்யுளில் எச்சம் சேர்க்கும் முறையில் கீரர் காட்டும் வன்மையைக் காணுங்கள். அவர் பாட்டின் ஆழ்ந்த போக்கையும் காணுங்கள்.

6. சிலேடைச் சிறு நலன், குறிப்புப் பொருள் நலன்

வெள்ளத்தைப் பற்றிக் கூறியவை வெள்ளமாய் முடிந்தன. வெள்ளத்தைக் கீரர் ஒதுக்கியது போல நாமும் ஒதுக்கிச் செல்வோம்; வெள்ளத்தைக் கண்டோ காணாமலோ அப்பால் செல்வோம். இங்கு நாம் காண்பது கோவலரை. கோவலரைப்பற்றி இப் பாட்டில் காணும் ஒவ்வொரு சொல்லும் ஒவ்வொரு பா நலம் காட்டும். நின்று நின்று ஒவ்வொரு சொல்லையும் கண்டு நடப்போம்.

கோவலரைக் கூறும்போதே 'கொடுங்கோல் கோவலர்' என்று தொடங்குகின்றார். இங்குக் கொடுங் கோல் கோவலர் என்ற சொற்களை இரண்டு மூன்று பொருள் தருமாறு கீரர் அமைக்கின்றார். இவ்வாறு ஒரு சொல்லைப் பல பொருள்பட ஆள்வது ஓர் அழகு. இதுவும் ஒரு பா நலம். ஒரு சொல்லிற்குச் சொற் பொருளே பல உண்டு. இவையல்லாமல், ஒரு சொல் அஃது ஆளப்படும் இடத்திற்கேற்பக் குறிப்பால் பொருள் தருவதுமுண்டு. அஃது எழுத்தோடும், சொல்லோடும் பொருந்தாத பொருள்; சொற் பொருளுக்கும் வெளியே தோன்றும் பொருள்.[1] இப் பொருளைக் கீரர் பாட்டில் பல இடங்களில் காணலாம்.

1. 'எழுத்தொடும் சொல்லொடும் புணரா தாகிப்
பொருட்புறத் ததுவே குறிப்புமொழி என்ப.'
—தொல்., செய்யுள், 177

பொருள்நலப் பகுதியில் கூறிய பல பொருள் நலங்கள் குறிப்பால் பெற்றவை. இப் பகுதியின் தொடக்கத்திலும் இது குறிப்பிடப்பட்டது. ஆனால், இதன் திறன் அங்கே நின்று உணர்த்தப்படவில்லை. இப்போது இத் திறனைக் காண்போம். கொடுங்கோல் கோவலர் என்ற சொற்களிலும் அக்குறிப்புப் பொருள் பொருந்தி உள்ளது.

இங்குக் கோவலர்களை நாம் காண்பது எந்த நிலைமையில்? வெள்ளம் அவர்கள் இருந்த இடத்தைக் கவர்ந்துகொண்ட நிலைமையில். இவர்கள் தங்கள் கிடைகளை வேறு புலத்திற்கு ஓட்டிச் செல்கிறார்கள். இடம் விட்டு, மற்றோர் இடம் இடத்திற்கு மாறுகிறார்கள். வெள்ளத்திடத்தில் இவர்கள் கோபங்கொண்டு வெளியேறுகிறார்கள். வெள்ளத்தால் சூழப்பட்டு வெளியேறும் மக்கள் எதை எதை எடுத்துச் செல்வார்கள்? பொன்னைப் பொருளைத் தூக்கிச் செல்வார்கள்: பெட்டியை மூட்டையைத் தூக்கிச் செல்வார்கள்; ஆடையை அணியைத் தூக்கிச் செல்வார்கள். இக் கோவலர்கள் அவ்வாறு ஒன்றையும் தூக்கிச் செல்லவில்லை. இவர்களுக்கு இவ்விதப் பொருள் ஒன்றுமில்லை போலும்! கொடுங்கோல் ஒன்றையே கொண்டுள்ளனர். அந்தோ ! ஏழை மக்கள்! கொடுங்கோல் என்னும் ஒரு சொல் அதற்குப் புறம்பான பொருளைத் தரும் தன்மையை—அப்பொருளைத் தருமாறு செய்யும் திறனைக் காணுங்கள்.

கொடுங்கோல் என்பது வளைந்த கோல் என்று பொருள்படும். கோவலர் எடுத்துச் செல்லும் கோல்கள் நுனி வளைந்தே இருப்பன. இயற்கையாக

நுனி வளைந்த கோலும் உண்டு; செயற்கையாக வளைவைப் பொருத்திய கோலும் உண்டு. இத்தகைய கோல்களே இவருக்குத் தேவை. இவர் அழகுக்காகச் செல்வப் பெருமக்கள் போன்று கையில் கோல் பிடித்துச் செல்பவர் அல்லர். தமக்குப் பயன் கருதியே கோல் எடுத்துச் செல்பவர். ஆடுமாடுகளுக்கு வேண்டிய தழைத் தீனிகளைப் பெற்ற கிளைகளை இக் கோல்களால் தாவி வளைப்பர்; வளைத்து ஒடிப்பர்; ஒடித்து ஆடுமாடுகளைத் தீனி கொள்ளச் செய்வர். படைஞர்களுக்கு அமைந்த வாளைப் போலவும், இசைவலார்க்கு அமைந்த குழல் போலவும் எழுத் தாளர்களுக்கமைந்த எழுதுகோல் போலவும் கோவல ருக்கு இக்கொடுங்கோல் அமைவது. இக்கொடுங் கோலிடம் இவருக்குள்ள பற்று, இவருடன் நெருங்கிப் பழகின் தெரியும். இக்கோலின் பெருமையும் நலனும் இக்கோலினை ஓச்சும் கோவலர்க்கே தெரியும்.

வெள்ளம் வந்தபோது தூக்கிச் சென்ற அரிய பொருளாகவும், தூக்கிச் சென்ற முதற்பொருளாகவும் இக்கோல்தனைக் காட்டுவதன் பொருத்தத்தைக் காண்க. கோவலரைக் காணுமுன் அவர் கொடுங்கோலை நாம் காணுமாறு கீரர் அமைத்துள்ளதைக் கருதுக. கோவலர் தம்மினும் கொடுங்கோலுக்கே முதன்மை. கொடுங்கோல் என்பது கொடுமையைத் தரும் கோல் என்று பொருள்படும். இக்கோலின் கொடுமையைப் பற்றி இதன் சுவையைக் கண்ட மாடுகளைக் கேட்க வேண்டும். கோவலர் கையில் உள்ள கோலைப் பார்த்த வாறே மேய்வன திருட்டு மாடுகள். கோவலரின் கைக்கோல் சற்று உயர்ந்தால் அல்லது அசைந்தால் போதும். அவை வெருண்டு ஓடும்; அக்கோலைக்

காணவே நடுநடுங்கும். அடங்காச் சிறுர்களை அடக்குவது இவர் கோல். இகல் செய்யும் ஏறுகளை ஏற்பப் புடைப்பது இவர் கோல். அடியினுல் அமையும் நன்மை, பிறிதொன்றுல் ஆவதில்லை.

கொடுங்கோல் என்பது செங்கோலுக்கு எதிர் மறை. 'கொடுங்கோல் மன்னர் வாழுநாட்டில் கடும் புலி வாழும் காடு நன்றே' என்பர். கோவலருக்குக் காடும் ஒன்றுதான், நாடும் ஒன்றுதான். காவலர் ஆட்சி நாட்டில் செல்லும்; கோவலர் ஆட்சி காட்டிலும் செல்லும், நாட்டிலும் செல்லும். செங்கோன்மையில் - அது தரும் நன்மையில்—நம்பிக்கை அற்றவர் கோவலர். கொடுங்கோன்மையால் ஆபயன் குன்றும் என்று வள்ளுவர் அறியாது கூறினுர் போலும்! கோவலர் கொடுங்கோன்மை இல்லையேல் ஆவும் பயன் தருமோ, பாலும் தருமோ? அடக்குவார் அற்று அடல் மிகச் செறிந்து இயற்கையாகவே காட்டில் திரிந்தன ஆமாக்கள். இவற்றைக் கன்றுக்காயினும் சொட்டுப்பால் இன்றி ஒட்டக் கறக்கவும், மீளா அடிமையாய் மக்களுக்குழைக்கவும் செய்தது அன்பா, அடியா? செங்கோலா, கொடுங்கோலா? கொடுங்கோன்மையின்றெனின் கோவலர் தொழிலேயில்லை; கோவலரும் இல்லை.

இருபொருள் தருமாறு ஆளப்பட்ட சொற்கள் இன்னும் சில உள. அவை 'மெய்க்கொள் பெரும் பனி' 'நலிய' ஆதியன. அவை தரும் சிறு சுவை வேண்டுவதன்று. பெருஞ்சுவை பல பின்னே காத்திருக்கின்றன. அங்கு விரைந்து செல்லல் வேண்டும். இருபொருள் தோன்ற அல்லது பலபொருள் தருமாறு

சொற்களை அமைப்பதில் ஓர் அழகுண்டு. ஒரு சொல் ஓர் இடத்தில் ஒரு பொருள் தரவும், அதை அடுத்து அதே சொல் மற்றொரு பொருள் தரவும் அமைக்கப் பெறும். இவ்வாறு அமைப்பதைச் 'சிலேடை' என்பர். ஆழ்ந்துசெல்ல ஆற்றலில்தாலவர்களுக்கு இதுவேமிக்க மகிழ்வளிக்கும். இதுவே பிற்காலத்தில் சிலேடைப் பெருங்காடாய்த் தழைத்தது. சிலேடைப்புலிகள் பல தோன்றின. எங்கும் சிலேடைப் போட்டி! எங்கும் சிலேடைப் போர்! யானைக்கும் பூனைக்கும் பொருந்தச் சில சொற்களை அறிந்து செய்யுள் செய்பவர் பெரும் புலவராய்த் திகழ்ந்தனர். கரும்புக்கும் துரும்புக்கும் பொருந்தப் பாடிவிட்டால் இறும்பூ தெய்துவர்.

இவ்வாறெல்லாம் நிகழ்வது மக்கள் அறிவு நிலை குன்றிய காலத்தில் என்பர். சிலேடை அமைக்க ஆன்றமைந்த அறிவு தேவையில்லை. சொற்களின் பல பொருள்களை அறிதல்வேண்டும். அவற்றை இடத்திற் கேற்ப அமைக்கும் ஆற்றல் வேண்டும். அவற்றோடு யாப்பிலக்கணப்படி செய்யுள் இயற்றும் வன்மையும் வேண்டும். இவற்றின் துணைகொண்டு பலர் சிலேடைக் கவிஞராய்த் திகழ்ந்தனர். இச்சிலேடை வெறி, பெருகிப் பெருகிப் பல துறைகளாய்ப் பிரிந்தன. யமகம், திரிபு, மடக்கு முதலியன சிலேடை தந்த சீர்ப் பெரும் புதல்வர்கள். பேரறிவாளரும் இவற்றில் புகுந்தனர். யமகம் என்பது எளிதா? திரிபு என்பது சிறிதா? சொற்களைக் கொன்று கொன்று குவிப்பர்; வெட்டி வெட்டித் துணிப்பர்; துணித்துத் துணித்து இணைப்பர். கொலை! கொலை! கொடுங் கொலை! இவ்வாறு கொலை செய்யத் துணிந்த புலவர் பெருமக்கள் இன்றும் யாராவது உளரோ, அறியேன்.

சிலேடையும் ஒரு வகைச் சுவை தருவதே. இது சிறு சுவையாயினும் ஒரு வகை மகிழ்வளிப்பதே. சங்க காலப் புலவர் இதைத் தம் பாக்களில் சிற்சில இடங்களில் கையாண்டனர்; இச்சுவை வேண்டிய இடங்கள் தெரிந்து கையாண்டனர். இவ்வாறு நக்கீரரும் கையாண்டதைக் கண்டோம். பிற்காலத்திலே இது தமிழுக்கொரு தொழு நோயாய் முடிந்தது. பொருள் தரும் பேரொளியைக் காணுக் கண்கள் சிலேடை தந்த மின்மினி ஒளியைக் கண்டு மிக்க மகிழ்வெய்தின. இது, மாத்திரை இன்பம் மகிழ்ந்தளித்துப் பாவலர்தம் கோத்திரம் எல்லாம் அடிமைகொண்டுவிட்டது. இது நம்மையும் அடிமை கொள்ளாதபடி நகர்ந்து விடுவோம்.

7. நகைப்பு, அங்கதம், நலம்பெறும் உள்ளுறை

பாட்டை வியப்புணர்ச்சியோடு கீரர் தொடங்கினர்; விரைவுடன் இழுத்துச் சென்றார்; சிலேடைச் சிறு சுவை தந்தார். இங்கு நாம் காணப்புகுவது அவர் தரும் நகைப்புச் சுவை. நரைமுது புலவரிடத்தில் நகைப்பும் உண்டோ? உண்டெனில் அது வியக்கத்தக்கது.

வெள்ளத்தை முனிந்து கோவலர் வெளியேறினர் என்று கண்டோம். இவர்கள் மனநிலையையும் அறிவு நிலையையும் சற்றுக் கருதவேண்டும். இது முற்பகுதியிலும் குறிக்கப்பட்டது. வெள்ளத்திடத்தில் இக்கோவலர் கோபம் என் செய்ய வல்லது; வெள்ளம் இவர் தம் கோபத்திற்கு அஞ்சுமா? அல்லது அதற்கு இவர் ஏதேனும் கெடுதி விளைக்க இயலுமோ? பேதைமை! பேதைமை! அறிவின்மை! இவருக்குத் தலையில் கண்ணி எதற்கு? சிறுவர் சிறுமியர் இவ்வாறு

அழகு செய்துகொண்டு விளையாடுவர். கோவலர் தமக்கும் சிறுபிள்ளைத் தன்மையா! தலையில் அணிந்த மாலையின் நீண்ட இதழ்களில் மழைநீர் தங்கி மாலையைக் கலைக்கின்றது. தலையில் மாலையிருந்ததென்பதைக் கோவலர் அடியோடு மறந்தனர் போலும்! அதை விலக்கினாரிலர் அந்தோ! திடீரென மழை! திடீரென வெள்ளம்! திடுக்கிட்டு மதிமயங்கினர். மழையில் நனைந்தனர். வெள்ளத்திலும் நனைந்தனர் போலும்! குளிரால் நடுங்குகின்றனர். தண்ணீர் நிறைந்த தலைமாலையை நீக்க மறந்தனர். 'தலையில் உள்ள மாலையை எடுத்துவிடு; அது குளிர்தரும்; நீர் கொள்ளச்செய்யும்' என்று சிறுவர்களுக்குச் சொல்வதுபோல ஒருவர் சொல்ல வேண்டுமா? அந்தோ! சிறுபிள்ளைத் தன்மை! சிறுபிள்ளைத் தன்மை! இவர்கள் கோலத்தைச் சற்று நினைக்கவேண்டும். வெள்ளத்தை முனிந்த முகம், குளிரால் நடுங்கும் உடல், தண்ணீர் நிறைந்த தலைமாலை, கையில் கொள்ளி; இக்கோலத்தைக் காணும்போதே நகைப்புத் தோன்றுகிறது; முறுவல் பூக்கின்றது. பேதைமைக்கு ஒரு வடிவம் வேண்டுமா? சிறுபிள்ளைத் தன்மைக்கு ஒரு வடிவம் வேண்டுமா? இதோ நாம் காணும் கோவலர் கோலமே அது. வேண்டுமென்றே இவர்களைக் கீரர் கோமாளிகளாக்கி நமக்கு நகைப்பூட்டுகின்றார். பேதைமை யடியாய்ப் பிறக்கும் நகைப்பிது.[1] இளமை அல்லது சிறுபிள்ளைத் தன்மை யடியாய்ப் பிறக்கும் நகைப்பும் இது.

இஃதன்றியும், இக்கோவலரைப் பற்றிக் கூறும்போது மொழி கரந்து சொல்லிப் பழிகரப்பங்கதச்

1. 'எள்ளல் இளமை பேதைமை மடனென்று
உள்ளப் பட்ட நகைநான் கென்ப.'—தொல். மெய்ப்பா. 4.

சுவை பயிலச் செய்கின்றார். கோவலர் இருந்த இடத்தை வெள்ளம் கவர்ந்தது. அவர்கள் ஆடுமாடு களை ஓட்டி வேறுபுலம் செல்கின்றனர். இதைக் கீரர் "ஏறுடை இன நிரை வேறு புலம் பரப்பி" எனக் கூறு கின்றார். நிரை என்றால் பசுக்களின் கிடை அல்லது கூட்டம் அல்லது தொகுதி என்று பொருள்படும். இனநிரை என்பது என்ன? 'எருமையையும் ஆட்டை யும் இனம் என்றார்' என்று நச்சினார்க்கினியர் பொருள் கொண்டார். இதற்கு மற்றுமொரு பொருளுமுண்டு; கோவலர்களுக்கு இனமான நிரை. கோவலர்களின் பேதைமையை முன்பு கண்டோம். பேதைகள் அறி வுடைய மக்கள் என்று கருதப்படுவர் அல்லர். இப் பண்பினரை மாக்கள் என்பது மரபு. கோவலர்களுக்கு இனம், மக்கள் வகுப்பில் எவரும் இலர்; மாடுகளே இவர்களுக்கு இனம் என்னும் குறிப்புத் தோன்ற வில்லையா? மாடுகளோடு பழகிப் பழகி, இவர்களும் மாடுகளாகிவிட்டனர்; மாடுகளுக்கு இனமாகிவிட்ட னர். மக்கள் இனம், மாட்டினமாகி மாக்கள் ஆனமை காட்டுவார் போலும்! மொழிகரந்து பயிலும் பழிப் புக்கரந்த அங்கதத்தை[1] இங்குக் காணலாம். இனம் என்ற சொல்லில் பழிப்புக்கரந்து பயில்வதைக் காண்க. இப்புலவர் அங்கதப் புலமையைக் காட்ட இக்கோவலர் தாமா அகப்பட்டனர்! இக்கிழப் புலவரின் குறும்பைக் காணுங்கள். குறுகிய அறிவிற்கே குறும்பு உண்டென் பர். பெரும்புலமைக்கும் அது பிழையன்றுபோலும்! அல்லால் தமிழ்ப் புலமைக்கே இது ஒரு தனி இயல்போ!

---

1. 'மொழிகரந்து சொல்லின் அது பழிகரப் பாகும்.'
— தொல். செய்யுளியல், 125.

நாம் முன்பு கண்டது பேதைமை அடியாய்ப் பிறந்த நகைப்பு; இவர்தம் சிறுபிள்ளைத் தன்மையடியாய்ப் பிறந்த சிரிப்பு. இப்போது இவர்களை மாடுகளின் இனமாக்கி உணர்த்திய நகைப்பு, எள்ளல் அல்லது கேலியடியாகப் பிறந்த நகைப்பு. கீரர் பெரும! நும் குறும்பு சாலும், சாலும்! ஏழைக் கோவலர்களை ஏன் இவ்வாறு பழிக்கின்றீர்? கேலி செய்கின்றீர்? இவையெலாம் விளையாட்டுச் சிரிப்பு அல்லவா? இவற்றைக் குறும்பு என்று எவ்வாறு சொல்லத்தகும் என்று ஐயுற வேண்டா. கோவலர்களைப் பேதைகளாகக் காட்டியது விளையாட்டு. இவர்தம் சிறுபிள்ளைத் தன்மையைக் காட்டியது விளையாட்டு. இவரை மாடுகளுக்கு இனமானார் என்றது குறும்பு. மாடுகளுக்கு இனம் எனக் காட்டியது விளையாட்டா? மற்ற இருவகைச் சிரிப்பின் தன்மைகளும் இப்போது காணும் சிரிப்பின் தன்மையும் மாறுகின்றதைக் காணுங்கள். இவ்வாறு இழித்துக் கூறுவது தம் பெருமை தோன்ற இழித்துக் கூறிச் சிரிப்பது, சிரிக்கச் செய்வது. இஃது ஆணவச்சிரிப்பு; புலமை தரும் இறுமாப்புச் சிரிப்பு. இதுதான் குறும்பு; சிறுகுறும்பு. கோவலர்கள் இக்குறும்பை, இவ்வாறு இழித்துக் கூறுதலை உணர்ந்திருந்தால், கீரர் தம் குறும்பிற் கேற்ற தழும்பு ஏற்றிருப்பர். கோவலர் கையிலுள்ளது கொடுங்கோல். அதன் கொடுமையின் சுவையை மாடுகள் மட்டுமன்றிக் கீரரும் கண்டிருப்பார். இப் புலமைக் குறும்பு ஆழ்ந்து செல்வது, நாமே முயன்று முயன்று கண்டபோது, கோவலர்கள் இஃதை எவ்வாறு உணர்வார்கள்? இதை அறிந்தேபோலும், பாட்டிலுள்ள மற்றவர்களை விட்டுவிட்டுக் கோவலரிடத்தில்

கீரர் தம் குறும்பைக் காட்டுகின்றார்! இக்குறும்போடு நில்லாது கோவலரைக் கண்டு இன்னும் சிரிக்கச் சிரிக்கச் செய்கின்றார்; சிரிப்பை மிகுதிப்படுத்துகின்றார். இன்னும் இவரைப் பற்றிக் கூறுகின்ற முறையிலேயே சிரிப்பை அதிகப்படுத்துகின்றார்.

'மெய்க்கொள் பெரும்பனி நலியக் கைக்கொள் கொள்ளியர்' என்றார். இவ்வாறு கூறியதில் ஒரு வகைப் பா நலன் காணப்படுகின்றது. கோவலர் உடலைப் பனி கொண்டது. அது நலிய, அதை வெருட்டப் பலர் கூடினர்; கையில் கொள்ளியை எடுத்தனர். குளிரை வெருட்டும் படை கொள்ளி. குளிரை வெருட்டத் திரளும் வீரர்களைக் காணுங்கள். மழையை வெருட்டும் மறவர் படையைக் காணுங்கள். பாட்டின் தொடக்கத்தே மேகங்கள் பனிப்பச் சூழ்ந்ததைக் கண்டோம். சூழ்ந்து பனிப்புப் பற்றிக் கொண்டது. பகைவர்கள் சூழ்வது, இடம் பற்றுவது முதலியன போர்த் தொழில். இப்போர்த்தொழில் உவமையே தொடக்கத்திலிருந்து தொடர்ந்து செல்வதைக் காணுங்கள். போர்க்கெழும் வீரர்களும் தலையில் கண்ணி சூடிச் செல்வார்கள். "தூறிவர் துறுகற்போல வேறுபல் பூளையொடு உழிஞை சூடிப் போர் வேட்டுச்" சென்ற கரிகாற் பெருவளத்தானும் அவன் படைஞரும் போலச் சென்றனர் போலும் கோவலர்கள்! திடீரென்று கரவால் ஆ கோள் கொள்ளக் கருதிய பெருமழைப் பகைவனை எதிர்த்து ஆநிரை மீட்டு வேறு புலம் பரப்பினர். அதன் அறிகுறியாகும் போலும், அதோ அவர் தலைமேல் காணும் நீடிதழ்க் கண்ணி! போர் தொடங்குமுன் ஆகோள் ஆநிரை மீட்டல் மரபு. மக்கள் தம் உடல் திமிரால்,

செல்வத்திமிரால், அறவின் திமிராலும், போர் புரிவார்கள். அந்தோ! பசுக்களும் இப்போருக்கு ஆளாக வேண்டுமா! போர் தொடங்குமுன் ஆக்களை ஆவியல் மாக்களை விலக்கல் அக்கால அறப்போர்; அறிவிலாக் காலத்து அறப்போர். அஃது அறிவுள்ளார் வகுத்த அனைத்தையும் அழிக்கும் அணுக்குண்டுப் போர் அன்று. வீரர் இங்குக்கூட மரபு வழுவ விடமாட்டார் போலும்! நிரை மீட்டாகிவிட்டது. போர்க் கெழு கின்றனர். போர்ப் பறையும் கேட்கின்றது. சற்றுக் காது கொடுத்துக் கேளுங்கள். பற்பறை கொட்டு கின்றது. இவ்வாறு பெறும் பா நலனையும் நாம் உற்றறிய வேண்டும். இப் பா நலந்தன்னிலும் சிறிது நுகர்ந்து மேலே செல்வோம்.

இங்கு உவமை விரியாது உள் பொதிய அமைந்த ஒருவகைப் பா நலம் காணப்படுகின்றது. வெளியே தெரியாது மறைத்த பொருளைக் காண்பதில் மனத்திற்கு எப்போதும் ஒரு பேராவல் உண்டு. மறைப்புக் குட்பட்ட பொருள் யாது, எத்தகைத்து எனக் காண, மனம் மிகச் சுருசுருப்புடன் இயங்கும்; மறைப்பு நீங்கிடின் மகிழ்வு பெரிது எய்தும். சிறுவர் விளையாட்டிலும், இம்மன இயல்பைக் காணலாம். மறைந்து கொள்ளும் சிறுவனை மற்றொருவன் தேடிக் காண்பான். கண்டுகொண்டால், கண்டவன் பெறுவது கணக்கிலா உவகை. மறைப்புக்கு ஆவலை எழுப்பும் ஆற்றல் உண்டு; மறை வெளிப்படின் மகிழ்வை அளிக்கும் ஆற்றலும் உண்டு. ஆதலின் இவ்வுணர்ச்சியை-இம்மறைப்புத் தரும் நலனை - இலக்கியத்திலும் பாவலர்கள் கையாளுவார்கள்.

சங்க காலத்தில் பாட்டில் வரும் விளங்காப் பொருளை (வேறொரு பொருளையன்று) விளக்கப் பெரும்பாலும் உவமையைக் கையாளுவார்கள். பாட்டிற்குச் சுவை தர உவமையை மறைத்தும் புதை பொருளாகவும் அமைப்பர். தோண்டி எடுப்பார்க்கு அது தூய சுவை தரும். பிற்காலத்தவரோ, உவமையை விரித்து விரித்து ஓயாது கூறுவர்; அலுப்புக்கும் வெறுப்புக்கும் அடிப்படை ஆகுமாறும் கூறுவர்

வெளிப்படையாய்த் தோன்றாது, உள் மறைத்த பா நலனை 'உள்ளுறை' என்பர்.[1] இங்குக் கீரர் வெளிப்படையாகக் கூறாது உள் மறைத்த உவமத்தால் சுட்டி, கோவலர்க்குப் போர்க்கோலம் செய்து விட்டு நகைப்புக்கிடம் அமைக்கின்றார். மழையை எதிர்த்துப் போருக்குச் செல்லும் மாபெரு வீரர்களைக் காணுங்கள். கொள்ளி எடுத்துப் போருக்குச் செல்லும் கொற்றவர்களைக் காணுங்கள். காண்பாருக்கு இத்தகு தோற்றம் நகைப்பும் தாராதிருக்குமோ? இவ்வாறு நகைதர அமைப்பதை உள்ளுறை நகை என்பர். மறைப்புத்தரும் மாபெரு நலனைக் கீரர் பயன்படுத்திக் கொள்ளும் முறையைக் காணுங்கள்.

உவமைகளைக் கற்பனை செய்ய அறியாதவர் அல்லர் சங்கப் புலவர். அவரும் உவமைகளைக் காட்ட வல்லவரே. ஆனால், அவர் எந்த அளவிற்கு உவமைகள் வேண்டுமோ, அவ்வளவிற்கே அவற்றை ஆளுவர். உவமைகளை உருட்டுவதிலும் கம்பருக்கு இளைத்தவர் அல்லர் கீரர். இதோ கீரர் உவமைகளைக் காணுங்கள்.

---

1. 'உடனுறை, உவமம், சுட்டு, நகை, சிறப்பெனக்
கெடலரு மரபின் உள்ளுறை ஐந்தே.'
—தொல். பொருள், 46.

அவைதாம் ஒன்று இரண்டா! அடுக்கு அடுக்காகக் கூறுவர்.

108 "வரைகண் டன்ன தோன்றல வரைசேர்பு
வில்கிடந் தன்ன கொடிய பலவயின்
வெள்ளி யன்ன விளங்கும் சுதையுரீஇ
மணிகண் டன்ன மாத்திரள் திண்காழ்ச்
செம்பியன் றன்ன செய்வுறு நெடுஞ்சுவர்."

இவை தாமோ? மாசுண்ட மேனியைப் 'புனையா ஓவியம் கடுப்ப' என்பர். இவை எல்லாம் பாட்டில் அமைத்த தெரியாப் பொருளைத் தெரிவிக்க வந்தன. பிற்காலப் புலவர்களைப் போன்று தம் அறிவைக் காட்ட வந்தவை அல்ல; கூறும் பொருளையே காட்ட வந்தவை.

உவமையை ஆக்க ஒருவகைப் புலமை வேண்டும்; அதனினும் ஆழ்ந்த புலமை வேண்டும் அவ்வுவமையைப் பாட்டுள் மறைக்க; மறைத்து உள்ளுறை அமைக்க. பிற்காலத்தில் உவமையையே பெரிதும் புலவர் கையாண்டனர். பிற்காலத்தில் உவமை, அது காட்டும் மினுக்கால், பொதுமகளிரைப் போன்றது.[1] யாவரும் எளிதில் காணுமாறும், கண்டு துய்க்குமாறும் நின்றது. அது தரும் இன்பமும் பெரும்பாலும் அவர் தரும் இன்பமே போன்றது. ஒரு பாட்டின் உள்ளுறை இல்லுறை மனைத்தக்க மாண்புடையாள் போன்றது. உள்ளுறை என்னும்

1. "உவமை என்னும் தவலருங் கூத்தி
பல்வகைக் கோலம் பாங்குறப் புனைந்து
காப்பிய வரங்கிற் கவினுறத் தோன்றி
யாப்பறி புலவரியத
நீப்பறு மகிழ்ச்சி பூப்ப நடிக்கும்மே"
—சித்திர மீமாஞ்சை அப்பைய தீக்ஷிதர்.

நன்மை—திறன் அல்லது திண்மை, கற்பு அல்லது கற்பனை-ஒரு பாட்டிற்கு உண்டாகப் பெறின், அப் பாட்டின் பெருந்தக்க யாவுள ?

உவமை தோன்றுமிடமெல்லாம் அதன் மினுக் கும் தளுக்கும் நம்மை மயக்கியேவிடுகின்றன. சிரிப்பை விட அது தரும் மயக்கம் பெரிது. கீரர் தரும் நகைப்புச் சுவையை நாம் முற்றிலும் கண்டோ மிலோம். அஃது இன்னும் கொஞ்சம் எஞ்சியுள்ளது. மீண்டும் அங்குச் சேர்வோம்.

ஏழைமைக் கோவலரைப் பெரும்படை வீரராகப் போர்க்கெழுபவர்போல உவமையை மறைத்து நகைப் புக்கிடம் தருவதை மேலே கண்டோம். நக்கீரர் கூறி யதுபோல விடாமழை பெய்கின்றபோது யாராவது கொள்ளியை எடுத்துச் செல்வார்களா? இவை எல் லாம் இல்லது புனைந்து உரைக்கும் பொருந்தாக் கற்பனை யாவனவோ? மழை பொழிகின்றபோது எந்த மூடனாவது கொள்ளியைக் கொண்டு செல்வானா? அவ்வாறு கொள்ளற்க. பேதைமை உணர்த்தும் புனைந்துரை இவை அல்ல. விடாமழை பெய்யுங்கால் மழை விடுமாறு - சற்றேனும் வெளிவிடக் கொள்ளி யைக் காட்டுதல் பழங்கால வழக்கம் என்பர். கன்னியர், கள்ளமற்ற முதியோர் ஆடையின்றிக் கொள்ளியை வானத்திடைக் காட்டினால் மழை நின்றுவிடும் என்பது ஒரு மூட நம்பிக்கை. அறிவொளி காணாத சிற்றூர் களில் இக்கொள்கையை இன்றும் காணலாம். இம்மூடக் கொள்கையை முற்றிலும் நம்பியவர் கோவலர். என்னே இவர்தம் மடமை! எவற்றையும் எளிதில் நம்பும் தன்மை! இவர் மடமையைக் காட்டி நகைக்கச் செய்கின்றார்.

இதோடு கோவலர்தம் வறுமையும் கீரர் உணர்த்துவார் போலும்! தக்கதோர் ஆடையுமில்லா இவர் வறுமையும் இங்கு உய்த்துணருமாறு அமைந்திருக்கிறது. தக்க ஆடையிருந்தால் அதுவே பெரும் பனியையும் தடுக்கும் மதிலாகும்; உடலைப் பனி கொள்வதும் தடைப்படும். இங்கு இருகோட்டு அறுவையைக் காணேம். புடைவீழ் அம்துகிலைக் காணேம் என்று முற்பகுதியிலும் கண்டோம். ஆடையின்றிக் கொள்ளியை வானிடம் காட்ட வானம் பொழியாது நிற்கும் என்பது மூடக் கொள்கை என்றும் சற்று முன்பு கண்டோம். கோவலருக்கு இயற்கையாக ஆடையே யில்லை. கொள்ளியை எடுத்து மழையை நிறுத்திவிடலாம், பெரும்பனி நலியும் என்று கோவலர் எண்ணினர் என்றும் குறிப்பால் உணர்த்துகின்றார் போலும்!

அம்மம்ம! கிழவர் வன்மை நகைப்பிலும் தெரிகின்றது.[1] 'எள்ளல், இளமை, பேதைமை, மடனென்று உள்ளப்பட்ட நகைநான்' கென்று உணர்த்துகின்றார். இவற்றை உணர்த்துவது பெரிதன்று. இவற்றை எல்லாம் ஒரே இடத்தில் பொருத்திக் காட்டுவதில் அவர் வன்மையைக் காட்டுகின்றார். நால்வகை நகைப்பிற்கு மேலும் அவர் நகைப்புச் செல்கின்றது. பேதைமைக்குச் சிரிப்பு, சிறுபிள்ளைத் தன்மைக்குச் சிரிப்பு, மடமைக்கு நகைப்பு, இழிவைக் கண்டு எள்ளி நகைத்தல், சிலேடையில் சிரிப்பு, அங்கதத்தில் நகைப்பு, உள்ளுறையிலும் நகைப்பு. இவர் சிரிப்பே ஒரு வியப்பாகின்றது. நகைப்பிலும் ஆழமா? அங்கதத்திலும் ஆழமா? ஆழம் ஆழம், எங்கும் ஆழம்!

1. தொல். பொருள், மெய்ப்பாட்டியல், 4.

8. யாப்பும் நோக்கும்

இதுகாறும் திறன் ஆய்ந்து தெளிந்த அடிகள் சிலவே. ஆயினும், அவற்றில் கண்ட திறங்கள் பல; துய்த்த பா நலன்கள் பல; சுவைகளும் பல. கீரர் யாப்பின் திறனையும் சற்றுக் காண்போம். இவர் யாப்பும் பிறர் யாப்பைப் போன்றதன்று; ஒரு தனி இயல்புடையது.

ஆசிரியப் பா அல்லது அகவற்பாவால் ஆனது இப்பாட்டு. இப்பாவிற்குரிய அசை, சீர் முதலியவற்றை உணர்வோம். "ஈரசை நாற்சீர் அகவற்கு உரிய," என்பது தொல்காப்பியம். அகவற்பாவிற்கு உரியவை இரண்டு அசைகள் கொண்ட சீர்களே. ஆனல், கீரர் பாட்டில், ஈரசைக்கு மேற்பட்ட அசைகள் கொண்ட சீர்கள் பயில்தல் காணலாம். வாடைப் பாட்டின் 8ஆம் அடியைக் காண்போம்; இதை அலகிடுவோம்.

1	2	3	4
கைக்-கொள்	கொள்-ளியர்	கவுள்-புடை-யூ-உ	நடுங்-க

இதன் மூன்ரும் சீரில் எத்தனை அசைகள் அமைந்துள்ளன? இங்கு நான்கு அசைகள் உள்ளன. இது நான்கசைச் சீர். அகவற்குரியது ஈரசைச் சீர் என்று விதித்துள்ளபோது இப்புலவர் எப்படி நான்கசைச் சீரை அகவற்பாவில் ஆளலாம்? இவருக்கு என்ன துணிவு! தொல்காப்பியம் விதித்த விதியையும் மீறி நடக்கின்ருர். 'வல்லான் வகுத்ததே வய்க்கால் எனும் பெருவழக்குக்கு இழுக்குமுண்டோ?' என்பதை இங்கு இவர் உணர்த்துகின்ருரா? வகுத்த விதிகளும் வழிவரு மரபும் வல்லவர்க்கில்லையா? விதி விதி என்பவெல்லாம் வேறு விதியிலார்க்கு ஆவ போலும்!

101087

இவ்வாறு யாப்பு முறையை மீறி நடக்கப் புலவர்களுக்கு உரிமை உண்டோ? உண்டு போலும். யாப்பின் இயல்பென்ன? அது எதற்காக அமைந்தது? யாப்புப் பாவலர்களுக்குத் துணை செய்ய அமைந்தது; தடை செய்ய அமைந்ததன்று. யாப்புத் தடை செய்யுமிடத்து அதனை மீறி நடக்கவும் பாவலர்களுக்கு உரிமையுண்டு. பாவலர்களோ, கட்டுக்கடங்காத காளைகள். அவர்களைக் கட்டி அடக்க யாப்புக்கு வன்மையுண்டோ? பாவலர் துணிந்துவிட்டால், கட்டெலாம் பொடிப் பொடியாய்த் தகர்த்து எறிவர். இவற்றை எல்லாம், இப்பாவலர்கள் இயல்புகளையெல்லாம் தொல்காப்பியர் நன்கு அறிவார் போலும்! இப்பாவலர்களில் வல்லோர்க்கென்று ஒரு தனிவழியை ஒதுக்கிவிட்டுச் சென்றார். அசையும் சீரும் ஓசையொடு சேர்த்து வேறு படுத்துவது வல்லோர் நெறி[1] என்று ஒரு தனி நெறி வல்லவர்க்கென வகுத்தார். இவ்வாறு வல்லவர்கள் சேர்க்கும் ஓசை எது? அது யாப்புக்குள், யாப்பிலக் கணத்தார் கட்டுக்குள், அடங்காத ஓசையே போலும்! ஓசை என்று இங்குக் குறிப்பிட்டது புலவர்கள் கருத்தைப் புலப்படுத்தத் தக்க ஓசை; படிப்போன் மனத்தைப் பற்றும் ஓசை. இவையே, யாப்பையும் மீறி, வல்லோர்கள் ஆளத்தக்கன. பாவலர் கருத்துக்களை எல்லாம், நுட்பங்களை எல்லாம் வெளியிட யாப்பு அவர்களுக்கு இடம் தரல் வேண்டும். வல்லவர்களுக்கு யாப்பே இடம் கொடுக்கும். ஒருகால் யாப்பு இடம் தாரா இடத்து அதனையும் மீறுவார்கள். இவ்வாறு

---

1. 'அசையும் சீரும் இசையொடு சேர்த்தி
வகுத்தனர் உணர்த்தலும் வல்லோர் ஆறே.'
—தொல். செய்யுள், 11

யாப்பிற்கடங்காது நடக்க வேண்டுமாயின், ஓசையின் நுட்பமெல்லாம் தெரிதல் வேண்டும். இவற்றைத் தெரிந்தால்தான் யாப்புள் அடங்காத ஓசையை யாப்பினுள் ஆளும் திறனைப் பெறலாம்.

யாப்புள் பயிலும் ஓசை இரு வகைத்து என்னலாம். யாப்புக்கடங்கி யாப்புள் பயிலும் ஓசை ஒரு வகை; யாப்புக்குட்படாது யாப்புள் பயிலும் ஓசை மற்றொரு வகை. யாப்பின் நுட்பம் தெரிதல் எளிது; யாப்புக்குட்பட்டு யாப்புட் பயிலும் ஓசையின் நுட்பம் தெரிதலும் எளிது; யாப்பின் வேறாய் யாப்புள் பயிலும் ஓசையின் நுட்பம் தெரிதல் அரிது. யாப்பின் நுட்பங்களுக்கு நூல்கள் உண்டு; இவற்றை மரபு கெடாது காக்கும் நூலும் உண்டு. யாப்புட்படா ஓசையின் நுட்பத்திற்கு அவ்வாறு ஒன்றுமில்லை. கட்டுக்கடங்காப் பொருளுக்கே காப்பியம் வரைந்த தமிழர் ஏன் இதற்கும் ஒரு காப்பு[1] ஏற்படுத்தினாரிலர்.

---

1. இலக்கணத்தின் இயல்பு மரபு வழாமல் காத்தல். இலக்கணம் என்பது தொல் முதுதமிழ்ச் சொல் அன்று. இலக்கணம் என்பது சொற்களின் அல்லது மொழியின் இயல்பைக் கூறுதல் அல்லது அழகைக் கூறுதல் என்று பொருள்படும் என்பர். பழந்தமிழர் இவற்றைத் தக்க கருத்துக்களாகக் கொண்டாரிலர். இலக்கணம் ஒரு மொழியின் அல்லது சொல்லின் இயல்பையோ, அழகையோ கூறலாம்; ஆனால், அதன் கடமை அஃது அன்று. ஒரு மொழியின்மரபு வழாமல் காப்பதே அதன் கடன் எனக் கொண்டனர் தமிழர். காப்பு நூல் என்று அதற்குப் பெயரிட்டனர். காப்பு இயன்றது காப்பியம் என்றனர். தமிழர் நூல்கள் இலக்கியம், காப்பியம் என இரு வேறு வகையின. இலக்கு இயன்றது—வாழ்க்கையின் இலக்கு அல்லது கலைகளின் இலக்கு இயன்றது—இவற்றின் இயல்பை உணர்த்துவது, இலக்கியம். மொழியின் காப்பு இயன்றது காப்பியம் என்பது பொருந்தும். இவை ஓவியம், பண்ணியம், கம்மியம் முதலியன போல் 'இயம்' என்னும் ஈறு எற்றவை.

இவ்வோசை ஒரு காப்பிற்குட்பட் டிருப்பதன்று; புலவர் ஆற்றலுக்கேற்ப ஆளப்படுவது. ஆதலின், ஓசையொடு சேர்த்து வேறுபடுத்துவது வல்லவர் நெறி[1] என்று புலவர்களுக்கே இதை விட்டுவிட்டனர். ஓசைக்கும் சொல்லுக்கும் அச்சொல் உணர்த்தும் பொருளுக்கும் தொடர்புண்டு; அப்பொருளை எண்ணும் மனத்திற்கும் தொடர்புண்டு. இவ்வியல்புகளையெல்லாம் நன்கறிந்தவர் போலும் நக்கீரர்! யாப்புள் அடங்கும் ஓசையை வன்மையுடன் ஆளுவர்; யாப்புள் படாத ஓசையையும் பாட்டுள் பெய்து தக்கவாறு ஆளுவர்.

இவ்வோசையைக் கொண்டே படிப்பவர் மனத்தைச் சில இடங்களில் கைப்பற்றுவர்; சொற்களின் ஓசையைத் திரித்தும், மிகுத்தும், கூறும் பொருளைப் படிப்போன் முன் தோன்றவும் செய்வர். இதற்கு வேண்டிய ஓசையின் கூறுகள் யாப்புள் அமைந்தால் அவற்றையே ஆளுவர். அமையாவிட்டால், அவற்றிற்குப் புறம்பிலும் செல்வர். இவை ஓர் எடுத்துக் காட்டால் விளக்க அமையும்.

"இருள்படப் பொதுளிய பராஅரை மராஅத்து" என்ற ஓர் அடியை எடுத்து இதன் ஓசையின் அமைவை ஆராய்வோம். இவ்வடியும் நக்கீரர் பாடியதே. இது திருமுருகாற்றுப் படையில் பத்தாவது அடி. பராரை என்பது பருத்த அடிமரம் என்று பொருள் படும். பரு அரை என்ற சொற்களைப் பராரை என்று மாற்றி ஓசையைத் திரித்தார். இதைப் பருஉ அரை என்றும் திரித்தாளலாம். இவ்வாறே பருஉச் சுடர்

1. தொல். செய்யுள், 11, உரை.

என்று வாடைப் பாட்டிலும் ஆளுகிறார். ஒரு பொருளைக் குறிக்கும் மூன்று வகை ஓசையுள்ள சொற்கள் உள்ளன. பரு அரை மரம், பராரை மரம், பரூஉ அரை மரம் என்பன. இம்மூன்று சொற்களையும் வாய்விட்டுச் சொல்லி இவை மனத்திற்குத் தரும் தோற்றத்தை நினைத்துப் பார்க்க வேண்டும். பரு அரை மரம்; இயல்பான பேச்சு முறையில் பேசும் சொல் போன்று இதன் ஓசை அமைந்துள்ளது. இதற்கு மனத்தை இழுக்கும் ஆற்றல் இல்லை; ஒரு தோற்றத்தைத் தரும் ஆற்றலும் இல்லை. இதே பொருளைப் 'பராரை' என்று சொல்லும்போது. இதற்கு மனத்தை இழுக்கும், அல்லது தன்னைக் கருதச் செய்யும் ஆற்றல் ஏற்படுகிறது. இதுமட்டுமா? ஒரு பருமை பெற்ற தோற்றத்தையும் மனத்திற்குக் காட்டுகின்றது. பராரை என்ற சொற்றொடர் தருகிற தோற்றம் வேறு; பரூஉ அரை என்ற சொற்றொடர் தருகிற தோற்றம் வேறு. ஆகார ஓசை அகன்ற பருமைத் தோற்றத்தைத் தருகின்றது. உகர ஒலி ஒருவாறு குறுகிக் கூர்ந்த பருமைத் தோற்றத்தைத் தருகின்றது. ஏன் இவ்வாறு ஓசை மாறத் தோற்றம் மாறுகின்றது? இதுவே ஓசைக்கும் பொருளுக்கும் உள்ள தொடர்பை உணர்த்துவது; அப்பொருளை எண்ணும் அல்லது நினைக்கும் மனத்திற்கும் ஓசைக்கும் உள்ள தொடர்பையும் உணர்த்த வல்லது.

மற்றும் ஒருமுறை "இருள்படப் பொதுளிய பராரை மராஅத்து" என்ற அடியை வாய்விட்டுச் சொல்லி அது மனக்கண் முன்னால் எவ்வகைத் தோற்றத்தைத் தருகின்றதென்று நுனித்துணர்வோம். இவ்வடியைச் சொல்லும்போதே இருண்டு அடர்ந்து

தழைத்த பருத்த அடியை உடைய பெரிய மரம்தானே நம் கண் முன்பாகத் தோன்றும். இது ஓசை தரும் நோக்கு. இது யாப்புக்குட்பட்ட ஓசை தரும் நோக்கு. இதேஅடியை, இது தரும் பொருளை, வேறு வகையாக யாப்புற யாத்து அது மனத்திற்குத் தரும் தோற்றத்தையும் காண்போம்.

கருத்தஇருள் செறித்தநிழல் கதித்ததழை யோடே
பருத்தஅடி விரித்தகிளை பருத்தமர மீந்த.

இந்த அடிகள் முற்றும் யாப்புற அமைந்தவை. மோனைகள் எதுகைகள் எல்லாம் நன்கு அமைந்துள்ளன. பொருளும் சிறப்பாகவே அமைந்துள்ளது. ஓசை துள்ளித் துள்ளி ஓடுகின்றது. கேட்பவர், படிப்பவர் கை கொட்டிக் கொண்டு ஆடுதற்கும் ஏற்ப அமைந்துள்ளது. ஆனால், இவை மனக்கண் முன் ஏதாவது தோற்றத்தைத் தருகின்றனவா? இல்லை. இல்லை. 'கடபுட' 'கறபுற' என்று உருளும் ஓசையைத் தர இவை துணையாவன அல்லால், கண் முன்பே ஒரு நோக்கை, ஒரு காட்சியைத் தூண்டும் துணையாவன அல்ல. ஏன்? இவ்வடிகளின் ஓசைப் பெருக்கம், தோற்றத்தை மறைத்து விடுகின்றது. நோக்கு, ஓசையுள் மூழ்கிவிட்டது; எண்ணும் எண்ணத்தைக் கூட அழுந்தச் செய்கின்றது. யாப்புக்குட்பட்ட ஓசையே அதிகப்பட்டாலும் துன்பம்; குறைந்தாலும் துன்பம். ஏற்றமுறையே, ஓசையைப் பாட்டில் அமைப்பது. ஆற்றல் சால் புலவருக்கே வாய்ப்பது.

இவ்விரண்டு அடிகளோடு கீரர் தம் சிற்றடியை ஒப்பிட்டுக் காண்போம்.

"இருள்படப் பொதுளிய பராரை மராஅத்து,"

என்ற சிறு அடி இப்போது ஒரு பேரொளி பெற்றுத் தோன்றுகிறது. கண் விட்டகலாக் காட்சியைத் தந்து, நோக்கத்தைத் தந்து நிற்கின்றது.

'நோக்கு' என்பது பார்வை என்று பொருள்படும். ஒரு பாட்டை அல்லது இலக்கியத்தைப் படிப்போன் படிக்கும் பொருள் தன் மனக்கண் முன்னுல் நிற்க அல்லது நிகழக் காண்பானுயின், அதுவே நோக்கு எனப்படும். அத்தகு இலக்கியம், நோக்கைத் தரும் இலக்கியமாகும். பழந்தமிழர் இத்தகு நோக்கைச் செய்யுள் உறுப்புக்களுள் ஒன்ருகக் கொண்டனர். படிப்போன் நோக்குப் பெறுமாறு செய்தல் அல்லது நோக்குப்பட யாத்தல் எளிதன்று. இதற்குப் பற்பல இயல்புகள் வேண்டும். ஒரு பொருளை அறுதியிட்டு, அதன் உயரம் இவ்வளவிற்று, அகலம் இவ்வளவிற்று, நீட்டம் இவ்வளவிற்று, நிறை இவ்வளவிற்று என, எல்லாவற்றையும் அளவுகோல் கொடு அளந்து, தூக்கி விட்டு நிறைகண்டு எடுத்துக் கூறினும், அவையெல் லாம் நோக்குத் தாரா. இவ்வாறு அளந்து அளந்து அளவு காணுதலும் பொருள்நூல் அறிவிற்குத் தேவை; பாட்டிற்குத் தேவையன்று. கைவல் பாமகன் எங்கோ, எப்படியோ, ஒரு சொல்லை அல்லது ஓர் அசையைப் பாட்டில் அமைப் பான். அவன் குறிக்கும் பொருள் படிப்போன் முன் இயற்கையான வடிவத்தோடு நிற்கும். அப்படி நிற்ப தும், உயிரற்றதொரு வெறுங்கூடா? வடிவமா? அன்று அன்று. வெறு வடிவத்தைக் காணுதல் நோக்கு அன்று. அப்படி வெறு வடிவம் மாத்திரம் தோன்று மானுல் அது புகைப்படம் என்னத் தகும்; பாட்டு எனத் தக்கதன்று என்பர். ஒரு பொருளின் உரு

வத்தை அல்லது வடிவத்தைச் சற்றும் தவறின்றி, இருந்தது இருந்தபடியே, காட்ட வல்லது புகைப்படம். அப்பொருளை உயிர் பெறச் செய்யும் ஆற்றல் புகைப் படத்திற்கில்லை. ஒரு பாவலன் தன் சொற்களால் புகைப்படம் போல அமைத்துப் பாட்டில் காட்ட வல்லவனாயினும், அது புகைப்படப் பாட்டு எனப் படுமே அன்றி, பாவியல் பாட்டாகக் கருதப்படுத லில்லை. அப்பொருள் பாவலன் பாடிய பாட்டில் உயிர்பெற வேண்டும். இக்காட்சியை—உயிர்பெற்ற நோக்கைப்—பாட்டுத்தர வல்லதேல், அதுவே நோக் குடைப் பாட்டு என்பர். இயற்கையைப் படி எடுத் தது போலப் பாட்டு அமையினும் அது படி எடுத்த பாட்டேயன்றி, நோக்குடைப் பாட்டாதல் இல்லை. இந்நோக்கு யாதென்பதை ஓர் எடுத்துக்காட்டால் நன்கு அறியலாம்.

நாடகக் காட்சிக்குச் செல்கின்றோம். மறந்தும் பொய் கூறா வாய்மையாளன் அரிச்சந்திரன் என்பான் வாய்மைக் காட்சி நடைபெறுகின்றது. அக்காட்சி யில் ஆழ்கிறோம். அரசன் மனைவி, மகனை இழந்து, சுடுகாட்டில் நின்று தவிக்கின்றாள். "இனி யாரை நம்பி உயிர் வாழ்வமிங்கு இறையோனும் யானும் அவமே!" என்று அழுகின்றாள்; அலறுகின்றாள்; கல் லெலாம் உருகக் கரைகின்றாள். பார்ப்போர் கண்ணில் எல்லாம் கண்ணீர் தாரை தாரையாய் ஓடுகின்றது. இப்படி ஈடுபட்டிருப்பவர் மன நிலையை ஆராய்தல் வேண்டும்.

அவர் பார்ப்பது என்ன? சுடுகாடா? அன்று. அரசன் மனைவியா அங்கு அழுபவள்? அல்லள். இறந்த

வன் அரசன் மகனு? அல்லன். பார்ப்போர் இருப்பது எங்கு? சுடுகாட்டு அண்மையிலா? அன்று. பார்ப்போருக்கு இவையெலாம் உண்மைக் காட்சிகள் அல்ல என்பது தெரியுமா? தெரியும், தெரியும். பொய், பொய், எல்லாம் பொய் என்பதும் தெரியும். அப்படியிருந்தும் ஏன் அழுகிறுர் ? அந்நாடகக் கலை அந்நிகழ்ச்சிகளின் உண்மையான நோக்கைத் தந்தன; மேடைமேல் மெய்ப்பட, உண்மையே எனத்தோன்ற, நிகழ்ந்தன நிகழ்ச்சிகள். இந்த நோக்குப் படுத்திய பாடு பார்ப்போர்பால் கண்ட மெய்ப்பாடுகள். உண்மையான நோக்கை நாடகமோ, பாட்டோ, ஓவியமோ தர வல்லதேல், அதைப் பார்ப்பவர் அறிவெல்லாம் எங்கோ பதுங்கிவிடுகிறது. அந்நோக்குத் தரும் உணர்ச்சியில் அவ்வுணர்ச்சி தரும் நுகர்வில் அவர் ஆழ்கின்ருர்; தம்மை மறக்கின்ருர். அறிவின் முனைப்பு அறவே ஒழிகின்றது. பகுத்துணர்வு என்பதே ஓய்ந்துவிடுகின்றது; உணர்ச்சி வெள்ளத்தில் ஆழ்ந்து ஆழ்ந்து மிதந்து மிதந்து தாம் காண்பவெல்லாம் உண்மையே போன்ற தோற்றத்தைப் பெறுகின்ருர்; அழுகின்ருர்; சிரிக்கின்ருர். இத்தகை உணர்ச்சியைத் தருவது நோக்கு. நாடகமாயினும், பாட்டாயினும், ஓவியமாயினும் அவை தரும் உணர்ச்சி எல்லாம் ஒன்றே; நுகர்வெல்லாம் ஒன்றே. நோக்கு என்ற உறுப்பு, கலைகளுக்கெல்லாம் பொது உறுப்பு.

எல்லாப் பாக்களும், எல்லா நாடகங்களும் இவ்வித நோக்கைத் தர வல்லன அல்ல. நாடக ஆசிரியன் வல்லவனுனல், நடிப்போன் வல்லவனுனல், இந்நோக்கை நாடகம் தரும். பா மகன் வல்லவன் ஆனுல், அவன் பாட்டு இந் நோக்கைத் தரும். ஓவியப்

புலவன் வல்லவன் ஆனுல், ஓவியம் இந்நோக்கைத் தரும்.

இந்நோக்கைத் தருதல் எளிதன்று. படிப்போனு யினும், பார்ப்போனுயினும் அவன் முதலில் தன்னை மறக்கச் செய்தல் வேண்டும். அறிவு முனைப்பு அழிதல் வேண்டும். உய்த்துணர்வு ஒழிதல் வேண்டும். இவை எளிதில் கை கூடுவனவா? படிக்கும்போது அல்லது பார்க்கும்போது தன் நினைப்புத் தோன்று மாயின், நோக்கு கலைந்து விடும். கூத்தும் சுவை தாராது; பாட்டும் சுவை தருதல் இல்லை. படிப் போர் அல்லது பார்ப்போர் கொட்டாவி விடுவர்; எழுந்து சென்று விடுவர்; அல்லது உறக்கம் கொண்டு விடுவர். அறிவு முனைப்பு அல்லது உய்த்துணர்வு தோன்றுமாயின், அது தோன்றியவுடனே, கெட்டது நோக்கு; "நாம் எங்கு இருக்கின்ருேம்? பார்ப்பது உண்மை நிகழ்ச்சியா?" என்று பார்ப்போர் இவ்வா றெல்லாம் நினைக்கத் தொடங்குவர். படிப்போனும் அவ்வாறே 'இச் சொல்லுக்குப் பொருள் என்ன? இதற்கு வேறு பொருள் உண்டா? குறிப்பால் உணர்த்தும் பொருள் எது? எஞ்சி நிற்கும் பொருள் எது? இந்தச் சொல்லாட்சி வேறு எங்கு உண்டு, என்று இவ்வாறெல்லாம் நினைக்கத் தொடங்கினுல் இந்த அறிவு ஆராய்ச்சி அவன்முன் நிற்குமே தவிர, நோக்கு எங்கோ ஓடிவிடும். ஆதலின், பாவலன் நோக்கைத் தருமுன் படிப்போனுடைய மனத்தைக் கைப்பற்றல் வேண்டும். அவன் மனத்தை அடிமை யாக்கல் வேண்டும். இவ்வாறு செய்யப் புலவர்கள் வேறு வேறு முறைகளைக் கையாள்வார்கள். கிரர் கையாளும் முறைகளைக் கண்டோம். முதலில் வியப்

புணர்ச்சியைத் தந்தார்; அச்ச வுணர்ச்சியைத் தந்தார்; விரைந்து இழுத்துச் சென்றார்; நகைப்பூட்டினார்; மனம் அவரிடம் அடிமையானதைக் கண்டு கொண்டார். நோக்கை விரிக்கின்றார். இதோ காணுங்கள்; சற்று மனக் கண் திறந்து காணுங்கள்; பாக்கண் கொண்டு பாருங்கள்.

> "கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க
> மாமேயல் மறப்ப மந்தி கூரப்
> பறவை படிவன வீழக் கறவை
> கன்றுகோ ளொழியக் கடிய வீசி."

இவ்வடிகளைச் சொல்லிச் சொல்லி மனக்கண்ணால் காணுங்கள். நம் முன்பாகக் 'கவுள் புடையூஉ' நடுங்குதலைக் காணலாம். மா மேயல் மறந்து நிற்றலைக் காணலாம். மந்தி கூர்ந்து கூனிக் குறுகி இருத்தலைக் காணலாம். பறவை வீழ்தரக் காணலாம். பசு கன்றை உதைத்தலைக் காணலாம். இதோ இவை யெல்லாம் நம் முன்னே நிகழ்கின்றன; மெய்ப்பட உண்மையே எனத் தோன்றுமாறு நிகழ்கின்றன. நிகழ்கின்றவாறு மெய்ப்படக் காட்டுகின்றார். இவற்றை உணர உய்த்துணர்வு ஒன்றும் வேண்டுவதின்று. இவ்வடிகளில் ஆழ்ந்த பொருள் உள்ள சொல் ஒன்றுமில்லை. குறிப்புப் பொருளோ எச்சப் பொருளோ இசைப் பொருளோ எதுவுமில்லை. ஆழ்ந்து ஆழ்ந்து செல்கின்ற புலவர், ஏன் அவ்வாழத்தை இங்கே விட்டகன்றார்? நோக்குத் தரும்போது ஏதாவது ஆழ்ந்த பொருளின் அறிவு மணம் சிறிது வீசினும் மனம் அங்குச் சென்றுவிடும். ஆதலின், அதனை அறவே விலக்கினார். இதுவே மெய்ப்படு நோக்குடைய பாட்டு; இந்நோக்கைக் காணக் 'கவிக் கண்ணே'

வேண்டும்; ஆய்வின் கண் தேவையன்று. உணர்ச்சி வாயிலே வேண்டும்; அறிவின் வாயில் வேண்டுவதின்று.

ஆனால், இந்த நோக்கின் கடைசியை மனம் சேர்கின்றபோது, இந்நோக்கை மாற்றக் கீரரே வழி அமைக்கின்றார். இயற்கைக்கு மாறான ஒரு நிகழ்ச்சியைச் சேர்க்கின்றார். பசுவா கன்றை உதைத்தது? எல்லாப் புலவர்களும் பசுவை அன்பிற்கு எடுத்துக்காட்டாகக் கூறுவார்களே, இவர் ஏன் பசுவின்பால் அன்பின்மையைக் காட்டுகின்றார் என்று எண்ணும்போது நோக்குக் கலைந்து விடுகின்றது. (இதன் விரிவைப் பொருள் நலப் பகுதியில் காண்க.) இவ்வாறு இந்த இடத்தில் எண்ண இயலாதவர்களும் அடுத்த அடியில் 'குன்று குளிர்ப்பன்ன கூதிர்ப்பானாள்' என்று படிக்கும்போது, தாமே எண்ணத் தொடங்கிவிடுவார்கள். குன்றையும் குளிரச்செய்யத் தக்கன நண்பகல்கள் என்றால் அவை எவ்வாறு இருக்கும்? குளிரின் கொடுமை எவ்வாறு இருக்குமோ? மா, பறவை, குரங்கு, கறவை இவை வருந்திய வருத்தத்திற்கு மேல் வருத்தம் தருமோ என்று இவ்வாறெல்லாம், படிப்போர் எண்ணத் தொடங்கி விடுகின்றனர். இவ்வடி நோக்குத் தருவதன்று; நோக்கைக் கலைப்பது. கீரர் நோக்கைத் தந்தார்; அதைக் கலைத்து அழகுணர்ச்சிக்குள் இழுத்துச் செல்கின்றார். இதன்மேல் செல்லுமுன் இங்குச் சற்று நின்று இந்நோக்குத் தரக் கீரர் கையாள்கின்ற முறையைக் கண்டு செல்வோம்.

முன்பு, 'பராரை மராஅத்து' என்ற சொற்கள் எவ்வாறு நோக்குத் தருகின்றன என்பதைக் கண்

டோம். பருஅரை என்ற சொல்லைத் திரித்துப்பராரை என்று அமைக்கின்ருர். பரு என்ற சொல் இரண்டு மாத்திரை அளவுள்ள சொல். 'பரா' என்பது மூன்று மாத்திரை அளவுள்ள சொல். இரண்டு மாத்திரைச் சொல்லை மூன்று மாத்திரை யாக்கின மாத்திரத்தில் அது நோக்குத் தரும் ஆற்றலைப் பெறுகின்றது. இச் சொற்களைக் கொண்ட அடியை மறுமுறை நினைவு கூருங்கள். செய்யுளில் ஒரு மாத்திரை எவ்வாறு நோக்குத் தருகின்றது என்பதை இது காட்டும். "மாத்திரை முதலா அடிநிலை காறும் நோக்குதற் காரணம் நோக்கெனப் படுமே" என்பது தொல்காப்பியம். இனி மராஅத்து என்பதில் மராம் என்ற சொல்லிற்கு மராஅம் என அளபெடை கொடுத்தார். இதில் உள்ள அளபெடை அசை குறைந்தவிடத்து இசை நிறைக்க வந்தது. இசை நிறைப்பதோடு நோக்குத் தரவும் வந்தது. இவ்வளபெடையின்றி இவ்வடியைப் படித்துப் பார்த்தால் இதன் உண்மை விளங்கும். இவ்வடியை அலகிட்டுக் காணுங்கள். இதன் அளவும் ஓசையும் யாப்புக்குட்பட்டே நிற்கின்றன; ஒரு மாத்திரை மிகுதிப்படுத்தியும், யாப்புக்குட்பட்டே நிற்கின்றன. யாப்புள் பட்ட ஓசையைக் கொண்டே இங்கு நோக்கை உணர்த்திஞர்.

இனி நோக்குத் தரும் பெரும்பகுதியான, 'கவுள் புடையூஉ நடுங்க' முதல் 'கடிய வீசி' இறுதியாக உள்ள அடிகளை அலகிட்டுக் காண்போம். இவை நோக்குத் தரும் ஆற்றலை முன்பே கண்டோம். இப்போது காண்பது அந்நோக்கைத் தரக் கீரர் கையாளும் முறை. கவுள் - புடை - யூ - உ என்ற மூன்ருவது சீர் நான்கு அசை பெற்றது. இரண்டு அசைச் சீரை

வேண்டுமென்றே, யாப்பு இலக்கணத்திற்கு முரணுக நான்கு அசைச் சீர் ஆக்கினர் என்பதைத் தொடக்கத்தில் கண்டோம். 'கவுள் புடையூஉ நடுங்க' என்பதை மாற்றிக் 'கவுள்புடை புடைக்க' என்று அமைப்போம். இப்போது, அந்த அடி அகவற்பாவிற்கு உரியதாய் முற்றும் யாப்பு இலக்கணத்திற்குப் பொருத்தமாக அமைந்து விட்டது; நல்லதோர் ஓசையும் பெற்று விட்டது. புடை என்று நக்கீரர் சொன்ன சொல்லேயே மறுமுறையும் இரட்டித்து அமைக்கத் தெரியாமலா 'புடையூஉ நடுங்க' என்று அமைத்தார்? இவ்வாறு மாற்றவேண்டுமென்றே இதை மாற்றி அமைத்துள்ளார் என்பது வெளிப்படை. இவ்வாறு மாற்றியதும் நோக்குத் தருதற்பொருட்டு. 'கவுள்புடை புடைக்க' என்று சொல்லிப் பாருங்கள். இது ஒரு நோக்கும் தருவதில்லை. 'கவுள் புடையூஉ நடுங்க' என்ற தொடர் சொல்லும்போதே, கவுள் புடை புடைத்து நடுங்கிக்கொண்டே இருக்கிற தோற்றத்தைத் தருகின்றது. அளபெடையை எடுத்துவிட்டுப் 'புடையூ' என்று சொல்லிப் பார்ப்போம். இப்போது முன்பு கண்ட தோற்றத்தை இது தருவதில்லை. ஏதோ ஒரு தோற்றத்தை இது தருகின்றதாயினும், அத்தோற்றமும் விரைவில் மறைந்து போகின்றது. ஆனுல், 'உ' என்ற ஒரு மாத்திரை சேர்கிறபோது 'புடையூஉ நடுங்க' என்று சொல்லு முன், நடுங்கிக்கொண்டேயிருக்கின்ற தோற்றம் நம் முன், நிற்கின்றது. இங்கு நோக்குத் தர, 'யூ' என்ற ஓர் எழுத்து மட்டும் போதுவதன்று. 'உ' என்ற ஒரு மாத்திரையும், 'யூ' என்ற ஓர் எழுத்தும் சேர்ந்து நோக்குத் தருகின்றன. ஒரு சீர், நோக்குத் தருகின்றதென்றும் கொள்ளலாம். இது யாப்புக்குட்

படாது செய்யுளுள் பயிலும் ஓசை. இதை ஆளும் முன்பு, இதை அளந்து கண்டு - நோக்குத் தர எவ்வளவு வேண்டுமென்று கண்டு - ஓர் எழுத்துச் சேர்த்து, அது நோக்குத் தாராமை கண்டு, பின்னும் அதற்கு ஓர் அசை சேர்த்து அளபெடுத்து, நோக்கு அமைக்கும் ஆற்றலைக் காணுங்கள். இனி, இதற்கு அடுத்த அடியை அலகிடுவோம்.

"மா - மே - யல் மறப் - ப மங் - தி கூ - ர."

இதில் முதற்சீர் மூன்று அசைச்சீராய் அமைந் துள்ளது. அகவற்சீருக்கு ஓர் அசை அதிகம். இவ் வடியும் இதற்கடுத்த இரண்டு அடிகளும் குறி லோசையே மிகுந்து, நேரசையே மிகுந்து, அடியும் அதன் உருவத்தில் அல்லது நீளத்தில் குறைந்து, அதன் ஓசையே ஒருவகை மாற்றம் அடைந்து நோக்குத் தரு கின்றது. இங்கெல்லாம் மாத்திரை மட்டுமன்றி, எழுத்துமட்டுமன்றி, சீர்மட்டுமன்றி, அடிகளும் நோக் குத் தருகின்றன. இவற்றின் நுட்பமெல்லாம், கைவல் பாமகனுக்கே தெரியும். இவற்றை நுணுகிக் கண்டு உணரல் வேண்டும்.

ஓசை ஒன்றே நோக்குத் தர வல்லதா? அன்று. அதற்கு வேறு பல் துணை வேண்டும். இங்கு, ஓசை யொடு மெய்ப்பாடும் சேர்ந்து, நோக்குத் தந்தது. இங்கு உணர்த்தப் புகுந்தது ஒரு பொருளை - மரம் போன்ற ஒரு பொருளை - அன்று; ஒரு பொருளின் இயல்பை அஃதாவது வாடையின் குளிரை. குளிர் காணத்தக்க பொருள் அன்று. காணத் தக்க பொருளைச் சில சொற்களைத் தேர்ந்தெடுத்துச் சொல்லி, ஓசையை அதற்கேற்ப அமைத்து நோக்குத்

தருமாறு செய்துவிடலாம். இதை, 'இருள்படப் பொதுளிய பராரை மராஅத்து' என்ற அடியில் கண்டோம். இப்போது உணர்த்தப் பெறுவது வாடைக் குளிர். வாடைக்குளிரின் உணர்ச்சியைத் தரல் வேண்டும். அதன் நோக்கையும் தரல்வேண்டும். மா, மந்தி, கறவை, பறவை இவைகளுக்குக் குளிர் தரும் மெய்ப்பாடுகளை உணர்த்தி, அம்மெய்ப் பாடுகள் நம் முன் நிகழ்வதற்கேற்ற ஓசையை அளவறிந்து அமைத்து, இந்நிகழ்ச்சிகள் நம்முன் நிகழுமாறு செய்கின்றார். இம்மெய்ப்பாடுகளை மெய்ப் பட உணர்த்தி, உய்த்துணர்வின்றி உணருமாறு அமைக்கும் திறனே திறன். மெய்ப்பாடு கூத்திற்கு மாத்திரம் உரிய உறுப்பன்று; செய்யுள் உறுப்புக்களுள் ஒன்றாகவும் கொண்டனர் தமிழர்.

இத்தகு நோக்கை, இஃதோடு விட்டாரிலர் கீரர். 'நோக்கிற்கு நக்கீரதேவர்'[2] என்ற உரிமைச் சீட்டும் பெற்றவர் கீரர். அம்மம்ம! நோக்கைத் தரும் உரிமை வேறு எவருக்கும் இல்லையா? கீரர் தாம் பெற்ற உரிமையில் வேறு எவருக்கும் பங்கு கொடாது, இந்நோக்கைத் தம்முடன் கொண்டு சென்றார் போலும். 'ஒருவர்க்கே உரிமையான பொருள் நமக்கு எதற்கு' எனத் தமிழர், எங்கேயாவது இந்நோக்குக்

1. 'உய்த்துணர் வின்றித் தலைவரு பொருளான்
மெய்ப்பட முடிப்பது மெய்ப்பா டாகும்.'
—தொல். செய்யுளியல், 516

2. 'வாக்கிற் கருணகிரி வாதவூ ரார்கனிவில்
தாக்கில் திருஞான சம்பந்தர் - நோக்கிற்கு
நக்கீர தேவர் நயத்துக்குச் சுந்தரனார்
சொற்குறுதிக்கு அப்பரெனச் சொல்.'

கொஞ்சம் தங்கியிருந்ததையும் யாப்பிலக்கணத்தி லிருந்து வெருட்டி ஓட்டி விட்டனர்.

நோக்கினது உரிமை, கீரரிடமே இருக்கட்டும்; நமக்கு வேண்டா. என்னும், இன்னும் அவர் காட்டும் நோக்கு எஃது என்பதை மாத்திரம் காண்போம்.

நக்கீரரைப் பின்பற்றிச் செல்வோம். புதுப்பெயல் பொழிந்தது. கோவலர் வருந்தினர்; மா வருந்தின; புள் வருந்தின; மழை குறைந்தது; துவலை கற்கின்றது; குளிர் குளிர்! வாடைக் குளிர்! மகளிர் செந்நெருப்பார்கின்றனர். காதலர்ப் பிரிந்தோர் புலம்புகின்றனர். பெயல் கனைந்து கல்லென் துவலை தூவுகின்றது. 'கூதிர் நின்றன்றாற் போதே' என்று பாட்டின் 72-ஆம் அடி உணர்த்துகின்றது. கூதிர் நிலைத்துவிட்டது என்றதன் பிறகு வாடையைப்பற்றிய எந்தக் குறிப்பும் நெடுந்தூரம் வரையில் பாட்டிற் காணோம்; படித்துப் பாருங்கள். நூலறிபுலவர், நுண்ணிதிற் கயிறிட்டு அமைத்த கோவிலுக்கு அழைத்துச் செல்கிறார். நெடுநிலையைக் காண்கிறோம். கோவில் வாயிலைக் காண்கின்றோம். தருமணல் ஞெமிரிய முற்றத்தைக் காண்கின்றோம். புல்லுணாத் தெவிட்டும் புரவிகள், கிம்புரிப் பகுவாய் அம்பணம், கலிழ்ந்துவீழ் அருவி, வினை மாண் பாவை இவைகளைக் காண்கின்றோம். இங்கெலாம் வாடையைக் காணோம்; கூதிரின் குளிரைக் காணோம். வில்கிடந்தன்ன கொடிகள், வரை கண்டன்ன தோற்றம், அழகிய சுவர், அழகிய தூண்கள், அழகிய கட்டில். இங்கெல்லாம் வாடையைப் பற்றி ஒரு சொல்லும் காணோம். குளிரைப் பற்றி ஒரு சொல்லும் காணோம். கட்டிலின்மேல்

அரசி துயரிடை மூழ்கியவாறு அமைகின்ருள். இங்கும் வாடையைக் காணேம். வாடைக் குளிரைக் காணேம். அரசன் பாசறையில் புகுகின்றேம். 173ஆம் அடியில் நூறு அடிகளுக்கப்பால், இதோ வடந்தைத் தண் வளி வீசுகின்றது. இந்த அடியைப் படிக்கும் போது "இன்னுமா கூதிர்! இன்னுமா வாடை!" என்னும் உணர்ச்சி தோன்றுகின்றது. எங்கெங்கோ சென்றேம். எவ்வளவோ காலமாயிற்று; இன்னுமா, நெடுங்காலமாகவா, வாடை, வாடை வீசுகின்றது? நெடுநல்வாடை, நெடுவாடை, நீண்ட வாடை, எவ்வளவோ நேரமாகியும் இன்னும் வீசிக் கொண்டேயிருக்கின்றது.

காலம் சென்றது என்பது தெரியவே இல்லை. அஃது எவ்வாறு சென்றது? அதன் காலடிச் சத்தமே கேட்கவில்லை. மெல்லெனப் பறந்து சென்றதோ? கீரர் காட்டிய 'மென்பறைத் தொழுதி'[1]—மெல்லெனப் பறக்கும் கொக்கின் கூட்டம்—ஓசை தெரியாது, கயல்களுக்குத் தெரியாது, எவ்வாயும் கவர்ந்து கொண்டு, ஒரு மீன் வருமளவும் நின்றுகொண்டிருக்கிறது.[2] நோக்குத்தரும் காலமும் மெல்லெனப் பறந்து சென்று படிப்போர் மனம் வரும் வரும் என்று அவர்களையறியாமல் ஓசையின்றிக் காத்திருக்கின்றது. புனல் சாய்கின்றது. நீர் ஓட்டம் குறைகின்றது. கயல்கள் வெளியேறுகின்றன. தம்மைப் பிறரறியாவாறு நின்ற கொக்குகளைக் காண்கின்றன. திடுக்கிடுகின்றன. அந்தோ! அக்கயல்கள் எவ்வாறு துடித்தனவோ! எப்பாடுபட்டனவோ! பாமழை சாய்கின்றது. பாட்டின்

1. நெடுநல்வாடை, 15. 2. நெடுநல்வாடை, 17.

இறுவாய்க்கு அண்மையில் சேர்கின்றோம். கால நோக்கெனும் கொக்குத் திடுக்கெனத் தோன்றுகின்றது. நம்மையும் கயலென்று நினைத்தோ இந்நோக்கைக் கொக்கென நிறுத்தினர் இக்கொங்கணவர். அக்கயல்களைப் போன்று நாம் பயந்து ஓடுவோம் அல்லோம்; நீருள் புகுந்து ஒளிப்போம் அல்லோம். இந்நோக்கையே கட்டிப்பிடிப்போம்; விடமாட்டோம்.

நெடுவாடை என்ற பெயரே ஆழ்ந்த கருத்துடையது என்பது, முற்பகுதியில் குறிக்கப்பட்டது. இப்பாட்டின் நலமெலாம் அறிந்த பின்பே இப்பெயர் நலம் விளங்கும் என்பதும் அங்கு உணர்த்தப்பட்டுள்ளது. இப்பெயர்ப் பொருத்தத்தை இப்போது காணுங்கள். அருமைப் பெயரின் அழகை இப்போது காணுங்கள். வாடைத் திருமகவிற்குக் கீரர் கருதிக் கருதி இட்ட பெயர்; பல் நலம் பெறு பெயர்; பா நலம் கனியும் பெயர். இப்பெயர் ஒன்றே போதுவது போலும், கீரர் புலமையை, அவர் கருத்து ஆழத்தை, அவர் பா வன்மையை, நிலைநாட்ட. இப்பெயரின் ஆழம் இம்மட்டோடு நின்றிலது; இனியும் காண்போம்.

இவ்வாறு ஒரு நிகழ்ச்சியை ஒரு நிலையில் நிறுத்திவிட்டு, அதை மறக்கவும் செய்து, பின்பு அதைப் பல நிகழ்ச்சிகளுக்கு அப்பால் தொடர்ந்து கூறுதல் தற்காலக் கதைப் புலவர்கள் (நாவல் வல்லார்கள்) கையாளும் முறை, நீருள் மூழ்கி நெடிது தூரம் நீருள்ளே சென்று பின்பு எழுதரும் விளையாட்டுப் போலும் இது. இதனாற் பெறும் பா நலன், இலக்கிய நலன் பல. இவையெலாம் விரிக்கிற் பெருகும். இவையெல்லாம், பழந்தமிழர்கள் அறிந்திருந்

தார்களா? என்ன புதுமை! என்ன புதுமை! அறிந்தார்கள் என்பதைக் காலத்தின் இந்நோக்குக் காட்டும். காலம் என்பதைச் செய்யுள் உறுப்புக்களில் ஒன்றாகக் கூறும் தொல்காப்பியம்.[1] தெரிந்தனர் உள்ள அல்லது நினைக்க, நினைத்து நினைத்து வியக்கப் பொருள் நிகழ்வுரைக்கின்றது; காலத்தின் நோக்கையும் தருகின்றது இப்பாட்டு.

என்னே இத்தமிழர்தம் அறிவு! நினைக்க நினைக்க வியப்பையே தருகின்றது. "கலை, கலை" என்பது என்ன? அதன் இயல்பு என்ன? அதற்குக் 'கரு' அல்லது 'உயிர்' எது? என்று "டால்ட்ச்டாய்" (Tolstoy) என்ற இரஷ்யப் பேரறிஞர், பெரும்புலவர், பேராசிரியர், ஆராய்ச்சி செய்தார். இளமை தொடங்கி, முதுமை வரையில், நெடுங்காலம், தம் வாழ்நாள் எல்லாம், இதனை ஆராய்ந்தார் என்பர். தாம் உணர்ந்ததை, உணர்ந்தவாறே பிறரும் அறியுமாறு, எழுதி வெளியிடப் பதினைந்து ஆண்டுகள் முயன்றார் என்பர். எழுதியதைத் திருத்துவார், மறுபடியும் எழுதுவார். இவ்வாறு, பலமுறை முயன்று, கடைசியாகக் கலை என்பது என்ன என்பதைப்பற்றி ஓர் அரும்பெருங் கட்டுரை வரைந்தார். அவர் கண்ட உண்மை எது? அதனைச் சுருங்கக் கூறின் அதுவே நோக்குப்பட ஆக்கல் அல்லது 'நோக்கு' என்று கூறத் தகும். கலை வல்லவன், ஓவியக் கலையோ, பாவியல் கலையோ, பாவைசெய் கலையோ வல்லவன், இந்நோக்கைத்

1. 'இறப்பே நிகழ்வே எதிரது என்னும்
திறத்தியல் மருங்கில் தெரிந்தனர் உள்ளப்
பொருள்நிகழ்வு உரைப்பது காலம் ஆகும்'
—தொல். பொருள். 1458.

தருவாணுயின்,—மெய்ப்பட முடித்துப் படிப்போன் அல்லது பார்ப்போன் அதில் ஆழத்—தன்னை மறந்து ஆழ—நோக்கைத் தருவாணுயின்—அதுவே அவன் கலைக்கு உயிர்; அதுவே கலைக்குக் கருவாய் அமைவது என்பதைக் கண்டார். இப்பெரும்பேராசிரியர், இப்போது கண்ட உண்மையைத் தமிழ்ப் பெருமக்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கண்டார்கள். பலமுறை ஆய்ந்தும், பற்பல ஏடுகள் எழுதியும், வெளியிட இயலாது தவித்த கருத்தைத் திரட்டி உருட்டி ஒருசிறு சொல்லில் அமைத்தார் என்ருல், அவர்தம் அறிவுதான் என்னே! அவர்தம் புலமைதான் என்னே! இதைக் காப்பியத்திலும் பெய்து மரபு கெடாதவாறு காப்பளித்தனர்; இன்னும் பல இயல்புகள் கலைக்கு உண்டென இரழ்யப் பேராசிரியர் உணர்த்துவார். அவையெல்லாம் ஈண்டு வேண்டற்பாலன அல்ல. டால்ட்ச்டாய் பேரறிஞரும் பாவிடைப்படும் ஓசைகள், இந்நோக்குக்குப் பெருந்துணையாவதை ஆராய்ந்திலர். 'ஷெல்லி' (Shelly) என்னும் பெரும்பாவலரோ பாவோசைகளுக்கும் அவை காட்டும் பொருளுக்கும் அப்பொருளை எண்ணும் மனத்திற்கும் தொடர்பு உண்டு என்பதைக் கண்டு பாவிற்குப் பரிந்துரைப்பார். அவரும் மாத்திரை முதலா அடியீருக நோக்குவதற்குக் காரணமாக அஃது அமையும் என உணர்த்திஞரிலர்.

என்னே தமிழர் அறிவு, தமிழர் நுட்பம்! இவர் தம் அறிவெலாம் கண்டு, ஆழமெலாம் கண்டு நுட்பமெலாம் கண்டு வியப்பதா, அந்தோ! தமிழின் தற்கால நிலையைக் கண்டு கசிந்து, கசிந்து கண்ணீர்

மல்கிக் கரைவதா? அந்தோ! யாண்டொளித்தது தமிழ் நலம்! யாண்டொளித்தது தமிழ்ப் பா நலம்!

இதுகாறும் நாம் ஒப்பியல் முறை கொண்டே திறன் ஆய்ந்தோம். அவ்வாறே இங்கும் ஒப்பியல் காண்போம். வாடையைப் பற்றி மற்ருெரு பெரும் புலவரும் பாடியுள்ளார்; அதையும் கண்டு மேலே செல்வோம்.

> [1] "அழுங்குறு மகளிர்தம் அன்பர்த் தீர்ந்தவர்
> புழுங்குறு புணர்முலை கொதிப்பப் புக்குலாய்க்
> கொழுங்குறைத் தசைஎன ஈர்ந்து கொண்டது
> விழுங்குறு பேயென வாடை வீங்கிற்று."

இது கம்பர் பாட்டு. கம்பர் வாடை வீங்குவதை நோக்குங்கள். தம் காதலரைப் பிரிந்த மகளிர் வருந்தினர். ஒன்ருெடொன்று நெருங்கிய அவர்கள் தனங்கள் புழுங்கின. அவற்றிற்கிடையே புகுந்தது வாடை. கம்பரின் வாடைப் பேய், மிக நுண்ணிய பார்வையுடையது. அது நுழைய இடுக்கு எங்கெங்குள தென்று பார்த்துத் திரிந்தது. மகளிர் தனங்களின் இடுக்கைக் கண்டு அங்கேயும் புகுந்தது. புகுந்தபின் எண்ணத் தொடங்கிற்று. 'ஆ! இங்கே இடுக்கென்று புகுந்தோமே, இதோ கொழுத்த தசைத்துண்டங்கள் உள்ளனவே, இவை நல்ல உணவாயின' என்று நினைத்தது போலும்; அப்படியே அவற்றை ஈர்ந்து கொண்டது; விழுங்கி விட்டது. அந்தோ! கொடுமை, கொடுமை. "விழுங்குறு பேயென வாடை வீங்கிற்று," என்ருர் கம்பர்.

ஈண்டு இப்பாட்டை எடுத்துக்காட்டுவது, புலமையின் உயர்வு தாழ்வைக் காட்டுவதற்கன்று.

1. கம்பரா. கிட்கிந்தா - கார்காலப் படலம், 13.

அவ்வாறு செய்ய இவ்வொரு பாட்டுப் போதுவதும் அன்று. இங்குக் காணவேண்டுவன ஒரே பொருளைப் பற்றி இரு பெரும்புலவர் கருதும் முறைகள், அவற்றை உணர்த்த அவரவர் கையாளும் முறைகள்.

கீரர் வாடையைக் கண்டோம். அவர் வாடையைக் கருதிய முறையையும் அவர் கருத்தையும் உணர்ந்தோம். அவற்றைக் கூற அவர் கையாளும் முறையையும் அறிந்தோம். கம்பர் வாடையையும் காணுங்கள்; இவர் கருதும் முறையை, வாடை இவர்பால் எழுப்பும் கருத்தை, அவற்றை உணர்த்த இவர் கையாளும் முறையைக் கருதுங்கள். எவர் கருதும் முறை, எவர்பால் எழுந்த கருத்து, இவற்றை உணர்த்த எவர் கையாளும் முறை, தக்கன, தக்க பயன் விளைப்பன என்று காண்பது உங்கள் கடன். அந்தோ! அத் தாய்மை உறுப்பு, இப்பெரும் புலவருக்கு என்ன தவறிழைத்ததோ? அணியிலக் கணம் பரவப் பரவப் பெரும் பெரும் புலவர் தாமும், அதனுள் பட்டதன் பயனோ இது! தற்குறிப்பேற்ற அணியோ இது! பேய்க்குறிப்பேற்ற அணிகளின் பயனோ! கருதுக! கருதுக!

9. பாட்டின் அமைப்பில் பா நலன்

சற்றுமுன் கண்ட நெடுமை நோக்கு - நெடுங் காலத்தின் நோக்குப் - பாட்டின் அமைப்பிலேயே அமைந்து கிடக்கின்றது. இவ்வாறு அமைப்பதும் ஒரு பா நலம். இப்பாட்டின் அமைப்பும் அதை அமைக்கும் முறையும் பா இயல் தோய்ந்தன. இவ்வமைப்பில் இன்னும் பா நலம் சில அமைந்துள்ளன. அவற்றையும் காணல் வேண்டும்.

பாட்டின் அமைப்பிலேயே பா நலம் பொருந்த அமைக்கும் திறன் வேறு; பாவின் உறுப்புக்களை ஆக்கும் திறன் வேறு. செய்யுள் உறுப்புக்களுள் ஒவ்வொன்றும் தோன்ற ஒவ்வொரு செய்யுள் இயற்றல் எளிது. அவ்வுறுப்புக்கள் பலவற்றையும் ஒரே பாட்டிடைப் பெய்து, அவையெலாம் சேர்ந்து சுவைதருமாறு ஒரு பாட்டை அமைத்தல் அரிது. பற்பல செய்யுள் உறுப்புக்கள், இப்பாட்டுள் பதிந்து பற்பல பா நலம் காட்டி நிற்பதைக் கண்டோம். இவற்றை எல்லாம் ஒன்று சேர்க்கும் முறையையும் ஒன்று சேர்த்து ஒரு தனிப் பெரும் பாட்டாக்குந் திறனையும் நாம் காண்போம்.

வினைமாண் நல்இல் அமைக்குமுன் அதற்கு வேண்டிய பொருள்களைத் தேடல் வேண்டும். அவற்றைத் தேடிப் பெறுதல் எளிது. அவற்றைப் பெற்றபின் அவற்றைக் கொண்டு நல்இல் அமைத்தல் எளிதன்று. யாவரும் நல்இல் அமைக்க வல்லவராகார்; கைவல் கொத்தனே நல்இல் அமைக்க வல்லவன். கீரர் கைவல் பெருங்கொத்தனார்.

கீரர் பாட்டின் அமைப்பு ஒரு தனி இயல்புடையது. நேரின மணியை நிரல்படக் கோக்கும் முறையன்று கீரர் இங்குக் கையாளும் முறை. முரண்படு மணிகளே இங்கு முற்றிலும் பதிக்கப்பட்டுள்ளன என்பதை இப்போது காணலாம். தொகுத்தலும் இங்கில்லை; விரித்தலும் இல்லை. ஆக்கலும் அமைத்தலும் ஒருசேரப் படைத்தலுமே இங்குக் காணப்படுவன. ஆதலின் ஓரினப் பொருளை ஒருவழிச் சேர்த்தலோ கோத்தலோ இங்குக் காண்கிலோம். இம்முறை

கள், பொருள் நூலுக்கு வேண்டப்படுவன. பொருள் நூல்கள், அல்லால், இலக்கண நூல்கள் வரைதலும் வேறு; பா அல்லது செய்யுள் நூல் யாத்தலும் வேறு. பாவலன் நோக்கம் பொருளை விரித்தும் தொகுத்தும் கூறி விளங்கச்செய்தல் அன்று; சுவை தருவதே அவன் நோக்கம்; நுகர்வு தருவதே அவன் தொழில்; சுவையைத் தந்து, நுகர்வை அளித்து இன்புறச் செய்வான்; அவ்வின்பத்தோடு சேர்த்துத் தன் கருத்தைப் படிப்போன் மனத்தில் பதித்துவிடுவான். உத்திகள் முப்பத்திரண்டனுள், அவன் வேண்டுவது ஒன்றேனு மில்லை. படிப்போன் நுகர்வே பாவலன் வேண்டுவது. ஆதலின் எவ்வெவற்றால் மக்களுக்கு நுகர்வு மிகுதிப் படும், நுகர்வு மிகுதிக்கு வேண்டும் இயல்புகள் என்னென்ன என்பதைப் பாவலர் உணர்கின்றனர். அதற் கேற்ப அவ்வியல்புகள் அமைய - நுகர்வை மிகச் செய்யும் இயல்புகள் அமைய - அவர் பாக்களை அமைப்பர்.

முரண், தரு நலன்

இயற்கையாய்ச் சிற்சில நிலைகளில் சுவை அல்லது நுகர்வு மிகுதிப்படுவதை யாவரும் காணலாம். சில நிலைகளில் அதே நுகர்வு குன்றி நிற்கும். நிழலிலேயே என்றும் தங்கிய ஒருவனுக்கு நிழலின் அருமை தெரியுமோ? தெரியாது; அவனுக்கு அந்நிழலின் நுகர்வு இன்பம் தருதலும் இல்லை. அவன் அந்நிழலை வெறுக்கவும் தொடங்குவான். வெயிலில் அலைந்து, வாடி, உலர்ந்த ஒருவன் அதே நிழலைக் காணவும் களிப்பான்; அந்நிழல் தரும் இன்பத்தை நுகர்வான், புகழ்வான், பாக்களும் புனைவான். இம்முரண் அவன்

மன இயல்பை, அவன் நுகர்வைப் பண்படுத்தும் தன்மையைக் காண்க. கசப்பைத் தின்ற ஒருவனுக்கே இனிப்பின் சுவை மிகுந்து தோன்றும்; துன்பமுற்ற ஒருவனுக்கே, இன்பத்தின் சுவை மிகுந்து மிகுந்து தோன்றும். இவை இயற்கைப் பொருள்களில் காணும் முரண். இவை தரும் நுகர்வும் சுவையும் மக்களின் மன இயல்புகளைத் தூய்மை ஆக்குவன, நுண்மைபெறச் செய்வன. ஆதலின், உலகத்தின் அமைப்பே முரண்பட அமைந்துள்ளது போலும். உலகத்தின் அமைப்பைக் காண்போம். இன்பம் - துன்பம், நன்று - தீது, நட்பு - பகை, சூடு - குளிர், இரவு - பகல், நெருப்பு - நீர், வாழ்வு - தாழ்வு, இளமை - முதுமை, பிறப்பு - இறப்பு எல்லாம் முரண்; ஒன்றற்கொன்று முரண் - எல்லாம் மாறுபாடு. இவ்வாறு முரண் அமைப்பு அமைந்திலது எனின், மக்களின் மனநிலை எவ்வாறிருக்குமோ? உணர்ச்சி நிலை எவ்வாறு இருக்குமோ? யாரே உணர்த்த வல்லவர்! முரண்பாடு தரும் நலனெல்லாம் அறிந்தவர் பாவலர். தக்க சுவைதர, தக்க நுகர்வுதர, உலகில் காணும் முரணை, இம்முரண் இயல்புகளைப் பாவலர், பாக்களில் அமைப்பர்; கூறும் பொருளுக் கேற்ப, இடத்திற்கேற்ப, அம் முரணைக் கையாளுவர். முரண் என்பது ஒரு செய்யுளுறுப்பும் ஆகும்.

நுகர்வைத் தர அல்லது உணர்ச்சியைத் திருத்த மாத்திரம் இம்முரண் பயன்படுவதன்று; ஒரு பொருளைப் பாவியல் முறையில், ஓவிய முறையில் எடுத்துக் காட்டவும் பெரிதும் பயன்படும். முரணிடைக் கண்ட பொருளே அதன் உண்மைத் தன்மையை நன்கு புலப்படுத்தி நிற்கும். இம்முரணைப் பெரிதும், ஓவியப் புலவர் கையாளுவர். வெண்ணிறக் குழம்

மைக் கரிய இடத்தில் இட்டால் அவ்வெண்மையின் இயல்பு நன்றாய் விளங்கும். அதே வெண்ணிறத்தை வெள்ளிய இடத்தில் கண்டால், அவ்வெண்மை சிறந்து தோன்றுவதில்லை. அதுவே போன்று, கருமையை எடுத்துக் காட்ட, அதனை வெண்மையில் தீட்டல் வேண்டும். கருமையில் தீட்டிய கருமை புலப் படுதல் இல்லை. 'தாம் புனையும் பொருளைச் சிறந்த முறையில் எடுத்துக் காட்ட ஓவியப் புலவர் ஒளியையும் நிழலை அல்லது இருளையும் தொடர்புபடுத்தியே ஓவியம் தீட்டுவர். எல்லாம் ஒரே ஒளியாக வரைந்த படத்தில் உருவமே தெரிதல் இல்லை. கைவல் ஓவியப் புலவரோ ஒளியையும் நிழலையும் கணக்கிட்டு ஆள்வர். ஞாயிற்றின் முன் ஒளி மழுங்கிப்போகின்ற விளக்கு இருட்டில் மிக்க ஒளியைத் தருகின்றது. ஏன்? இருட் டெனும் முரண், ஒளிக்குத் தந்த பெருமை இது. ஒளியின் தன்மையை அதற்கு முரணாகிய இருளின் அமைப்பு மிகுதிப்படுத்திக் காட்டிய இயல்பே இது.

இவ்வியல்பெலாம் நன்குணர்ந்தவர்கள் சங்கப் புலவர்கள். அவர்களுள்ளும் மிக வல்லவர் கீரர். இதோ காணுங்கள்: அரசி மிகக் கலுழ்கின்றாள். பிறர் தேற்றவும் தேறாள். கண்ணீர் வடிகின்றது. கண்ணீரைத் துடைத் தெறிகின்றாள். அதனை அடுத்து அரசனைக் காண்போம். அவனிடத்தில் கலக்கம் இல்லை; கலுழ்தல் இல்லை; முகனமர்ந்து திரிகின்றான். அரசி பிறர் தேற்றத் தேறாள். அரசன் செயலோ, பிறரைத் தேற்றுவதற்கு அமைந் துள்ளது. இவர் இருவர் முகங்களையும் ஒரு சேர வைத்துக் காணுங்கள். அரசன் முகத்தில் நிலவுவன அன்பு, அமைதி. அரசி முகத்தில் காண்பவை

கண்ணீர், கலக்கம். ஒருவரால் மற்றொருவர் குணம் சிறந்து விளங்குவதையும், குறைந்து விளங்குவதையும் காணுங்கள். இதுவே முரண் தரும் நலன்; பாட்டில் அதுதரும் இன்பம். இஃது ஒரு புடை முரண். இதன் மற்றொரு புறத்தையும் காணுங்கள். அரசி கட்டிலில் அமர்ந்துள்ளாள்; அரசன் நீரும் சேறும் நிறைந்த நிலத்திடைத் திரிகின்றான். 'அறுவறு காலை தோறும் அமைவரப் பண்ணிய பரூஉத்திரி குரூஉத்தலை நிமிர் எரி' ஒருபால் காண்கின்றோம்; மற்றொரு பால் நுடங்கி இறைஞ்சிய தலைஇய பரூஉச்சுடர் காண்கின்றோம். ஒரு பால் பாண்டில் விளக்கு; மற்றொருபால் யவனரியற்றிய வினை மாண் பாவை கையேந் தையகல் விளக்கு. இங்குக் கண்டவை இரு மக்களிடம் காணும், இரு வேறிடங்களில் காணும் முரண். இனி ஒருவர் பால் அமையும் முரண்நிலைமையைக் காண்போம்.

இதோ பெரும்பெயர்ப் பாண்டில். அதன்மேல் மெல்லிதின் விரிந்த சேக்கை, அன்னத்தூவி நிறைத்த இணையணை, அவற்றோடு பாயணை. படுக்கைமேல் 'காடி கொண்ட கழுவுறு கலிங்கத்துத் தோடமை தூமடி' விரித்துள்ளது. இங்கு இருக்கவேண்டிய அரசன், இதிற் படுத்து, இன்பம் நுகர்ந்து, உறங்க வேண்டிய அரசன் எங்கே? நள்ளென் யாமத்தும் பள்ளி கொள்ளான்; இருஞ்சேற்றுத் தெருவில் திரிகின்றான்; சேறும் தண்ணீரும் சேர்ந்த துளிகள் மேலெலாம், உடையெலாம் தெறித்துள்ளன. என்னே மாறுபட்ட நிலை! இவையெலாம் ஏன்? முறை முறை காட்டும் முன்னோனைப் போருக்கு அல்லது விழுப்புண் காண அனுப்பியிருக்கலாமே. ஏன் அவ்வாறு அனுப்பினன் இலன்? இராவணன் அனுப்பியது

போலப் போர் வல்லார் ஒருவர் ஒருவராகப் போருக்கு அனுப்பி அவர்கள் தோற்றபின், எல்லோருக்கும் பின், தான் சென்றிருக்கலாமே. இந்த அரசன் ஏன் இவ்வாறு ஒன்றும் செய்திலன்? இங்கு முரண் அரசனுக்குத் தரும் உயர்வைக் காணுங்கள். இந்த முரண் இல்லையேல் அரசன் இயல்புகள் இவ்வாறு சிறந்து விளங்குவனவா? கடமையேற்றுத் தன் நுகர்வை வெருட்டித் தானே முன் நின்று தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் பேரருளாளன், பணியாற்றும் திறனை — தொண்டாற்றும் திறனைக் காணுங்கள். இச்சுவைக்கன்றி, இந்நுகர்வுக்கன்றி, வேறு எதற்குக் கீரர் வளைத்து, வளைத்து அரசன் கோவிலைக் கூறினர், அவன் கட்டிலைக் கூறினர். வெள்ளத்தைக் கூறிய புலவர்கள் போலத் தம் புலமையைக் காட்ட வந்த புலவர் அல்லர் கீரர். இம்முரண் இல்லையேல், இம் முரண் தரு சுவையை அல்லது அதன் நுகர்வைப் பெறுமாறுண்டோ! கருதுக! என்னே முரண் திறன்! முரண் தரு சுவை! முரண் அழகு!

அரசியை அழகு செய்துகொள் மகளிரோடு ஒப்பிட்டு நோக்குவோம். இவர்களுள் காணும் முரணையும் காணுங்கள். இம்மகளிர்க்கு நறுமணம் தரப் பல வகை மணம் சேர்த்து அரைத்த நறுஞ்சாந்து வேண்டும். பல்லிருங் கூந்தலிற் சின் மலர் பெய்வார்கள்; தண்ணறு மயிர்ச் சந்தனம் வேண்டும். கூந்தலுக்கு இன்னும் நறுமணப் புகை ஊட்ட வேண்டும். ஆடல் காண வேண்டும். பாடல் கொள்ள வேண்டும். இவர்களோடு அரசியை வைத்துக் காணுங்கள். அங்குச் சின்மலர் பெய்த கூந்தல், புகையூட்டிய கூந்தல்; இங்குச் சின்மெல்லோதி நெற்றியிலெல்லாம் உலறிக்கிடக்

கின்றது. அங்குப் பன்மணக்கூட்டுகள் அணிந்த உடல், இங்கு அணிகளெல்லாம் அகற்றி, மாசுண்டு காணும் கழுவா மேனி. இம்முரணைக் காணும்போது அரசியின் இயல்புகள் பன்மடங்கு உயர்ந்து தோன்றுகின்றன. இம்முரண் இல்லையேல், இவ்வுயர்வு வெளிப்படையாகுமோ? பாட்டிற்கு முரண் தரும் அழகே அழகு!

நக்கீரர் காட்டும் இம்முரண் இவ்வளவோடு நின்றது அன்று. வறுமைக்கும் உடைமைக்கும் முரண் - அறிவுக்கும் அறியாமைக்கும் முரண் - அன்புக்கும் அறிவுக்கும் முரண் - இயற்கைக்கும் செயற்கைக்கும் முரண் - எல்லாம் முரண் அமைப்பு. இன்னும் பற்பல முரண்களை வெளிப்படையாகக் காணலாம். பொருள் முரண், சொல் முரண் பாட்டிடை எளிதே காணத் தக்கன பல உள; மேற்போக்கான இம்முரண்களை எளிதே காணலாம். அவற்றை ஈண்டு விரிக்கிற் பெருகும்.

இம்முரண் இயல்பு தோன்றப் பாட்டைத் தொகுத்ததும் இப்பாட்டின் அமைப்பிற் காணும் ஒரு பா நலம். பாட்டைத் தொகுப்பதில் காணும் பா நலம்.[1] இன்னும் வேறு நலங்களும் உள. அளவறிந்தமைத்தலும் இவ்வமைப்பில் கருதப்படும். அளவு என்றது அடி அளவு மட்டுமன்று. பா உறுப்புக்களின் அளவும் ஆகும். அவற்றின் நிறை சுவைகளின் அளவு, அவற்றை நிறுத்து நிறுத்து இடத்திற் கேற்றவாறு அமைத்தல் முதலியன வெல்லாம் சிறந்த

1. 'மொழியினும் பொருளினும் முரணுதல் முரணே'
—தொல். செய்யுள். 94.

பாக்களில் காணப்படுவன. இவ்வாறு அளவுபட, இவை அமைந்திலவேல், பாட்டு, குருவித்தலையும் யானையுடலும் போன்ற தோற்றத்தைத் தரும்; அல்லது வயிறு பருத்து அடியும் முடியும் குறுகித் தோன்றும். இவ்வாறன்றிக் கீரர் சுவைகளையும் பா நலங்களையும் நிறுத்தமைக்கும் ஆற்றினையும் காண்போம்.

பேதைமையை முதலில் அமைத்தார். இதன் நிறையைத் தாங்க அறிவுடைமையை இறுதியில் அமைத்தார். முனிவை முதலில் காட்டினார். இறுதியில் முனிவின்மையைக் காட்டினார். விலங்கினத்தைப் பார்ப்போம். பாட்டின் முதலில் அவை குளிரின் துன்பத்தால் வருந்துகின்றன. பரிமா பாட்டின் நடுவே புல்லுணாத்தெவிட்டி நிற்கின்றது. இறுதியில் துன்பமு மின்றி, தெவிட்டலுமின்றி அரசன் பின்னே பரிமாவும் பிடியும் பரிந்து செல்கின்றன. நகைப்புச் சுவையை அடுத்துத் துன்பச் சுவை; அதை அடுத்து நோக்குத் தரும் சுவை; இவற்றை யடுத்து அழகின் சுவை. பாட்டின் இறுதியில் பார்ப்போம். அழுகை, அதை அடுத்து அன்பு அமைதி. இவை எல்லாம் நிறுத்து நிறுத்து அளந்து அளந்து வேண்டிய அளவே காட்டப்படும். உடனே அவற்றை மாற்றி வேறு சுவை அமைக்கப்படும். எல்லாம் அளவு! எல்லாம் நிறை!

10 பாட்டின் முடிவிலும் பா நலம்

தொடக்கத்தில் இவர் பாட்டைத் தொடங்கிய வன்மையைக் கண்டோம். அவ்வாறே பாட்டின் முடிவிலும் வன்மை அமைந்திருக்கின்றது. வடகோடு

தாழ்ந்தென்ன, தென்கோடு உயர்ந்தென்ன என்று எப்படியாவது பாடிவிடுகிற பாவலர் அல்லர் கீரர். எங்கேயாவது ஒரு புறம் தாழ்ந்து, மற்றொரு புறம் உயர்ந்தால் அத்தாழ்வை அகற்ற, இவரிடம் குறுமுனிச் சொற்களோ உள்ளன. ஆனால், அப்படித் தாழ்வு உயர்வு ஏற்பட விடார் கீரர். இவர் தோற்றுவாயில் காட்டிய வன்மையே இறுவாயிலும் காட்டுகின்றார்.

தொடக்கத்தைப் போலவே முடிவையும் புலவர் அழகுறச் செய்வர். சிறந்த நலங்களை முடிவிற்கென நிறுத்தி வைத்திருப்பர். கடைசியிற் காணும் நலங்களே கண்ணை விட்டகலாமல் நிற்பன. படிப்போன் பாட்டை விட்டகலுமுன் பா நலங்களெல்லாம் திரண்டு அவன் மனத்தில் பதியும் இடம் பாட்டின் முடிவு. தொடக்கம் பாட்டைத் தொடர்ந்து படிக்குமாறு செய்வது; முடிவு அதனை என்றும் மறவாதிருக்கச் செய்வது; மீண்டும் பாட்டை நினைந்து நினைந்து உருகச் செய்வது. காதலியைப் பிரிந்த காதலன் போலப் படிப்போனும் பாட்டைப் படித்து முடித்த பின்பும் "இதனை உள்ளாதிருத்தல் என்னளவிற்றன்று!" என்று எண்ணும் உணர்ச்சியைப் பாட்டின் முடிவில் பெறுவானானால், அத்தகு முடிவே சிறந்த முடிவு. சங்கப் பாட்டுக்கள் பல இத்தகு முடிவை ஏற்றல் காணலாம். வாடைப் பாட்டும் இவ்வாறு சிறந்த முடிவைக் கொள்ளுமாறு கீரர் அமைக்கும் திறனைக் காண்போம்.

மாட்டுத் தரு நலன்

ஏனைய புலவர்களைப் போலன்றிக் கீரர் தமக்கென ஒரு தனி முறையை இம்முடிவிலும் கையாளுகின்றார்

பாட்டு முடியும் இடத்திற்குச் சற்று மேலிருந்தே பாட்டைப் படிப்போம். இங்கு நாம் அரசன் மனைவியைக் காண்கின்றோம். துன்பமே வடிவெடுத்தது போன்றது அவள் தோற்றம். அவள் கழுத்தில் நெடுநாண் ஒன்று தவிர, வேறு துணை அணிகளைக் காணோம். காதணிகளைக் காணோம். பொன் தொடிகளைக் காணோம். அரசி இவ்வணிகலன்களை எல்லாம் அகற்றியுள்ளாள். அவள் நெற்றியின்மீது கூந்தல் உலறிக் கிடக்கின்றது. உடையோ மாசூர்ந்துள்ளது. மேனியும் ஒளி மழுங்கித் தோன்றுகின்றது. அந்தோ! நாம் காண்பது துன்பத்தின் கோலமோ, துயரத்தின் பேருருவோ!

ஏன் இத்துன்பக் கோலம்? இத்துன்ப நிலைக்குக் காரணம் யாது? தெரியவில்லையே! பாட்டில் இவற்றைக் கூறுமிடத்தே காரணம் ஒன்றும் புலப்படவில்லை. பாட்டின் முடிபு நமக்கு முன்பே தெரிந்திருப்பினும், நாம் இங்கு அதைச் சற்று மறந்துவிடல் வேண்டும். புலவர் அழைத்துச் செல்லும் வழியே செல்லுதல் வேண்டும். அவர் காட்டும் மன இயல்புகளைக் கண்ட பின் பாட்டின் முடிபை உணர்தல் வேண்டும். காரணம் எதையும் காட்டாது கீரர் நம்முன் துன்பத்தின் கோலத்தை ஏன் நிறுத்துகின்றார்?

பெண் ஒருத்தி பலர் செல்லும் வழியிடை அவலக் கோலத்தோடு அழுதுகொண்டு நின்றால் அவளைக் காணும் அவ்வழிச் செல்வோர் மனஇயல்பு எவ்வாறு இருக்கும்? பலர் அவளைச் சூழ்வார்கள்; எதற்காக அழுகின்றாள் என்பதை அறியவிரும்புவார்கள்; அவள்

வாய்விட்டு ஒன்றும் சொல்லாவிட்டாலும் காரணம் அஃது இஃது எனப் பலவாறு கற்பனை செய்துகொள் வார்கள். இக்காட்சிகளை இன்றும் காணலாம். நின்று காண ஒய்வில்லாதவர்களும், 'அந்தோ! அழுகின்றாள்! என்ன நேர்ந்ததோ!' என்று இரக்கம் கொண்டு செல் வார்கள். இத்தகைய எண்ணங்களை எழுப்புவது - இயல்புகளை உணர்த்துவது - பாட்டுள் காரணம் காட் டாது ஒருவரைத் துன்பத்திடையேகாட்டுவது அல்லது அமைப்பது. இது படிப்போரின் உணர்ச்சியை எழுப்புவது; பாட்டின் சுவையைப் பெருக்குவது; காரணம் காணும் அவாவைப் பெருகச் செய்வது.

இவ்வாறு அவாவைப் பெருக்கிய பின்பாவது காரணத்தை எல்லாம் ஒருசேரக் கீரர் உணர்த்து கின்றாரிலர். இங்கும் அவர் வேலைத்திறனை—கைவல் பாமகன் கைத்திறனையே—காட்டுகின்றார். பாட்டைப் பார்ப்போம். துன்பத்தின் காரணத்தை முதல் முதல் உணர்த்துபவர் செவிலியர். 'இன்னே வருகுவர் இன் துணையோர்' என்று அவர் அரசிக்குத் தேறுதல் கூறு கின்றனர். அவர்தம் சொற்களிலிருந்து நாம் காண்பது என்ன? காரணம் சிறிது வெளிப்படக் காண்கிறோம்; அரசி தன் கணவன் வாராமையைக் குறித்து வருந்து கின்றாள் என்பதை அறிகின்றோம். அதற்குமேல் இங்கு ஒன்றும் தெரிவதற்கில்லை. அவள் கணவன் எங்குச் சென்றுள்ளான்? ஏன் வரவில்லை? மனைவி யுடன் கலாம் விளைத்துச் சென்றுள்ளானா? பரத்தை யின்பால் சென்றுள்ளானா? அறியோம். காதலியை விட்டுப் பிரிதற்கு இன்னும் பற்பல காரணங்கள் உள வாகலாம். ஓதுதற்குப் பிரிதல் உண்டு; பொருள் வயிற் பிரிதல் உண்டு; பதியிகந்து விளையாடப் பிரிது

லும் நேரலாம். இங்கு அரசன் பிரிவு எதன்பாற் படுமோ! அறிகிலோம். 'இன்னே வருகுவர் இன் துணையோர்' என்ற சிறு குறிப்பால், முன் எழுந்த காரணம் காணும் அவா ஓய்ந்ததா? இல்லை. இன்னும் மிகுகின்றது. முல்லைப் பாட்டைக் காண்போம். 'முனை கவர்ந்து, திறை கொண்டு, வினை முடித்துத் தலைவர் வருகை வாய்வது திண்ணம். நீ நின் பருவரல் எவ்வம் களை மாயோயே' எனப் பெருமுது பெண்டிர் கூறக் காண்கின்றோம். 'அரசன் எங்குச் சென்றுள்ளான்? வருந்துவதன் காரணம் யாது?' என்பன யாவும் முன்னரே உணர்கின்றோம். இவ்வாறே கீரரும் கூறிவிட்டால் பொருந்துவது அன்றோ? கீரரோ, நனிமிகு செட்டுப்புலவர் என்பதை முன்பே கண்டோம். காரணங்களை எல்லாம் இரண்டடிகளில் அல்லது இரண்டு சொற்களில் கூறிவிட்டுச் செல்லக் கூடாதா? ஏன் இவர் செட்டு முறைகளை விட்டுவிட்டனர்? ஏன் காரணம் காட்டுவதை நீள நீள இழுத்துச் செல்கின்றார்? ஏன் மெல்ல மெல்ல உணர்த்துகின்றார்? கருதிப் பாருங்கள்.

இனிச் செவிலியரை விட்டு அப்பாற் செல்வோம். அந்தோ! அரசி மிகக் கலுழ்கின்றாள். செவிலியர் கூறியது ஒரு பயனையும் தரவில்லை; பெருமூச்சு விடுகின்றாள்; கண்ணீரைத் துடைத்துக் கொள்கின்றாள்; புலம்பொடு வதிகின்றாள். புலவர் பெருமானுக்கு இவள் துன்பத்தைக் காண முடியவில்லை. இவள் துன்பம் தீருமாறு வேண்டுகின்றார். இந்த வேண்டுகோளினின்றும் குறிப்பாகக் காரணம் இன்னும் சிறிதே தெரிகின்றது. அவர் வேண்டியது யாது? 'விறல் தந்து இன்னே முடிகதில் அம்ம'

என்று வேண்டுகின்றார். ஓ! அரசி வருந்துவது வருகையைக் குறித்து மட்டுமன்று. வெற்றியைக் குறித்து, முடிவைக் குறித்து. எதன் வெற்றி? பொருள் கவர்வதில் வெற்றியா? ஆநிரை மீட்டலில் வெற்றியா? காடு கெடுத்து நாடு காண்பதில் வெற்றியா? எதன் வெற்றி? வெற்றியைத்தான் வேண்டினாரே, முடிவை ஏன் வேண்டுகின்றார்? வெற்றி வேறு முடிவு வேறா? அஃது என்ன முடிவு? எதன் முடிவு? என்று படபடப்புடன் இப்போது எண்ண நேர்கின்றது. படிப்போர் மனம் இங்குத் தவித்து நிற்கின்றது. இவ்வாறு இவர் கூறுவதிலிருந்து அரசி எண்ணுவதற்கு மாறாகவும் முடிவு ஏற்படலாம் என்ற குறிப்பும் தோன்றுகின்றது. "அம்ம!" என்று ஏன் வியப்புத் தோன்றக் கூறுகின்றார்? 'இவ்வரசி இனிதாக, எளிதாக முடிந்து விடும் என்று எண்ணிக்கொண்டிருக்கின்றாள். அதற்கு மாறாக முடிந்தால் என்ன செய்வாள்?' என்ற குறிப்பும் தோன்றுகின்றதன்றோ? அல்லாவிடின் அரசியின் துன்பத்தைக் கண்ட ஒருவர் இவ்வாறு வேண்டக் காரணமில்லை. தன் கணவனைப் பற்றியோ மகனைப் பற்றியோ அழுதுகொண்டிருக்கும் ஒரு மகளின் முன் சென்று, "ஐயோ! அவன் மேற்கொண்டு சென்ற செயல் நன்றாக முடிதல் வேண்டுமே! வெற்றி பெற முடிதல் வேண்டுமே! நன்றாக முடிவதாக" என்று வேண்டினால், அழுபவள் துன்பம் எவ்வளவு மிகுதிப்படும்? அதைக் கேட்பவர் மனமும் எவ்வாறு வருந்தும்? இதே மன இயல்புகளைக் கீரர் இங்கும் உண்டு பண்ணுகின்றார்.

இங்காவது காரணம் முற்றும் வெளிப்பட்டதா? இல்லையே! அம்மம்ம! என்னென்ன சுற்றல்! படிப்

போர் மனத்தைப் பற்ற என்ன என்ன சூழ்ச்சிகள்! இவ்வாறு காரணம் காணும் அவாவை, மெல்ல மெல்லப் படிப்படியாக, உச்சியில் ஏற்றிய பிறகே காரணத்தை எல்லாம் கூறுகின்றார்; கூறி, முன் கூறிய வற்றோடு பிணைக்கின்றார். பாட்டையே படித்து இப் போது காரணத்தை எல்லாம் காணுங்கள். பகைவர் எதிர்த்துள்ளனர். அவர்களைத் தாக்க அரசன் போருக் குச் சென்றுள்ளான்; பாசறையில் வதிகின்றான்; விழுப்புண் காண்கின்றான்; நள்ளென் யாமத்தும் பள்ளி கொள்ளான்; சிலரொடு திரிகின்றான். என்னு குமோ முடிவு! இவையே அரசியின் துன்பிற்குக் காரணம். இப்போதுதான் அரசியின் துன்பத்தின் காரணத்தை எல்லாம் உணருகின்றோம். இவற்றை முன்கூட்டியே கூறி இதை நினைத்து அரசி துன்பக் கோலம் பூண்டுள்ளாள், துயருறுகின்றாள் எனப் பாடி விட்டால் எவ்வளவு எளிதாக இருந்திருக்கும்! மேலே காட்டியவாறு காரணம் காட்டாது ஒரு நிகழ்ச்சியை அல்லது அதன் முடிவை அல்லது முடிவின் குறிப்பைக் கூறுதல், காரணம் காணும் அவாவைப் பெருக்கு தல், படிப்போர் மனத்தைத் தவிக்க விடுதல், அதன் பின் காரணத்தை விரித்து, முன்பு கூறியவற்றோடு இழுத்து மாட்டுதலை - இயன்று பொருள் முடியுமாறு மாட்டுதலை - ஒரு செய்யுள் உறுப்பாகக் கொண்டனர் பழந்தமிழர். இவ்வாறு மாட்டுதற்கு மாட்டு[1] என்றும்

1. "அகன்று பொருள் கிடப்பினும் அணுகிய நிலையினும்
இயன்று பொருள் முடியத் தந்தனர் உணர்த்தல்
மாட்டென மொழிப, பாட்டியல் வழக்கின்."
—தொல். செய்யுள். 208.

மாட்டு என்னும் செய்யுள் உறுப்பு வேறு. உரை காண் முறைகளில் ஒன்றாகிய மாட்டெறிந்தொழுகலும் அல்லது

பெயரிட்டனர். இது தரும் பாநலன், அந்நலன் தரும் நுகர்வு, மன இயல்பு எல்லாம் மேலே விளக்கப் பட்டன. இப் பாவுறுப்புத்தரும் பாநலனை அந்நலன் தரும் நுகர்வை மீண்டும் எண்ணுங்கள். அது படிப்போன் மனத்தில் தூண்டும் மன இயல்புகளைக் கருதுங்கள்.

காரணங்களைச் சரேலென உரையாது மெல்ல மெல்லச் சிறிது சிறிதாக வெளியிட்டுச் செல்லுதல் இலக்கியங்களுக்கு ஒரு தனிச் சுவை தருவது. இப்படிச் சிறிது சிறிதாக வெளியிடுதலையும் ஆற்றொழுக்காக அமைக்காது மாற்றி மாற்றி அமைப்பதையும் இக்காலத்திலும் சிறந்த இலக்கியங்களில் காணலாம். சங்கப்பாக்களில் பல, மாட்டு என்னும் செய்யுள் உறுப்பு ஏற்று முடிவன. சங்கப் பாட்டுக்களுள் பல, இன்றும் சுவை தந்து நிற்பதன் காரணங்களில் இதுவும் ஒன்று. எவ்வாறு மன இயல்புகளின் நுட்பங்களை அறிந்து செய்யுள் உறுப்புக்கள் அமைத்துள்ளார்கள்! இவற்றை எல்லாம் பழந்தமிழர்கள் மிகப் பழையகாலத்தே எவ்வாறு அறிந்திருந்தார்கள்! இவற்றை எவ்வாறு திறமையுடன் பாக்களில் கையாண்டார்கள்! வியப்பு! வியப்பு! வியக்கத் தக்கவை இவை!

இவ்வாறு மாட்டு அமைப்பதிலும் கீரரின் கை வன்மை தோன்றுகின்றது. அரசியின் துன்பத்தைக் கூறுமிடத்திலிருந்தே இம்மாட்டுத் தொடங்குவதாகக்

கொண்டு கூட்டுதலும் வேறு. முன்னது, பாவலன் பாட்டின் அமைப்பில் கையாளுவது; பாட்டிற்குச் சுவை தருவது. பின்னது, உரையாசிரியர் கையாள்வது; உரை விளங்குவதற்கு ஓர் உத்தியாவது.

கொள்ளலாம். இதற்கடுத்து, "இன்னே வருக இன் துணையோர்" என்ற இடத்தில் மற்றொரு மாட்டு. இதனுள்ளும் மற்றொரு மாட்டு. "இன்னே முடிகதில் அம்ம!" இதன் பின் காண்பது இவை எல்லாவற்றிற் கும் காரணம். அகன்ற நிலையிலும் மாட்டு, அண்ணிய நிலையிலும் மாட்டு, சொல்முறையில் மாட்டு, பொருள் நிலையில் மாட்டு, இயன்று பொருள்முடியுமாறு மாட்டு, வெளிப்படையான மாட்டு, உள்பொதி மாட்டு, மாட்டுக்குள் மாட்டு. எல்லாம் வளைத்து வளைத்து வளையம் வளையமாய் ஒன்றுக்குள் ஒன்று மாட்டிய ஒரு தொடர். அம்மம்ம! இக்கிழவர் மாட்டு மாட்டென்று மாட்டுகின்றார்! என்னே இவர் வன்மை! என்னே இவர் பாத்திறன்!

முடிந்தது போன்று முடியாப் பாடலன்

மாட்டு என்னும் செய்யுள் உறுப்பு அமையப் பாட்டை முடிப்பதிலும் கீரர்தம் பாட்டு ஒரு தனி இயல்புடன் திகழ்கின்றது. இப்பாட்டின் முடிவைக் காண்போம். அரசன் பாசறையில் இருக்கின்றான். நள்ளென் யாமத்தும் பள்ளிகொள்ளான். இருஞ் சேற்றுத் தெருவின் எறிதுளி விதிர்ப்பச் சிலரோடும் திரிதருகின்றான். இவன் பாசறைத் தொழில் 'இன்னே முடிக!' என்று வேண்டிப் பாட்டை முடிக் கின்றார். இங்குச் சற்று ஆய்ந்து கவனிக்க வேண்டும். கீரர் கூறப்புகுந்த நிகழ்ச்சிகள் முடிந்தனவா? இல்லை. அரசனை அப்படியே திரிய விட்டுவிட்டார். அரசன் இன்னும் திரிகின்றான் போலும்! அரசி என்ன ஆனாள்? இன்னுமா புலம்பொடு வதிகின்றாள்? இந்நிகழ்ச்சிகள் முடியாது பாட்டு எப்படி முடிந்தது!

அரசனும் அரசியும் நக்கீரருக்கு என்ன தீங்கிழைத்தனர்? நலங்கிளர் அரிவையும் அறங்கிளர் அரசனும் சேர்ந்து வாழ்வதைக் காட்டக்கூடாதா? இவர்களைப் பிரித்து விட்டுவிட்டுப் போய்விட்டார். பிரித்து விட்டது மட்டுமா? ஏதோ நலங்கிளர் அரிவைக்குப் பரிந்து வேண்டுவது போலக் கீரர் வேண்டியவெல்லாம் பொய், பொய், முழுப் பொய்! 'இன்னா அரும்படர் தீர்ப்பது' இவர் எண்ணமானால், அவ்வாறு இவரே செய்திருக்கலாமே! அவ்வாறு செய்யார். அவர்களைத் தவிக்க விட்டுவிட்டார். அந்தோ! அவர்களோடு நம்மனத்தையும் தவிக்க விட்டார். அவர்களின் நிலைமையை நினைக்க நினைக்க மனம் செயலற்று நிற்கின்றது. பாட்டு முடிந்தது போன்று முடியாது நிற்றலும் ஒரு பா நலம்.[1] இவ்வாறு நிகழ்ச்சிகளை முடித்துக் கூறாமல் திடீரென்று நிறுத்திவிடுதலைத் தற்கால இலக்கிய முறைகளில் காணலாம்; 'ஷெல்லி' முதலிய ஆங்கிலப் பேராசிரியர்கள் கையாளக் காணலாம். பற்பல நாட்டுச் சிறுகதைகளிலும் பெருங்கதைகளிலும் கதையாசிரியர்கள் பலர் இம்முறையைக் கையாளுகின்றனர். நக்கீரருக்கு இம்முறை எப்படித் தெரிந்திருந்தது? பழந்தமிழர்கள் மிகப் பழைய காலத்தே இப்புதுமை முறையை எப்படி அறிந்திருந்தனர்! புதுமை, புதுமை! இதுவும் கீரர் புதுப்பெயல் காட்டும் புதுமை! தொடக்கத்தில் மட்டுமன்றி, இறுதி வரையில் தொடர்ந்து செல்கின்றது.

1. 'புறப்பாட்டு வண்ணம்
முடிந்தது போன்று முடியா தாகும்.'
—தொல். செய்யுள். 223.

முல்லைப் பாட்டும் இப்பாட்டைப் போல 'மாட்டு' என்னும் செய்யுள் உறுப்பேற்றே முடிகின்றது. ஆனால், அது சிறு மாட்டு. அதன் முடிவு தரும் பா நலன் வேறு. இப்பாட்டின் முடிவு தரும் நலனும் வேறு. அப்பாட்டின் முடிவையும் காண்போம். அரசனைப் பிரிந்து அரசி வதிகின்றாள். அரசனிடமே நெஞ்சாற்றுப் படுத்து, நிறை தபு புலம்பொடு எழுநிலை மாடத்துள் இருக்கின்றாள். அம்மாடத்திற் பெய்த மழையெலாம் திரண்டு அருவியாக முடங்கிறை வழியே சொரிகின்றது. மழை நீர் சொரியும் ஓசையைக் கேட்டவாறு படுத்திருக்கின்றாள். திடீரென்று அவள் செவி நிறைய ஆரவாரித்தன. எவை? அரசன் ஊர்ந்து வந்த தேரின் குதிரைகள். நல்ல முடிவு; இன்ப முடிவு! அரசனும் அரசியும் கட்டித் தழுவிக் கொண்டனர் போலும்! இணையிலா இன்பம் துய்த்தனர் போலும்! இவை எல்லாம் காணப் படிப்போருக்கு உரிமையில்லை. அப்படிக் காண முயல்வார் எனின், அது கயவர் செயல். இப்பாட்டின் முடிவில் ஓர் உவகை தோன்றுகின்றது. இப்பாட்டின் நிகழ்ச்சிகளெல்லாம் முடிகின்றன; பாட்டும் முடிகின்றது. படிப்போரும் அகமகிழ்வோடு பாட்டை முடிக்கின்றனர். வாடைப் பாட்டின் முடிவோ, வேறு முறையில் முடிகின்றது; அதுதரும் உணர்ச்சியும் வேறு வகையானது.

வாடைப் பாட்டின் முடிவு தரும் உணர்ச்சியை அல்லது நுகர்வைக் காண்போம். இப்பாட்டு முடிந்தது போல முடியாமல் நின்றதன் பயன் என்ன? பாட்டை முடிக்கத் தெரியாமலா, இவ்வாறு பாட்டின் நிகழ்ச்சிகளை முடிக்காமல் விட்டுவிட்டார்? முல்லைப்

பாட்டைப் போன்றே இப்பாட்டையும் முடிக்காவிட்டாலும், "அரசன் வினை முடித்து வந்தான்; அரசி துயருற்று மெய்ம்மறந்து புலம்பொடு வதிவதைக் கண்டான். மெல்ல மெல்லக் காலடி ஓசை கேளாதவாறு அவள்தன் பின்புறம் சென்றான். அவள் கண்களை மூடினான்" என்று கூறிவிட்டால், இம்முடிவும் உவகையே தரும். இவ்வாறு பாடி முடிக்கத் தெரியாமலா பாட்டை முடிந்தது போல முடியாததாய் அமைத்தார்? ஆழ்ந்த நோக்கத்தை, ஒரு சிறந்த நோக்கத்தைக் கொண்டே இவ்வாறு அமைத்திருக்க வேண்டும். இத்தகைய முடிவு - முடிந்ததுபோல முடியாதாகும் முடிவு - இன்றும் புலவர் பலராலும் பல நாடுகளிலும் கையாளப்படுகிறது என்பதும் கண்டோம். இந்த முடிவு என்ன நுகர்வைத் தருகின்றது? என்ன மன இயல்புகளை உண்டுபண்ணுகின்றது? இவற்றைக் காணல் வேண்டும்.

இப்போது நாம் உணர வேண்டுவது நுகர்வு அல்லது மனம் நுகரும் உணர்ச்சி; பாட்டைப் படித்து முடித்த பின்னர்த் தோன்றும் உணர்ச்சியின் நுகர்வு; முடிக்குமுன் தோன்றிய நுகர்வு அன்று. பாவின் நலமெலாம், நுட்பமெலாம், சுவை எலாம் கண்டு திளைத்துத் துய்த்த பின் - பாட்டை முடித்த பின்னர்க்—காணும் உணர்ச்சியை நாம் காணல் வேண்டும்; பாட்டு முடியுமுன் கண்டு துய்த்த சுவைகள், மன உணர்ச்சிகள் அல்ல; அல்ல. முல்லைப் பாட்டை முடித்த பின் அங்கு உவகை உணர்ச்சியைப் பெற்றோம். இங்கு என்ன உணர்ச்சியைப் பெறுகிறோம்? அந்த உவகை உணர்ச்சியை இங்குப் பெறுகிறோமா? இல்லை. இங்குப் பெறுவது வேறு என்ன உணர்ச்சி?

காதலியைக் கட்டி அணைக்கும் கழிபேர் உணர்ச்சியா? அன்று. 'களிறு களம் படுத்தீர், பெருஞ்செய் ஆடவர் புறங்கொடுக்கச் செய்தீர், கொல்வேன் உமை!' எனும் கோப உணர்ச்சியா? அன்று, அன்று. 'இன்றுள்ளார் நாளை மாள்வார், விடுவனோ இருபது திண்தோள் உண்டாய்!' என்று கூறுவது தரும் ஆணவ உணர்ச்சியா? அன்று அன்று. படையெலாம் தொலையினும் அமர்ந்தினிதுறையும் ஆண்மை உணர்ச்சியா? அன்று அன்று; அதுவும் அன்று. இந்த உணர்ச்சிகளில் ஒன்றேனும் அன்று. இவை தரும் நுகர்வுகளும் அல்ல. இவை இங்கு நுழையவும் இடமில்லை; நாம் பெறுவது வேறு என்ன உணர்ச்சி? என்ன நுகர்வு?

இவ்வுணர்ச்சியை அல்லது நுகர்வை எடுத்துக் கூறுதல் எளிதன்று; நுனித்து நுனித்து உணர்தல் வேண்டும்; நுகர்தல் வேண்டும். நுண்மாண் நுழைபுலம் கொண்டு காணல் வேண்டும். நுகர்வு என்பது எளிதே காட்டலாகாததென்பர். நுகர்வோன் நெஞ்சு கொளின் அல்லது எவ்வாறு இதனைக் காட்ட இயலும், கூற இயலும்? "உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே"[1] ஆயினும், இதனை உணர்த்த இன்னும் சற்று முயல்வோம்.

அரசன் அமர்ந்த முகத்துடன் சிலரொடும் திரிகின்றான், திரிகின்றான். அரசி நெஞ்சாற்றுப் படுத்தும் புலம்பொடும் வதிகின்றாள், வதிகின்றாள். இன்னே முடிகதில் அம்ம! பாட்டோ முடிந்தது, இந்நிகழ்ச்சிகள் முடியவில்லையே! அந்தோ! இன்னுமா முடியவில்லை! ஆம். இன்னும் முடியவில்லையே! இவை என்று

1. தொல். உரி. 876.

முடிவன? கருதுங்கள் - கருதிப் பாருங்கள் - காலமொரு மூன்றின் முடிவிலா! - எண்ணிப் பாருங்கள் - எங்கு முடிவன? அண்டங்கள் முடிவிலா! - மனக் கண்கொண்டு காணுங்கள் - எவ்வாறு முடிவன? காணாத நிலையிலா! ஆ! முடிவைக் காணோம், முடிவைக் காணோம்! மனம் தேங்கி நிற்கின்றது; நினைக்கும் செயலற்று நிற்கின்றது; கருவி கரணங்கள் எல்லாம் ஓய்கின்றன. மனம் அசைவற்று நிற்கின்றது. மனம் ஆடாத நிலை—மனம் ஓடாத நிலை—அசைவற்ற நிலை! அசைவற்ற நிலை! அமைதி! அமைதி! அமைதி!

ந. முடிவுரை

நன்று நன்று இப்பாத் தரும் நலம்! நல்ல வாடை! முடிவிலா வாடை! முடிவே அறியா நெடுவாடை! முன்பு பொருள் நலப் பகுதியில் இவ்வாடை நீண்டு நீண்டு சென்றதைக் கண்டோம். இப்பா நலம் இதற்கு முடிவிலா நெடுமையைத் தந்தது. அன்றும் நெடு வாடை; இன்றும் நெடுவாடை; என்றும் நெடுவாடை. இதன் நெடுமை, கால எல்லைக்கு உட்படா நெடுமை; இட எல்லைக்கு உட்படா நெடுமை; எல்லை எவற் றுள்ளும் அடங்காத நெடுமை; முடிவிலா நெடுமை; புதுவகை நெடுமை.

இப்பாட்டின் பா நலம் பல்வேறு உணர்ச்சியை எழுப்பிற்று; பல்வகைச் சுவையைத் தந்தது; பற்பல நுகர்வை அளித்தது. இப்பாட்டு மனத்தைப் பிணித் தது; பிணித்து இழுத்துச் சென்றது; அடக்கி அடக்கிப் புலனைப் பிரித்தது. அரசன்தன் அன்பில், பேரன்பில், அனைத்துயிரையும் ஒன்றெனத் தழுவும் அன்பில் இது திளைக்கச் செய்தது; அன்பை வளர்த்தது; முடிவில் மாட்டி முடக்கி மடக்கிக்கொண்டது தன்னுள்ளே. மெல்ல மெல்ல நினைவு அறும் ஒரு நிலையில் சேர்த்து விட்டது இப்பாட்டு; மனம்அடங்க ஒரு வழி காட் டிற்று.[1] இமைக்கணமேனும் 'சும்மா' இருத்திற்று,

1. இப்பாத் தரும் நுகர்வையும் கீழே குறித்துள்ள முத்தி நெறிக்கண் பெறும் நுகர்வையும் ஒத்து நோக்குக.

"அடக்கிப் புலனைப் பிரித்தே-அவனுகிய மேனியில் அன்பை வளர்த்தேன், மடக்கிக்கொண்டான் என்னைத் தன்னுள் - சற்றும் வாய்பேசா வண்ணம் மரபும்செய் தாண்டி."

—தாயுமானவர் ஆனந்தக் களிப்பு.

'சும்மா' இருத்திற்று. நன்று, நன்று, தூயது இந்நலம்! பொருள் நலப் பகுதியில் வேறு வேறு நலம் கண்டோம். அங்குக் கண்ட நலங்களை எல்லாம் நம்முன் அழைப்போம். அவை உரு வெளுத்தன; ஒளி மழுங்கின. அந்நலன் ஒவ்வொன்றினும், அவை அனைத்தினும் மிக்கது இந்நலம்; தக்கது இந்நலம்! தூயது இந்நலம்! மக்கள் பெறத் தகும் மாபெருநலம்! புதுப் பெயல் தந்த புதுநலம்! புதுநலம்!

இப்பாட்டின் திறன் ஆய்தலைத் தொடங்கும் போதே, இதன் பெயர்ப் பொருத்தத்தைக்கொண்டு தொடங்கினேம். இம்முடிவும் அப் பெயருக்குள்ளே அடங்கும் போலும்! இப் பாட்டின் பெயரோ, சிறு பெயர். இப்பெயரில் காண்பன மூன்றே சொற்கள் - சிறுசிறு சொற்கள் - ஒவ்வொரு சொல்லிலும் உள்ளன இரண்டே எழுத்துக்கள். இவை யாவும் ஆறே எழுத்துக்கள். இவற்றில் எத்தனை எத்தனை அரிய கருத்துக்கள்! ஆறே எழுத்தில், மூன்றே சொல்லில் மும்மை எல்லாம் உணர்த்தினர்; மும்மைத் தமிழின் முடிவிலாத் தன்மையும் உணர்த்தினர். கெடுக சிந்தை! கடிதிவர் புலமை! கடிதிவர் புலமை!

இப்பாட்டின் பெயரைக் காணவே - பெயரின் திறனைக் காணும்போதே - அறிவெலாம் விதிர் விதிர்க்கின்றது; புலமை எங்கோ போய் ஒளிக்கின்றது. இப் பாட்டின் திறனெலாம், நலனெலாம் யாரே காண வல்லவர்! யாரே எழுத வல்லவர்! 'ஏடாக வடமேரு வெற்பாக அம் கூர் எழுத்தாணி தன் கோடாக எழுதும் பிரானை'யே இங்கும் அழைத்தல் வேண்டும் போலும்!

முற்பகுதியில் இப்பாட்டின் பொருள் நலன் பல கண்டோம். பொருள் நலன் தந்தது பெருகிய அறிவு; பா நலன் தந்தது பகரொணா நுகர்வு. பா நலன் பொருளுக்குத் தந்த உயர்வையும் காணுங்கள். பா நலனால் துன்பம் தரும் வாடை இன்பம் தரு வாடையானது; எவரும் விரும்பாத வாடை எழில் பெறு வாடையாயிற்று. பாட்டால் சிறந்தது பொருள்; பொருளால் சிறந்தது பாட்டு. பா நலனும் பொருள் நலனும் ஒன்றோடொன்று பிணிப்புற்று நிற்கின்றன. ஊதுலைக் கொல்லன் - உருக்குதல் வல்லன் - இவ்விரு நலனையும் உருக்கி உருக்கி, ஒன்றுகுமாறு உருக்கி, என்றும் ஒளி தருமாறு வார்த்துள்ளான். பொருள் ஒளி கால்கின்றது. பா வொளி கால்கின்றது. இவ் விருவகை ஒளியும் சேர்கின்றன; சேர்ந்து பெரும்பேர் ஒளியாய் ஓய்வற ஓய்வற இமைக்கின்றது; இமைக் கின்றது!

எஞ்சிய பா நலன்

பேரளவெய்திய பெரும்பெயர்ப் பாட்டு முடிந் தது. இதன் நலன்களோ, முடிந்தில. இதன் நலன் களில் நாம் கண்டன சிற்சில; சிற்சில காணவே தட்டித் தடவி நடந்தோம். நடந்து நடந்து தளர் நடைப் பட்டோம்; இனி நடக்கும் ஆற்றலும் குறைந்தது. பிரித்தும் பிரித்தும், உடைத்தும் உடைத்தும் நலம் சில துய்த்தோம். இனி அவ்வாறு செய்யவும் ஆற்றோம். இனி இவையெலாம் விடு வோம். இப்பாட்டை அடி துவக்கி முடி வரையில் பார்த்தவாறு பறந்து செல்வோம். புலன் கவர் பா நலன் புலப்படின் அவற்றை அறிவோம்.

நில்லுங்கள் சற்று. சீர் ஒலி கேட்கின்றது. பாவியல் தோய்ந்த பல்ஒலி கேட்கின்றது. கேளுங்கள்! சற்றுச் செவி சாய்த்துக் கேளுங்கள். 'செவிகாள் கேண்மின்களோ' சீர் பெறு நல் ஒலிகள்! கல்லென் துவலை தூவுகின்றது. பெயல் கனைகின்றது. அதற்கு எதிராகப் புல்லுணத் தெவிட்டும் பல்லுளைப் புரவியின் எதிர் கனைப்பும் கேட்கின்றது. கலிழ்ந்து வீழ் அருவி பாடுகின்றது. களி மயில் அகவுகின்றது. அயிர்மருள் இன்னிசை எழுகின்றது. சேண்நின்று கேட்கத் தக்கன இவை; 'அலர்தாய அரி நிழல் அசைஇ' நுகரத்தக்கவை இவை. தங்கி இருந்து இவ்வொலியெலாங் கேட்க இங்கு மரமில்லை, மர நிழலில்லை; இருந்து கேட்கக் காலமும் இல்லை. வாடைத் தண்வளி வாட்டிச் செல்கின்றது. இங்கு மலையில்லை, மலைதரு ஒலியில்லை, மலைபடு கடாமும் இல்லை. ஆனால், இவற்றின் சுவை தர நளிமலைச் சிலம்பின் சிலம்பும் கோவில் உளது. கேண்மின் கேண்மின்!

ஒலியில் மட்டுமோ பாவியல் தோய்கின்றது! நிறத்திலும் பாவியல்! கபிலரைப் போலக் கீரர் பல்பூக் கூறுர்; பல் நிறப் பூக்களைக் கூறுர். காலமோ, வாடைக் காலம். 'பல்வேறு உருவின் வனப்பு' அமை கோதைகளைக் கீரர் அவர்தம் மகளிருக்குப் புனைய விரும்பினர். ஆனல், அம்மகளிரோ, கீரரின் மேம்பட்ட பாவியல் தோய்ந்தவர். அம்மகளிர் கோதை புனையார். பல்விருங் கூந்தலில் சின்மலர்களே பெய்வார். அவர் பல் நிறப் பூக்களை அணிந்து நிறத்தழகைக் காட்ட நாணினர் போலும்! மகளிர் மறுப்பின் நிறங்களை உணர்த்த இதோ இயற்கையன்னை யுள்ளாள்! இதோ புன்கொடி முசுண்டைப் பொறிப்புற வெண்பூ! இப்

பூக்கள் தனியே காணப்படுகின்றனவா? தனியே மலர்ந்தால் அழகில்லை. முசுண்டைப் புன்பூக்களைக் கண்டு யாரேனும் மகிழ்வாரோ? அவை பொன் போற் பீரமொடு புதல்புதல் மலர்கின்றன. அவற்றுள் காணும் முரணால் அவை ஒன்றற்கொன்று அழகு தருவன போலும்! அந்தோ! இங்கு மற்றொரு தடை,—இது வாடைக் காலம். பல மலர்கள் காணுதற்கில்லை. பலநிறப் பூக்களைக் கூற இடமில்லை. நீரரைத் தடுக்கும் வன்மை வாடைக்கும் உண்டோ? வாடை, நீரர் கையில் படுகிற பாடு நமக்கே தெரியுமே! நீரர் வேறு பல நிறத்தை இவற்றோடு இணைப்பார்: ஈர வெண் மணல், வெள்ளென வெளுத்த மணல், அதன் மேல், கறுப்புக் களிமண் கரைந்து கரைந்து ஓடியிருக்கிறது.[1] இதிலும் அழகா! இதிலும் பாட்டா! நன்று! நன்று! இவற்றின் மேல் பைங்கால் கொக்கு, செவ்வரி நாரை. [2]வெள்ளை, கறுப்பு, பசுமை, செம்மை இந்நிறம் எல்லாம் சேர்த்துக் காட்டுவார். நீரர் ஓவியம் வல்லவர், ஓவிய இயல்பெலாம் உணர்ந்தவர் என்பதை முன்பு கண்டோம். அந்த ஓவியத் திறனை இங்கும் காட்டுகின்றார். இந்த நிறங்களைக் காட்ட இவருக்கு என்ன ஆர்வமோ! என்ன ஆவலோ! எப்படியோ அழகு தோன்ற இந்நிறங்களை எல்லாம் பிணைத்துக் காட்டுகின்றார். காண்மின்! 'கண்காள் காண்மின் களோ' கவின் பெறும் பல் நிறங்கள்!

நாம் பறந்து செல்வதும் பயனே தருவது போலும்! இதோ பல்வித நறுமணம், பாவியல் தோய்ந்த பல்வித மணம்! 'செவ்வியரும்பின் பைங் காற்பித்திகத்து அவ்விதழ் அவிழ் பதங்' கமழ்கின்றது.

1. நெடுநல் - 16. 2. நெடுநல் - 17.

பூக்களின் மணம் எப்போதும் ஒரே இயல்புள்ளது அன்று. மலர்கின்ற போது பூவிற்கு ஒரு தனி மண முண்டு. மலர்ந்தபின் அதே மணம் மலரிடைக் காணப்படுவதில்லை. மலர்ந்த பின் நாழிகை செல்லச் செல்ல மணம் குறைந்துகொண்டே வரும்; வதங்கி வாடுகின்ற மணம் சேர்ந்துகொண்டே வரும். கடைசியாக வாடல் மணமே மலர் மணத்தை மறைத்து விடும். போது அவிழ் பதத்தில் கமழும் மணத்தினில் கிரர் பாவியல் கண்டார்போலும். இம்மணம் ஒரு புறமாக, மற்றொருபால் நறுங்கல் பல்கூட்டு மணக்கின்றது. சிறு மணச் சந்தனம், தென்புல மருங்கில் தன் மணம் வீசுகின்றது. தகரத்தின் தண் மணம்—குளிர்ந்த மணம்—கமழ்கின்றது. இதோ அகில் மணம், கற்கண்டு தரும் மணத்துடன் கலந்து, புகைந்து புகைந்து இனிமையான மணம் தருகின்றது. நல் மணம் - சிறு மணம் - பெரு மணம் - இனிமைதரு மணம் - குளிர்ந்த மணம்-அம்மம்ம! எத்தனை எத்தனை வகை மணம்! நல் மணம் - நறு மணம். மூக்கே! நீ முகராய், முற்றிலும் நல் மணமே.

ஓசையைப்போல, நிறத்தைப்போல, மணத்தைப் போல, ஒளியிலும் பாவியல் உண்டு. இரும்பு செய் விளக்கு, ஈர்ந்திரி கொளுத்தி இருட்டிடைத் திகழ்கின்றது, பகுவாய்த் தடவின் செந்நெருப்பு ஒளி தந்து சிர்பெறுதலைக் காணுங்கள். பல்வேறு பள்ளிதொறும் பாயிருள் நீக்குவன பற்பல விளக்கொளி. அவை பருத்த தலையுடன் நின்று நிமிர்ந்து எரிவன. அதோ பாசறையின்கண் பற்பல பாண்டில் விளக்குகளில் பரூஉச் சுடர் அழல்கின்றன; இவை வடந்தைத் தண்வளி எறிதொறும் நுடங்குகின்றன; எல்லாச்

சுடரும் தெற்கே சாய்கின்றன; தலை எடுத்து எரிகின்றன. பின்பு தலை இறைஞ்சி எரிகின்றன. இச்சுடர்கள் எரிவதிலும் ஓர் அழகு; இங்கும் பாவியல்!

இன்னும் எங்கெங்குக் கீரர் தம் பாவியல் கண்கள் பட்டிருக்கின்றன என்றும் காண்போம். இதோ கைவல் கம்மியன் கவிபடு செய்வினை, சீரும் செம்மையும் ஒப்பச் செய் வினைகள். பாட்டிற்குத்தான் சீருண்டு என்பர்; செய்வினைக்கும் சீருண்டோ? இங்கும் பாட்டு உண்டு போலும். இரண்டு இலைகளின் இடையில் இட்டது போலப் புடை திரண்ட குடத்தைக் கூருளி செய்திருக்கிறது. உளிக்கும் பாட்டுத் தெரியும் போலும். அதன்மேல் உள்ளியின் முதல், உள்ளிப் பூண்டின் முதல்போல ஓர் அமைப்பு அமைந்துள்ளது. போது அவிழ்கின்ற நிலைமையை மணப் பகுதியில் கண்டோம். அந்த நிலைமை சிறு பொழுதேதான் நிற்பது. போது அவிழ்ந்தவுடன் மலர் மலர்ந்துவிடும். போது அவிழ்கின்ற அழகை நிலைபெறக் காண வேண்டுமா? இதோ போதவிழ்குவளை அவிழ்கின்ற படியே, நிலை அருகில் கூருளி குயிற்றியுள்ளது. கம்மியன் கூருளியும், கவி அமைக்கவல்லது போலும்.

படுக்கை மீதிலும் பாட்டு! வயமான் வேட்டம் பொறித்துள்ளது. வேட்டையாடுவது எங்கு? வியன்கட் கானத்து. தூரத்தே நின்று காணும் போதே அகன்ற அகன்ற காடு தெரிகின்றது. அதில் வயமான் வேட்டையாடுவது தெரிகின்றது. பூ இல்லாது இதுவும் சிறக்குமோ? பூக்கள் நிரல்படப் பொறிக்கப்பட்டுள்ளன. வெறும் பூ, பூவாய் இருந்தால் அக்காட்சி கண்ணுக்கு இனிமை தருதல் இல்லை;

பூக்களுக்கு மாறுபாடு அல்லது முரண் காட்ட முல்லைப் பல்போது பொறிக்கப்பட்டுள்ளன. பாட்டில் தான் முரண் கண்டோம். சொல் முரண், பொருள் முரண் உண்டு என்பர். இங்கும் முரணு! முல்லைப் பல்போது உறழப் பூக்கள் 'விரைத்து'ள்ளன.[1] இவற்றைக்கொண்ட சேக்கை மெல்லிதின் விரித்திருக்கின்றது.[2] விரித்திருப்பதிலும் ஓர் அழகு, ஒரு நயம், மெல்லிதின் விரித்திருக்கின்றது. மெல்ல, மெல்ல, கீரர் பெரும! அச்சேக்கை கிழிந்துபோய்விடும். பாவலனுக்குத் தெரியும், இச் சேக்கையின் அருமை, பா நலம் காட்டும் படுக்கையின் அருமை. இவர் பாட்டின் அருமையினும் இவர் மெல்லென விரிப்பது மிகவும் அருமை. கீரர்பெரும! இதை இவ்வளவு வருத்தத்தோடு விரித்துக் காட்டவேண்டா. சுருட்டிவிடுக. இதை நுகர அரசனே அங்கில்லை. அரசனை அப்போதே வெருட்டி விட்டீர்.

கண் கொட்டாது காணுங்கள், காண்பின் நல் இல். கவிநலம் பலபெறு காண்பின் நல் இல் தெரிகின்றது. வில் கண்டன்ன கொடிகள்; வரை கண்டன்ன தோற்றம்; வெள்ளியன்ன விளங்கும் சுதை வெள்ளியைப் போன்று சாந்து பூசியுள்ளது, நல் சாந்து பூசியுள்ளது. சேண் நின்று காண்பார்க்கும் இவற்றின் தோற்றமும் அழகும் இன்பூட்டுவன. உள்ளே சென்றாலோ அங்கும் அழகு; எங்கெங்கும் அழகு; பொங்கும் அழகு; பொங்கும் இன்பமும். மணி கண்டன்ன தூண்கள்; செம்பியன்றன்ன செய்வுறு நெடுஞ்சுவர். சுவர் செம்பால் செய்யப் பட்டதா? அன்று, அன்று. செம்பைப்போலத்

1. நெடுநல்வாடை, 130. 2. நெடுநல்வாடை, 131.

திண்மையொடு நிறமும் சேர்ந்தமைந்துள்ளது. வெளியே வெள்ளைச் சாந்து; உள்ளே செம்பு நிறம். இவ்வாறு இல்லமைக்கும் முறையெல்லாம் தமிழர் யாரிடமிருந்து அறிந்தனர்? தமிழ் மக்களிடமிருந்தே பிறர் அறிந்தனர் போலும்! இவ்வாறெல்லாம் தமிழ் மக்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வாழ்ந்தார்களா? இல் அமைப்பிலும் பா நலம் கண்டார்களா? இதுவும் புதுப்பெயல் காட்டும் புதுமை போலும்; இப் புதுமையும் இங்கே நின்றிலது. சுவர் ஒரே செம்பு நிறமாய் இருந்தால் காவியுடுத்த கைம் பெண் போன்று தோன்றும். காண்பதற்கும் இனிமை தரவேண்டுமே. இதோ இடைமறித்து ஒரு கொடி வளைந்து வளைந்து சுவரெங்கும் செல்கின்றது. வெறுங்கொடியா அது? வெறுங்கொடி என்றால் அவ்வளவு அழகு தாராதே. ஏதோ கோடு கிழித்தது போலத் தோன்றும், அல்லது பாம்பு வளைந்து வளைந்து செல்வதுபோலத் தோன்றும். இது அழகு தருவது எங்ஙனம்? இங்குக் காண்பது வெறுங்கொடியன்று; பூவோடு கூடிய கொடி. ஒன்றிரண்டு பூவா கொடியில் காண்பவை? பல் பூ, பற்பல பூக்கள், பல்வகைப் பூக்கள்—பல நிறத்தன, பற்பல உருவின—அவை அலர்ந்து நிறைந்த கொடி. அப்பூக்கள் தம் நிறத்தின் அழகு, வடிவத்தின் அழகு, சுவருக்கே ஓர் அழகு தருகின்றன. 'உருவப் பல்பூ ஒருகொடி வளை இக்' காண்பதற்கு இனியதாய் அமைந்த சுவர்; அமைந்த நல்இல்.

தமிழ்ப் பாநிலை

அம்மம்ம! தமிழர் இல்லெல்லாம் பாட்டு! சுவரெல்லாம் பாட்டு! படுக்கையில் பாட்டு! ஒளியில்

பாட்டு! ஓவியத்தில் பாட்டு! ஓசையில் பாட்டு! நறுமணத்தில் பாட்டு! நிறத்திலும் பாட்டு! நிலமெலாம் பாட்டு! தமிழர் வாழ்க்கையே பாவியல் தோய்ந்தது போலும். ஒரு பெரும் பாட்டாகவே அமைந்தது போலும். அந்தோ! இப் பாட்டெலாம் எங்கொளித்தன? இப்பாவியல் காணும் பண்பெலாம் யாண்டொளித்தன? தமிழ் நலமெலாம் யாண்டொளித்தன? நோம் எம் நெஞ்சம்; வேம் எம் நெஞ்சம். ஊரின் ஊரின் நாட்டின் நாட்டின், நாங்கள் தேடினும் இந் நலங்கள் காண்கிலோம்; ஒன்றேனும் காண்கிலோம்; அந்தோ! இவற்றின் அடிச்சுவடும் காண்கிலோம். இவை எலாம் என்றினிக் காண்போம்! என்றினிக் காண்போம்! எங்கினிக் காண்போம்! எவ்வாறு காண்போம்?

வானூர்தி வலவர்காள்! நீவிர் கடல்மீது செல்வீர்; மலைமீது செல்வீர்; வானிடைப் பறப்பீர்; வளியிடைப் புகுவீர். யாண்டாவது எம் தமிழை, எம் தமிழ்ப் பாட்டை, எம் தமிழ்நலத்தைக் காண்பீரேல், மீண்டும் வர, அதனை வேண்டுவீர்! மேதகையீர்!

ஆ! கண்டனர்; கண்டனர்! தமிழ் இருப்பிடம், தமிழ்ப்பா இருப்பிடம், தமிழ் நலன் இருப்பிடம் கண்டனர்! அந்தோ! பெயரிலாப் புலவன் ஒருவன் செந்தமிழ்தன்னைச் சிவனிடம் தூது விடுத்தனன்.[1] சிவன் தனைச் சேர்ந்தார் திரும்பார் என்பதைத் தெரியான், தெரியான்! அந்தோ! அறியாப் பாவலன்! கண்டோம்! கண்டோம்! தமிழ் இருப்பிடம் கண்டோம். தமிழர்

---

1. 'தமிழ்விடுதூது' - டாக்டர். உ. வே. சாமிநாதையரால் வெளியிடப்பட்டது. ஆசிரியர் யார் என்பது தெரிந்திலது.

பெண்மை எலாம், பெண் நலமெலாம் கரந்து, இறைவர் தம் இடப்பாகத்தில் அமைத்துக் கொண் டனர். அவர் வலப்பக்கத்தே காண்பது யாது? உற்று நோக்குக. அதுவே தமிழ். அதுவே தமிழ் நலன்; அதுவே தமிழ்ப் பாட்டு.

ஆம், கண்டோம்! கண்டோம்! அம்மம்ம! எட்டா இடத்தில் ஏறிய அதனை எங்ஙனம் பெறு வோம்! எங்ஙனம் பெறுவோம்! அதனைக் கட்டி யிழுத்தோ, வெருட்டி ஓட்டியோ, கெஞ்சி இரந்தோ, வஞ்சித்துக் கொணர்ந்தோ மீண்டும் நம்மிடைச் சேர்ப் பார் யார் உளர்? சேர்க்க வல்லவர் கீரர் ஒருவரே. கீரர்தம் தமிழுக்கு இறைவன் தமிழும் அஞ்சும். முன்பு ஒருகால் இறைவன் தமிழைக் கீரர் தூர எறிந்தது பலருக்கும் தெரியும். மீண்டும் நம் தமிழை, நம் தமிழ்ப் பாட்டைத் தர வல்லவர் கீரர் ஒருவரே. கீரரைப் போற்றுமின்! கீரரைப் போற்றுமின்! கீரரை வேண்டுமின்! கீரரை வேண்டுமின்! மீண்டும் தமிழ் பெற! மீண்டும் தமிழ்பெற!

பண்பு பாராட்டல்

கீரர் பெரும! தமிழ் தழைத்த காலத்தே - நாடெ லாம் பாட்டு, ஊரெலாம் பாட்டு, வீடெலாம் பாட்டு எனத் தமிழ் திகழ்ந்த காலத்தே - நீர் பாடிய நெடும் பெயர்ப் பாட்டு, நும் பெருமையைக் காட்டுமோ, அல்லால் எம் நாட்டின் பெருமையைக் காட்டுமோ, எம் தெய்வத் தமிழின் பெருமையைக் காட்டுமோ, அறியோம். அரும்பெரும் பாட்டைத் தந்த நும்மைப் புகழ்வதா? அல்லால் நும்மைத் தந்த எம் நாட்டைப் புகழ்வதா? அல்லால் எம் அருமைத் தமிழைப் புகழ்

வதா? அறியோம்! அறியோம்! நும்மையே புகழ் வோம் என்னில், எந்நலத்திற்கெனப் புகழ்வோம்? பொருள் நலத்திற்குப் புகழ்வதா? பா நலத்திற்குப் புகழ்வதா? அல்லால் வேறு எந்தெந்த நலத்திற் கெனப் புகழ்வோம்! அறியாது திகைக்கின்றோம்.

நும் பாட்டைக் கண்ட பின் மற்றொன்றைப் பாட்டென எவ்வாறு வழங்குவது? 'பாட்டெனப் படுவது நும் பாட்டு' என்றால், அது மிகையாகுமோ? நும் பாட்டின் ஓர் அசையிலும் பாட்டு, ஓர் எழுத் திலும் பாட்டு, சொல்லெலாம் பாட்டு, சொற்றொட ரெலாம் பாட்டு, அடியெலாம் பாட்டு, முடியெலாம் பாட்டு, நும் பாட்டெலாம் பாட்டு. அம்மம்ம! நும் ஊனெலாம் பாட்டு, உடலெலாம் பாட்டு, உளமெலாம் பாட்டு, உயிரெலாம் பாட்டே போலும்!

தொன்மொழிப் புலவ! இழுமென் மொழியால் விழுமியது நுவன்றது நும் பாட்டு;[1] விழுப்பொருள் பயந்தது; பரந்த மொழியால் அடிநிமிர்ந்து அமைந்தது. 'செந்தமிழ்ப் புலவ! செய்யுள் மொழியின் திறனெ லாம் காட்டும் நும் பாட்டு. சீர்புனை யாப்பின் சிறப்பினை உணர்த்தும். அவ்வகைதானே அழ கென்றும் காட்டும்.[2] அழகின் விருந்து இது. அறி விற்கும் விருந்து; பழமை விருந்து; புதுமையின்

---

1. "இழுமென் மொழியால் விழுமியது நுவலினும்
பரந்த மொழியால் அடிநிமிர்ந்து ஒழுகினும்
தோலென மொழிப தொன்மொழிப் புலவர்."
—தொல். செய்யுள். 235.

2. "செய்யுள் மொழியால் சீர்புனைந் தியாப்பின்
அவ்வகை தானே அழகெனப் படுமே."

விருந்து ; புதுவது கிளந்த யாப்பின் விருந்து ;[1] 'துயரறு கிளவியோடு அமர்ந்தீயும் விருந்து.' நும் பாட்டை எங் கெங்குக் காணினும் அங்கங்கும் பெருஞ்சுவை, அங் கங்கும் அழகு, அங்கங்கும் ஒளி, அங்கங்கும் பா நலன், அங்கங்கும் நும் திறன். இவற்றுள் பெரும்பெரும் புலவர்மாட்டும் பொருந்துதல் ஒன்றோ, இரண்டோ என்பர். இந்நலனெலாம், இத்திறனெலாம், ஒருங்கே- ஒரு சிறு பாட்டில் - கண்டால், எவர் அதை ஆற்ற வல்லார்! எவர் அதை ஆற்ற வல்லார்!

சொற்களை உடைத்தோம்; அவற்றின் சுட ரொளியைக் கண்டோம். அசையையும் உடைத் தோம்; அங்கும் அழகினைக் கண்டோம். மூழ்கி மூழ்கி முத்து முத்தாக எடுத்தோம். இவ்வாறெல்லாம் பொருள் நலன் புகுந்து, பாநலன் புகுந்து, நாம் கண்டன போதும். நாம் கண்டவற்றை எல்லாம் ஓரிடத்தில் பொதிந்து வைப்போம். உறுப்பு உறுப் பாகப் பிரிப்பதை விடுவோம்; இதழ் இதழாக எடுப் பதை விடுவோம்; இவற்றை எல்லாம் ஒன்று சேர விட்டுவிடுவோம். பாட்டின் முடிவில் நின்று நாம் பெறும் நுகர்வு எவ்வகைத்து என உணர முயல் வோம். பாட்டை மூடிவிடுவோம்.

சொல் எலாம் மறைகின்றன. சொல் திறம் எலாம் மறைகின்றன. சொற்பொருள் எலாம் மறை கின்றன. தோற்றம் இறுவாய் எல்லாம் தொலைந் தன. அங்கதம் சிலேடை அனைத்தும் மறைந்தன.

---

1. "விருந்தே தானும்
புதுவது கிளந்த யாப்பின் மேற்றே."
—தொல். செய்யுள். 234.

நகைப்போ அழுகையோ நம்முன் நின்றில. பொருள் நலமெல்லாம் போய் ஒளித்தன. பா நலம் எல்லாம் பறந்துபோயின. என்ன உணர்ச்சி நம் மனத்தில் தங்குகின்றது? இன்ப உணர்ச்சியா? அன்று. துன்ப உணர்ச்சியா? அதுவும் அன்று. இவற்றை எல்லாம் கடந்த நிலை, உணர்ச்சியை எல்லாம் கடந்த ஒருநிலை நிலவுகின்றது. பாட்டோ முடிந்ததுபோல முடியாமல் நிற்கின்றது. மனக்கண் திறந்தபடியே நிற்கின்றது. மனமோ, எண்ணுவதுபோல எண்ணும் இயல்பற்று நிற்கின்றது; அமைதியில் ஆழ்கின்றது; ஒருமை உறுகின்றது; இரண்டறக் கலக்கின்றது.

நூலறி புலவ! நுண்ணிதிற் கயிறிட்டு நும் பெரும்பெயர்ப் பாட்டிற்கு ஒப்ப மனை வகுத்தீர். அம் மனையில் பாவெனும் கோவில் எழுகின்றது, எழுகின்றது. அதனுள்பட்ட மண், கல், மரம் எல்லாம் மறைகின்றன. எழில் பெருங்கோவிலையே காண்கின்றோம். அதன் உச்சியில் நல்லொலி தரும் மணி, ஒரு பெருமணி மாட்டித் தொங்குகின்றது; தொங்கி அசைகின்றது; ஓம் ஓம் என, ரீம் ரீம் என ஒலிக்கின்றது. ஒலி பரவுகின்றது; வெளியெலாம், உள்ளெலாம், உயிரெலாம் பரவுகின்றது.

மணியின் ஓசை நிற்கின்றது. காற்றிடைக் கலந்த ஓசையும் குறைந்து, குறைந்து, நலிந்து, நலிந்து மறைகின்றது. புற ஓசை எல்லாம் ஓய்கின்றது. கேட்ட ஒலி காதைவிட்டு அகலவில்லை; மனத்தை விட்டு அகலவில்லை. உள்ளத்துள்ளே, உயிருக்குள்ளே இன்னிசை கேட்கின்றது; ஒலிக்கின்றது. காது கொடுத்துக் கேளுங்கள். அமைதி! அமைதி! ஒருமை! ஒருமை!

நறைமுது தமிழ் தரு நற்றமிழ்ப் புலவ![1] துறைத்தீந் தமிழ் தரு சொல் தெரி புலவ! 'நிலத்தினும் பெரிதே; வானினும் உயர்ந்தன்று, நீரினும் ஆர் அளவின்றே' நும் பாட்டு, நும் புலமை. உலகப் பெரும்பாக்களில் ஒன்று ஆவது நும் பாட்டு. உலகப் பெரும்புலவர்தம் குழுவில் நுமக்கொரு தனிஇடம் உண்டு. சங்கத் தலைமைப் புலவர் என்று நும்மை அறியாது வழங்குவர். தோன்றி மறைந்த அச் சங்கம் ஒன்றோ நும் தலைமைக்குரியது? பாவின் தலைமை நுமக்கே உரியது; அறிவின் தலைமை நுமக்கே உரியது; கற்றோர்க்கு வரம்பாகிய தலைமையும் நுமக்கே உரியது.

இந்நெடும்பெயர்ப் பாட்டை எண்ணிய நெஞ்சமும், எழுதிய கையும் என்றோ அழிந்தன; அவற்றை மண்தான் உண்டதோ, தீத்தான் தின்றதோ அறியோம். எண்ணிய எண்ணமும், எழுதிய பாட்டும் இன்றும் உள்ளன; இனியும் இருப்பன. இறைவன் படைப்பு என்றோ அழிந்தது. பாவலன் படைப்பை அழிவும் தீண்டுமோ? மக்களுள்ளளவும், மனமுள்ளளவும், மண்ணுள்ளளவும், விண்ணுள்ளளவும் நின்று நிலவுக நெடுநல்வாடை!

---

1. ஈண்டும் பிற இடத்தும் ஓசைநலன் கருதிய வழுவமைதிகள்.

நெடுநல்வாடை

தெளிபொருள்

இப்பாட்டிற்காணும் பல கருத்துக்களை, நச்சினர்க்கினியர், அவற்றின் சூழ்நிலைகளினின்று நீக்கி, மற்றெரு சூழலில் கொண்டு கூட்டிப் பொருள் காண்கின்றார். 16ஆம் அடியை 166-ஆம் அடியுடன் அவர் இணைப்பதைக் காணலாம். பாட்டின் கருத்துக்கள் ஆற்றெழுக்காக அமைந்துள்ளன. கொண்டு கூட்டுதலின்றியும் பொருள் கூறத் தகும் என்பதை இத் தெளிபொருள் காட்டும். இவ்வுரை பொருந்துமெனின் இதனையும் தமிழ் உலகம் ஏற்குமாக.

இப்பாட்டு, இரு உட்பிரிவுகளைக் கொண்டதாகும். ஒன்று, 1 முதல் 72 அடி வரையில், கூதிர்க்காலம் நிலைத்து நின்றுவிட்டது என்பதைக் காட்டுவது. குளிர் புதுப் பெயல் தந்ததாயின் அது, கூதிர் வந்துவிட்டது, ஆதலின் நிலைத்து நின்றுவிட்டது என்பவைகளை மெய்ப்பிக்க வல்லதாகாது. ஆதலின் சில நண்பகலிலுங்கூட, குளிர் குன்றையும் குளிரச் செய்வது போன்றது. காலை, அந்தி, முன் இரவு ஆகிய வேளைகளிலும், பல இடங்களிலும், பறவைகளையும் விலங்கினங்களையும் பற்பல மக்களையும் குளிர் தாக்கிற்று என உணர்த்திக் "கூதிர் நின்றன்றால்" (72) என நிறுவுகின்றது இப்பிரிவு. இரண்டாம் பிரிவு, (73-188) இக் கூதிர்க் காலத்தில் பாசறையின்கண் நள்ளென்யாமத்தும் பள்ளிகொள்ளாத அரசன் நிலைமையையும், புலம்பொடு வதியும் அரசியின் இன்னு அரும்படரையும் உணர்த்துவது.

நச்சினர்க்கினியர், 'குன்று குளிர்ப்பன்ன கூதிர்ப் பானாள்' என்னும் 16-ஆம் அடியை 166ஆம் அடியில் உள்ள 'புலம்பொடு வதியும் அரிவைக்கு' என்பதுடன் இணைத்தது

போல் இணைக்காது "குன்றையும் குளிரச் செய்வ போன் றன கூதிர் நண்பகல்கள்" என இங்குப் பொருள் கூறப்பட் டுள்ளது. நாள் என்பது, இரவும் பகலும் சேர்ந்த முழு நாள் ஒன்றைக் குறிப்பதோடு, பகற்பொழுதையும் குறிக் கும். நக்கீரரே உச்சிப் பொழுதினைக் குறிக்க 'அரைநாள் அமயத்து' (75)என்றார். 'நாள் நிழல் போல விளியும்' என நாலடி, 166 குறிப்பிடும். பானாள் என்பதற்கு, 'அரைநாள்,' 'நண்பகல்' எனப் பொருள் கொள்ளத் தகும். இலக்கணக் குறிப்பு, பிற இடங்களில் இச் சொல் ஆட்சி முதலியவை களைத் தெளிபொருள் அடிக்குறிப்பிற் காண்க.

வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென
ஆர்கலி முனைஇய கொடுங்கோற் கோவலர்

புதுப்பெயல்

வையகம் - உலகம் (உலகத்திலுள்ள எல் லாப் பொருள்களும்)
பனிப்ப - குளிரால் வருந்த
வலன்ஏர்பு* - வன்மை ஏறி
வளைஇ - வளைத்துக் கொண்டு
பொய்யாவானம் - தவறாது பெய்யும் வானம்
புதுப் பெயல் - புதுமையான மழையை
பொழிந்தென - பொழிந்ததாக;

கோவலர்

ஆர்கலி - வெள்ளத்தை
முனைஇய - வெறுத்த அல்லது கோபித்த
கொடுங்கோல் - வளைந்த கோல்களையுடைய
கோவலர் - இடையர்

---

* நெடுநல்வாடை—திறன் ஆய்ந்து தெளிதல்—பாகலப் பகுதி பக்கம் 29 அடிக் குறிப்பைப் காண்க.

ஏறுடை யினநிரை வேறுபுலம் பரப்பிப்
புலம்பெயர் புலம்பொடு கலங்கிக் கோடல்
நீடிதழ்க் கண்ணி நீரலைக் கலாவ
மெய்க்கொள் பெரும்பனி நலியப் பலருடன்
கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க

ஏறுஉடை	- காளைகளையுடைய
இனநிரை	- ஆடு மாடுகளின் கிடையை
வேறுபுலம்	- வேறு இடத்தில்
பரப்பி	- பரவவிட்டு
புலம்பெயர்	- (தாம் இருந்த) இடத்தை விட்டுச் செல்லுகின்ற
புலம்பொடு	- தனிமைத் துயரால்
கலங்கி	- வருத்தமடைந்து
கோடல்	- காந்தள் பூவின்
நீடு இதழ்	- நீண்ட இதழ்களால் கட்டிய
கண்ணி	- (கோவலர்) தலையில் அணிந்த மாலை
நீர் அலை	- மழைநீர் அலைத்தலாலே
கலாவ	- கலைவு எய்த (கலைய)
மெய்க்கொள்	- உடலிற் கொண்ட
பெரும் பனி	- பெருங்குளிர்
நலிய	- வருத்துவதால்
பலருடன்	- பலரோடுங் கூடி
கைக்கொள்	- கையில் கொண்ட
கொள்ளியர்	- கொள்ளியை உடையவர்களின்
கவுள்புடையூஉ	- தாழ்வாய் மேல்வாயோடு மோதி (பற்பறை கொட்டி)
நடுங்க	- குளிரால் நடுங்க

மாமேயல் மறப்ப மந்தி கூரப்
பறவை படிவன வீழக் கறவை
கன்றுகோ ளொழியக் கடிய வீசிக்
குன்றுகுளிர்ப் பன்ன கூதிர்ப் பானாள்

குளிரின் கொடுமை

மா	- விலங்குகள்
மேயல்	- (தாம்) மேயும் தொழிலையே
மறப்ப	- மறந்து நிற்ப
மந்தி	- குரங்கு
கூர	- (குளிர்ச்சி மிகுதலால் ஒடுங்க) குன்னுக்க
பறவை	- பறவைகள்
படிவன	- மரங்களில் தங்குபவை
வீழ	- நிலத்திலே விழ
கறவை	- கறவைப் பசுக்கள்
கன்று கோள்	- பால் கொள்ளக் கன்றுகளை ஏற்றுக் கொள்ளுதலை
ஒழிய	- தவிருமாறு
கடிய	- கடியவாய்
வீசி	- உதைக்க
குன்று	- குன்றையும்
குளிர்ப்பன்ன[1]	- குளிரச் செய்வ போன்றன
கூதிர்	- கூதிர்க் காலத்து
பானாள்[2]	- நண்பகல்கள்

---

1. அன்ன-பலவின்பால் குறிப்பு வினைமுற்று; 'பானாள்' என்னும் எழுவாயோடு இயைவது. (பிறவும் அன்ன. அவற்றோரன்ன)

2. 'பானாள்' (பால் + நாள்) என்பது நள்ளிரவு அல்லது நண்பகல் என்று பொருள்படும். பண்டை உரையாசிரியர்கள் 'பானாள்' வருமிடமெல்லாம் நள்ளிரவு என்றுமட்டுமே பொருள் கொண்டனர். குறுந்தொகை 311-ஆம் பாட்டு. பானாளில் தலைவியும் ஆய

புன்கொடி முசுண்டைப் பொறிப்புற வான்பூப்
பொன்போற் பீரமொடு புதல்புதல் மலரப்
பைங்காற்கொக்கின் மென்பறைத் தொழுதி
இருங்களி பரந்த ஈர வெண்மணற்

இயற்கை அழகு

புன்கொடி	- அழகற்ற கொடியாகிய
முசுண்டை	- முசுண்டைக் கொடியின்
பொறிப்புற	- திரட்சியுற்ற வெளிப்புறத்தை யுடைய
வான் பூ	- வெள்ளிய நிறமுடைய பூக்கள்
பொன்போல்	- பொன்னைப் போன்ற
பீரமொடு	- பீர்க்கம் பூக்களுடன்
புதல்புதல்	- ஒவ்வொரு புதரிலும்
மலர	- விரிந்து மலர
பைங்கால்	- பசிய கால்களையுடைய
கொக்கின்	- கொக்குகளின்
மென்பறை	- மெல்லென (ஓசையின்றிப்)பறந்து செல்லும்
தொழுதி	- கூட்டங்கள்
இருங்களி	- கரிய நிறமுள்ள களிமண்
பரந்த	- (மழையால் கரைந்து) பரவிய
ஈரவெண்மணல்	- ஈரமுள்ள வெண்மை நிறமுடைய மணற் பரப்புகளில்

மும் - ஆயமெல்லாம் - புன்னைமலர் கொய்வதைக் குறிக்கின்றது ஆயம் பூக்கொய்தல் நள்ளிரவில் நிகழ்வதன்று. புன்னை மலர் கொய்தல். நண்பகலில் - ‘உரவுக் கதிர்தெறூம் உருப்பு அவிர் அமயத்து’ அண்மையில் நிகழ்வதைக் குறிஞ்சிப் பாட்டும் குறிக்கும். அங்கு ஆயம் கொய்த மலர்களில் ‘கடி இரும் புன்னை’யும் காணலாம். குறுந்தொகை 249-ஆம் பாட்டு, சிறுவெண்காக்கை, பாஞளில் ‘பனிக்கழி துழவுதல்’ குறிக்கும். இச்செயலும் நண்பகலில் நிகழ்வதென்பதே பொருந்தும். இப்பாட்டிலும் நண்பகல் என்னும் பொருள் பொருந்துவது காண்க.

செவ்வரி நாரையோ டெவ்வாயுங் கவரக்
கயலற லெதிரக் கடும்புனற் சாஅய்ப்
பெயலுலந் தெழுந்த பொங்கல் வெண்மழை
அகலிரு விசும்பிற் றுவலை கற்ப
அங்க ணகல்வய லார்பெயற் கலித்த
வண்டோட்டு நெல்லின் வருகதிர் வணங்க

செவ்வரி - சிவந்த வரிகளையுடைய
நாரையோடு - நாரைகளோடு
எவ்வாயும் - எல்லா இடத்தையும்
கவர - பற்றிக்கொள்ள
கயல் - கயல் மீன்கள்
அறல் - அற்றுச் சிறிதாக ஓடும் நீருக்கு
எதிர - எதிரே ஏறிச் செல்லும்படி
கடும்புனல் - விரைந்து செல்லும் வெள்ள நீர்
சாஅய் - ஒருபுறம் சாய்ந்து குறைந்து ஓட
பெயல் உலந்து - பெய்தல் வற்றி (மழையைப் பெய்து பெய்து நீர்வற்றி)
எழுந்த - (வானத்தில்மேலேசெல்ல)எழுந்த
பொங்கல் - பொங்கிப் பொங்கி எழுகின்ற
வெண்மழை - வெண்ணிற மேகங்கள்
20 அகல்இரு - அகன்ற பெரிய
விசும்பில் - ஆகாயத்தில்
துவலை - சிறு தூவலாகத் தூவுதலை
கற்ப - கற்றுக் கொள்ள
அம்கண் - அழகிய இடத்தை உடைய
அகல் வயல் - அகன்ற வயல்களில்
ஆர் பெயல் - நிறைந்தமழையால்
கலித்த - செழித்து வளர்ந்த
வண்தோட்டு - வளம் பொருந்திய தோகைகளையுடைய
நெல்லின் - நெற்பயிரிலிருந்து

முழுமுதற் கமுகின் மணியுற மெருத்திற்
கொழுமட லவிழ்ந்த குழூஉக்கொள் பெருங்குலை
நுண்ணீர் தெவிள வீங்கிப் புடைதிரண்டு
தெண்ணீர்ப் பசுங்காய் சேறுகொள முற்ற

வரு கதிர் - வெளியே வருகின்ற கதிர்கள்
வணங்க - (மழையாலும் வாடைக்காற்றாலும்) சாய்ந்து வளைந்து நிற்க
முழுமுதல் - பெரிய அடி மரத்தையுடைய
கமுகின் - கமுக மரத்தினது
மணி உறழ் - நீல மணியை ஒத்த
எருத்தின் - கழுத்தில் உள்ள
கொழு மடல் - கொழுமையான மடல்கள்
அவிழ்ந்த - விரிந்து சாய்ந்த
குழூஉக்கொள் - கூட்டமாக நெருங்கிய (காய்ப்புக் கொண்ட)
பெருங் குலை - பெரிய குலைகளில்
நுண்ணீர் - நுண்ணிய நீர்
தெவிள - திரள, அல்லது, நிறைய
வீங்கி - பருத்து (நீர் நிறைய நிறையப் பருத்து)
புடை திரண்டு - வெளிப் பக்கங்கள் திரண்டு, அல்லது, உருட்சியைப் பெற்று
தெள் நீர் - தெளிந்த நீரை உடைய
பசுங்காய் - பசிய காய்கள்
சேறு கொள - இனிய உள்ளீடு கொள்ளும்படி
முற்ற - முதிர்ச்சியடைய

நளிகொள் சிமைய விரவுமலர் வியன்காக்
குளிர்கொள் சினைய குரூஉத்துளி தூங்க
மாடமோங்கிய மல்லல் மூதூர்
ஆறுகிடந் தன்ன அகனெடுந் தெருவிற்
படலைக் கண்ணிப் பரேரெறுழ்த் திணிதோள்

நளி கொள்	- செறிதல் அல்லது நெருங்குதலைக் கொண்ட (அடர்ந்து நெருங்கிய)
சிமைய	- உச்சிகளை உடைய
விரவுமலர்	- பல்வித மலர்கள் விரவிய அல்லது கலந்து பொருந்திய
வியன் கா	- அகன்ற பொழில்கள்
குளிர் கொள்	- குளிர்ச்சியைக் கொண்ட
சினைய	- கிளைகளை உடையனவாய்
குரூஉத் துளி	- (அவற்றில்) பலநிறம் விளங்கும் மழைத் துளிகள்
தூங்க	- (உச்சியில், மலர்களில், கிளைகளில்) தொங்கி அசைய

மூதூர் : முழுவலி மாக்கள்

மாடம் ஓங்கிய	- மாடங்கள் உயர்ந்த
மல்லல் மூதூர்	- வளப்பத்தை உடைய பழைய ஊரில்
30 ஆறு கிடந் தன்ன	- ஆறு கிடந்தது போலத் தோன்றும்
அகல் நெடுந் தெருவில்	- அகன்ற நீண்ட தெருக்களில்
படலைக்கண்ணி	- பச்சை நிற இலைகளோடு கலந்து கட்டிய மாலையையும்
பரு ஏர் எறுழ்	- பருத்த, அழகுடைய, வலிமையுள்ள
திணிதோள்	- திணிந்த அல்லது இறுகிய தோளையும்

முடலை யாக்கை முழுவலி மாக்கள்
வண்டுமூசு தேறல் மாந்தி மகிழ்சிறந்து
துவலைத் தண்துளி பேணார் பகலிறந்து
இருகோட் டறுவையர் வேண்டுவயின் திரிதர

முடலை யாக்கை	- முறுக்கேறிய உடலையும் உடைய
முழுவலி	- நிறைந்த உடல்வன்மை உடைய
மாக்கள்	- அறிவிற் குறைந்த மனிதர்கள்
வண்டு மூசு	- வண்டுகள் மொய்க்கும்
தேறல் மாந்தி	- கள்ளை உண்டு
மகிழ் சிறந்து	- மயக்கம் மிக்கு
துவலை	- சிறு துவலையாகிய
தண் துளி	- குளிர்ந்த துளிகளைப்
பேணார்	- பொருட் படுத்தாதவராய்
பகலிறந்து	- பகலைக் கடந்து (பகல் கழிந்த பின்பு)
இரு கோடு	- இரண்டு பக்கங்களிலும் (முன்னும்பின்னும் தொங்கவிட்ட)
அறுவையர்	- துகில் அல்லது துணிகளை உடையவர்களாய்க் (குளிரைப் பொருட்படுத்தாது ஆடையிருந்தும் அதனால் உடலை மூடிக் கொள்ளாது அதனை முன்னும்பின்னும் தொங்கவிட்டு)
வேண்டு வயின்	- வேண்டியவாறு வேண்டிய இடங்களில்
திரிதர	- அலைய ;

வெள்ளி வள்ளி வீங்கிறைப் பணைத்தோள்
மெத்தென் சாயல் முத்துறழ் முறுவற்
பூங்குழைக் கமர்ந்த ஏங்தெழில் மழைக்கண்
மடவரல் மகளிர் பிடகைப் பெய்த
செவ்வி யரும்பின் பைங்காற் பித்திகத்து

ஆவணம் - மகளிர் வழிபாடு

வெள்ளி வள்ளி - வெள்ளைநிறத்தை உடைய சங்கு வளையல்களால், அல்லது, வெள்ளியால் செய்த வளையல்களை அணிதலால்

வீங்கு இறை - இறுகின முன் கைகளையும்

பணைத் தோள் - மூங்கில் போல மழமழப்பாகத் தோன்றும் தோள்களையும்

மெத்தென் சாயல் - மெத்தெனத் தோன்றும் மென்மைத் தன்மையையும்

முத்துஉறழ் - முத்துப்போன்ற

முறுவல் - பற்களையும்

பூங்குழைக்கு - அழகிய காதணிக்கு, காதணி அழகிற்கு

அமர்ந்த - பொருந்திய

ஏந்து எழில் - உயர்ந்து தோன்றுகின்ற அழகிய

மழைக் கண் - குளிர்ந்த நோக்குடைய கண்களையும் கொண்ட

மடவரல்மகளிர் - எளிதில் நம்பும் இயல்புடைய பெண்கள்

பிடகைப் பெய்த - பூந்தட்டுக்களில் இட்டு வைத்த

செவ்வி - (மலரும்) பருவம் பொருந்திய

அரும்பின் - அரும்பினது

அவ்வித ழவிழ்பதங் கமழப் பொழுதறிந்து
இரும்புசெய் விளக்கின் ஈர்ந்திரிக் கொளீஇ
நெல்லும் மலரும் தூஉய்க் கைதொழுது
மல்ல லாவண மாலை யயர
மனையுறை புறவின் செங்காற் சேவல்

பைங்கால்	- பசுமை கொண்ட காம்புகளை யுடைய
பித்திகத்து	- சாதி மல்லிகையின்
அவ்விதழ்	- அழகிய இதழ்கள்
அவிழ் பதம்	- மலர்கின்ற சமயத்தில்
கமழ	- மணம் வீச (அந்த மணத்தைக் கொண்டு)
பொழுதறிந்து	- மாலைக்காலமென்று அறிந்து
இரும்பு செய்	- இரும்பால் செய்த
விளக்கின்	- விளக்கின்
ஈர்ந்திரி	- ஈரம் கொண்ட திரியைக்
கொளீஇ	- கொளுத்தி
நெல்லும் மலரும்	- நெல்லும் மலரும்
தூஉய்	- தூவி
கைதொழுது	- கைகூப்பி (விளக்கினை) வணங்கி
மல்லல்ஆவணம்	- வளப்பம் பொருந்திய கடைத் தெருக்களில்
மாலை அயர	- மாலைக்காலங்களைக் கொண்டாட

புறாக்கள் நிலை

45 மனையுறை	- வீட்டில் இருக்கும்
புறவின்	
செங்காற்சேவல்	- சிவந்த காலையுடைய ஆண் புறாக் கள்

இன்புறு பெடையொடு மன்றுதேர்ந் துண்ணாது
இரவும் பகலு மயங்கிக் கையற்று
மதலைப் பள்ளி மாறுவன இருப்பக்
கடியுடை வியனகர்ச் சிறுகுறுந் தொழுவர்
கொள்ளுறழ் நறுங்கற் பலகூட்டு மறுக

இன்புறு	- இன்பம் அடையும்
பெடையொடு	- பெண்புறுக்களோடு
மன்று தேர்ந்து	- பொது இடங்களில் இரைதேடி
உண்ணாது	- உண்ணாமல்
இரவும் பகலும்	- இரவு பகல் என்று தெரியாமல்
மயங்கி	- மயங்கி
கையற்று	- செயலற்று
மதலைப் பள்ளி	- வீட்டின் கொடுங்கைகளில், அல்லது, இறைவாரங்களில்
மாறுவனஇருப்ப	- மாறி மாறி இருக்க

அழகு செய் மகளிர்

கடி உடை	- காவலை உடைய
வியன் நகர்	- அகலமான வீடுகளிலே
சிறு	- சிறியராகிய
குறுந்தொழுவர்	- குற்றேவல் செய்யும் வேலையாட்கள்
கொள்ளுறழ்	- கொள்ளின் நிறத்தை ஒத்த
நறுங்கல்	- நறுமணச் சரக்குகளை அரைக்கும் கல்லில்
பலகூட்டு மறுக	- பல்வகைமணம் சேர்ந்த கூட்டை அரைக்க

வடவர் தந்த வான்கேழ் வட்டம்
தென்புல மருங்கிற் சாந்தொடு துறப்பக்
கூந்தல் மகளிர் கோதை புனையார்
பல்லிருங் கூந்தற் சின்மலர் பெய்ம்மார்
தண்ணறுந் தகர முளரி நெருப்பமைத்து
இருங்கா ழகிலொடு வெள்ளயிர் புகைப்பக்

வடவர் தந்த	- வடநாட்டார் தந்த
வான் கேழ்	- வெள்ளையான நிறத்தையுடைய
வட்டம்	- வட்டமான சந்தனம் அரைக்கும்
தென்புலமருங்கில்	- தென்திசை இடத்தில் [கல்
சாந்தொடு	- அரைத்த சந்தனச் சாந்தோடு
துறப்ப	- (வேண்டுவதில்லை என்று) துறந்து கிடக்க
கூந்தல்	- அழகிய கூந்தலையுடைய
மகளிர்	- பெண்கள்
கோதை	- கட்டிய மாலைகளை
புனையார்	- இட்டு முடியாராய்
பல் இரு	- பலவாகிய கரிய
கூந்தலில்	- கூந்தலில்
சின் மலர்	- சில மலர்களை
பெய்மார்	- அணிந்துகொள்ள
தண் நறு	- குளிர்ந்த வாசனையுடைய
தகரம்	- தகரமரம் அல்லது மயிர்ச்சந்தன
முளரி	- விறகால் [மரத்தின்
நெருப்பமைத்து	- நெருப்பை உண்டாக்கி (அதில்)
இருங்காழ்	- கரிய வயிரத்தை உடைய
அகிலொடு	- அகிலோடு
வெள்ளயிர்	- கண்ட சருக்கரை (கற்கண்டு)
புகைப்ப	- புகையச் செய்ய [சேர்த்து

கைவல் கம்மியன் கவின்பெறப் புனைந்த
செங்கேழ் வட்டஞ் சுருக்கிக் கொடுந்தறிச்
சிலம்பி வானூல் வலந்தன தூங்க
வானுற நிவந்த மேனிலை மருங்கின்
வேனிற் பள்ளித் தென்வளி தரூஉம்

கைவல்	- கைவேலையிற் சிறந்த
கம்மியன்	- சிற்பத் தொழிலாளன் (மரத்தில் வேலைப்பாடு அமையச்செய்ய வல்லவன்)
கவின் பெற	- அழகு பெற
புனைந்த	- செய்த
செங்கேழ்	- சிவந்த நிறமுடைய
வட்டம்	- (விரித்தால்) வட்டமாக அமையும் விசிறிகள்
சுருக்கி	- சுருக்கப்பட்டு
கொடுந்தறி	- வளைந்த முளையிலே
சிலம்பி	- சிலந்தியின்
வால் நூல்	- வெள்ளிய நூலால்
வலந்தன தூங்க	- சூழப்பட்டனவாய்த் தொங்க

நெடுநிலைமாடத்தில் மகளிர்

60 வானுற	- வானத்தை அளாவ
நிவந்த	- உயர்ந்த
மேனிலை மருங்கின்	- மேல் மாடங்களில் (மாடிகளில்)
வேனிற் பள்ளி	- வேனிற்காலத்தில் துயில்கொள்ள அமைத்த படுக்கைக்கு
தென்வளி	- தென்றல் காற்றைத்
தரூஉம்	- தருகின்ற

நேர்வாய்க் கட்டளை திரியாது திண்ணிலைப்
போர்வாய் கதவந் தாழொடு துறப்பக்
கல்லென் துவலை தூவலின் யாவரும்
தொகுவாய்க் கன்னற் றண்ணீ ருண்ணார்
பகுவாய்த் தடவிற் செந்நெருப் பார

நேர்வாய் - நேரான வாயையுடைய
கட்டளை - சாளரங்கள்
திரியாது - தம்நிலை மாறாது (திறவாது)
திண் நிலை - உறுதியான தன்மையை உடைய
போர் வாய் - பொருதல் வாய்ந்த (இரண்டு கதவுகளும் தம்முட் பொருந்துதல் வாய்ந்த)
கதவம் - கதவுகள்
தாழொடு துறப்ப - தாழிட்டுக் கிடக்க
கல் லென் - கல்லென்ற ஓசையை உடைய
துவலை தூவலின் - சிறு தூவல் தூவுதலால்
யாவரும் - மகளிர் யாவரும்
தொகுவாய் - குவிந்த வாயை உடைய
கன்னல் - கரகத்தின் அல்லது மண்ணாற் செய்த நீர்க்கலத்தின் (கூசாவின்)
தண்ணீர் - தண்ணீரை
உண்ணார் - குடியாராய்
பகுவாய் - விரிந்த வாயையுடைய
தடவின் - பெருந்தாழிகளில் இட்ட
செந்நெருப்பு - சிவந்த நெருப்பின் வெம்மையை
ஆர - நுகர

ஆடல் மகளிர் பாடல்கொளப் புணர்மார்
தண்மையிற் றிரிந்த இன்குரற் றீந்தொடை
கொம்மை வருமுலை வெம்மையிற் றடைஇக்
கருங்கோட்டுச் சீறியாழ் பண்ணுமுறை நிறுப்பக்
காதலர்ப் பிரிந்தோர் புலம்பப் பெயல்கனைந்து

ஆடல் மகளிர்	- ஆடுதற்கு வந்த மகளிர்
பாடல் கொள	- (தம்) பாட்டுக்கள் பொருந்த
புணர்மார்	- யாழ் கூட்டுதற்கு அல்லது யாழ் இசைகூட்டுதற்கு
தண்மையில்	- குளிர்ச்சியால்
திரிந்த	- (ஓசைதரும் தன்மையில்) மாறுபட்ட
இன்குரல்	- இனிய குரலைத் தரும்
தீம் தொடை	- நல்ல நரம்புகளை
கொம்மை	- திரட்சி உடைய
வரு முலை	- வளர்ந்துவரும் முலைகளின்
வெம்மையின்	- சூட்டில்
தடைஇ	- தடவி
கருங்கோட்டு	- கரிய தண்டினை உடைய
சீறியாழ்	- சிறிய யாழை
பண்ணுமுறை நிறுப்ப	- பண்ணின் முறையில் நிறுத்த அல்லது (இசைகூடாததால்) பண்ணுகின்ற முறையிலேயே நிறுத்திவிட
காதலர்	- காதலரை
பிரிந்தோர்	- பிரிந்தவர்
புலம்ப	- வருந்த
பெயல் கனைந்து	- மழை இரைச்சலுடன் சொரிந்து

கூதிர்நின் றன்றாற் போதே மாதிரம்
விரிகதிர் பரப்பிய வியல்வாய் மண்டிலம்
இருகோற் குறிநிலை வழுக்காது குடக்கேர்பு

கூதிர் நின்றன்றால்
போதே - காலம் கூதிர்க்காலமாக நிலைத்து நின்றுவிட்டது

அரண்மனை வருத்தல்

மாதிரம் - திசைகளெல்லாம்
விரி கதிர் - விரிந்து செல்லும் ஒளிக்கதிர்களை
பரப்பிய - பரவச் செய்த
வியல் வாய் - அகன்ற இடத்தையுடைய
மண்டிலம் - ஞாயிறு
இருகோல்[1]
குறி நிலை - (ஞாயிற்றின் நிலை அல்லது காலம் தெரியுமாறு பொருந்திய) இரண்டு கோல்களின் நிழல் குறிக்கின்ற காலநிலை
வழுக்காது - தவறாது
குடக்கு ஏர்பு - ஞாயிற்றின் நிலை மேற்கே ஏறி

1. இரண்டு கோல்கள் தென்புறம் ஒன்று வடபுறம் ஒன்றாக, ஒன்றற்கொன்று சிறிது தூரத்தில் நிற்குமாறு ஊன்றப்படும். இவ்வாறு நிறுத்தியவற்றின் குறுக்கே இடைவெளி விட்டு, வேறு இரு கோல்கள் நெடுமட்டமாக அல்லது படுமட்டமாக, ஊன்றிய கோல்களின் மேல்பகுதியில் பொருத்தி அமைக்கப்படும். ஞாயிற்றின் ஒளி இவ்விரு குறுக்குக் கோல்களின்மேல் படும்போது அவற்றின் நிழல்கள் காலையில் ஒன்றைவிட்டு ஒன்று அகன்று நிற்கும். பொழுது செல்லச் செல்ல, ஞாயிறு உயர உயர, இவ்விரு நிழலும் குறுகிக்கொண்டே வரும். சரியான நண்பகலில் இவ்விரு நிழலும் ஒன்றன்



ஒருதிறஞ் சாரா அரைநா ளமயத்து
நூலறி புலவர் நுண்ணிதிற் கயிறிட்டுத்
தேஎங் கொண்டு தெய்வம் நோக்கிப்
பெரும்பெயர் மன்னர்க் கொப்ப மனைவகுத்து

**ஒரு திறஞ்சாரா அரைநாள்	- ஒரு பக்கத்தைச் சாரப் போகாத
அமயத்து	- நண்பகலில் அல்லது சரியான உச்சிப்பொழுதில்
நூலறி புலவர்	- மனை நூல் வல்ல புலவர் (மனைகள் வகுக்கும் நூல்களில் வல்ல அறிஞர்கள்)
நுண்ணிதின்	- நுட்பமாக அறிந்து
கயிறிட்டு	- கயிறுகொண்டு அளந்து கட்டி அல்லது குறித்து
தேம் கொண்டு	- (மனைக்கு வேண்டிய) இடத்தைக் கொண்டு
தெய்வம் நோக்கி	- கடவுளை நோக்கி வேண்டுதல் செய்து
பெரும் பெயர்	- பெரும் புகழையுடைய
மன்னர்க்கு	- அரசர்களுக்கு
ஒப்ப	- பொருந்தும்படி
மனை வகுத்து	- அம்மனையைப் பாகுபாடுசெய்து (பல கூறுகளாகப் பிரித்து)

மேல் ஒன்று பொருந்தி 'ஒரே நிழலாகத் தோன்றும். ஞாயிறு இறங்க இறங்க, இந்நிழல்கள் அகன்று அகன்று செல்லும். இந் நிழல்களின் நிலையாலும் இவற்றின் இடைவெளியைக் கொண்டும் பொழுது காண்பர். இது பழங்காலத்தே பொழுதறியும் முறைகளில் ஒன்று என்பர்.

ஒருங்குடன் வளைஇ யோங்குநிலை வரைப்பிற்
பருவிரும்பு பிணித்துச் செவ்வரக் குரீஇத்
துணைமாண் கதவம் பொருத்தி யிணைமாண்டு

மதில் - மதில் கதவு

ஒருங்கு - ஒன்ருகுமாறு
உடன் வளைஇ - (அந்த மனை அதன் பிரிவுகள் எல்லாம் ஒருசேர) உடன்வளைத்து
ஓங்குநிலை - உயரமாக எடுத்த
வரைப்பின் - மதிலில்
பரு இரும்பு - பரிய இரும்பால் அல்லது இரும்புப் பட்டங்களால்
பிணித்து - கட்டி
செவ்வரக்கு - சிவப்பு நிறமான அரக்கை (சாதிலிங்கத்தை)
உரீஇ - (தடவி மேடுபள்ளமின்றி) வழித்து
துணைமாண் கதவம் - ஒன்றைப்போன்று மற்ருென்றும் அமைந்த இரட்டைக் கதவுகளை
பொருத்தி - பொருத்தி அமைத்து
இணைமாண்டு - ஒன்ருேடொன்று இணைதல் மாட்சிமைப்பட்டுத் தோன்ற, (இரண்டு கதவுகளாக அமைந்திருப்பினும் ஒரே கதவு என்று தோன்றும்படி இணைதல், சிறப்பாக அமைய)

நாளொடு பெயரிய கோளமை விழுமரத்துப்
போதவிழ் குவளைப் புதுப்பிடி காலமைத்துத்
தாழொடு குயின்ற போரமை புணர்ப்பிற்
கைவல் கம்மியன் முடுக்கலிற் புரைதீர்ந்து
ஐயவி யப்பிய நெய்யணி நெடுநிலை

வாயிலின் நிலைக்கால் அமைப்பு

நாளொடு - நல்ல நாளில்
பெயரிய - வெட்டி அப்புறப்படுத்திய[1]
கோளமை - வலிவு அமைந்த
விழு மரத்து - சிறந்த மரத்தினால் செய்த
போது அவிழ் - அரும்பு மலர்கின்றது போன்ற
குவளை - குவளைப் பூவின் உருவமும்
புதுப்பிடி - புதுமையாகச் செதுக்கிய பெண் யானை வடிவமும் பொருந்திய
கால் அமைத்து - நிலைக்கால்களை அமைத்து,

வாயில் நிலை

தாழொடு - தாழ்க்கோலோடு, அல்லது, பூட்
குயின்ற - பதித்த [டும் தாழோடு
போரமை - செறிந்து பொருந்துதல் அமைந்த
புணர்ப்பின் - கோவையுடன்
85 கைவல் கம்மியன் - கைத்தொழில் வல்ல தச்சன்
முடுக்கலின் - முடுக்குதலின்
புரை தீர்ந்து - குற்றம் அற்று, இடைவெளி
ஐயவி - வெண்சிறுகடுகு [அற்று
அப்பிய - அப்பியவாறு பொருந்தி இருக்கும்
நெய்யணி - நெய்ப்பூச்சு அமைந்த
நெடுநிலை - நெடிய நிலையையும்

---

1. 'தென்னவற் பெயரிய' மதுரைக்காஞ்சி, 40. நச். உரை.

வென்றெழு கொடியொடு வேழஞ் சென்றுபுகக்
குன்றுகுயின் றன்ன ஓங்குநிலை வாயில்
திருநிலை பெற்ற தீதுதீர் சிறப்பின்
தருமணல் ஞெமிரிய திருநகர் முற்றத்து
நெடுமயி ரெகினத் தூநிற வேற்றை

மதில் வாயில்

வென்று எழு - வெற்றிபெற்று உயர எடுத்த
கொடியோடு - கொடியுடனே (யானைமீதிலிருப்பவர் கொடியை உயர்த்திப் பிடித்தபடியே)
வேழம் - யானைகள்
சென்று புக - உள்ளே செல்லுமாறு
குன்று - குன்றை
குயின்றன்ன - துளைத்தாற்போன்ற
ஓங்கு நிலைவாயில் - உயரமான மதில் வாயிலையும்

அரண்மனை முன் இடம்

திரு - செல்வம்
நிலை பெற்ற - நிலைத்திருந்த
தீதுதீர் சிறப்பின் - தீதற்ற சிறப்பை உடைய
தரு மணல் - போடப்பட்ட மணல்
ஞெமிரிய - பரப்பிய
திரு நகர் - அழகிய அரண்மனையின்
முற்றத்து - முற்றத்தில்
நெடுமயிர் - நீண்ட மயிரை உடைய
எகினம்[1] தூநிற
ஏற்றை - தூய நிறைத்தை உடைய ஆண் கவரிமான்

1. எகினம் - கவரிமான்.

குறுங்கா லன்னமோ டுகளு முன்கடைப்
பணைநிலை முனைஇய பல்லுளைப் புரவி
புல்லுணாத் தெவிட்டும் புலம்புவிடு குரலொடு
நிலவுப்பயன் கொள்ளும் நெடுவெண் முற்றத்துக்
கிம்புரிப் பகுவா யம்பணம் நிறையக்

குறுங்கால்	- குட்டையான கால்களை உடைய
அன்னமொடு	- அன்னப்பறவையோடு
உகளும்	- தாவித் திரிந்து விளையாடும்
முன்கடை	- முன் இடத்தையும் (உடையதாய்)

அரண்மனையில் பல்வேறு ஒலிகள்

பணைநிலை	- பந்தியிலே நிற்றலை
முனைஇய	- வெறுத்த
பல்லுளைப்	- பல்வகைப் பிடரிமயிரை உடைய
புரவி	- குதிரைகள்
புல்லுணா	- புல்லுணவைத் (தின்று)
தெவிட்டும்	- குதட்டும் (அசையிடும்)
புலம்பு விடு	- தனிமை தோற்றுவிக்கும்
குரலோடு	- கனைப்புக் குரலோடு
நிலவுப் பயன் கொள்ளும்	- நிலவின் பயன் துய்க்கும்
நெடுவெண் முற்றத்து	- நீண்ட வெண்ணிறம் பொருந்திய நிலாமுற்றத்து
கிம்புரிப் பகுவாய்	- மகர மீனின் பிளந்த வாயைப் போன்று அமைந்த
அம்பணம்	- நீர்த்தூம்பு
நிறைய	- நிறைய

கலிழ்ந்துவீ ழருவிப் பாடுவிறந் தயல
ஒலிநெடும் பீலி யொல்க மெல்லியற்
கலிமயி லகவும் வயிர்மரு ளின்னிசை
நளிமலைச் சிலம்பிற் சிலம்புங் கோயில்
யவன ரியற்றிய வினைமாண் பாவை
கையேந் தையகல் நிறையநெய் சொரிந்து

கலிழ்ந்து - கலங்கி
வீழ் அருவி - விழுகின்ற நீர் அருவியின்
பாடு விறந்து - ஓசை செறிந்து
அயல - அதற்குப் பக்கத்திடத்தில் உள்ள
ஒலிநெடும் பீலி - தழைத்த நெடிய மயில் பீலி
ஒல்க - ஒதுங்க (சுருங்கி ஒன்றுசேர)
மெல்லியல் - மென்மையான இயல்புடைய
கலிமயில் அகவும் - செருக்கின மயில் அகவுகின்ற
வயிர் மருள் - கொம்போசை என்று ஐயப்படத் [தக்க
இன்னிசை - இனிய ஓசை
நளி மலைச் சிலம்பின் - (புரவிகளின் கனைப்புக் குரல், கலிழ்ந்துவீழ் அருவியின் ஓசை வயிர் மருள் இன்னிசை ஆகியவை சேர்ந்து) செறிந்த மலையில் உண்டாகும் ஓசைகள் போல
சிலம்பும் கோயில் - ஒலிக்கும் அரண்மனையில்

அரண்மனையின் உள்ளிடங்கள்

யவனர் இயற்றிய - யவனர்கள் (கிரேக்கர்கள்) செய்த
வினைமாண் பாவை - வேலைப்பாடு அமைந்த பாவைகள்
கை ஏந்து - கையில் ஏந்தி நிற்கும்
ஐ - மெல்லிய, அல்லது, அழகிய

பரூஉத்திரி கொளீஇய குரூஉத்தலை நிமிரெரி
அறுவறு காலைதோ றமைவரப் பண்ணிப்
பல்வேறு பள்ளிதொறும் பாயிருள் நீங்கப்
பீடுகெழு சிறப்பிற் பெருந்தகை யல்லது
ஆடவர் குறுகா அருங்கடி வரைப்பின்
வரைகண் டன்ன தோன்றல வரைசேர்பு

அகல் நிறைய	- அகல், அல்லது, தகளி நிறைய
நெய் சொரிந்து	- நெய் வார்த்து
பரூஉத்திரி	- பருத்த திரிகளை
கொளீஇய	- கொளுத்திய
குரூஉத் தலை	- நிறம் பொருந்திய தலையுடன்
நிமிர் எரி	- நிமிர்ந்து எரியும் சுடர்
அறுவறு காலை தோறு	- நெய் அற்றுப்போகும் காலந்தோறும்
அமைவரப் பண்ணி	- நெய்வார்த்து எரியுமாறு தூண்டி
பல்வேறு	- பல்வகைப்பட்ட, வெவ்வேறான
பள்ளி தொறும்	- இடங்கள்தோறும்
பாயிருள் நீங்க	- பாவிய இருள் நீங்கும்படி அமைய
பீடு கெழு சிறப்பின்	- பெருமைபொருந்தியசிறப்புடைய
பெருந்தகை	- அரசன்
அல்லது	- அல்லாமல்
ஆடவர்	- ஆண்மக்கள் எவரும்
குறுகா	- அணுகமுடியாத
அருங்கடி	- அரிய காவலுடைய
வரைப்பின்	- கட்டுக்களின்
வரை கண்டன்ன	- மலைகளைக் கண்டாற்போன்ற
தோன்றல	- தோற்றத்தை உடையன
வரை சேர்பு	- மலைகளைச் சேர்ந்து

வில்கிடந் தன்ன கொடிய பல்வயின்
வெள்ளி யன்ன விளங்குஞ் சுதையுரீஇ
மணிகண் டன்ன மாத்திரட் டிண்காழ்ச்
செம்பியன் றன்ன செய்வுறு நெடுஞ்சுவர்
உருவப் பல்பூ வொருகொடி வளைஇக்
கருவொடு பெயரிய காண்பின் நல்லில்

வில்கிடந்தன்ன - இந்திரவில் கிடந்தாற்போன்ற
கொடிய - கொடிகளை உடையன ஆகிய
பல் வயின் - பல இடங்களிலும்
வெள்ளியன்ன - வெள்ளியைப் போன்ற
விளங்கும் - விளங்குகின்ற
சுதை உரீஇ - வெண்சாந்து பூசி
மணிகண்டன்ன - நீலமணியைக் கண்டாற்போன்ற
மாத்திரள் - கரிய திரண்ட
திண் காழ் - உறுதியான தூண்களை உடையவாய்
செம்பு இயன் றன்ன - செம்பாற் செய்தது போன்ற
செவ்வுறு - வேலைப்பாடு சிறந்த
நெடுஞ்சுவர் - நீண்ட சுவர்களில்
உருவம் பல் பூ - வடிவம் சிறந்த பல பூக்களோடு
ஒருகொடி வளைஇ - ஒரு கொடி வளைந்து வளைந்து செல்வதுபோல ஓவியம்எழுதி
கருவொடு - கருவறையோடே (கருப்பக் கிரகத்தோடே)
பெயரிய - பெயர்பெற்ற
காண்பு இன் - காண்பதற்கு இனிய
நல்இல் - நல்ல உறையுள்

தசநான் கெய்திய பணைமருள் நோன்றாள்
இகல்மீக் கூறு மேந்தெழில் வரிநுதற்
பொருதொழி நாகம் ஒழியெயி றருகெறிந்து
சீருஞ் செம்மையு மொப்ப வல்லோன்
கூருளிக் குயின்ற ஈரிலை யிடையிடுபு
தூங்கியல் மகளிர் வீங்குமுலை கடுப்பப்

கட்டில்

115 தசம் நான்கு	- நாற்பது ஆண்டுகள்
எய்திய	- சென்ற
பணை மருள்	- வடிவத்தில் முரசுபோன்ற
நோன் தாள்	- வலிய கால்களையும்
இகல்மீ கூறும்	- போரில் மேன்மையாகச் சொல்லும்
ஏந்து எழில்	- உயர்ந்த அழகினையும்
வரி நுதல்	- புள்ளிகள் கொண்ட மத்தகத்தையுமுடைய (யானை)
பொருது ஒழி	- போர் செய்து மடிந்த
நாகம்	- யானையினின்றும்
ஒழி எயிறு	- தானே விழுந்த தந்தத்தை
அருகு எறிந்து	- பக்கங்களைச் செதுக்கி
சீரும் செம்மையும்	- கனமும் நேர்மையும்
ஒப்ப	- ஒத்து அமைய
வல்லோன்	- வேலையில் வல்லோன்
கூர் உளி குயின்ற	- கூரிய சிற்றுளியாலே செய்த
ஈரிலை	- இரண்டு இலைகளின்
இடைஇடுபு	- மத்தியில் வைத்து
120 தூங்கு இயல்	- தொங்கும் இயல்புடைய
மகளிர்	- மகளிரின்
வீங்குமுலை கடுப்ப	- பருத்த முலையைப்போல

புடைதிரண் டிருந்த குடத்த இடைதிரண்டு
உள்ளி நோன்முதல் பொருந்தி யடியமைத்துப்
பேரள வெய்திய பெரும்பெயர்ப் பாண்டில்
மடைமா நுண்ணிழை பொலியத் தொடைமாண்டு
முத்துடைச் சாலேகம் நாற்றிக் குத்துறுத்துப்
புலிப்பொறிக் கொண்ட பூங்கேழ்த் தட்டத்துத்

புடை திரண்டு இருந்த - பக்கங்கள் திரண்டிருந்த
குடத்த - (தந்தத்தைப் பக்கங்கள் திரளக் குடத்தைப்போலச் செதுக்கி அமைத்த) குடத்தை உடைய
இடை திரண்டு - நடுவிடம் திரண்டு [வாய்
உள்ளி - உள்ளிப் பூண்டின்
நோன்முதல் - வன்மையுடைய முதல்போல
பொருத்தி - (குடத்தின் மேல்) பொருத்தி
அடி அமைத்து - கால்களை அமைத்து
பேரளவு எய்திய - பெரிய அளவு எய்திய
பெரும்பெயர் - பெரிய பெயருடைய
பாண்டில் - பாண்டில் என்னும் வட்டக் கட்டில்
மடை மாண் - மூட்டு வாய் மாட்சிமைப்பட்ட
நுண் இழை - மெல்லிய நூல் பின்னல்
தொடை மாண்டு - கட்டுதல் (பின்னுதல்) சிறப்பாக அமைந்து
முத்துடை - முத்துக்கள் உடையதாய்
சாலேகம் - சாளரம்போன்று அமைந்ததை
நாற்றி - (கட்டிலின் பக்கங்களில்) தொங்க [விட்டு
குத்துறுத்து - குத்தித் துளைசெய்து
புலிப் பொறி கொண்ட - புலிப் புள்ளிகளைப் போன்ற புள்ளிகளைக் கொண்ட

தகடுகண் புதையக் கொளீஇத் துகள்தீர்ந்து
ஊட்டுறு பன்மயிர் விரைஇ வயமான்
வேட்டம் பொறித்து வியன்கட் கானத்து
முல்லைப் பல்போ துறழப் பூநிரைத்து
மெல்லிதின் விரிந்த சேக்கை மேம்படத்
துணைபுண ரன்னத் தூநிறத் தூவி

பூங்கேழ் - அழகிய நிறம் அமைந்த
தட்டத்து - தட்டுக்களை உடைய
தகடு - கட்டிலின் அடித்தகடுகளின்
கண் புதையக் கொளீஇ - துளைகள் அல்லது இடுக்குகள் மூடக்கொண்டு

படுக்கை

துகள் தீர்ந்து - குற்றமற்று அமைந்து
ஊட்டுறு - உள்ளே திணிக்கப்பெற்ற
பல் மயிர் - பல வித மயிர்கள்
விரைஇ - கலந்து
வயமான் வேட்டம் பொறித்து - அதன்மேலே புலிவேட்டை ஓவியம் தீட்டப்பட்டு
வியன்கண் கானத்து - அகன்ற இடமான காட்டில்
முல்லைப் பல் போது உறழ - பல முல்லை அரும்போடு மாறுபட
பூ நிரைத்து - பூக்கள் ஒழுங்குபட அமைத்து
மெல்லிதின் - மென்மையாக
விரிந்த சேக்கை - விரிக்கப்பட்ட படுக்கை
மேம்பட - அதன் மேலே
துணை புணர் - தன் துணையோடு புணர்ந்த
அன்னம் - அன்னத்தின்
தூநிறத் தூவி - வெண்ணிறமான மெல்லிய இறகின் மயிர்கள் நிறைந்த

இணையணை மேம்படப் பாயணை யிட்டுக்
காடி கொண்ட கழுவுறு கலிங்கத்துத்
தோடமை தூமடி விரித்த சேக்கை
ஆரந் தாங்கிய அலர்முலை யாகத்துப்
பின்னமை நெடுவீழ் தாழத் துணைதுறந்து

இணையணை	- இரட்டைத் தலையணை
மேம்பட	- அவற்றின் மேலும்
பாயணை	- பரவலான அணை (அகன்றதிண்டு)
இட்டு	- இடப்பட்டு,
காடி கொண்ட	- கஞ்சியிட்டு உலர்த்திய
கழுவுறு கலிங்கத்து	- வெளுக்கப்பெற்ற தூய துகிலின்
தோடமை	- இதழ் இதழாக அமைய மடித்த
தூமடி	- தூய்மையான மடியை
விரித்த சேக்கை	- விரித்திருந்த படுக்கை (மேல்)

கோப்பெருந்தேவி

ஆரம் தாங்கிய	- முத்தாற்செய்த ஆரத்தை முன்பு தாங்கிய
அலர் முலை	- அலர்ந்த முலையையுடைய
ஆகத்து	- மார்பில்
பின்னமை	- பின்னுதல் அமைந்த
நெடுவீழ்	- நீண்ட நாண்
தாழ	- தாழ்ந்து கிடப்பது தோன்ற
துணை துறந்து[1]	- ஏனைய துணை அணிகளை விலக்கி

1. நச்சினார்க்கினியர் 'துணை துறந்து' என்பதற்கு 'அரசன் பிரிகையினாலே' என்று பொருள் எழுதுகிறார். 'துறந்து' என்பதனை நேரே அரசியின் வினையாகவே கொண்டு பொருள் கூறல் சிறப்புத் தருகின்றது.

நன்னுத லுலறிய சின்மெல் லோதி
நெடுநீர் வார்குழை களைந்தெனக் குறுங்கண்
வாயுறை யழுத்திய வறிதுவீழ் காதின்
பொலந்தொடி தின்ற மயிர்வார் முன்கை
வலம்புரி வளையொடு கடிகைநூல் யாத்து
வாளைப் பகுவாய் கடுப்ப வணக்குறுத்துச்

நன்னுதல் - நல்ல நெற்றியில்
உலறிய - (செம்மை செய்யாமல்) உலறிக் கிடந்த
சில் மெல் ஓதி - சில மெல்லிய மயிர்களுடன்
நெடுநீர் - நீண்ட ஒளியை உடைய
வார் குழை - நீண்ட மகரக் குழைகள்
களைந்தென - களையப்பட்டதால்
குறுங்கண் - குறுகிய துளைகளையுடைய
வாயுறை அழுத்திய - மகரக் குழையின்வாய் அழுத்திய தழும்புடைய
வறிது வீழ் - சிறிதே தொங்கிய
காதின் - காதினொடு
பொலந்தொடி - பொன் வளையல்கள் கிடந்து
தின்ற - தழும்புகொண்ட
மயிர் வார் - மயிர் ஒழுங்கை உடைய
முன் கை - முன் கையில்
வலம்புரி வளையொடு - வலம்புரிச் சங்கை அறுத்துச் செய்த வளையோடு
கடிகைநூல்யாத்து - காப்பு நூல் அணிந்து
வாளை - வாளை மீனின்
பகுவாய் கடுப்ப - பிளவுபட்ட வாயைப் போல
வணக்குறுத்து - வளைத்துச் செய்த

செவ்விரற் கொளீஇய செங்கேழ் விளக்கத்துப்
145 பூந்துகில் மரீஇய ஏந்துகோட் டல்குல்
அம்மா சூர்ந்த அவிர் நூற் கலிங்கமொடு
புனையா ஓவியங் கடுப்பப் புனைவில்
தளிரேர் மேனித் தாய சுணங்கின்

செவ்விரல் - சிவந்த விரல்கள்
கொளீஇய - தரித்த
செங்கேழ் - சிவந்த நிறத்தையுடைய
விளக்கத்து - முடக்கு அல்லது நெளி என்னும் மோதிரத்தை மட்டும் அணிந்து
145 பூதுகில் மரீஇய - பூவேலையமைந்த துகில் முன்பு தரித்திருந்த
ஏந்துகோடு அல்குல் - ஏந்தலோடு அல்லது உயர்வோடு வளைவும்கொண்ட இடையில்
அம்மாசு ஊர்ந்த - அழகிய மாசேறிய
அவிர் - விளங்குகின்ற
நூல் கலிங்கமொடு - நூற்புடைவையுடனே
புனையா ஓவியம் - அழகு செய்யப்படாத சித்திரத்தை
கடுப்ப - போல (கோப்பெருந்தேவி) இருக்க

சேடியர்

புனைவு இல் - அழகு செய்து கொள்ளல் நீங்கிய
தளிர் ஏர் மேனி - மாந்தளிரை ஒத்த மேனியில்
தாய - தாவிய அல்லது பரந்த
சுணங்கின் - சுணங்கினையும்

அம்பணைத் தடைஇய மென்றோள் முகிழ்முலை
வம்புவிசித் தியாத்த வாங்குசாய் நுசுப்பின்
மெல்லியல் மகளிர் நல்லடி வருட
நரைவிரா வுற்ற நறுமென் கூந்தல்
செம்முகச் செவிலியர் கைம்மிகக் குழீஇக்
குறியவும் நெடியவும் உரைபல பயிற்றி

அம்பணை - அழகிய மூங்கில் போன்று
தடைஇய - வளைந்து தோன்றுகின்ற
மெல் தோள் - மெல்லிய தோள்களையும்
முகிழ் முலை - முகை அல்லது அரும்புபோலும் முலைகள்
வம்பு - கச்சு
விசித்து யாத்த - வலித்துக் கட்டியவற்றையும்
வாங்கு சாய் - வளைந்து நுடங்குகின்ற
நுசுப்பின் - இடையினையும்
மெல்லியல் - மென்மையான சாயலையும் [உடைய
மகளிர் - சேடியர்
நல்லடி வருட - (தேவியின்)நல்ல அடிகளைத் தடவ

செவிலியர்

நரை விராவுற்ற - நரை மயிர் கலந்துள்ள
நறுமென் கூந்தல் - வாசனை பொருந்திய மெல்லிய கூந்தலையுடைய
செம்முகம் - சிவந்த முகத்தை உடைய
செவிலியர் - செவிலித் தாய்மார்
கை மிகக் குழீஇ - துன்பம் மிகுதலால் கூடி
குறியவும் - குறுகியவும்
நெடியவும் - நீளம் உள்ளவைகளுமான
உரை பல - பல உரைகளை
பயிற்றி - பலகால் சொல்லி

இன்னே வருகுவ ரின்றுணை யோரென
உகந்தவை மொழியவு மொல்லாள் மிகக்கலுழ்ந்து
நுண்சேறு வழித்த நோனிலைத் திரள்கால்
ஊறா வறுமுலை கொளீஇய கால்திருத்திப்
புதுவ தியன்ற மெழுகுசெய் படமிசைத்
திண்ணிலை மருப்பின் ஆடுதலை யாக

இன்னே - இனிதே அல்லது இப்போதே
வருகுவர் - வந்து சேருவர்
இன்துணையோர்
என - இனிய துணைவர் என்று
உகந்தவை - இனியவைகளை
மொழியவும் - சொல்லவும்
ஒல்லாள் - அதற்குப் பொருந்தாளாய்

தேவியின் துன்ப நிலை

மிகக் கலுழ்ந்து - மிகக் கலங்கி
நுண்
சேறு வழித்த - நுண் நிறக் குழம்புகள் பூசிய
நோன்நிலை - வன்மை பொருந்தி நிற்கும்
திரள் கால் - திரண்ட கால்களின்மேல்
ஊறா - பால் ஊறாத
வறுமுலை - வற்றிய முலை வடிவத்தை
கொளீஇய - கொண்ட
கால் திருத்தி - கால்களைத் திருத்தி அமைத்து (அவற்றின் மேல் அமைத்த)
புதுவது இயன்ற - புதுக்கருத்துப் பொருந்த எழுதிய
மெழுகு செய் - மெழுகிட்ட
படமிசை - படத்தின் மேலே
திண்ணிலை - திண்மையான நிலையைப்பெற்ற
மருப்பின் - கொம்பை உடைய
ஆடுதலையாக - ஆடு முதலாக (மேடம் முதலாக)

விண்ணூர்பு திரிதரும் வீங்குசெலல் மண்டிலத்து
முரண்மிகு சிறப்பிற் செல்வனொடு நிலைஇய
உரோகிணி நினைவனள் நோக்கி நெடிதுயிரா
மாயித ழேந்திய மலிந்துவீ ழரிப்பனி
செவ்விரல் கடைக்கண் சேர்த்திச் சிலதெறியாப்

விண்ணூர்பு	- வானத்தில் ஊர்ந்து
திரிதரும்	- திரிகின்ற
வீங்கு செலல்	- விரைந்த செலவையுடைய
மண்டிலத்து	- ஞாயிற்றோடே
முரண் மிகு	- மாறுபாடு மிகுந்த
சிறப்பின்	- சிறப்பை உடைய
செல்வனொடு	- திங்களோடு
நிலைஇய	- ஒன்றாயிருக்கும்
உரோகிணி	- உரோகிணியை
நினைவனள்	- நினைக்கின்றவள்
நோக்கி	- அப்படத்தை உற்று நோக்கி
நெடிது உயிரா	- பெருமூச்சு விட்டு
மா இதழ் ஏந்திய	- நீலப்பூ இதழ் போன்ற கண் இமைகள் ஏந்தி நின்ற
மலிந்து	- நிரம்பி
வீழ் அரிப் பனி	- (பின்) இடையிட்டு வீழ்ந்த கண்ணீர்த் துளிகளைத் (துடைக்க)
செவ்விரல்	- செவ்விய விரலை
கடைக்கண்	- கடைக்கண்ணில்
சேர்த்தி	- சேர்த்து
சில	- (தங்கி இருந்த) சில துளிகளை
தெறியா	- தெறித்துவிட்டு

புலம்பொடு வதியும் நலங்கிள ரரிவைக்கு
இன்னா அரும்படர் தீர விறல்தந்து
இன்னே முடிகதில் லம்ம மின்னவிர்
ஓடையொடு பொலிந்த வினைநவில் யானை
நீள்திரள் தடக்கை நிலமிசைப் புரளக்
களிறுகளம் படுத்த பெருஞ்செய் யாடவர்

புலம்பொடு - தனிமையில்
வதியும் - இருக்கும்
நலங்கிளர் - பல நலங்கள் விளங்கும்
அரிவைக்கு - அரசன் தேவிக்கு
இன்னா அரும் படர் - இனிமையற்ற அரிய துன்பம்
தீர விறல் தந்து - தீரும்படி வெற்றி தந்து
இன்னே - இனிதாக அல்லது விரைவாக
முடிகதில் அம்ம - முடிவதாக (பின் கூறப்போகும் செயல்)

அரசன் பாசறைத் தொழில்

மின் அவிர் - ஒளி விளங்கும்
ஓடையொடு - பட்டத்தோடு
பொலிந்த - விளங்கிய
வினைநவில்யானை - போர்த்தொழில் பயின்ற யானை
நீள் திரள் - (அவற்றின்) நீண்ட திரண்ட
தடக்கை - பெரிய துதிக்கைகள்
நிலமிசை புரள - வெட்டுண்டு கீழே கிடந்து உருள
களிறு - களிறுகளை
களம் படுத்த - போர்க் களத்தில் கொன்ற
பெருஞ்செய் - பெரிய செயல்களைச் செய்த
ஆடவர் - படைஞர்கள்

ஒளிறுவாள் விழுப்புண் காணிய புறம்போந்து
வடந்தைத் தண்வளி யெறிதொறு நுடங்கித்
தெற்கேர் பிறைஞ்சிய தலைய நற்பல
பாண்டில் விளக்கிற் பருஉச்சுட ரழல
வேம்புதலை யாத்த நோன்கா ழெஃகமொடு
முன்னோன் முறைமுறை காட்டப் பின்னர்

ஒளிறு வாள்	- பகைவரின் ஒளி விடும் வாளால்
விழுப்புண்	- பெற்ற சீரிய புண்களை
காணிய	- காண
புறம் போந்து	- வெளியே வந்து
வடந்தைத் தண்வளி	- வாடைக் குளிர் காற்று
எறிதொறும்	- வீசுகின்ற போதெல்லாம்
நுடங்கி	- அசைந்து படிந்து
தெற்கு ஏர்பு	- தெற்கே ஏறியும்
இறைஞ்சிய	- தாழ்ந்து வணங்கியதுமான
தலைய	- தலையினை உடையவான
நற்பல்	- நல்ல பல
பாண்டில்	- பாண்டில் என்னும்
விளக்கில்	- கால் விளக்குகளில்
பருஉச் சுடர்	- பருத்த சுடர்
அழல	- எரிய
வேம்பு	- வேப்பந்தாரை
தலை யாத்த	- தலையில் கட்டின
நோன்காழ்	- வலிய காம்பினை உடைய
எஃகமொடு	- வேலோடு கூட
முன்னோன்	- சேனையின் முதல்வன்
முறைமுறை	- முறைப்படி முறைப்படி
காட்டப் பின்னர்	- காட்டி முடிய, அதன்பிறகு

மணிபுறத் திட்ட மாத்தாட் பிடியொடு
பருமங் களையாப் பாய்பரிக் கலிமா
இருஞ்சேற்றுத் தெருவின் எறிதுளி விதிர்ப்ப
புடைவீ ழந்துகி லிடவயின் தழீஇ
வாள்தோட் கோத்த வன்கட் காளை
சுவல்மிசை யமைத்த கையன் முகனமர்ந்து

மணி - மணிகளை
புறத்து இட்ட - தன் புறத்தே கொண்ட
மாத்தாள் - பெரிய தாளினை உடைய
பிடியொடு - பெண் யானையோடு
பருமம் களையா - சேணத்தைக் களையாத
பாய்பரிக் கலிமா - பாய்ந்து செல்லும் செலவினை உடைய செருக்கின குதிரை (பின் வருவதால்)
இருஞ்சேற்று - கரிய சேற்றை உடைய
தெருவின் - தெருக்களிலிருந்து
எறி துளி - தம் மேலே எறியும் துளிகள்
விதிர்ப்ப - நடுக்கத்தை உண்டுபண்ண
புடை வீழ் - பக்கத்தே விழுகின்ற
அம் துகில் - அழகிய துகிலை அல்லது ஆடையை
இட வயின் - இடப் பக்கத்தே
தழீஇ - தழுவிக்கொண்டு
வாள் தோள் கோத்த - வாளைத் தோளில் கோத்த
வன்கண் காளை - அஞ்சாத போர் வீரனின்
சுவல் மிசை - தோளின்மீது
அமைத்த - அமைத்த
கையன் - கையை உடையவனாய்
முகன் அமர்ந்து - அமர்ந்த முகத்தோடு

நூல்கால் யாத்த மாலை வெண்குடை
தவ்வென் றசைஇத் தாதுளி மறைப்ப
நள்ளென் யாமத்தும் பள்ளி கொள்ளான்
சிலரொடு திரிதரும் வேந்தன்
பலரொடு முரணிய பாசறைத் தொழிலே

நூல்கால் யாத்த - நூலாலே கால் காலாகக் கட்டின
மாலை - மாலையை உடைய
வெண்குடை - வெண்கொற்றக் குடை
தவ்வென்று அசைஇ - தவ்வென்று அசைந்து
தாதுளி - அரசனிடத்தே தாவும் துளிகளை
மறைப்ப - அரசன்மேல் படாமல் தடுக்க
நள்ளென் யாமத்தும் - நடு இரவிலும்
பள்ளி கொள்ளான் - உறங்கானாய்
சிலரொடு திரிதரும் - சிலரோடு திரிகின்ற
வேந்தன் - அரசனின்
பலரொடு - பல அரசர்களின் செயல்களோடு
முரணிய - மாறுபட்ட
பாசறைத் தொழில் - பாசறையில் நடத்தும் தொழில் அல்லது செயல் (இன்னே முடிக என்பதோடு மாட்டி முடிக்க)

வெல்க தமிழ்! வெல்க தமிழ்ப்பா!